நூல் தேட்டம்

1



என். செல்வராஜா

நூல் தேட்டம்

(தொகுதி 1)

தாயகத்திலும் புகலிடத்திலும்
வெளியிடப்பெற்ற
ஈழத்துத் தமிழ் நூல்கள்

குறிப்புரையுடனான
நூல்விபரப்பட்டியல்

என்.செல்வராஜா

அயோத்தி நூலக சேவைகள்
(ஐக்கிய இராச்சியம்)
ஜூன், 2002

நூல் தேட்டம்

(தொகுதி 1)

ஆசிரியர் - என்.செல்வராஜா
பதிப்பு - முதற்பதிப்பு, 01 ஜூன் 2002
வெளியீடு - அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம்
அச்சுப்பதிப்பு - வாசன் அச்சகம், இலண்டன்
அட்டை வடிவமைப்பு - மூன்றாவது கண், இலண்டன்
சர்வதேச தராதர பருவவெளியீட்டுப் பதிவெண் - 1477-4690
பக்கங்கள் - xxiv, 332

பதிப்புரிமை © என்.செல்வராஜா

Noolthettam

(Volume 1)

An annotated bibliography of 1000 published writings in Tamil language, by Sri Lankan Tamils, home and abroad.

Compiler - N.Selvarajah
Edition - First Edition, 01 June 2002
Publishers - Ayothy Library Services, United Kingdom
Printers - The Print, London
Cover Design - The Third Eye, London
International Standard Serial Number - 1477-4690
Pages - xii, 332

© Copy Right 2002 by N.Selvarajah

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publishers.

நன்றி

இத்தொகுப்பினை உங்கள் கரங்களில் இன்று கையளிப் பதற்குத் தோன்றாத்துணையாக இருந்த அனைவருக்கும் நன்றி கூறுவது என் தலையாய கடமையாகும்.

நூல்தேட்டம் அன்று என் மனதில் கருக்கொண்ட வேளை, தன் பல்கலைக்கழக வாழ்வின் நெருக்கடிகளுக்குள்ளும் ஓடித் திரிந்து நூல்களைத்தேடித்தந்து என்னை ஆர்வமுடன் செயற் படவைத்து மகிழ்ந்துவிட்டு இன்று எம்மிடையே இல்லாது இளமை யிலேயே காலன்வசப்பட்டு, என்றும் இளமையாக மனதில் நிலை கொண்டு விட்ட எம் இனிய மருமகள் சுகந்தியை இன்று நினை யாதிருக்க முடியவில்லை.

தாயகத்தில் தங்கள் அரிய நூற்சேர்க்கைகளை நான் பயன் படுத்த அனுமதியளித்ததுடன் மேலும் பலரின் தொடர்புகளையும் எனக்கு ஏற்படுத்தித் தந்தவர்கள் பலர். கலாநிதி இ.பாலசுந்தரம், திருமதி விமலா பாலசுந்தரம், கலாநிதி எம்.ஏ.நு.ஃமான், கலாநிதி சி.மௌனகுரு, திருமதி சித்திரலேகா மௌனகுரு, திருமதி.சர்வ மங்களம் கைலாசபதி, திரு மயிலங்கூடலூர் பி.நடராஜன் ஆகி யோர் அவர்களுட் சிலர். இந்தப்பட்டியல் எல்லையில்லாது நீழும். என்பணியில் இணைந்துதவிய அனைவருக்கும் உளமார்ந்த நன்றி.

புகலிடத்தில் தமது சேர்க்கைகளைப் பார்வையிடப் பெரு விருப்புடன் எனக்கு அனுமதியளித்து ஊக்கமுமளித்த திரு.கி.பி. அரவிந்தன், திரு. இ.பத்மநாப ஐயர், திரு. ஐ.தி.சம்பந்தன், திரு. பூபாலசிங்கம் கார்ள் மார்க்ஸ், தேசம் த.ஜெயபாலன் ஆகியோருக் கும் என் நன்றிகள்.

தாயகத்திலும், புகலிடத்திலுமிருந்து தங்கள் வெளியீடு களின் பிரதிகளை தபால் செலவையும் பொருட்படுத்தாது எனக்கு அனுப்பிவருகின்ற அனைத்து எழுத்தாளர்களுக்கும் என் நன்றிகள். நூல்களை அனுப்பி வைப்பதுடன் நில்லாது நான் அறியாத பல வெளியீட்டாளர்களையும் எனக்கு அறிமுகப்படுத்தி நூல்தேட்டத் தின் பரப்பை விரியச்செய்தவர்கள் இவர்கள்.

தொகுப்புக்கடமைகளின்போது குடும்பச்சுமைகளை முழுமை யாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக் குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் உதவிய என் அன்புத் துணைவியாருக்கும், இந்நூலைக் கணணியில் பொறிக்கும் வேளை என் அறியாமையினால் நான் விடும் இமாலயத் தவறுகள் அனைத்தையும் பாடசாலை, வீட்டு வேலைக்கடமைக்கிடையேயும் முகம்கோணாது அவற்றைச் சீர்செய்து விட்டு, எனக்குக் கணணி யறிவைச் சிறிது புகட்ட எத்தனித்துத் தோற்றுப்போகும் என் மகன் கௌதமனுக்கும் எனது நன்றிகள்.

இந்நூலைத் தெளிவாகவும் உரியகாலத்திலும் அச்சிட்டுத் தந்த தம்பி வாசனுக்கும், அட்டைப்படத்தை வடிவமைத்துதவிய மூன்றாவது கண் பரதனுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகள்.

-என்.செல்வராஜா-

பொருளடக்கம்

நன்றியுரை iii

முன்னுரை v

நூல்தேட்டம் - அறிமுகம் ix

தமிழ்நூல் வெளியீடுகளும் அவற்றுக்கான
சர்வதேச தராதர நூல் எண் வழங்கலும் xiv

நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்படும் வகுப்புப்பிரிவு xix

பதிவுகள் 1

தலைப்பு வழிகாட்டி 304

ஆசிரியர் வழிகாட்டி 319

நூல்தேட்டம்- நூல்விபரப் பதிவுப்படிவம் 328

முன்னுரை

நூல்கள் எமது இனத்தின் பண்பாட்டை, கலாச்சார விழுமியங்களை, அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும். அத்தகைய அறிவேடுகளின் பதிவு எமது வளத்தை, அறிவின் தேட்டத்தை எமது தலைமுறைக்கும், அடுத்து வரும் தலைமுறைக்கும் எடுத்துச் சொல்லும் வல்லமை படைத்தன. அத்தகைய ஒரு வரலாற்றுப்பதிவை, ஈழத்தமிழ்த் தேசியத்தின் அறிவுத்தேட்டத்தின் கனதியை, பதிவாக்கமுனையும் முடிவில்லாத வொரு நீண்ட பயணத்திற்கான முதற் காலடித்தடம் இங்கே பதியப்பெறுகின்றது.

இது ஈழத்தமிழருக்கான ஒரு தேசிய நூல்விபரப்பட்டியல் அல்ல. அத்தகைய ஒரு தேவைக்கான, சிந்தனைப்போக்கின் ஒரு வெளிப்பாடு என்று கொள்ளலாம். ஈழத்துத் தமிழ்த் தேசியத்துக்கான தனித்துவமானதொரு ஆவணக்காப்பகம், ஈழத்தமிழருக்கான ஒரு தேசிய நூலகம் போன்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட சிந்தனைகள் வலுப்பெற நூல்தேட்டம் ஒரு வித்தாக அமையுமெனில் அதுவே எம் முயற்சிக்குக் கிட்டிய வெற்றியாகக் கருதுவோம்.

தேசிய நூல்விபரப்பட்டியல் முயற்சியென்பது எமக்குப் புதியதொன்றல்ல. இலங்கையில் இதற்காக, 19ம் நூற்றாண்டிலேயே வழிகோலப்பட்டு விட்டது. 1885இல் உருவாக்கம் பெற்ற அச்சக வெளியீட்டகச் சட்டமூலத்தின் (அத்தியாயம் 179) வாயிலாக இலங்கையில் அச்சிடப்படும் ஒவ்வொரு நூலினதும் விபரம் இலங்கையில் அச்சிட்ட நூல்களின் பட்டியலாகப் பதிவு செய்யப்பட்டு காலாண்டுக்கொருமுறை அரசாங்க வர்த்தமானியின் (Government Gazette) ஐந்தாவது பிரிவாக வெளியிடப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. செப்டெம்பர் 1949இல் இலங்கை, UNESCO அமைப்பின் அங்கத்துவ நாடாகிய பின்னர், நவீனமயப்படுத்தப்பட்ட தேசிய நூற்பட்டியலின் தேவை வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. அக்காலகட்டத்தில் ஏற்பட்ட கல்விச்சீர்திருத்தம் மற்றும் அரசியல் மாற்றங்கள் காரணமாக நூலியல் தேவைகளும், வழங்கல்களும் துரிதமாக அதிகரித்தன.

இதன் விளைவாக, 1952இல் இலங்கைத் தேசியநூல்விபரப் பட்டியலுக்கான உப ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் பரிந்துரையின் பேரில் இலங்கை வெளியீடுகளுக்கும் இலங்கை தொடர்பான பன்னாட்டு வெளியீடுகளுக்குமான ஒரு தேசிய நூல்விபரப்பட்டியல், சர்வதேசத் தராதரத்துடன் ஒத்தியையக் கூடியதாக உருவாக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

அக்காலப்பகுதியில் இலங்கையின் சுவடிகள் காப்பகத்தினால் அரசாங்க வர்த்தமானியின் ஐந்தாவது பிரிவாக வெளியிடப்

பட்டுவந்த *இலங்கையில் அச்சிட்ட நூல்களின் பட்டியலும்*, இலங்கைப் பல்கலைக்கழக நூலகத்தினால் மாதாந்தம் தொகுக்கப்பெற்றுப் பிரபல்யமடைந்திருந்த *பல்கலைக்கழக நூலகத்தின் புதிய நூற்சேர்க்கைக்கான பட்டியலும்* ஒருங்கிணைந்ததாக தேசிய நூற்பட்டியலைத் தயாரிப்பதென முடிவாயிற்று. பதிப்பகச் சட்டத்தின் மூலம் பெறப்படும் அனைத்து நூற்பிரதிகளிலும் ஒவ்வொன்று இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கும் பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்டு வந்தமையால் தேசிய நூற்பட்டியலுக்கான நூல்களின் விபரங்களைத் தொகுப்பது அங்கு எளிதாயிற்று. நீண்டகாலப் பாரம்பரியமுள்ள பிரித்தானிய தேசிய நூற்பட்டியலின் பிரதம ஆசிரியராகவிருந்த A. J.வெல்ஸ் அவர்களின் சேவையும் ஆரம்பகட்டத்தில் இதற்காகப் பெறப்பட்டது. இலங்கைத்தேசிய நூற்பட்டியல் தொகுப்பிற்குப் பொருத்தமான அலுவலகம் போராதனையில், பல்கலைக்கழகத்திலேயே அமைக்கப்பட்டது. முதலாவது இதழ் நவம்பர் 1962இல் வெளிவந்தது.

இன்றுவரை இலங்கைத் தேசிய நூல்விபரப்பட்டியல் பல்வேறு நிர்வாக அரசியல் மாற்றங்களுக்குள் சிக்குண்டு ஒழுங்கற்ற கால இடைவெளியில் வெளிவந்துகொண்டிருக்கின்றது. தற்போது, இலங்கைத் தேசியநூலகத்தின் பொறுப்பில் இது வெளியிடப்படுகின்றது. இடைக்கிடையே அது அத்தி பூத்தது போல் வெளிவந்து தனது இருப்பைப் பிரகடனப்படுத்தி வருகின்றது. உரிய காலத்தில் பிரசுரமாகாமலும், பரவலாக விநியோகிக்கப்படாமலும், இழுத்தடிப்புச் செய்யப்படுவதாலும் முழுமையான நூல்களின் பட்டியலை என்றுமே வெளியிடமுடியாமல் போனதாலும் இலங்கைத்தேசிய நூற்பட்டியல் இலங்கையில் பிரபல்யமாகவில்லை. மாறாக, பேராதனை பல்கலைக்கழக நூலகராகவிருந்த எச்.ஏ.ஐ. குணத்திலக்கவின் A Bibliography of Ceylon: a systematic guide to the literature on the land, people, history and culture published in the Western languages from the sixteenth century to the present day என்ற ஆங்கில நூல்களுக்கான நூற்பட்டியல் 1970-1983 காலப் பகுதியில் 5 தொகுதிகள் வெளிவந்து சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உசாத்துணை நூலாக இன்றும் திகழ்கின்றது.

இலங்கைத் தேசிய நூற்பட்டியலில் மொழிவேறுபாடின்றி, மும்மொழி நூல்களுக்கும் கொள்கையளவில் இடம் ஒதுக்கப்பட்டிருப்பினும், தமிழ்நூற்பிரிவில் அரசாங்கப் பிரசுரங்களும் ஒரு சில தமிழ் நூல்களுமே இடம்பெற்று வந்துள்ளன. அச்சக, வெளியீட்டாளர் சட்டமூலத்தை மதித்து சுவடிகள் காப்பகத்துக்கு ஒழுங்காக நூல்களை அனுப்பிவைக்கத் தமிழப்பிரதேச அச்சகங்களோ, வெளியீட்டாளர்களோ எழுத்தாளர்களோ முன்வராமையால் அங்கு தமிழ் நூல்கள் இடம்பெற வாய்ப்பில்லை என்பது ஒருசாராரின் வாதம். அனுப்பி வைக்கப்படும் தமிழ் நூல்களைப் பட்டியலிடக்கூடிய ஆட்பலம் இல்லாததால் தமிழ்நூல்கள் கேட்பாரற்று முடக்கப்படுகின்றன என்பது மறுசாராரின் வாதம்.

இன்றைய யதார்த்தநிலை என்னவெனில் ஈழத்துத் தமிழ் நூல்களில் பெரும்பான்மையானவை இலங்கைக்கு வெளியே தமிழகத்திலும் புகலிடத்திலும் அச்சிடப்படுவதாகும். வெளியீட்டாளர்கள் பெரும்பாலும் நூலாசிரியராகவே இருப்பதால், வெளியீட்டுச் செலவைக் குறைக்கவும், தமிழகச்சந்தைவாய்ப்பைப் பெறவும் தமது நூலைத் தமிழகத்தில் அச்சிடுகின்றார்கள். தாயகத்தில் உருவான அச்சகங்கள் பல இன்றைய நிலையில் தமிழகத்திலும் வேருன்றியுள்ளதால் ஈழத்து வெளியீட்டாளர்கள் தமிழகத்தில் தம் நூலைப் பதிப்பிப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதில்லை. ஈழத் தமிழர்களின் தமிழக வெளியீடுகள் இலங்கை அச்சகச் சட்டத்தின் புவியியல்ரீதியான வரையரைக்குள் அகப்படுவதில்லை. தமிழகத்தின் தேசிய நூற்பட்டியலிலும் இவை அனைத்தும் சேர்த்துக்கொள்ளப்படுவதுமில்லை. தமது நூலை வரலாற்றுப்பதிவாக்குவதில் எமது எழுத்தாளர்கள் சிலரின் அக்கறையின்மையும் இங்கு சுட்டிக் காட்டப்படல் வேண்டியது காலத்தின் தேவையாகும்.

பிரித்தானிய பதிப்பகச் சட்டம் மொழிகளின் எல்லை கடந்து நூல்களைத் தேசியநூலக வைப்பகத்திற்கு ஏற்றுக்கொள்கின்றன. மொழிவழியிலல்லாது, பிரித்தானியாவில் அச்சிடப்பட்ட எம் மொழிநூல்களையும், பிரித்தானியாவில் விநியோகிக்கப்படும் எம் மொழிநூல்களையும் தேசியநூலகம் ஏற்றுக்கொள்கின்றது. இன்றுவரை இலண்டனில் வெளியிடப்பட்ட தமிழ் நூல்களில் எத்தனை நூல்கள் பிரித்தானிய பதிப்பகச் சட்டத்தின் கீழ் பிரித்தானிய தேசிய நூலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன? இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில், இன்று தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்படும் எந்தவொரு நூலும் தனது வெளியீடு பற்றிய பதிவை உலகில் எங்குமே மேற்கொள்ளவாய்ப்பில்லாது காணப்படுகின்றது என்பதாகும்.

ஒரு குறிப்பிட்ட நாட்டில் வெளியிடப்படும் ஈழத்துத் தமிழ் நூலொன்றை இன்னொரு நாட்டில் வாழும் ஒருவர் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இன்று அரிதாகவேயுள்ளது. நூல் மட்டுமல்ல, நூல் பற்றிய செய்திகளே உரியகாலத்தில் வந்து சேர்வதென்பது அரிதாகவுள்ளது. தாயகத்திலும், புகலிடத்திலும் வெளிவரும் சஞ்சிகைகள் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதை அவதானிக்க முடிந்தாலும், அவைகூட விநியோகச் சிக்கலுக்குள் அல்லலுற்றுக் குறுகிய வாசகர் வட்டத்துக்குள் தம்மை அடக்கிக்கொள்கின்றனர். அவற்றால் வாசகருக்குத் தாம் அறிமுகம் செய்யும் நூலைப் பெற்றுக் கொடுக்கவும் முடிவதில்லை.

உலகெங்கும் சிதறுண்டு கிடக்கும் எமது அறிவுத்தேட்டங்களைத் தேடித்தொகுத்து வகைதொகையாகப் பிரித்து வரலாற்று ஆவண மூலமாக மாற்றும் ஆரோக்கியமான முயற்சி எதுவும் தாயக மண்ணில் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படவில்லை.

ஆயினும், சிறுசிறு முயற்சிகளாக காலத்துக்குக்காலம் இலக்கியகர்த்தாக்கள் சில வரையறைகளுக்குள் இயங்கி, நூல்களைத் தேர்ந்து அவற்றைப் பதிவு செய்து வந்துள்ளமை அறிய முடிகின்றது. இவ்வகையில் தனிநபர் நூல்விபரப்பட்டியல்கள், கண்காட்சி மலர்கள், தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுமலர்கள், பிரதேசவாரியான நூல்விபரப்பட்டியல்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. இதைவிட, இலங்கை நூலகச்சங்கத்தின் இடைநிலைப்பரீட்சையின் ஒரு அங்கமாகப் பரீட்சார்த்திகள் சமர்ப்பித்து வரும் நூல்விபரப்பட்டியல்களில் பல தமிழ்ப்பிரதேசங்களுக்குரிய நூற்பட்டியல்களும் அடங்குகின்றன. இவை கையெழுத்துப்பிரதிகளாக இலங்கை நூலகச்சங்கத்தின் கோவைகளில் இன்றும் தூங்கிக்கொண்டிருக்கின்றன. மேற்கண்ட முயற்சிகள் எதுவும் ஈழத்துத் தமிழ்நூல்கள் பற்றிய ஒரு முழுமையான வரலாற்றுப் பார்வையைப்பெற உதவும் என்று கூறமுடியாதுள்ளது.

எமது பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களைப் பாதுகாத்து வைத்தலும் அவை பற்றிய வரலாற்றுக்குறிப்புகளைப் பேணுவதும் எமது தார்மீகக்கடமையாகும். எமக்காக அதை வேறொருவர் செய்வார் என்று எண்ணிக் காத்திருப்பது மிகத்தவறானதாகும். இந்நிலை தொடரின் அது எதிர்காலத்தில் எமது பண்பாட்டுத் தற்கொலைக்கு வழி கோலியதாகவே முடியும். 1981 ஜூன் முதலாம் நாளில் தாயக மண்ணில் ஸ்ரீலங்கா அரசபடைகளால் நிகழ்த்தப்பட்ட யாழ். நூலக எரிப்பைப் பண்பாட்டுப் படுகொலை என்று இன்றும் நினைவு கூருகின்றோம். அன்று நடந்த பண்பாட்டுப் படுகொலையாயினும் சரி, இன்று நாம் பாராமுகமாக இருப்பதன் மூலம் மேற்கொள்ளவிழையும் பண்பாட்டுத் தற்கொலையாயினும் சரி, பாதிக்கப்படப்போவது ஈழத்துத் தமிழ்த் தேசியஇனமே.

இந்நிலையில் ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான ஒரு சர்வதேசரீதியிலமைந்த தொகுப்பு முயற்சியின் தேவையை இங்கே வலியுறுத்துவது அவசியமாகின்றது. தாயகத்திலும், தமிழகத்திலும் மற்றும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட நூல்கள் அனைத்தும் புகலிட நாடொன்றில் ஆவணக்காப்பகமொன்றில் சேகரிக்கஒழுங்கு செய்யப்படல் வேண்டும். இந்நிறுவனத்தின் சேகரிப்புக்கள் அனைத்தும் ஈழத்துத் தமிழ்த்தேசிய நூற்பட்டியலாக பதியப்பட்டுக் காலத்துக்குக்காலம் வெளியிடப்பட வேண்டும். உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களின் நம்பகத்துக்குரிய ஆவணக்காப்பகமாக அது எழும்வேளை அதுவே ஈழத்தமிழரின் தேசிய நூலகத்தின் அத்திவாரமாக மலரும். இந்தக்கனவு நனவாகும் வரை நூல்தேட்டம் தன் பணியைத்தொடர விழைகின்றது. அதற்கான ஆக்கபூர்வமான உதவியையும் காத்திரமான ஆதரவையும் பெற உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்ச்சமூகத்தின் கரங்களையே நூல்தேட்டம் நம்பியிருக்கின்றது.

□□□

நூல்தேட்டம்
(ஓர் அறிமுகம்)

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் நூல்கள் பற்றிய நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக்குறிப்பும் இடம்பெற்றுள்ளது.

தொகுப்பும் தவிர்ப்பும்

இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பெற்றுக்கொள்ளக்கூடிய ஈழத்துத் தமிழ்நூல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத்தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், தட்டுகள் என்பன இத் தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.

பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்தமலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளோம்.

இத்தொகுதியில் இடம்பெறும் 1000 நூல்களில், பெரும்பான்மையானவை 1980க்குப் பிற்பட்டனவாக இருப்பினும் எண்பதுகளுக்குப் பின்னரான மறுபதிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. இனிவரும் தொகுதிகளில் 1980க்கு முற்பட்ட நூல்களும் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன.

பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய காலத்தில் வாசகர்

கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகத் தொகுக்கப்பெற்றுள்ளது.

முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப்படுத்தப்பட்டு தொடர்எண் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர்.

இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும். முதற் பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர்இலக்கத்தைக் கண்டறிந்து முதற் பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள், அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல் லொழுங்கில் அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத் தக்கது.

ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகரவரிசையில் நூல்களின் தொடர்எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச்சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், பார்க்க, மேலும் பார்க்க போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை இயன்றவரை குறைக்கும் வகையில் புனை பெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் ஒரு பெயரின்கீழ் மட்டும் அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளது.

ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனைபெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் குறிப்பிடப்பட்டுள்ளது. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும் போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கருதப்பட்டுள்ளது.

நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாத விடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற்பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல்நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும்.

நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.

நூலியல்பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ்விலக்கங்களாலேயே சுட்டப்பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப்பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன.

பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்த அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும்.

விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவ தாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந் நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த் தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனை யாளர் களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூ லின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number)ஆகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல் களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரி வில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று இத் தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்படுகின்றது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக்குறிப்பாகவோ, விளம் பரமாகவோ அல்லாது சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது.

வகுப்பாக்கம்

இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, தூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பாவிலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப் பகுப்பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப்புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத்தமிழ்நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாம் புகுத்திய மாற்றங்கள் அடைப்புக்குறிக்குள் உரிய இடங் களில் தரப்பட்டுள்ளன. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ் வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத் தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப்பகுதியையடுத் துத் தரப்பட்டுள்ளது.

வாழ்க்கை வரலாறு

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலா றாகும். இதில் வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம்பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத் தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக் கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை எற்பட்டது. ஒருவரது ஆழுமை எத் துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப்பட்ட ஆழுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப் பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

நிறைவுக்குறிப்பு

நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதியை எமது சக்திக் கெட்டியவரை சர்வதேச தராதர நூற்பட்டியல்களின் சிறப்பம்சங் களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத்துள்ளோம். இத் தொகுதியில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, சாத்தியப் படக்கூடிய ஆலோசனைகளைத் தெரிவிப்பதன் மூலம் இரண்டா வது தொகுதியை மேலும் சிறந்ததாக அமைக்க உங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கின்றோம். இந்நூலின் இறுதியில் காணப்படும் நூல் விபரப்பட்டியல் பதிவுப்படிவத்தை பிரதியெடுத்து உங்களிடம் உள்ள பிரசுரங்கள் பற்றிய தகவலை அதில் எழுதி யனுப்பி, இவ்விதழில் சேர்த்துக்கொள்ளப்படாத நூல் விபரங்களை அடுத்த தொகுதியில் சேர்த்துக் கொள்ள உதவவும்.

இத்தொகுதி வர்த்தகநோக்கமற்றதொரு தனிமனித முயற்சி யாகும். நிறுவனரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சி யாக மலரும்போது நிதி, காலம், நிபணத்துவ உதவி என்பன எப் பொழுதும் வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றது. இதை மனதில் கொண்டு. இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்துக்கும் விநியோகத்துக்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்பகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத் துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

□□□

தமிழ் நூல் வெளியீடுகளும் அவற்றுக்கான சர்வதேச தராதர நூல் எண் (ISBN) வழங்கலும்

இன்று நாம் வாழும் ஐரோப்பியச் சூழலில் வெளியிடப்படும் பல நூல்களின் பின்னட்டையிலும் உட்புறமும் காணப்படும் பத்து இலக்கத்தொடரையே சர்வதேசத் தராதர நூல்எண் அல்லது International Standard Book Number (ISBN) என்று குறிப்பிடுகின் றோம். எழுபதுகளுக்குப்பின் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகமாகி, உலகெங்கும் அந்தந்த நாட்டுத் தேசிய நூலகங்களாலும் வெளியீட்டு முகவர்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந் தத் திட்டத்தின் மூலம் மொழிவழியாகவன்றி, இலக்கங்களால் ஒரு நூலின் குறிப்பிட்ட சில வர்த்தகத் தகவல்களைப் பதிவு செய்து வைப்பதன் மூலம் அனைத்துலகரீதியாக மொழித்தடையைத் தாண்டி ஒரு நூலியல் தகவலைப் பரிமாறிக்கொள்ள முடிகின்றது.

சர்வதேச தராதர நூல் எண் பற்றிய விபரங்களையும் பயன் பாட்டையும் தெளிவுபடுத்துவதும் அதன் மூலம் புலம்பெயர் நாடு களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ் வெளியீடுகளுக்கு இந்த ISBN இலக்கத்தைப் பெற்றுக்கொள்வது எப்படி என்பது பற்றிய தகவல்களை வழங்கி எழுத்தாளர்களையும் வெளியீட்டாளர் களையும் ஊக்குவிப்பதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் முறையானது ஜெனிவாவிலுள்ள சர்வதேச தராதர நிறுவனத்தினால் International Standard Organisation (ISO) 1972 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்டது.

நூல் வெளியீட்டகங்கள், தமது வெளியீடுகளை இலகு வில் இனம் கண்டுகொள்ள அவற்றுக்கு ஒரு ஒழுங்கில் இலக்கங் களை வழங்கி வந்துள்ளன. நிறுவனங்களுக்கிடையே இவ்வகை யான இலக்கம் வழங்கும் முறையில் இருந்த வேறுபாடுகள், நூ லீட்டல் கடமைகளில் ஈடுபடும் நூலகர்களுக்கும், புத்தகவிற்பனை யாளர்களுக்கும் பல நடைமுறைச்சிக்கல்களையும் குழப்பங்களை யும் ஏற்படுத்தி வந்துள்ளன.

1960களின் பிற்பகுதியில் கணனியின் பாவனை நூல் வர்த் தகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதையடுத்து நூல்வெளியீட்டு நிறுவனங்கள் தமது நூலியல் தரவுகளைக் கணனி மயப்படுத்து வதில் ஈடுபட்டனர். அவ்வேளையில் குறியீட்டு எண் வழங்கலில் பொதுவானதொரு முறை பின்பற்றப்படவேண்டும் என்றும் கருதினர்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு ஸ்தாபனமே இத்தகைய குறியீட்டு இலக்கங்களை வழங்க அதிகாரமளிக்கப்பட வேண் டியதன் அவசியம் உணரப்பட்டதன் பயனாக ஜெனீவாவில்

1972ஆம் ஆண்டு சர்வதேச தராதர ஸ்தாபனம் இப்பொறுப் பை ஏற்றுக் கொண்டது. ஐக்கிய இராச்சியத்தில் 1967 ஆம் ஆண்டுகளில் விட்டேக்கர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவந்த நூல்களுக்குக் குறியீட்டுஎண் வழங்கும் முறையினை சில மாற்றங் களுடன் சர்வதேசதராதர நூல்எண் வழங்குவதற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சர்வதேச தராதர நூல் எண் நான்கு பகுதிகளைக் கொண் டது. முதலாவது பகுதி நூல் வெளியிடப்பட்ட நாட்டைக் குறிக் கும். மற்றது அந்த நூலின் வெளியீட்டாளரைக் குறிக்கும். மூன்றா வது பகுதி நூலின் தலைப்பைக் குறிக்கும். இறுதிப்பகுதி பரி சோதனை இலக்கம் எனப்படும். மேற்குறிப்பிடப்பட்ட நான்கு தொகுதிகளையும் உள்ளடக்கிய சர்வதேச தராதர நூல் எண் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள சர்வதேச தராதர நிறுவனத்தின் பிரதிநிதியாக விளங்கும் தேசிய நூலகத்தினால் மட்டுமே வழங் கப்படும்.

ஜெனீவாவில் இயங்கும் தலைமை நிலையத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலக்கம் வழங்கப் படுகின்றது. அதுவே அந்த நாட்டுக்குரிய தனித்துவ எண்ணாகக் கருதப்பட்டு சர்வதேச தராதர நூல் எண்ணின் முதலாவது பகுதியில் குறிப்பிடப்படுகின்றது. இலங்கை 1986ம் ஆண்டு நடுப் பகுதியில் சர்வதேச தராதர நிறுவனத்தில் அங்கத்துவம் பெற் றுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தகுந்தது. இலங்கைக்கு வழங் கப்பட்டுள்ள தனித்துவ எண் 955 என்பதாகும். இலங்கையில் வெளியாகும் நூல்கள் அனைத்தினதும் தராதர எண் 955 இல் ஆரம்பமாவதை அவதானிக்கலாம்.

இரண்டாவது பிரிவு இலக்கமான வெளியீட்டாளர் குறியீடு ஒரு குறித்த நாட்டில் பதிவு பெற்ற வெளியீட்டாளருக்கு வழங்கப் படும் தொடர் இலக்கமாகும். தமது வெளியீட்டு நிறுவனத்தை அல்லது தம்மை ஒரு வெளியீட்டாளராகப் பதிவு செய்து கொள் வது சிரமமானதொரு காரியமில்லை. முதலில் ISBN நிறுவனத் தினால் தயாரிக்கப்பட்ட ஒரு விண்ணப்பப்படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து அவர்களுக்கு அனுப்பி வைத்தால் போதுமானது. அவ்விண்ணப்பப் படிவத்தில் வெளியீட்டாளரின் பெயர், முகவரி, கடந்த காலங்களில் வெளியிட்ட நூல்கள், திட்ட மிடப்பட்டுள்ள நூல்கள் போன்றவை தொடர்பான விபரங்கள் கேட்கப்பட்டிருக்கும்.

வெளியீட்டாளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டு நிரந்தர தொடர் இலக்கம் வழங்குவதற்கு 50 பவுண்கள் (விற்பனை வரி நீங்கலாக) பிரிட்டனில் அறவிடப்படுகின்றது. மற்றைய நாடுகளில் அமைந்துள்ள தேசிய நூலகங்களில் அந்தந்த நாட்டுச் செலவினங்களைக் கேட்டறிந்து கொள்ளமுடியும். வெளியீட்டாளர்

பட்டியலில் ஒரு தடவை பதிவுசெய்யப்பட்டதும் எத்தனை நூல் களுக்கும் அவர் இலக்கத்தைக் கோரலாம்.

ஒரு வெளியீட்டாளர் தனது தலைமை அலுவலகம் இயங் கும் நாட்டிலேயே தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும். நூல் எங்கு அச்சிடப்படுகின்றது அல்லது எங்கு சந்தைப்படுத்தப்படுகின் றது என்பது இங்கு முக்கியமல்ல. சர்வதேச தராதர எண் வெளி யீட்டாளரை முதன்மைப்படுத்தியே வெளியிடப்படுகின்றது. ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களைப்பொறுத்தவரை, ஒரு எழுத்தாளர் தானே நூலை எழுதி வெளியிடுவதாலும், முதலீட்டைத் தானே மேற் கொள்வதாலும் தன்மை வெளியீட்டாளராகப் பதிந்து கொள்ள உரித்துடையவராவார். ஜேர்மனியில் இருக்கும் ஒரு எழுத்தாளர் தனது சொந்தப்பணச்செலவில் ஒரு நூலை பிரித்தானியாவில் அச் சிட்டு வெளியிடுவாராயினும் அவர் ஜேர்மன் வெளியீட்டாளராகவே கருதப்படுவார். அவரது நூலுக்கான தராதரஎண் ஜேர்மனியிலுள்ள தராதரஎண் வழங்கும் நிறுவனத்திடமிருந்தே பெற்றுக்கொள்ளப் படல் வேண்டும்.

இதுவரை தமிழகத்தில் வெளிவந்த ஈழத்துத்தமிழ் எழுத் தாளர்களின் நூல்களில் ISBN எண் குறிப்பிடப்படாதமை சுட்டிக் காட்டப்பட வேண்டும். இந்தியாவுக்குரிய எண் 81. இவ்வெண் பெறப்படாதவிடத்து எதிர்காலத்தில் தமது நூலை இந்தியாவிலோ, புலம்பெயர் நாடுகளிலோ எளிதாகச் சந்தைப்படுத்துவதில் ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடலாம். இந் திய நூல்களில் தராதரஎண் பரவலாகப் புழக்கத்தில் உள்ள தால் நூலீட்டலில் தராதரஎண் வழங்கப்படாத நூல்கள் ஓரங்கட் டப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. அண்மைக் காலங்களில் இலங்கையில் வெளியாகும் பல தமிழ்நூல்கள் இவ் விலக்கத்தைத் தாங்கி வருவதும் கவனிக்கப்படல் வேண்டும்.

வெளியீட்டாளர்களுக்குப் பதிவிலக்கம் வழங்கப்பட்டதும் அப்பதிவுகள் யாவும் காலத்துக்குக் காலம் வெளியீட்டாளர் வழி காட்டி (ஆண்டு நூல்) நூலில் பிரசுரிக்கப்படும். அதே வேளையில் அந்த ஆண்டு நூலின் பிரதிகள் அங்கத்துவ நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். ஜெனீவாவில் வெளியிடப்படும் சர்வதேச வெளியீட்டாளர் வழிகாட்டியில் காலத்துக்குக் காலம் இவை சேர்த்துக்கொள்ளப்படும். குறிப்பிட்டதொரு வெளியீட்டாளருக்கு வழங்கப்பட்ட இலக்கம் எக்காரணம் கொண்டும் அந்நாட்டில் மற் றொரு வெளியீட்டாளருக்கு வழங்கப்படமாட்டாது. வெளியீட்டாளர் தான் ஒரு நூலை வெளியிடத் தீர்மானித்ததும் அச்சகத்துக்குக் கையெழுத்துப் பிரதியை அனுப்பும் முன்னர் நூலின் விபரத்தை அதற்கென இருக்கும் ஒரு படிவத்தில் நிரப்பி அனுப்ப வேண்டும்.

சில நூல்கள் நூலகப்பதிப்பு, சாதாரண பதிப்பு என்று இரு வகை யில் வெளியிடப்படுவதுண்டு. ஒரே நூலின் சாதாரண பதிப்

புக்கும் நூலகப் பதிப்புக்கும் வெவ்வேறு சர்வதேச தராதர நூல் எண்கள் வழங்கப்படும்.

ஒரு நூல் வெளியிடப்பட்டு சிலகாலங்களின் பின் அதன் இரண்டாவது பதிப்பு மாற்றமெதுவுமின்றி மறுபிரசுரமாக வெளியிடப்பட்டால் (Reprint) முதலாம் பதிப்புக்கு வழங்கப்பட்ட நூல் இலக்கத்தையே மறுபதிப்பு நூலுக்கும் பயன்படுத்தலாம். ஆனால் மாற்றங்களுடன் திருத்திய பதிப்பாக (Revised Edition) வெளியிடப்படுமேயானால் அது இரண்டாவது பதிப்பு என்று கணக் கிடப்பட்டுப் புதிய தராதர நூல் எண் வழங்கப்படும்.

ஒரு வெளியீட்டாளர் பதிவுசெய்யும் நூல்கள் தொடர்இலக்க ஒழுங்கில் பதியப்படும் அந்தத் தொடரிலக்கம் சர்வதேச தராதர நூல் எண்ணின் மூன்றாவது பிரிவில் தரப்படுகின்றது.

சர்வதேச தராதர நூல் எண் பின்வரும் உருவஅமைப்புள்ள வெளியீடுகளுக்கு வழங்கப்பட மாட்டாது. நாட்குறிப்புகள்(Diaries), கலண்டர்கள், விளம்பரப் பிரசுரங்கள், நாடக கலை நிகழ்ச்சி நிரல்கள், நிறுவன வழிகாட்டிகள் (Prospectus), தலைப்புப்பக்கம், விளக்கம் போன்றவற்றைக் கொண்டிராத படங்கள், ஒலி, ஒளிப் பதிவுகள் மற்றும் ஆண்டு மலர்கள் ஓரினப்பொருள் பற்றிய நூல் வரிசை ஆகியன தவிர்ந்த சஞ்சிகை பருவவெளியீடுகள் ஆகியன வும் சர்வதேச தராதர நூல் எண் பெறத் தகுதியற்றவையாகும். சஞ்சிகைகளைப் பொறுத்த மட்டில் சர்வதேச பருவ வெளியீட்டுத் தராதர எண் (ISSN) வழங்கும் திட்டம் அமுலிலுள்ளது.

ஒரு வெளியீட்டாளர் தனது வெளியீடொன்று ச.த.நூ.எண் வழங்கப்படுவதற்குத் தகுதியானதாவென்பதை முன்கூட்டியே தராதர எண் வழங்கும் நிறுவனத்திடமிருந்து தெரிந்து கொள்ள லாம். ஏற்கெனவே வெளியிடப்பட்டு விட்ட நூலொன்றுக்கு ச.த.நூ. எண் கோரி விண்ணப்பிக்கக் கூடாது. குறிப்பிட்ட நூலை மறு பிரசுரம் செய்ய முற்படும்வேளையில் மாத்திரம் விண்ணப்பிக்க லாம்.

தராதர இலக்கத் தொகுதியின் இறுதிப்பிரிவு (நான்காவது பிரிவு) பரிசோதனை இலக்கமாகும்.முன்னைய மூன்று பிரிவு இலக் கங்களும் சரியான முறையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை ஒரு கட்டளை விதி (Formula) மூலம் அறிந்து கொள்வதற் காக இப்பிரிவு இலக்கம் பயன்படுத்தப்படும். இவ்விலக்கம் எப் போதும் ஒரு தான இலக்கமாகவே காணப்படும்.

சர்வதேச தராதர நூல் எண் வழங்குவதால் ஒரு ஈழத்து ஆசிரிய, வெளியீட்டாளருக்கு என்ன நன்மை கிட்டப்போகின்றது என்று சிந்திக்கக்கூடும். சர்வதேச தராதர நூல் எண்ணைப் பெறு வதால் நவீனமயப்படுத்தப் பட்டு வரும் தேசிய நூல்வெளியீட்

டாளர் வரிசையில் எம்மவரும் இடம்பெற்று விடுகின்றனர். காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சர்வதேச வெளியீட்டாளர் வழிகாட்டியில் எம்மவரின் பெயரும் இடம்பெறுமாகையால் காலக்கிரமத்தில் சர்வ தேச மட்டத்தில் அனைவரும் அறிமுகமாவது சாத்தியமாகிறது. நூலகங்களில் நூற் தேர்வு நடவடிக்கைகளை நவீனமயமாக்கும் இவ்வேளையில் இத்தகைய வழிகாட்டி நூல்களில் இடம்பெறுவதால் எமது வெளியீட்டாளர்கள் தமது வெளியீடுகளை சந்தைப்படுத்த மிகநல்ல வாய்ப்பும் கிட்டுகின்றது.

சர்வதேச தராதர நூல் எண் பெற்றதும் அவ்விலக்கத்தை நூலின் பின்புற அட்டையில் தெளிவாக அச்சிடல் வேண்டும். இதை நூலின் அடிப்பகுதியில் (10 பொயின்ட் எழுத்தில்) அச்சிட வேண்டும் என்பது விதியாகும். மேற்குறிப்பிட்ட இடத்தில் அச்சிட முடியாமல் போகுமிடத்து தெளிவாகத் தெரியக் கூடியவாறு மட்டையின் வேறொரு பகுதியிலும் அச்சிடலாம். மேலும் இவ்விலக்கம் நூலின் தலைப்புப் பக்கத்தின் பின்புறத்திலும் (Verso) அச்சிடப்படல் வேண்டும். ISBN என்ற நான்கு ஆங்கில எழுத்துக்களுடன் நூலுக்கான எண்ணை அதன் நான்கு பிரிவுகளையும் வேறுபடுத்தத் தக்கவாறு குறுக்குக்கோடிட்டு அச்சிட வேண்டும்.

நூலுக்கு மேலுறை(Jacket) இடப்பட்டு விற்பனை செய்யப்படுமிடத்து அந்த மேலுறையிலும் இவ்விலக்கம் பொறிக்கப்படல் வேண்டும்.

ஐக்கிய இராச்சியத்தில் சர்வதேச தராதர நூல் எண் வழங்கல் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ISBN Agency,
Woolmead House West,
Bear Lane, Farnham,
Surrey, GU9 7LG.

Telephone: 01252 742590,
Fax 01252 742526
E-mail: ISBN@whitaker.co.uk.

□□□□□□

நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்படும் வகுப்புப் பிரிவு
(தூவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)

பிரதான பிரிவுகள்

000-099	பொதுப்பிரிவு
100-199	மெய்யியல்துறை
200-299	சமயங்கள்
300-399	சமூக விஞ்ஞானங்கள்
400-499	மொழியியல்
500-599	தூய விஞ்ஞானங்கள்
600-699	பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்
700-799	கலைகள், நுண்கலைகள்
800-899	இலக்கியம்
900-999	புவியியல், வரலாறுகள்

(அடைப்புக்குறிக்குள் பதிவுகளின் தொடர்எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன)

உப பிரிவுகள்

000 பொதுப்பிரிவு

000	பொது அறிவு	(01-02)
010	நூலியல், நூல்விபரப்பட்டியல்	(03)
020	நூலவியல், தகவல் விஞ்ஞானம்	(04-12)
030	கலைக்களஞ்சியங்கள்	
050	பொதுப் பருவஇதழ்கள், வழிகாட்டிகள்	(13-16)
060	பொது நிறுவனங்கள்	(17)
070	ஊடகவியல், வெளியீட்டுத் துறை	(18-23)

100 மெய்யியல்துறை

100	தத்துவவியல்	(24-27)
150	உளவியல்	(28-33)
170	ஒழுக்கவியல்	(34-44)
180	இந்து தத்துவம்	(45-65)
190	சோதிடம், வானசாஸ்திரம்	(66-67)

200 சமயங்கள்

220	கிறிஸ்தவம்	(68-75)
294.3	பௌத்தம்	

294.5 இந்து சமயம் (76-129)
297 இஸ்லாம் (130-133)

300 சமூக விஞ்ஞானங்கள்
301 சமூகவியல் (134-137)
301.1 பண்பாடு (138-152)
302 பெண்ணியம் (153-159)
320 அரசறிவியல் (160-175)
330 பொருளியல் (176-179)
334 கூட்டுறவு (180)
336 நிதியியல், வங்கியியல் (181)
340 சட்டவியல்
342 அரசியலமைப்புச் சட்டம் (182-183)
350 பொது நிர்வாகம்
360 சமூக சேவை நிறுவனங்கள் (184)
370 கல்வியியல் (185-201)
370.1 கல்வி நிறுவனங்கள் (202-204)
380 வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து
381 வர்த்தகம் (205)
388 தரைப்போக்குவரத்து (206)
390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும் (207)
390.1 இடப்பெயர் ஆய்வு (208-210)
394 பொது வழமைகள்
395 நாட்டார் கலைகள் (211-215)
398 கிராமிய இலக்கியங்கள் (216-230)
398.1 பழமொழிகளும் விடுகதைகளும் (231-233)

400 மொழியியல்
491.2 சமஸ்கிருத மொழி (234)
491.48 சிங்கள மொழி
494.8 தமிழ் மொழி (235-240)
494.8(1) தமிழ் இலக்கணம் (241-247)
494.8(2) தமிழ்ப் பாடநூல்கள் (248-255)

500 தூய விஞ்ஞானங்கள்
500 தூய விஞ்ஞானம் (256)
510 கணிதம் (257-260)
520 வானியல் விஞ்ஞானம்
527 விண்வெளிப்பயணம் (261)

600 பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்
610 மருத்துவம்
612 உடற்கூற்றுத் தொழிலியல் (262)
613 பொது உடல்நலவியல் (263)
614 பொதுச் சுகாதாரம் (264-267)
616 நோய்கள் (268)
618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம் (269)
619 கீழைத்தேய மருத்துவம்
619.1 சித்த மருத்துவம் (270)
640 இல்லப்பொருளியல், குடும்பக்கலை (271)
642 உணவும் பரிமாறலும் (272-274)
649 குழந்தைப் பராமரிப்பு (275)

650 முகாமைத்துவம்
657 கணக்கியல் (276-278)
658 விளம்பரத்துறை

700 கலைகள், நுண்கலைகள்
730 சிற்பக்கலை
750 ஓவியக்கலை (279-281)
750.(1) ஒப்பனைக்கலை (282)
780 இசைக்கலை (283-287)
790 நிகழ்கலைகளும், பொழுதுபோக்குக்கலைகளும்
791 நாட்டியக் கலை (288)
792 அரங்கியல், நாடகக்கலை (289-300)
793 திரைப்படக்கலை (301)

800 இலக்கியம்
800.(1)இலக்கிய அமைப்புகள் (302-303)
801 சிறுவர் இலக்கியங்கள்
801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள் (304-325)
801.(2) சிறுவர் நாடகங்கள் (326)
801.(3) சிறுவர் கவிதா நாடகங்கள், காவியங்கள்
801.(4) சிறுவர் சிறுகதைகள் (327-331)
801.(5) சிறுவர் நாவல்கள், குறுநாவல்கள் (332-336)
801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள் (337)
801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள் (338)
891.2 சமஸ்கிருத இலக்கியம் (339-340)
891.48 சிங்கள இலக்கியம்
894.8 தமிழ் இலக்கியம் (341)
894.8(1) தமிழ் கவிதைகள் (342-482)

894.8(2) தமிழ் நாடகங்கள் (483-498)
894.8(3) தமிழ்க்கவிதை நாடகங்கள்-காவியங்கள் (499-510)
894.8(4) தமிழ்ச் சிறுகதைகள் (511-615)
894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள் (616-733)
894.8(6) இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள் (734-810)
894.8(7) பலவினத் தொகுப்பு (811-824)

899 பிறமொழி இலக்கியங்கள்
899.(1) பிறமொழிக் கவிதைகள் (825-828)
899.(2) பிறமொழி நாடகங்கள்
899.(3) பிறமொழிக்கவிதைநாடகங்கள், காவியங்கள் (829-831)
899.(4) பிறமொழிச் சிறுகதைகள்
899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள் (832-834)
899.(6) மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்

900 புவியியல், வரலாறுகள்
910 பொதுப் புவியியல் (835)
911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள் (836-846)
915 பிரதேசப் புவியியல் (847-848)
920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள் (849-852)
920.1 ஊடகவியலாளர்,தகவல் ஒலிபரப்புத்துறையினர்(853)
921 மெய்யியலாளர்
922 சமயத் தலைவர், சிந்தனையாளர் (854-860)
923 சமூகவியல்துறை சார்ந்தோர் (861-867)
923.1 பெண்ணியவாதிகள்
923.2 அரசியல் துறையினர் (868-873)
923.3 பொருளியலாளர்கள்
923.4 சட்ட அறிஞர்கள்
923.5 பொது நிர்வாகத்துறையினர்
923.6 சமூக சேவகர்கள் (874-875)
923.61 விடுதலைப் போராளிகள் (876-879)
923.7 கல்வியியலாளர்கள் (880-881)
923.8 வர்த்தகர்கள்
923.9 நாட்டாரியல் அறிஞர்கள் (882-883)
924 மொழியியலாளர்கள் (884-889)
925 விஞ்ஞானிகள்
926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள் (890)
927 கலைஞர்கள் (891)
927.3 சிற்பக்கலைஞர்
927.5 ஓவியக்கலைஞர்கள் (892)
927.8 இசைக்கலைஞர்கள்

927.91 நாட்டியக் கலைஞர்கள் (893-896)
927.92 நாடகக் கலைஞர்கள் (897-931)
928 இலக்கிய அறிஞர்கள் (932)
929 வம்சாவளி ஆய்வுகள்

950 ஆசிய வரலாறு
954.93 இலங்கை வரலாறு
954.93(1) இலங்கையின் பொது வரலாறு (933-936)
954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு (937-969)
954.93(3) இனங்கள் இன உறவுகள் (970-983)
954.93(4) பிரதேச வரலாறு (984-998)
954.93(5) தொல்லியலாய்வு (999-1000)

□□□□□□

000 பொது அறிவு

001

பொது அறிவு: பகுதி 1. க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82,பிரவுண் வீதி, 3வது பதிப்பு, ஜனவரி 1991, 1வது பதிப்பு, டிசம்பர் 1981. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், செம்பியன் ஒழுங்கை)

(4),92 பக்கம். வரைபடம். விலை: ரூபா 30. அளவு: 21X14 சமீ.

பொது அறிவுக் கேள்வி பதில்கள். அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான தகுதிகாண் பொதுப்பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களுக்கும், தமது திறனையும் அறிவையும் விருத்தி செய்து கொள்ள விரும்பும் பிறருக்கும் ஏற்றது.

002

பொது உளச்சார்பு. செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 2வது பதிப்பு, ஜூன் 1990. 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: சுவர்ணா அச்சகம்)

(8),120 பக்கம். விளக்கப்படம். விலை: ரூபா 50. அளவு: 18X13.5 சமீ.

Intelligence Quotients (IQ) என வழங்கப்படும் பொது உளச்சார்பு வினாக்களும் விடைகளும். வாசகர் தமக்குரிய பொது உளச்சார்பு நிலையை மதிப்பிடும் அளவுகோலாகவும் இந்நூல் அமைகின்றது.

010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

003

இலக்கிய விருந்து. புன்னியாமீன். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, 1987. (சென்னை: பசுங்கதிர் பதிப்பகம், 43, முத்துமாரி வீதி)

96 பக்கம். விலை: இந்திய ரூபா 6. அளவு: 18X12 சமீ

கண்டி தமிழ் மன்றம் வெளியிட்ட 30 நூல்கள் பற்றிய இவ் விபரப் பட்டியலில், நூலின் பௌதிக விபரங்களும் நூலின் உள்ளடக்கம் பற்றிய சுருக்கக் குறிப்பும் தரப்பட்டுள்ளன. வெளிவரவுள்ள ஆறு நூல்கள் பற்றிய குறிப்பும் உள்ளது.

மேலும் பார்க்க: 022, 798

020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்

004

ஆரம்ப நூலகர் கைநூல். என்.செல்வராஜா. யாழ்ப்பாணம்: அயோத்தி நூலக சேவைகள், ஆனைக்கோட்டை. 1வது பதிப்பு, செப்டெம்பர் 1991. (கொழும்பு: ராஜன் பிரின்டர்ஸ்)

61 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

சிறு நூலகமொன்றின் செயற்பாடுகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. நூலகத்துறையைத் தேர்ந்தெடுக்கும் ஒருவருக்கு நூலகமொன்றின் அன்றாட நடவடிக்கைகள், மற்றும் நிர்வாக அறிவுரைகள் வழங்கும் நூல். குடும்ப நூலமொன்றை நிர்வகிக்க விரும்புவோருக்கும் உதவும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

005

கலைச்சொற்றொகுதி: நூலகமும் தகவல் விஞ்ஞானமும். விமலாம்பிகை பாலசுந்தரம். யாழ்ப்பாணம்: அயோத்தி நூலக சேவைகள், ஆனைக்கோட்டை. 1வது பதிப்பு, 1989.(கல்லச்சுப் பிரதி)

iii,46 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 27X20 சமீ

நூலக தகவல் விஞ்ஞானத்துறையில் பயன்படுத்தப்படும் சுமார் 1500 ஆங்கில கலைச்சொற்களுக்குரிய தமிழ்ப்பதங்கள் தரப்பட்டுள்ளன. இலங்கையில் இத்துறையில் தமிழில் வெளிவந்துள்ள முதலாவது கலைச்சொற்றொகுதி இதுவாகும்.

006

கல்வி நிறுவன நூலகங்கள். விமலாம்பிகை பாலசுந்தரம். ஆனைக்கோட்டை: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: ஆர். எஸ். அச்சகம்)

78 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 20X14 சமீ.

ஆரம்பப் பாடசாலைகள், கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகள், சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்களான தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பல்வேறு ஆய்வகங்கள் ஆகியவற்றில் இயங்கும் நூலகங்களின் நூற்சேகரிப்பு, நூலகங்களின் பயன்பாடு, நூலக சேவைப் பகுதிகள் முதலியன விபரிக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள், அவற்றை நிவர்த்தி செய்ய நூலகர் கையாளக்கூடிய வழிமுறைகள் என்பனவும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

007

கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும். என்.செல்வராஜா. ஆனைக்கோட்டை: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேஷன்ஸ்)

86 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18.5X12.5 சமீ.

தமிழ்ப் பிரதேசங்களை மையப்படுத்தி கிராம நூலக இயக்கம், சிறுவர் நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பாலர்களுக்கான நூல்களைக் கிராமமட்டத்தில் தயாரித்தல், சனசமூக நிலையங்களின் நூலக நடவடிக்கைகள், நூல் கொள்வனவு போன்ற விடயங்களை விளக்கும் கட்டுரைகளைக் கொண்டது.

008

தூயியின் தசாம்ச வகுப்பு: 18ம்பதிப்பு: 3ம்சாராம்சம். வே.இ.பாக்கியநாதன் (தமிழாக்கம்), கொழும்பு 7: இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை, 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: ஸ்டார் லைன் அச்சகம்)

54 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 25X18 சமீ.

நூற்பகுப்பாக்கத்தில் இன்று மிகவும் பிரபல்யமாக விளங்கும் தூயி தசாம்ச வகுப்பாக்கமே (Dewey Decimal Classification) பெரும்பான்மையான நாடுகளில் ஆவணங்களை ஒரு சீராக ஒழுங்கு செய்வதற்கு ஏற்புடையதெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனது 18வது பதிப்பின் மூன்றாவது நிரைகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் இணைத்துத் தரப்பட்டுள்ளன. சிறுநூலகங்களில் வகுப்பாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கும் நூலகவியல்துறை மாணவர்களுக்கும் ஏற்றது.

009

நூலகவியலில் பட்டியலாக்கம். விமலாம்பிகை பாலசுந்தரம். திருநெல்வேலி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: மஹாத்மா அச்சகம்)

viii,116 பக்கம். விலை: ரூபா 60. அளவு: 20.5X14.5 சமீ.

நூலக மேலாண்மைக்கு அடிப்படையானதும் தொழில்நுட்பத்திறன் வாய்ந்ததுமான பட்டியலாக்கச் செயற்பாட்டின் (cataloguing) வரலாறு, பட்டியலாக்கம், அதன் விதி முறைகள், பயன்பாடு முதலிய பல்வேறு விடயங்களைத் தரும் நூல்.

010

நூலும் நூலகமும்.எஸ்.எம்.கமால்தீன். யாழ்ப்பாணம்: அயோத்தி நூலக சேவைகள், ஆனைக்கோட்டை. 1வது பதிப்பு, செப்டெம்பர்

1992. (Colombo 12: Linraj's Printers. 282/15 , Dam Street)
(10),70 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

பல்வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறப்பு மலர்களில் ஆசிரியரால் எழுதப்பெற்ற நூலகவியல், தகவல் விஞ்ஞானம் தொடர்பான கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும்.

011

யாழ்ப்பாண நூல்நிலையம்: ஓர் ஆவணம். க.சி.குலரத்தினம். சென்னை: மித்ர வெளியீடு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1997. (சென்னை 600024: Mithra Book makers, Arcot Road)
iv,152 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

யாழ்ப்பாண நூலகம் கருக்கொண்டு உருக்கொண்டு வளர்ந்து வளம்பெற்ற வரலாற்றினை விளக்கும் நூல். யாழ்ப்பாணம், ஈழநாடு தினசரியில் 20.7.1982 முதல் 18.8.1982 வரை வெளியான தொடரின் நூல் வடிவம்.

012

யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு. என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலகசேவைகள், 1வது பதிப்பு. ஜூன் 2001. (இலண்டன்: வாசன் அச்சகம்)
128 பக்கம், புகைப்படங்கள். விலை: ஸ்டேர்லிங் பவுண் 10.00. அளவு: 27X21 சமீ.

ஜூன் 1, 1981 இல் இலங்கை அரசபடையினரால் எரித்து அழிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் வரலாற்றைக் கூறக்கூடிய பத்திரிகைச் செய்திகள், சஞ்சிகைகள், நூல்கள், இணையத்தளங்கள், போன்றவற்றில் வெளியான தகவல்களையும், துண்டுப்பிரசுரங்கள், சிறு நூல்கள் போன்றவற்றையும் தொகுத்து ஆண்டுவாரியாக ஒழுங்கு செய்து, யாழ். நூலகத்துடன் தொடர்பு கொண்டவர்களின் கட்டுரைகளுடன் சேர்த்து படங்களுடன் நூலுருவாக்கப்பட்டுள்ளது.

050 பொதுப் பருவஇதழ்கள், வழிகாட்டிகள்

013

தமிழ் ஓலைகள் 1994. தி.ஸ்ரீஸ்கந்தராஜா,ஏ.கே.எஸ்.திருலிங்கநாதன்.(தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon,London SW19 8HF, 1வது பதிப்பு, 1994. (இலண்டன்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
(12),92 பக்கம். விலை: இலவசம். அளவு: 21X15 சமீ.

தமிழ் ஓலைகள் 1995. தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.கே.எஸ்.திருலிங்கநாதன்.ஏ.ஞானேந்திரன் (தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories,52 Kingsley Road, Wimbledon,London SW19 8HF, 2வது பதிப்பு,1995. (இலண்டன்:அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
96 பக்கம். விலை: இலவசம். அளவு: 21X15 சமீ.

தமிழ் ஓலைகள் 1996. தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.கே.எஸ்.திருலிங்கநாதன்.ஏ.ஞானேந்திரன் (தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories,52 Kingsley Road, Wimbledon,London SW19 8HF, 3வது பதிப்பு,1996. (இலண்டன்:அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
104 பக்கம். விலை: இலவசம். அளவு: 21X15 சமீ.

தமிழ் ஓலைகள் 1997. தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.ஞானேந்திரன். ஏ.கே.எஸ்.திருலிங்கநாதன். (தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF, 4வது பதிப்பு,1997. (இலண்டன்:அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
128 பக்கம். விலை: இலவசம். அளவு: 21X15 சமீ.

தமிழ் ஓலைகள் 1998. தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.ஞானேந்திரன். (தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF, 5வது பதிப்பு,1998. (இலண்டன்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
176 பக்கம். விலை: இலவசம். அளவு: 21X15 சமீ.

தமிழ் ஓலைகள் 1999. தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.ஞானேந்திரன். (தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon,London SW19 8HF, 6வது பதிப்பு,1999. (இலண்டன்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
232 பக்கம். விலை: இலவசம். அளவு: 21X15 சமீ.

தமிழ் ஓலைகள் 2000. தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.ஞானேந்திரன். (தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon,London SW19 8HF, 7வது பதிப்பு,2000. (இலண்டன்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
288 பக்கம். விலை: இலவசம். அளவு: 21X15 சமீ.

தமிழ் ஓலைகள் 2001. தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.ஞானேந்திரன். (தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon,London SW19 8HF, 8வது பதிப்பு, 2001.

(இலண்டன்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
416 பக்கம். விலை: இலவசம். அளவு: 21X14.5 சமீ.

தமிழ் ஒலைகள் 2002. தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.ஞானேந்திரன். (தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF, 9வது பதிப்பு, 2002. (இலண்டன்: அச்சகவிபரம் குறிப்பிடப்படவில்லை)
480 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X15 சமீ.

1994 தொடக்கம் ஆண்டு இதழாகத் தொடர்ந்து வெளிவரும் பிரித்தானிய, ஐரோப்பியத் தமிழரின் வர்த்தக வழிகாட்டி.

014

தமிழர் தகவல் 1995. தமிழர் கலை இலக்கிய வட்டம். London: Tamil Art and Literary Circle, P.O.Box 4035, London SW17 9XP, 1வது பதிப்பு, 1995. (இலண்டன்: வாசன் அச்சகம்)
100 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14.5 சமீ.

இது ஒரு லண்டன் வர்த்தக வழிகாட்டி.

015

தமிழர் தகவல் 2001. பத்தாவது ஆண்டு மலர். பிரதம ஆசிரியர் எஸ்.திருச்செல்வம். கனடா: அகிலன் அசோஷியேட்ஸ், P. O.Box 3, Station F,Toronto, 1வது பதிப்பு,2001. (Canada: Ahilan Associates, Printers and Publishers, Toronto)
138 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 27.5X21 சமீ.

கனேடியத் தமிழ் மக்களின் நடவடிக்கைகள், பிரச்சினைகள், தீர்வுகள், வளர்ச்சிகள், அத்தகைய வளர்ச்சிக்காக உழைக்கும் பெரியார்கள் தொடர்பான பல தகவல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பனவற்றைத் தாங்கி பெப்ரவரி 1991 முதல் வெளிவரும் மாதாந்த சஞ்சிகையின் 10வது ஆண்டு மலர்.

016

தமிழர் மத்தியில். நடனகுமாரன், ராஜேந்திரம் (தொகுப்பாசிரியர்கள்) கனடா: Nanda Publications, 4, Baldoon Road, Scarborough, Ontario, 1வது பதிப்பு,1993. (அச்சக விபரம் அறிய முடியவில்லை)
384 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X15 சமீ.

வர்த்தக வழிகாட்டி. கனடாவின் ஒன்ராரியோ மாநிலத்தில் வாழும்

தமிழர் பற்றிய தகவல்கள், வர்த்தகத் தகவல்கள், வளங்கள், சேவைகள் ஆகியனவற்றைத் தாங்கி வரும் தொகுப்பு.

060 பொது நிறுவனங்கள்

017

நோர்வே தமிழ்ச்சங்கம் ஆண்டு மலர் 1983. ம.அமரசிங்கம் (பதிப்பாசிரியர்). நோர்வே: தமிழ்ச்சங்கம், ஒஸ்லோ, 1வது பதிப்பு, 1983. (யாழ்ப்பாணம்: ஆரெஸ் அச்சகம்)
58 பக்கம், தகடுகள், வண்ணப்படங்கள், ஓவியங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 27X20.5 சமீ.

நோர்வே தமிழ்ச்சங்கத்தின் தமிழ் வளர்ச்சிப்பணிகள் பற்றிய தகவல்கள் வண்ணப்படங்களுடன் உள்ளன. சமூகவியல், கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் தமிழ் நோர்வேஜிய மொழிகளில் எழுதப்பட்ட ஆக்கங்களின் தொகுப்பு.

070 ஊடகவியல், வெளியீட்டுத் துறை

018

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள். கோப்பாய் சிவம். புத்தூர்: ப.சிவானந்த சர்மா, சிவன்கோவில் அருகாமை, ஆவரங்கால், 1வது பதிப்பு, ஜூன் 1985. (கிளிநொச்சி: சர்வசக்தி, குருகுலம்)
viii,44 பக்கம். விலை: ரூபா 7.50. அளவு: 18X13 சமீ.

ஈழத்தின் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பற்றிய ஆசிரியரின் நோக்கும் 1841 முதல் 1984 வரையில் இலங்கையில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பற்றிய சுருக்கமான விளக்கங்களுடனான பட்டியலும் இடம்பெற்றுள்ளன.

019

இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகையின் வளர்ச்சி. இ. சிவகுருநாதன். சென்னை 26: குமரன் பப்ளிகேஷன்ஸ், வட பழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (சென்னை 24: சூர்யா ஆர்ட் பிரின்டர்ஸ்)
230 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 18X 12.5 சமீ.

இலங்கையில் தமிழ்ப் புதினப்பத்திரிகைகளின் வளர்ச்சி பற்றிய வரலாற்றுடன் தினகரன் (கொழும்பு) பத்திரிகையின் வரலாறு, அதன் பங்களிப்பு பற்றியும், அப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்த நீண்ட கால அனுபவங்களினூடாக இந்நூலாசிரியர் ஆவணமாக்கியுள்ளார்.

020

ஈழத்துப் பதிப்புக்கலை வளர்ச்சியிலே சன்மார்க்க சபையின் பணி- ஓர் ஆய்வு. இ.பாலசுந்தரம். குரும்பசிட்டி: சன்மார்க்க சபை, 1வது பதிப்பு, 1989. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)
24 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினால் காலத்துக்குக்காலம் வெளியிடப்பட்ட 53 பிரசுரங்களையும் வகை துறையாகப் பிரித்து விளக்கியுள்ளார். இது ஈழகேசரி பொன்னையா நினைவுதின உரையாகும்.

021

ஈழநாடு 25வது ஆண்டு நிறைவுமலர். ஈழநாடு ஆசிரியர் குழு. யாழ்ப்பாணம்: ஈழநாடு அலுவலகம், 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: ஈழநாடு அச்சகம், சிவன் கோவில் மேற்கு வீதி)
56 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 43X28.5 சமீ.

11.2.1984 இல் யாழ்ப்பாணத்து *ஈழநாடு* பத்திரிகை நிறுவனத்தின் 25வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட பிரசுரம். ஈழநாடு பத்திரிகையின் வரலாறு, பத்திரிகையாளர்களின் அனுபவக்கட்டுரைகள், சமய, கலை, இலக்கியக் கட்டுரைகள் ஆகியவற்றைத் தாங்கி வெளிவந்தது.

022

காந்தளகம்: 20 ஆண்டுகள். அண்ணா கண்ணன். சென்னை 600002: காந்தளகம், 834 அண்ணாசாலை, 1வது பதிப்பு, ஜூன் 2000. (சென்னை: காந்தளகம்)
192 பக்கம், புகைப்படம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியில் மரவன்புலவில் முளைவிட்டு சென்னையில் வேரூன்றித் தளைத்து விருட்சமாகியிருக்கும் *காந்தளகம்* வெளியீட்டகத்தின் இருபது ஆண்டு கால வளர்ச்சியும் வரலாறும் பதிவுக்குள்ளாகியுள்ளது. 1980 முதல் 2000 வரையிலான காலப்பகுதியில் காந்தளகம் எப்படி உருவானது, வளர்ந்தது, அதன் 20 ஆண்டுக்கால செயற்பாடுகள் எவை, என்னென்ன விளைவுகளை அவை ஏற்படுத்தின போன்ற விடயங்களைப் பதிவு செய்யும் முயற்சியின் வெளிப்பாடு இந்நூலாகும். காந்தளகத்தின் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், உடன் பதிப்பாளர்கள், தொழில் முறைத் தொடர்புடையோர் எனப் பல்வேறு தரத்தினரதும் குரல்கள் இங்கே ஒலித்துள்ளன.

காந்தளகத்தின் பதிப்பு மற்றும் அச்சு நூல்கள் 218இன் விபரமான நூற்பட்டியல் ஒன்றும் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

023

மல்லிகை வெள்ளிவிழா மலர். டொமினிக் ஜீவா. யாழ்ப்பாணம்: மல்லிகை, 234 B, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1990. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)
152 பக்கம். விலை: ரூபா 75. அளவு: 24.5X18.5 சமீ.

இலங்கை-இந்திய எழுத்தாளர் முப்பத்து மூவரின் கலை, இலக்கிய ஆக்கங்களைத் தாங்கிய இதழாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மல்லிகை மாத இதழின் வெள்ளிவிழாவையொட்டி வெளியிடப் பெற்றது.

மேலும் பார்க்க: 086, 817, 824

100 தத்துவவியல்

024

அழகியல். சபா.ஜெயராஜா. இணுவில்: அம்மா வெளியீடு, மருதனார்மடம், 1வது பதிப்பு, 1989. (இணுவில்: அம்மா அச்சகம்)
54 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12.5 சமீ.

அழகியல் தொடர்பாக உளவியல் நோக்கிலான கருத்துக்களை வழங்கும் நூல்.

025

பிரபஞ்ச மர்மம்: விஞ்ஞான மெய்ஞான ஆய்வுகள். ஆ. விசாகரெத்தினம். இலண்டன்: 51, Myrna Close, London SW19 2HN, 1வது பதிப்பு, ஜனவரி 2001. (சென்னை 4: யுனைட்டெட் பைண்ட் கிரப்பிக்ஸ், 101 D, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, மைலாப்பூர்)
144 பக்கம். விலை: ஸ்டேர்லிங் பவுண். 2. அளவு: 22X14 சமீ.

இயற்கையின் தத்துவத்தை உணர்த்துகின்ற, தமிழரின் மறைந்து போன திராவிட நாகரீகத்திற்குப் புத்துணர்வூட்டி வளர்ப்பதற்குக் கையாளப்பட வேண்டிய தமிழ்க் கலாச்சார நியதிகளையும், நெறிகளையும் பகுத்தறிவு கொண்டு காலத்திற்கு ஏற்ப, விஞ்ஞான ரீதியாகவும், மெய்ஞ்ஞான ரீதியாகவும், சித்தாந்த ரீதியாகவும், ஆராய்ந்து கருத்துக்களை வழங்கும் நூல். ஆசிரியரின் பாரம்பரிய வைத்தியக்குடும்பப் பின்னணியும் அதன் பயனாகக் கற்றுணர்ந்த பிரபஞ்ச உற்பத்தி, அங்காதிபாதம் போன்ற வைத்திய நூல்களின் ஆளுமையும், வேதாந்த நூல்களான கைவல்யம், ஜீவப்பிரம்ம

ஐக்கிய வேதாந்த இரகசியம் போன்றவை வழங்கிய புலமையும் ஆசிரியரின் ஆய்வை எளிமையாக வழங்கத் துணை புரிந்துள்ளன.

026

விஞ்ஞானமும் விஞ்ஞான முறைகளும். ஆ.க.ஆனந்த நாதன். போராதனை: ஆ.க.ஆனந்தநாதன், மெய்யியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (யாழ்ப் பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி.)

xii,222 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 40. நூலகப் பதிப்பு: ரூபா 50. அளவு: 21X14 சமீ.

அளவையியலும் விஞ்ஞான முறையும், விஞ்ஞான மெய்யியல், சமூக விஞ்ஞான மெய்யியல் முதலிய பாடங்களின் பாடத்திட்டங்களை உள்ளடக்கி வெளிவந்துள்ள நூல்.

027

விமரிசன மெய்யியல். சோ.கிருஷ்ணராஜா. யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: மணிஓசை அச்சகம், 12 பற்றிக்ஸ் வீதி.)

76 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12.5 சமீ.

கலை இலக்கிய வளர்ச்சியில் விமரிசனம் பெரும் பங்கினை வகிக்கின்றது. அவ்வகையில் விமரிசன ஆய்வுகளின் புதிய வடிவங்கள், புதிய கண்ணோட்டங்கள் வெளிவருவது தமிழுலகில் அரிதாகவுள்ளது. இந்நிலையில் நான் வெளியீட்டு வரிசையில் 14வது நூலாக இது வெளிவந்துள்ளது. விமரிசனக் கொள்கை, விமரிசன முறையியல் ஆகிய இரு இயல்களைக் கொண்ட இந்நூலின் முதலாம் இயலின் கீழ் இலக்கிய விமரிசனமும் சமூகமும், விமரிசனமும் இலக்கியக் கல்வியும், இலக்கியமும் விமரிசனமும், விமரிசனமும் அழகியலும், விமரிசனமும் பொருள்கொள் இயலும், விமரிசனமும் அடிப்படை உண்மையியலும் ஆகிய தலைப்புகளிலும், இரண்டாம் இயலில், முறையியல், முறையியலும் விளக்கமும், முறையியலும் மதிப்பிடலும், ஆகிய தலைப்புகளிலும் விமரிசன மெய்யியல் விளக்கப்பட்டுள்ளது. அனுபந்தமாக, கலையும் இரசனையும், இந்தியக் கலை, இந்திய இரசனைக் கொள்கை ஆகியன பற்றிய குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன.

மேலும் பார்க்க: 792

150 உளவியல்

028

உறவுகளின் இராகங்கள். வி.பி. (இயற்பெயர்: D.வின்சன்ற்

பற்றிக்) யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1989. 1வதுபதிப்பு, ஜூலை 1985. (அச்சகவிபரம் அறியமுடியவில்லை)

91 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18X12 சமீ.

பல இடர்ப்பாடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் போராட்டங்களுக்கும் மத்தியிலே வாழும் மக்கள் உள, வளத்துணையோடு வாழும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாக இது அமைகின்றது. வாழ்க்கை பயனுள்ளதாக அமைவதற்குரிய அரிய கருத்துக்களைக் கொண்ட 11 கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும்.

029

குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே. ஹேய்ம் ஜீ.இனோட் (மூலம்), எஸ்.கே.விக்னேஸ்வரன்(தமிழாக்கம்). கொழும்பு2: மூன்றாவது மனிதன் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜூன் 2001. (கொழும்பு 13: யூ கே பிரின்டர்ஸ்)

144 பக்கம். விலை: ரூபா 200. அளவு: 22X14 சமீ.

குழந்தைகளின் உளவியலைப் புரிந்து கொள்வதனை நோக்கமாகக் கொண்டு ஆங்கிலத்தில் எழுதப்பட்ட Between Parents and child என்ற நூலின் தமிழாக்கம்.

மேலும் பார்க்க: 275

030

சிந்தனைப் பூக்கள். எஸ்.பத்மநாதன். கனடா: நம்நாடு வெளியீடு, த.பெ. எண் 99025, 1245 Dupont Street, Toronto, 1வது பதிப்பு, டிசெம்பர் 1996. (டொரன்ரோ: விசாலா அச்சகம்)

xxiv,108 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20x13 சமீ.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பல்வேறு உளவியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில், அவர்களின் வாழ்வியல் சிந்தனைகளை, பிரச்சினைகளின் தாக்கத்தை உளவியல் காரணிகளை வெளிக்கொணரும் 20 கட்டுரைகளின் தொகுப்பு.

031

நான்-சாத்தான்-ஞானம்-அவன்: மனத்தின் ஆட்டங்களைப் புரிந்துகொள்ள உதவும் கதைகள். சிவாசி (இயற்பெயர்: எஸ். சிவபாலன்). வத்தளை: எஸ்.சிவபாலன், 55/1 ஸ்ரீ விக்கிரம மாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1998. (கொழும்பு 12: Prakash Printing Works, 1B, Hultsdorf Street)

99 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 18.5X13 சமீ.

மனிதனின் சில நடவடிக்கைகளை உளவியல் ரீதியாகத் தெளிய வைக்கும் வகையில் எழுதப்பெற்ற கதைகள். *நான்* என்பதை ஆட்டி வைக்கும் *மன உறுப்பு* களையும், மனிதன் *பசி-வலி-ருசி* களையும் *சரி* என்ற முடிவுகளைக் கூறிய மன *அளவுகோல்* களையும் ஆராய ஆசிரியர் முயன்றிருக்கின்றார்.

032

மனவடு: நெருக்கீட்டின் உள விளைவுகளும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகளும். தயா சோமசுந்தரம். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1993. (யாழ்ப்பாணம்: மகாத்மா அச்சகம், ஏழாலை)
xii,218 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 275. அளவு: 22X14.5 சமீ. ISBN 955-9194-01-1

தாயகத்தின் இன்றைய சூழலில் மக்கள் பல்வேறு நெருக்கீடுகளுக்கு உட்படுகிறார்கள். பரபரப்பு, பதகளிப்பு, அச்சம், தவிப்பு, போன்ற உளப்பாதிப்புக்கும் நெருக்கீடுகளுக்கும் உள்ளாகின்ற இவர்கள் இவற்றை எதிர்கொள்ள எவ்வகையான வழிமுறைகளைக் கையாளலாம் என்பதை விளக்கும் நூல்.

033

ஜீவியப்பயணம். யூ.எல்.எம். குவைலீத். நாவலப்பிட்டி: சரண் தீப் இஸ்லாமிய எழுத்தாளர் முன்னணி, 1வது பதிப்பு, 1987.
68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு 16X12 சமீ.

25 தலைப்புக்களில் ஆசிரியர் எழுதிய சமூக உளவியல் கட்டுரைகளின் தொகுப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்க்க: 187

170 ஒழுக்கவியல்

034

அறுபதில் அறுபது. ச.வடிவேலு. சுன்னாகம்: வேலழகன் வெளியீடு, கே.கே.எஸ்.வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1988. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)
xii,60 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

திரு. வடிவேலு அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறுபது நல்வாசகங்கள் அடங்கிய சிறுநூல். அரிய படிப்பினைகளாக அமையும் இக்கருத்துக்கள் அன்றாட வாழ்வியலோடு ஒட்டிய வெவ்வேறு சுவைகளைக் கொண்டவை.

035

அன்றாட வாழ்வில் தத்துவங்கள். எஸ்.ஜே.யோகராசா. கொழும்பு: எஸ்.ஜே. யோகராசா, மொழியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம், 2வது பதிப்பு, மாசி 2002. 1வது பதிப்பு, ஆவணி, 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ்)
64 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 22X14.5 சமீ. ISBN 955-95655-4-0.

தோல்விகளைக் கண்டு சோர்ந்து போகாமல் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஒளியாகப்பார்த்து, உற்சாகத்துடனும் முயற்சியுடனும் வாழ இந்நூல் உதவும்.

-ஆசிரியர் (முன்னுரையில்)

036

இரவல் இதயங்கள்: கட்டுரைத்தொகுதி. எழிலன் (இயற் பெயர் அமலேந்திரன்). ஜேர்மனி: Poovarasu kultur und Literatur Organisation, Postfach 103401, 28034 Breman, 1வது பதிப்பு, மார்ச் 1997. (Chennai 13: Pio Printers, 83 East Mada Church Road, Royapuram)
(20),114 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 17.5X12 சமீ.

எழிலனின் இரண்டாவது நூல் இதுவாகும். சமுதாயத்தைக் கௌவிக் கொண்டிருக்கும் கவனிக்கப்பட வேண்டிய குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் வகையில் அமைந்த 33 கட்டுரைகளின் தொகுப்பு.

037

உங்களைப்பற்றி: சிறுவருக்கு அறிவுரை நூல். நந்தி. கொழும்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340 செட்டியார் தெரு, 2வது பதிப்பு, 1995. 1வது பதிப்பு, 1973. (கொழும்பு 11: லட்சுமிஹர, 309, செட்டியார் தெரு)
48 பக்கம். விலை: ரூபா 45. அளவு: 18X12.5 சமீ

சமய வாழ்வு, கால வர்த்தமானத்துக்கு ஏற்ப நற்பண்புகளைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்கும் வகையில் சிறுவர்களுக்கு அறிவு பூர்வமாக சிந்தனைகளை ஊட்டும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட கட்டுரைத் தொடர். வெற்றிமணி இதழில் பிரசுரம் பெற்ற இவை வெற்றிமணி வெளியீடாக 1973 இல் முதற்பதிப்பு வெளியாகியது.

038

ஒளவையார் அறிவுச் செல்வங்கள். கொழும்பு 2: இந்து சமய இந்து கலாச்சார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு அலுவலகம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு 10: இம்பீரியல் பிரஸ்)

60 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

ஔவையார் அருளிச்செய்த வாக்குண்டாம், ஆத்திசூடி, நல்வழி, ஆகிய நூல்கள் உரையுடன் கூடியது.

039

தந்தையின் பரிசு. ஆ.கந்தையா. நுகேகொடை: ஆ.கந்தையா, திறந்த பல்கலைக்கழகம், நாவலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1986. (கொழும்பு 14: ஸ்டார்லைன் அச்சகம்)

(6),126 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12.5 சமீ.

நூலாசிரியர் இங்கிலாந்தில் இருந்த 1984ம் ஆண்டுக் காலகட்டத்தில் அங்கிருந்து தனது மகனுக்கு எழுதுவதாக அமைந்த 20 கடிதங்களின் தொகுப்பு. அரசியல், சமூக விடயங்கள் பலவற்றை அலசுவதாக அமைகின்றது. இளைஞர்களுக்கான அறிவியல், ஒழுக்கவியல் கருத்துக்களை வலியுறுத்துகின்ற கட்டுரைகள்.

040

தைரியம் இருந்தால் சரித்திரம் படைப்போம். எழிலன் (இயற்பெயர் அமலேந்திரன்). ஜேர்மனி: பூவரசு கலை இலக்கியப் பேரவை, Poovarasu kultur und Literatur Organisation, Postfach 103401, 28034 Breman, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (Chennai 13: Pio Printers, 83 East Mada Church Road, Royapuram)

128 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 17.5X12 சமீ.

வறுமை-துயரம்-இழப்பு-ஏமாற்றம்- எனப் பல்வேறு விஷயங்களை எடுத்துப் பேசினாலும். எதில் இருந்தும் விடுபட்டுச் சாதனை படைக்கலாம். சரித்திரம் உருவாக்கலாம். மாமனிதராக உயரலாம் என்ற தன்நம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டுவதே இக்கட்டுரைத் தொகுப்பின் நோக்கமாகும்.

-இளம்பிறை எம்.ஏ.ர.ஃமான் (முன்னுரையில்)

041

நல்ல குடும்பவாழ்வுக்கு நல்ல உறவு தேவை. எஸ்.ஜே. யோகராஜா. கொழும்பு 11: அன்பின் பரிணாமச்சங்கம், 6வது சின்னப்பர் நடுநிலையம், 5வது மாடி, பூந்தோட்டவீதி, 1வது பதிப்பு, 1990. (கொழும்பு 12: கிரவுண் அச்சகம், 105 சென்.செபஸ்தியார் வீதி.)

47 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 21.5X14 சமீ.

குடும்பவாழ்வை சிறப்பாக நடத்தும் வழிவகை ஆராயப்பட்டுள்ளது.

கணவன்-மனைவி உறவில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திருமணம் முடிக்க இருக்கும் இளைஞர்-யுவதிகளுக்கு ஓர் திருமண ஆயத்த நூலாக இது அமையலாம்.

042

பணம் பந்தியிலே: கட்டுரைகள். விக்னா பாக்கியநாதன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.எண். 1447, 7 தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 17: எம்.கே. என்டர்பிரைஸ்)

100 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 18X12.5 சமீ.

பதினேழு சமூக உளவியல் கட்டுரைகளின் தொகுப்பு. மனித நேயம், பணம், முயற்சி, பணிவு, ஒற்றுமை, மற்றும் புலம்பெயர் வாழ்வில் உறவுகளின் நிலை போன்ற இன்னோரன்ன சமூகவியல் கருத்துக்கள் கட்டுரைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

043

மனித விழுமியங்கள். குமாரசாமி சோமசுந்தரம். கொழும்பு 6: ரஜி வெளியீடு, 73, 2/1 விகாரை ஒழுங்கை, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 14: ஸ்டார்லைன் அச்சகம்)

viii,190 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 21.5X14 சமீ.

மனித விழுமியங்கள் பற்றிய சிந்தனையைத் தூண்டும் ஒழுக்கவியல் குறுங் கட்டுரைகள் 45இன் தொகுப்பு.

044

மூலவேர்: வாழ்வியல் நூல். ம.ந.கடம்பேஸ்வரன். வட்டுக்கோட்டை: வட்டுக்கோட்டைத்தொகுதித் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii,48 பக்கம். விலை: ரூபா 55.00. அளவு 22.5X18 சமீ.

அன்பு, அறம், வீரம், செய்ந்நன்றி பேணுதல், நட்பு, சான்றாண்மை என்னும் உயர்ந்த பண்புகளைக் கருவாகக் கொண்ட 14 கட்டுரைகளின் தொகுப்பு. ஈழநாடு இதழில் வெளியான கட்டுரைகளின் தேர்ந்த தொகுப்பு இதுவாகும்.

180 இந்து தத்துவம்

045

அத்வைத சிந்தனை. சி.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: சி. கணபதிப்பிள்ளை, கலாசாலை வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு,

1984. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)
x,105 பக்கம், தகடுகள். விலை: ரூபா 20. அளவு: 18x13 சமீ.

அத்வைதம் பற்றிய பண்டிதமணி அவர்களின் வானொலி உரைகளின் தொகுப்பு.

"முகத்துக்கண் கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்துக் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்"

என்பது திருமந்திரம். அகத்துக்கண்ணை நெற்றிக் கண் என்று சொல்வதுமுண்டு. அது வெளித்தவர்கள் தாம் கண்டவற்றை நம் மனோர்க்கு விளக்குவது முடியாத காரியம். கண்ணுள்ளவர்கள் கண்டவைகளை, ஊனக்கண்ணால் காண முயன்றதே அத்வைத சிந்தனை.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை (முன்னுரையில்)

046

இந்து நாகரீகம்: உயர்தர வகுப்புகளுக்குரியது. 1ம் பாகம். பகுதி 2. க.சி.குலரத்தினம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தக சாலை, 1வது பதிப்பு, ஆவணி 1980. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, பீ.ஏ.தம்பி ஒழுங்கை)
272 பக்கம். விலை: ரூபா 18. அளவு: 21x14 சமீ.

இந்நூலின் முதற்பாகத்தின் முதற்பதிப்பு 1979இல் வெளிவந்தது. இரண்டாம் பகுதியாகிய இந்நூல் தென்நாட்டில் நிலவிய பக்திநெறி என்னும் அலகில், சைவசமயத்தின் எழுச்சியும் பக்தி இயக்கமும் விளக்கப்பெற்றுள்ளன. தொடர்ந்து தென்நாட்டுப் பக்தி நெறியாளரான 27 அடியார்கள் அருளிய பன்னிரு திருமுறைகள் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

047

இந்து நாகரீகம்: உயர்தர வகுப்புகளுக்குரியது. 1ம் பாகம். பகுதி 3. க.சி.குலரத்தினம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 1வது பதிப்பு, கார்த்திகை 1980. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, பீ.ஏ.தம்பி ஒழுங்கை)
264 பக்கம். விலை: ரூபா 23. அளவு: 21x14 சமீ.

இந்நூலின் முதற்பாகத்தின் முதற்பகுதி 1979இலும் இரண்டாம் பகுதி ஆவணி 1980இலும் வெளிவந்துள்ளன. மூன்றாம் பகுதியாகிய இந்நூல் வட நாட்டில் நிலவிய பக்திநெறி, வைணவ சமயத்தின் எழுச்சி, தமிழிலக்கியத்திற் காணப்படும் தென்னாட்டுச் சைவ மரபு, இந்து சமயத்தில் இக்காலகட்டத்தில் இருந்த சீர்திருத்த இயக்கங்களின் செயற்பாடுகள் ஆகியன விளக்கப் பெற்றுள்ளன.

048

இரு பெரும் நெறிகள். க.சொக்கலிங்கம். நாயன்மார்கட்டு: இராமலிங்கம் கைலாசபிள்ளை நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 1988. (யாழ்ப்பாணம்: சுவர்ணா பிரிண்டிங் வேர்க்ஸ், 295-7 காங்கேசன்துறை வீதி,)
52 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14 சமீ.

இந்து நாகரீகம் என்ற பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படத்தக்கதாக சைவநெறி, வேதாந்த நெறி ஆகிய இரு நெறிகளையும் பற்றி எழுதப்பட்ட இரு கட்டுரைகளின் தொகுப்பு.

049

ஈழத்து சிவயோக சுவாமிகள் ஏற்றிய ஞான விளக்கு. க.நவேலன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: Scripts Offset)
240 பக்கம். விலை: இந்திய ரூபா 48. அளவு: 18.5x12.5 சமீ.

ஈழத்துச் சித்தர்பரம்பரை, அவர்களைப்பற்றி இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், ஈழத்துச் சித்தர் பரம்பரை அட்டவணை, சித்தரும் அவர்தம் ஆற்றலும், சித்தர்கள் அகவழிபாட்டினர், சித்தர்கள் சமயங் கடந்த சான்றோர் ஆகிய தலைப்புக்களில் ஈழத்துச்சித்தர்கள் பற்றிய தகவல்களையும், குறிப்பாக, யாழ்ப்பாணத்து யோக சுவாமிகள் தோற்றமும் சமாதியும், அவர் அருளியவை, அவர் அருளாணையால் எழுதப் பெற்றவை, சுவாமிகள் ஆற்றிய பணிகள், சுவாமிகள் தொடர்பாக இதுவரை வெளிவந்த நூல்கள் ஆகியவை பற்றியும் கூறும்நூல்.

050

என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதன். நா.முத்தையா. கனடா: இந்து சமயப் பேரவை, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, மே, 1999. (கனடா: விவேகா அச்சகம்)
x,31 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் 125வது ஜெயந்தி விழாவின் போது வெளியிடப்பட்டது. நூலாசிரியர் அமரர் நா. முத்தையா, யோகர் சுவாமிகளிடம் தான் பெற்ற ஞானஅனுபவங்களை இந்நூலில் விளக்கியுள்ளார்.

051

கீதை நிழலில். எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: Mithra Arts and Creations, 375/8-10, Arcot Road, 1வது பதிப்பு, டிசம்பர் 1999.

(சென்னை 600024: Mithra Book Makers)
216 பக்கம், சித்திரங்கள். விலை: இந்திய ரூபா 75. அளவு: 18x12 சமீ. ISBN 1 87662678X

கீதையின் தாக்கத்தால் விளைந்த சிந்தனைகளின் பதிவு. 52 உருவகக் கதைகளின் வாயிலாகக் கீதையின் ஆழமான கருத்துக் களை வெளிக்கொண்டுவரும் ஒரு முயற்சி.

052

சாதனைக்குரிய சைவ தோத்திரமும் சாத்திரமும். நா. செல்லப்பா. கொழும்பு: உலக சைவப்பேரவை, இலங்கைக்கிளை, 1வது பதிப்பு, ஜூலை 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், இல. 48B, புளுமென்டால் வீதி)
164 பக்கம், விலை: கனேடிய டொலர் 5. அளவு: 22x14 சமீ.

1999 ஜூலை30 முதல் ஆகஸ்ட் 01 வரை கனடாவில் இடம்பெற்ற 7வது உலக சைவ மாநாட்டில் வெளியிடப்படவென உலக சைவப் பேரவை இலங்கைக்கிளையினால் பிரசுரிக்கப்பட்டது. இக் கிளையினால் ஞாயிறு தோறும் கொழும்பில் நடாத்தப்பெற்று வந்த சைவசித்தாந்த வகுப்பில் எடுத்தாளப்பட்ட விடயதானங்கள் இந் நூலுருவில் வெளிவருகின்றன. ஆசிரியரின் பதினொராவது படைப் பும் இதுவாகும்.

053

சிந்தனைக்கோவை. இரா.மயில்வாகனம். கொழும்பு: இ.மயில் வாகனம், கொட்டாஞ்சேனை, 1வது பதிப்பு, 1990. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி)
xxiv,76 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18x12 சமீ.

இந்துசமயத் தத்துவங்கள் சில, சிறு கட்டுரைகளாக 15 இயல் களில் தரப்பெற்றுள்ளன.

054

சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள். மலர் வெளியீட்டுக் குழு (தலைவர்- த.சண்முகசுந்தரம்). தெல்லிப்பழை: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபை வெளியீடு, 1வது பதிப்பு, 1985. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்)
xv,238 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 24x17 சமீ.

பல்கலைக்கழக மாணவரும், சைவசமய ஆய்வாளரும், திருக் கோயில் நெறிப்படுத்துபவர்களும் படித்துப் பயின்று பயனடையக் கூடியதாக சைவ சித்தாந்தம் பற்றியும், சைவத் தமிழ்ப் பண்பாட்

டைப் பற்றியுமான 27 அறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாவை யொட்டி வெளிவந்துள்ள சிறப்பு மலர்.

055

சிவயோக சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளுக்கு அருளிய மணிமொழிகள். சிவயோக சுவாமிகள் (மூலம்). கனடா: இந்துசமயப் பேரவை, ஒன்ராறியோ, 1வது பதிப்பு, மார்ச் 1997. (கனடா: அபிராமி அச்சகம்)
(2),26 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணத்துச் சிவயோக சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளுக்கு அருளிய மணிமொழிகளின் தொகுப்பு. ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் சிவபதப்பேற்றின் (8.9.1995) நினைவாக கனடாவில் ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் யோக சுவாமிகளின் குருபூசை தின நிகழ்ச்சி யின் போது 23.03.1997 இல் வெளியிடப்பெற்றது.

056

சிறிமத் பகவத்கீதை. இ.இரத்தினம் (தமிழாக்கம்) சென்னை 600002: காந்தளகம், 834, அண்ணாசாலை, 1வது பதிப்பு, மார்ச் 1991. (சென்னை: காந்தளகம்)
(8),83 பக்கம், விலை: இந்திய ரூபா 15. அளவு: 21x14 சமீ.

பகவத் கீதையின் மொழி பெயர்ப்பு. விளக்க உரை இல்லை.

057

சுவாமி ராமதாஸ் அருளுரைகள். பாகம் 1. ம.சி.சிதம்பரப் பிள்ளை.(தமிழாக்கம்), தெல்லிப்பழை: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானம், 1வது பதிப்பு, 1989. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்).
138 பக்கம், விலை: ரூபா 30, அளவு: 18x12 சமீ

இந்தியாவில் கஞ்சன்காடு ஆனந்தாச்சிரமத்தின் ஸ்தாபகர் சுவாமி இராமதாஸர் அவர்களது அருளுரைகளின் தமிழ்மொழி பெயர்ப்பு. பம்பாயிலிருந்து வெளிவரும் *பவான்ஸ் ஜேர்னல்* ஆங்கில சஞ்சிகையில் வந்த இக்கட்டுரைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு *ஆத்மஜோதி* சஞ்சிகையில் ஜூலை 1976 முதல் ஜூலை 1983 வரை வெளிவந்தன. அவற்றின் நூல்வடிவமே இதுவாகும்.

058

சைவசித்தாந்தம்: மறு பார்வை. சோ.கிருஷ்ணராஜா.கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1998 (சென்னை 600006: சுமதி லேசர்ஸ்)

96 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 17.5x12 சமீ.

பக்தியுகத்தை ஒட்டிச் சைவசித்தாந்தத்தின் பிறப்பு, அதன் ஒழுக்க வியற்போதனை, முத்திக்கோட்பாடு ஆகியவற்றை விளக்கும் நூல். சைவத்தை ஒரு நம்பிக்கையாகவும், சைவசித்தாந்தத்தை அறிவுபூர்வமாக சைவ நம்பிக்கையை நெறிப்படுத்தித் தரும் மெய்யியலாகவும் புரிதலே சமகாலரீதியான அறிவுநிலைக்குரிய பார்வையாகும். விமரிசனரீதியான அணுகுமுறையே ஐதீக நிலையிலிருந்து அறிவு நிலைக்கு எமது புரிதலை முன்னெடுத்துச் செல்லும் என்பதை உட்கிடையாகக் கொண்டது இந்நூல்.

059

ஞான மண்டலம். சுவாமி கெங்காதரானந்தா. திருக்கோணமலை: சிவயோகம் சமாஜம், பெருந்தெரு, 1வது பதிப்பு, 1984 (தாளையான் அச்சகம், 115, மெசெஞ்சர் வீதி)

v,112 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

சுவாமி கெங்காதரானந்தாவின் பல்வேறு ஆன்மீகக் கட்டுரைகளின் தொகுப்பு. கடமையைச் சரிவரச்செய்தல், பரிசுத்தமான இதயத்தோடு வாழல், தெய்வ சரணாகதி ஆகிய மூன்று அடிப்படை உபதேசங்கள் பல்வேறு கோணங்களில் உரைக்கப்பட்டுள்ளன.

060

ஞானச்சுடர். ஆ.கந்தையா. கொழும்பு 6: ஆ.கந்தையா, நடனாலயம், இல.4, 40வது ஒழுங்கை, 1வது பதிப்பு, 1987. (கொழும்பு 14: ஸ்டார்லைன் அச்சகம்).

78 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18X13 சமீ.

ஆசிரியரால் பல்வேறு காலகட்டங்களிலும் எழுதப்பெற்ற பத்து சமயக் கட்டுரைகளின் தொகுப்பு. 7 ஆராய்ச்சிக் கட்டுரைகள், இரு விளக்கக் கட்டுரைகள், ஒரு உண்மைச் சம்பவம் ஆகியன இத் தொகுப்பில் அடங்குகின்றன. தேவாரம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றில் உள்ள சில அம்சங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளாகளின் கருப்பொருள்களாகும்.

061

ஞானரத்நாவளி. காசிவாசி செந்திநாதையர். யாழ்ப்பாணம்: மில்க் வைற் தொழிலகம், காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, 1984. 1வது பதிப்பு, 1892, 2வது பதிப்பு, 1947. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம்)

18 பக்கம். விலை: இலவசம். அளவு: 18.5x12.5 சமீ.

ஞானரத்நாவளி சைவசமயத்தை இரத்தினச்சுருக்கமாக விளக்குவது. சென்னை ஞானப்பிரகாச அச்சகத்தில் 1892இல் வெளியிடப்பட்டது. திருமயிலை சே.வெ.ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள் இதை 2வது பதிப்பாக 1947இல் வெளியிட்டார். மூன்றாவதான இப்பதிப்பு இலவச வெளியீடாக மில்க்வைற் தொழிலகத்தினால் விநியோகிக்கப்பட்டது.

062

பரவெளித்தத்துவம். புலவர் நா. சிவபாதசுந்தரனார். (புனைபெயர்- தொல்புரக்கிழார்). வட்டுக்கோட்டை: தமிழ்ச் சங்கம், வட்டுக்கோட்டைத் தொகுதி, 1வது பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: விபுலானந்த அச்சகம்)

(16),57 பக்கம், விளக்கப்படம், 3 தகடுகள். விலை: ரூபா 15. அளவு: 25X19 சமீ.

பரவெளித்தத்துவம் அல்லது பதிமுதுநிலைத்தோற்ற விளக்கம் எனப்படும் இந்நூல், சிவதத்துவ-வான்தத்துவ ஒப்பீட்டு ஆய்வு நூலாகும். மதுரையில் நடந்த 5வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவாக வெளியிடப்பெற்றது.

063

வஜனாம்ருதம். ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா. திருக்கோணமலை: சிவயோகசமாஜம், பெருந்தெரு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1988. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி)

44 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

சுவாமி கெங்காதரானந்தாவின் 214 அருள்வாக்குகளைத் தொகுத்து 1978 இல் வெளிவந்த வஜனாம்ருதமும், பின்னாளில் சேர்க்கப்பட்ட 41 அருள்வாக்குகளைக்கொண்டதாக 1984இல் வெளிவந்த ஞான மண்டலமும் இணைந்ததாக வெளியிடப்பட்ட நூல் இதுவாகும்.

064

வேதமும் வருணங்களும். கே. சுப்ரமண்ய வாரியார். நல்லூர்: சாந்திநிலையம், 1வது பதிப்பு, தை 1983. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், கண்டிவீதி)

26 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

பிரம்ம, ஷத்திரிய, வைசிக, சூத்திர ஆகிய நான்கு வர்ணங்களையும் விளக்குவதுடன், வேதாகம அறிவையும் வழங்கும் நூல்.

065

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தத்துவம். ப.சந்திரசேகரம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ இராமகிருஷ்ணாலயம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

(8),10 பக்கம், 1 தகடு. விலை: ரூபா 6.50. அளவு: 22x14 சமீ.

தக்கணேஸ்வரக் காளிகோயில் அமைப்பு, ஐக்கியநாடுகள் சபையின் கொள்கை போன்ற இன்னோரன்ன விடயங்களுடன் மனிதனின் பொதுவான வாழ்க்கைக் கோட்பாட்டை ராமகிருஷ்ண பரமஹம்ச தத்துவத்துடன் தொடர்பு படுத்தியுள்ளார்.

190 சோதிடம், வானசாஸ்திரம்

066

எண் சோதிட ஜோதி. எஸ்.பி.வைலற் சரோஜா. திருக்கோண மலை: எஸ்.பி.வைலற் சரோஜா, 1வது பதிப்பு,1983. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்.)

(12),146 பக்கம். விலை: ரூபா 18. அளவு: 12x18சமீ.

நியுமரலோஜி எனப்படும் எண் சோதிடக்கலை பற்றிய நூல்.

067

சரசோதிமாலை. போசராசபண்டிதர் (மூலம்). யாழ்ப்பாணம்: இ. வெங்கடேச ஐயர், சோதிட பரிபாலனமடம், 3வது பதிப்பு, சித்திரை 1985. 1வது பதிப்பு, பங்குனி 1892. (கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை)

vi,120 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22x14 சமீ.

சரசோதிமாலை என்னும் இச்சோதிட நூல் தம்பை மாநகரத்தரசன் பராக்கிரமவாகு மகாராசன் கேட்டுக்கொண்டபடி பிரமகுல திலகராகிய தேனுவரைப் பெருமாள் என்னும் போசராச பண்டிதர் இயற்றியது. யாழ்ப்பாணம் நல்லூரைச் சார்ந்த கொக்குவில் சோதிடர் இரகுநாதையராலும்,மேற்படியூர் சு.நடராசையராலும் பல பிரதிருபங்களைக் கொண்டு பரிசோதித்தது. மூன்றாம் பதிப்பு, குரோதன வருடம் சித்திரை மாதம் (1985) இல் அச்சிடப்பட்டது.

200 சமயங்கள்

220 கிறிஸ்தவம்

068

அல்லைப்பிட்டிப் பதி அருளப்பர் அம்மானை. பா.சத்திய சீலன். மானிப்பாய்: கலாதேவி சத்தியசீலன், கலை வண்ணம், நவாலி தெற்கு, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லட்சுமி அச்சகம், 222 ஆஸ்பத்திரி வீதி).

82 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18.5x12 சமீ.

அண்ணல் யேசுவிற்கு அருள்முழுக்குத் தந்தவரான அருளப்பரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட அம்மானை.

069

உலகினார்க்கு ஓர் உடன்பிறப்பு: சார்ள்ஸ் டி.ஃபுக்கோ. சத்தியசீலன். யாழ்ப்பாணம்: வண.ஜே.இ.ஜெயசீலன், PaxChristi, 1வது பதிப்பு, 1990. (மானிப்பாய்: வீ ஜே. அச்சகம்)

32 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x12.5 சமீ.

சார்ள்ஸ் டி.ஃபுக்கோ அடிகளின் (Brother Charles) வாழ்க்கை வரலாறு பாவடிவில் எளிய முறையில் கூறப்பட்டுள்ளது.

070

எண்பதிலிருந்து எண்பத்தெட்டு வரை. வண. வின்சென்ட் பற்றிக். யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, 1வது பதிப்பு, மே 1989. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம்)

92 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18.5x12 சமீ.

சமய போதனைகளை சமூகப்பார்வையுடன் அணுகும் ஒரு முயற்சி. 1980 முதல் 1988 வரையிலான காலப்பகுதியில் எம்மைச் சுற்றி நிகழ்ந்த அன்றாட சமூக, அரசியல் நிகழ்வுகளை அலசும் வகையில் அமையும் இது இளைஞர்களுக்கானதொரு கடிதத்தொகுப்பு.

071

செபமாலைத் தியானம். துரை ஆரோக்கியதாசன். யாழ்ப்பாணம்: துரை-றோசலீன் படிப்பகம், 60 கோவில் வீதி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: சென். பிலோமினா அச்சகம்)

18 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 16.5x10.5 சமீ.

செபமாலை(Rosary) ஓதும் விதமும் தியான ஒழுங்கு விதிகளும் இந்

நூலில் விளக்கப்பெற்றுள்ளன.

072

திருக்குறளும் விவிலியமும். இரண்டு பாகங்கள். ம.பாவிலுப் பிள்ளை. மக்கொனா: ம.பாவிலுப்பிள்ளை, 1வது பதிப்பு, 1980. (மக்கொனா: புனித விசேந்தி அச்சகம்)

xxii,164 பக்கம். விலை: தனிப்பிரதி: ரூபா 5. இரு பாகங்களும்: ரூபா 10. அளவு: 22X14 சமீ.

திருக்குறளின் பொருளும் தத்துவக்கருத்தும் ஒழுக்கநெறி விளக்கமும் விவிலிய ஒப்புமையும் ஒருங்கமைந்த நூல். முதற்பாகம் கடவுளர் குடும்பம் பற்றியதாகவும் இரண்டாம் பாகம் மானிடக் குடும்பம் பற்றியதாகவும் தொகுக்கப் பெற்றுள்ளன.

073

பக்தர்களை இரட்சிக்கும் பரமனவன் கருணை வ(ர)ழி. கோ. சுப்பிரமணியம். சுன்னாகம்: சமய சமூக ஆய்வுக்கான கிறீஸ்தவ நிறுவனம், மருதனார்மடம், 1வது பதிப்பு, 1987. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

18 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14சமீ.

இயேசு பிரானின் வாழ்க்கை வரலாற்றையும் போதனைகளிற் சிலவற்றையும் விளங்கிக்கொள்ள உதவிடும் கவிதை நூல்.

074

புதையல். டேவிட்.வி.பற்றிக்.(வி.பி) Colombo13:Amora Publications, 95, 1/5 Ratnam Road, 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (Colombo 12: Linraj's Printers, 282/15 Dam Street)

62 பக்கம், விலை: ரூபா 44. அளவு: 20.5X14 சமீ.

சிந்திக்கத் தூண்டும் இறையியல் கருத்துக்களை தேர்ந்து, சிறு சிறு பந்திகளாக அமைத்து, விவிலியத்திலுள்ள சில வார்த்தைகளை மேற்கோள் காட்டி 50 தலைப்புகளில் விபரிக்கும் நூல்.

075

விடுதலை இறையியல். வின்சன்ட் பற்றிக். (வி.பி) யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, 1வது பதிப்பு, மார்கழி 1986. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம்)

(8),84 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X12.5 சமீ.

மனிதன், உடல் உள்ளம் ஆன்மா சார்பான முழுவாரியான முழு

மனித விடுதலையை எய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துவது விடுதலை இறையியலாகும். நிகழ்காலத்தில் நாம் எதிர்கொள்ளும் இருள்சார்ந்த பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்க தீர்க்கமான முடிவுகளை எடுத்துச் செயற்படத் தூண்டுகோலாக இந்நூல் அமைகின்றது.

மேலும் பார்க்க: 138, 185, 186, 284, 360, 738

294.3 பௌத்தம்

மேலும் பார்க்க: 110

294.5 இந்து சமயம்

076

அகத்தியர் தேவாரத் திரட்டு. ஆறுமுக நாவலர். யாழ்ப்பாணம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, 2வது பதிப்பு, 1983. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், வண்ணார்பண்ணை)

62 பக்கம், தகடு. விலை: ரூபா 10. அளவு: 21X14 சமீ.

அகத்திய மகா முனிவர் திரட்டியளித்த தேவாரப் பதிகங்களை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பரிசோதித்து, நூல்வடிவில் வெளியிட்டிருந்தார். அந்நூலின் பிரதிகள் எதுவும் தற்போது இல்லாத நிலையில் ஆறுமுகநாவலர் சபையின் மீள்பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

077

ஆற்றங்கரையான். அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ். பருத்தித்துறை: வாராவொல்லை வெளியீடு, தும்பளை. 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50 கண்டி வீதி)

xxvi +xvi,184 பக்கம். விலை: ரூபா 50. அளவு: 18.5X13 சமீ.

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் பற்றிய ஓர் ஆய்வு நூல்.

078

இணுவைச் சிவகாமியம்மை தமிழ். இணுவைச்சின்னத்தம்பிப் புலவர்(மூலம்), தமிழவேல் இ.க.கந்தசாமி (பதிப்பாசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக நிலையம், 201 டாம் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1991. (Colombo 12: The Kumaran Press)

52 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 21X14 சமீ.

யாழ்ப்பாண அரசர் காலத்தில் சிதம்பரத்திலிருந்து வரவழைக்கப் பட்ட சிவகாமித் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து சிவகாமி அம்பாள் ஆலயம் இணுவிலில் அமைக்கப்பட்டது. பழமையும் அற்புதமும் வாய்ந்த இத்திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபட்ட சின் னத்தம்பிப் புலவர் பாடியதே சிவகாமி அம்மைத்தமிழ்.

079

இத்தி மரத்தாள். அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ். பருத்தித்துறை: வாராவொல்லை, அன்பர் வெளியீடு. 1வது பதிப்பு, ஜூலை 1985. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50 கண்டி வீதி)

xiv,108 பக்கம், தகடுகள். விலை: ரூபா 20. அளவு: 18X12 சமீ.

பருத்தித்துறை, தும்பளைப்பகுதியில் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பற்றிய வரலாற்று ஆய்வு நூல்.

080

இலங்கைத் திருக்கேதீச்சரக் கோயில் வரலாறு. தி.பட்டுச்சாமி ஒதுவார்(மூலம்). மு.ஞானப்பிரகாசம் (புதுக்கித் தொகுத்தவர்). திருக்கேதீஸ்வரம்: ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம், திருவாசக மடம், 2வது பதிப்பு, ஏப்ரல் 1984. 1வது பதிப்பு, 1974. (யாழ்ப் பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213 காங்கேசன்துறை வீதி)

X,102 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 22X14 சமீ.

திருக்கேதீச்சரக் கோயில் வரலாறு. அங்கே நிகழும் நித்திய நைமித்தியங்கள், வழிபடும் முறை பற்றித் தெரிவிக்கும் நூல் முதற் பதிப்பு வெளியான (1974) காலத்தின் பின்னர் இடம்பெற்ற பல்வேறு திருப்பணிகளும் இப்பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

081

இலங்கைத் திருநாட்டின் இந்துக்கோயில்கள். நூலாக்கக் குழு. கொழும்பு 4: பிரதேசஅபிவிருத்தி இந்துகலாச்சார அமைச்சு, 1வது பதிப்பு, 1990. (கொழும்பு: அரசாங்க அச்சகக்கூட்டுத்தாபனம்) 490 பக்கம், வரைபடம், தகடுகள், வண்ணப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22X14 சமீ.

இலங்கையின் இந்து ஆலயங்களின் விபரங்கள் அடங்கிய நூல். மாவட்டரீதியாக 23 மாவட்டங்களிலும் இருக்கும் கோவில்களின் பூசை நேரங்கள், கோவில்மேற் பாடப்பெற்ற பாடல்கள் பற்றிய குறிப்புகள், கோவில் சார்ந்த பணிமன்றங்களின் விபரம் போன்ற தகவல்கள், கோவில்களின் புற அமைப்பு, அக அமைப்பு, விக்கிர கங்கள், வாகனங்கள் ஆகியவற்றின் வண்ணப்புகைப்படங்கள்

ஆகியவற்றின் தொகுப்பாக வெளியிடப்பட்டதொரு உசாத்துணைநூல்

082

ஈழத்தில் சிவ வழிபாடு. ப.கோபாலகிருஷ்ணன். யாழ்ப்பாணம்: கதிரவேலு கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

22 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

சிவவழிபாடு வரலாறு கடந்தது. அதன் தோற்றுக்காலம் அறுதியிட்டுக் கூறமுடியாதது. இந்தியாவிலேயே பெருஞ்சிறப்படைந்திருந்த சிவ வழிபாடு இலங்கையிலும் தனக்கேயுரித்தான புராதன வரலாற்றைக் கொண்டு மிளிர்கின்றது. அத்தகைய ஒரு வரலாற்றுப்போக்கினை எடுத்துக்கூறும் சிறு நூல் இதுவாகும்.

083

ஒன்பதாந் திருமுறை. ஈழத்துத் திருநெறித்தமிழ் மன்றம். கொழும்பு: ஈழத்துத் திருநெறித்தமிழ் மன்றம், 1வது பதிப்பு, டிசம்பர் 1980. (கொழும்பு 2: வெட் பிரின்ட்)

164 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 14X11 சமீ.

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவை அரும்பத விளக்கத் துடனும் குறிப்புரைகளுடனும் இடம்பெற்றுள்ளன. ஈற்றில் பாட்டு முதற் குறிப்பகராதியும் காணப்படுகின்றது.

084

கணபதியே காப்பு. க.இராமசுவாமி. யாழ்ப்பாணம்: துவாரகை, திருநெல்வேலி கிழக்கு, 1வது பதிப்பு, சித்திரை 1983. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்)

56 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

வாழ்க்கையில் நாம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கும் நிகழ்ச்சி களுக்கும் இந்துசமயம பற்றிய சில அம்சங்களுக்கும் பாரம்பரியத்தி லிருந்து விலகாதவாறு புதிய விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

085

கந்தபுராண வரலாற்றுச் சுருக்கம். மா.மாணிக்கம். தெல்லிப்பழை: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், 1வது பதிப்பு, பங்குனி 1989. (அளவெட்டி: ஸ்ரீமகள் அச்சகம்)

(14),144 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20.5X14.5சமீ.

பதினெண் புராணங்களுள் சிறந்ததொன்றாகிய கந்தபுராணத்தின் வரலாற்றுச் சுருக்கம் எளிய நடையில் தரப்பெற்றுள்ளது.

086

கலசம்: 25வது சிறப்பிதழ். மு.நற்குணதயாளன் (ஆசிரியர்) லண்டன்: பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கப் பதிப்பகம், 1வது பதிப்பு, 1999. (இலண்டன்: வாசன் அச்சகம்)
160 பக்கம், புகைப்படம். விலை: ஸ்டேர்லிங் பவுண். 2. அளவு: 27x19.5 சமீ.

இலண்டனிலிருந்து வெளிவரும் ஆன்மீகக் காலாண்டிதழின் தை-மாசி-பங்குனி, 1999 இதழ் 25வது சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. பல்வேறு இந்து சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் விளக்கும் கட்டுரைகளின் தொகுப்பு.

087

கனடாவில் சைவசமயம். வி.கந்தவனம். கனடா: இந்துசமயப் பேரவை, ஒன்ராறியோ, 1வதுபதிப்பு, ஆகஸ்ட் 2000. (ஒன்ராறியோ: விவேகா அச்சகம்)
120 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X13.5 சமீ.

கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் வாழ்வின் வளர்ச்சிப்படியில் சமயமும் இணைந்து காணப்படுகின்றது. சைவசமயத்தின் வளர்ச்சியின் அளவுகோலாக அமையும் வகையில் கனடாவில் சைவசமய நிறுவனங்களின் பங்களிப்புகள், முயற்சிகள், பெறுபேறுகள் ஆகியவற்றை ஆவணப்படுத்தும் வகையில் அமையும் நூல்.

088

காரைநகர்-பயிரிக்கூடல் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத் தமிழ். சீ.விநாசித்தம்பிப்புலவர். காரைநகர்: எம்.ஏ.கந்தையா, 1வது பதிப்பு, மார்கழி 1987. (காரைநகர்: பாலா அச்சகம்)
(30),69 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5சமீ.

தமிழில் வழங்குகின்ற 96 பிரபந்த வகைகளுள் பிள்ளைத்தமிழும் ஒன்று. பாட்டுடைத்தலைவனைக் குழந்தையாக வைத்துப் பாடப் படுவது பிள்ளைத்தமிழாகும். முருகப்பெருமானைக் குழந்தையாகப் பாவித்து ஆக்கப்பெற்றது இப்பிள்ளைத்தமிழ் நூலாகும்.

089

கோணமலை அந்தாதி. சு.ஆறுமுகம்(மூலம்) இ.வடிவேல் (பதிப்பாசிரியர்). கொழும்பு: இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).
(20),72 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X13.5சமீ.

திருக்கோணேசர் மேற் பாடப்பெற்ற அந்தாதி. திருக்கோணமலை சைவசந்தானத்தைச் சேர்ந்தவரும் ஆறுமுக முதலியார் என்று அழைக்கப்பெற்றவருமான புலவர் சு.ஆறுமுகம் அவர்களால் இயற்றப் பெற்று 1856ஆம் ஆண்டளவில் முடிக்கப்பெற்ற அந்தாதியின் நூல் வடிவம்.

090

சண்முகா சரணம். இ.வடிவேல். திருக்கோணமலை: அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம், 1வது பதிப்பு, 1988. (யாழ்ப் பாணம்: நியு உதயன் பப்ளிக்கேஷன்ஸ்)
(14),110 பக்கம், 3 தகடுகள். விலை: ரூபா 15. அளவு: 21X14 சமீ.

திருக்கோணமலை அருள்மிகு முத்துக்குமாரசுவாமிஆலய வரலாற்றுச் சுருக்கம், விநாயகருக்குச் சிறப்பு விளக்கம், மூலமூர்த்திகளைப் பற்றிய விளக்கம் போன்ற அம்சங்களையும், திருப்பள்ளியெழுச்சி, ஸ்ரீ சண்முக சரணப்பதிகம், மாத, வாரப் பதிகங்கள், ஸ்கந்த சஷ்டித் தியானப்பதிகம், சண்முகப்பெருமான் திருவூஞ்சல் போன்றவற்றையும் கொண்டுள்ளது. பஞ்சபுராணத்திரட்டு, திருப்பள்ளியெழுச்சி, திருவெம் பாவை, திருப்பொற்சுண்ணம், சிவபுராணம் போன்ற பொதுவான பதிகங்கள் பலவும் தொகுத்து இணைக்கப்பெற்றுள்ளது.

091

சிவயோகம் மலர். பொன்.பாலசுந்தரம் (தொகுப்பாசிரியர்). லண்டன்: ரூட்டிங் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோவில், 1வது பதிப்பு, 2001. (இலண்டன்: வாசன் அச்சகம்)
208 பக்கம், புகைப்படங்கள். விலை: ஸ்டேர்லிங் பவுண் 10. அளவு: 28X21 சமீ.

பல்வேறு சமயக் கட்டுரைகளும் கலை, பண்பாட்டு உணர்வினை புகலிடத் தமிழர் மத்தியில் ஊக்குவிக்கும் வகையில் அமைந்த பலவினக் கட்டுரைகளையும் கொண்டுள்ளது. கோவிலின் அறங் காவலர் சபை, அதன் அங்கத்தவர் குடும்பப் புகைப்படங்களும், சபை, கோவில் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளின் போது எடுக்கப் பட்ட புகைப்படங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

092

சுந்தரர் பிள்ளைத்தமிழ். சோ. தியாகராசபிள்ளை. கொழும்பு 7: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்சபை, 4 ஹோல்டன் ரெரஸ், 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்)
xii,72 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X12.5 சமீ.

சுந்தரமூர்த்தி நாயனாரைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பாடப்

பெற்ற பிள்ளைத்தமிழ்.

093

செவ்வேள். ஆ.கந்தையா. கொழும்பு 7: இலங்கைத் தேசிய நூலகசேவைகள் சபை, 1வது பதிப்பு, 1985. (கொழும்பு: அரசாங்க அச்சகம்)

156 பக்கம், விளக்கப்படங்கள் 10. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20x14 சமீ.

சைவபக்தி இலக்கியம் தொடர்பான 4 ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கியது. பரிபாடலிலுள்ள செவ்வேள் மேற்பாடப்பட்ட எட்டுப் பாடல்களையும் விளக்கும் கட்டுரைகள் அவையாகும்.

094

சைவ சமயமும் சர்வமத சமரசமும். நா.சி.கமலநாதன். ஜேர்மனி: சைவத்தமிழ் மகாசங்கம், Hassel Riede 9, 30900 Wede mark, Germany, 1வது பதிப்பு, 1995. (அச்சக விபரம் குறிப்பிடப் படவில்லை)

62 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள் எவ்வாறு பிற உலக மதங்களுடன் ஒத்துப் போகின்றன என்பதை விளக்கும் நூல்.

095

சைவ நற்சிந்தனை. கோப்பாய்சிவம். கிளிநொச்சி: திருநெறிக் கழகம். 1வது பதிப்பு, 1986. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

20 பக்கம். விலை: ரூபா 4. அளவு: 21X14 சமீ.

இந்நூலில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பான சைவ நற் சிந்தனைகள் பத்து அடங்கியுள்ளன. உதயகாலத்தின் உயர்வை விளக்குவதோடு ஆரம்பமாகி, மிகவும் நன்மை பயப்பதான நாம பஜனை, பிரபஞ்ச தத்துவம், ஒலியின் சக்தி, ஆகிய பல்வேறு அம்சங்களையும் விளக்கி, இறுதியில் விளக்கமறியா வழக்கம் என்ற சிந்தனையோடு நூல் முடிவுறுகின்றது.

096

சைவ நற்சிந்தனைகள். சி.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: சி.கணபதிப்பிள்ளை, மூன்றாம் பதிப்பு, 1981. 1வது பதிப்பு 1959, 2வது பதிப்பு, 1980 (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

(4),44 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

பண்டிதமணியின் சைவநற்சிந்தனைகள் முதலிரு பதிப்புக்களின் உள்ளடக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. சிவராத்திரியில் சிந்திக்கத் தக்கவை என்ற கட்டுரை இப்பதிப்பில் அனுபந்தமாக இணைக்கப் பட்டுள்ளது.

097

சைவ விரதங்களும் விழாக்களும். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்), ஆவரங்கால், புத்தூர். 1வது பதிப்பு, 1988. (மட்டுவில்: திருக்கணித நிலையம்)

152 பக்கம், அட்டவணை, வரைபடம். விலை: ரூபா 30, அளவு: 12X17 சமீ.

சைவ சமயத்தவர்கள் அனுஷ்டிக்கின்ற விரதங்கள், விழாக்கள், புனித பண்டிகைகள் முதலியவற்றை விபரிக்கும் நூல். குறிப்பாக, அவை ஆரம்பித்த வகை, அனுஷ்டித்துப் பயன் பெற்றவர் விபரம், மற்றும் இவை தொடர்பான புராணக் கதைகள் முதலியனவும் தொகுக்கப்பெற்றுள்ளது.

098

சைவத் திருக்கோவிற் கிரியை நெறி. கா.கைலாசநாதக் குருக்கள். கொழும்பு 11: ஸ்ரீ முத்துவிநாயகர்கோவில், 221 செட்டியார் தெரு, 2வது பதிப்பு, 1992. 1வது பதிப்பு, ஜூலை 1963. (Colombo 10: Print Pack Ltd., No.1, Sri Sangaraja Mawatha)

xxi,299 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x12.5 சமீ

ஸ்ரீ முத்து விநாயகர் வேதாகம ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல் வெளியீடு. சைவத் திருக்கோயில்களில் அன்றாடக் கிரியைகளை நிகழ்த்த இன்றியமையாத அம்சங்களைச் சுருக்கமாக விளக்கிக் கூறும் நூல்.

099

சைவத் திருமுறைகளின் விழுமியம். முருக வே.பரமநாதன் (ஆழ்கடலான்). கனடா: இந்துசமயப்பேரவை, ஒன்ராறியோ, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (கனடா: விவேகா அச்சகம்)

X,48 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

சைவசமயம் தழைத்தோங்கவும் அருள்நெறி எங்கும் பரவவும் சமயகுரவர், சந்தானகுரவர் பணியாற்றினர். அவர்களின் பாசுரங்கள் அடங்கிய தொகுப்பே திருமுறைகளாகும். இத்திருமுறைகளின் பெருமை, அவற்றை ஓதுவதால் காணும் நன்மைகள் என்பவற்றின் விளக்கம் இந்நூலாகும்.

100

சைவாலயங்கள்-கிரியைகள்: ஒரு கையேடு. கோப்பாய் சிவம். புத்தூர்: ப.சிவானந்தசர்மா, சிவன் கோயில் அருகாமை, ஆவரங்கால். 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1986. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

lvi,(6). விளக்கப்படம், அட்டவணைகள். விலை: ரூபா 10. அளவு: 18.5X12.5 சமீ.

கோயில்களில் வழிபடச் செல்பவர்கள் அங்கு நிகழும் கிரியை களைப்பற்றித் தெரிந்துகொண்டால் வழிபாடு பெரும் பயனுள்ளதாக அமையும். இவ்வுண்மையைக் கருத்திற்கொண்டு வழிபடுபவர்களுக் குக் கிரியை பற்றிய அறிவை வழங்கும் சிறந்த நூல். ஆலய நிர் வாகிகள், சிவாச்சாரியார்களுக்கும் ஏற்றது.

101

சௌந்தர்யலகரி. ச.சுப்பிரமணியம். ஆவரங்கால்: சிவன் தேவஸ்தானம். 1வது பதிப்பு, ஆவணி 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லட்சுமி அச்சகம், 37 கண்டிவீதி, சுண்டிக்குளி)

xxxiii,74 பக்கம், தகடுகள். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 15. விஷேட பதிப்பு: ரூபா 20. அளவு: 17.5X12.5 சமீ.

ஆதிசங்கரர் அருளிய சௌந்தர்யலகரியின் தமிழாக்கம். பாடல் களின் பாராயணபலன், இலக்குமிதோத்திரம் ஆகியனவும் இணைக் கப்பட்டுள்ளன.

102

தமிழ்க் கடவுள் முருகன்: வரலாறும் தத்துவமும். இராஜேஸ் வரி பாலசுப்பிரமணியம். கோயம்புத்தூர் 641009: நிகழ், 123 காளீசுவரர் நகர், 1வது பதிப்பு, மே 2000. (கோயம்புத்தூர் 12: ஜீ. எம். பிரின்ட் சிஸ்டம்)

(8),120 பக்கம். விலை: இந்திய ரூபா 35. அளவு: 18X12 சமீ.

இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழ்க் கடவுள் முருகன் பெறும் இடத்தினை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றார். ஆரியர்-திராவிடர் இன மொழிச்சிக்கல்களை ஆங்காங்கே எடுத்துக் காட்டுகின்றார். அதன்மூலம் திராவிடத் தொன்மையின் தொலைந்து போன சில கோட்பாடுகள், அன்று மறைக்கப்பட்ட உண்மைகளின் வெளிப்பாடே முருகவழிபாடாகும் என்று குறிப்பிடுகின்றார்.

103

தமிழர் சமய வரலாறு. ஆ.வேலுப்பிள்ளை. சென்னை 600005: பாரி புத்தகப்பண்ணை, 1வது பதிப்பு, அக்டோபர் 1980. (சென்னை

05: வெற்றி அச்சகம்)

240 பக்கம். விலை: இந்திய ரூபா 10. அளவு: 18X12 சமீ.

தமிழர் சமய வரலாறு. ஆ.வேலுப்பிள்ளை. சென்னை 600005: பாரி புத்தகப்பண்ணை, 2வது பதிப்பு, ஜூன் 1985, (சென்னை 05: கல்விப்பிரகாசம் பிரஸ்)

240 பக்கம். விலை: இந்திய ரூபா 15. அளவு: 18X12.5 சமீ.

தமிழர்களது சமய வரலாறு 25 கட்டுரைகளின் வாயிலாக விபரிக்கப் பட்டுள்ளது.

104

தரிசனம். நா.முத்தையா. கனடா: இந்துசமயப் பேரவை, 1வது பதிப்பு, ஆனி 1995. (சென்னை 2: காந்தளகம், 834 அண்ணாசாலை)

84 பக்கம், கோட்டுச் சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x12 சமீ.

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் தான் தரிசித்த 10 மகான்கள் பற்றி இந்நூலில் விபரிக்கின்றார். ரமணர், சுத்தானந்தர், சாயிபாபா, யோகர், சிவானந்தர், சித்தானைக்குட்டி, ஞானானந்தர், இராமதாசர், காட்டுச்சாமியார், சடைவரதர் ஆகிய பதின்மர் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் இந்நூலில் இடம்பெறுகின்றன.

105

திருக்கதிர்காமப் பிள்ளைத்தமிழ். சிவங்கருணாலயப் பாண்டியப் புலவர். கொழும்பு: பிரதேச அபிவிருத்தி இந்துசமய இந்துகலாச்சாரத் தமிழ் அலுவல்கள் அமைச்சு, 2வது பதிப்பு, 1983. முதற் பதிப்பு, 1937. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்)

123 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

கதிர்காமத்து முருகனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு அவர் மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ். புதிய பதிப்பில் குல.சபாநாதன் அவர்கள் எழுதிய திருக்கதிர்காம வரலாறு என்ற கட்டுரையும் மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ளது.

106

திருக்கோணமலை கோணேசர் கோவில் வரலாறு. இ.வடிவேல். திருக்கோணமலை: இந்துதர்ம வெளியீடு, 1வது பதிப்பு, 1984. (கொழும்பு 12: நியூலீலா அச்சகம், மெசெஞ்சர் வீதி).

56 பக்கம், விளக்கப்படம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5x14 சமீ.

ஆலய வரலாறு, ஆலயமூர்த்திகளின் அட்டவணை, மூர்த்திகள் அமைந்துள்ள ஸ்தானங்களின் மாதிரிப்படம், மூர்த்திகளின் விளக்கம், பாவநாசதீர்த்தம், தலத்தேவாரம், திருமுறைச்செல்வம் ஆகியன உள்ளிட்ட 10 அத்தியாயங்களில் திருக்கோணேஸ்வரர் ஆலயம் பற்றிய பயனுள்ள தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

107

திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள். இ.வடிவேல். கொழும்பு: பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்துகலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1982. (கொழும்பு: அரசன் அச்சகம்).

328 பக்கம், வரைபடம், புகைப்படங்கள். விலை: ரூபா 25, அளவு: 22X14 சமீ.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள 65 இந்து சமயக் கோவில்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் அடங்கியுள்ளன. யாத்திரீகர்களுக்கு ஏற்ற தகவல்கள் உள்ளன. கோவில்கள் யாவும் 14 தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 9 பிரதான கோவில்கள் தனித்தனி அத்தியாயங்களாகவும் (உதாரணம்: கோணேஸ்வரம்) எஞ்சியவை 5 பிரதான தெய்வங்களின் பெயர்களின் கீழும் (உதாரணம்: சிவன்கோவில்கள்) வகைப்படுத்தப்பட்டுள்ளன.

108

திருமுறைக் கதைகள். நா.முத்தையா கனடா: இந்துசமயப் பேரவை, ஒன்ராறியோ, 1வது பதிப்பு, ஆவணி 1999. (கனடா: விவேகா அச்சகம்)

xi,51 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

சைவத்திருமுறைகளில் 4,5,6ம் திருமுறைகளை நமக்கருளிய திருநாவுக்கரசரின் தேவாரப்பாடல்களில் சிலவற்றைத் தேர்ந்து சிறு கதைகளாக்கி பெரியவர்களும், சிறியவர்களும் அறியும் வண்ணம் தொகுத்துள்ளார். மொத்தம் 18 கதைகளின் வாயிலாக இந்து சமயத்தின் தத்துவங்கள் வாழ்வியல் அறிவுரைகள் ஆகியன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

109

திருமுறைப் பெருமை. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் (மூலம்) க.வைத்தீஸ்வரக் குருக்கள் (பதிப்பாசிரியர்), யாழ்ப்பாணம்: காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகம், 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: கு.வி. அச்சகம்)

68 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18X12 சமீ.

சைவத்திருமுறைகளின் பெருமையினை விளக்கும் நூல். யாழ்ப்பாணம், கந்தர்மடம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் 1911 இல் தாம் அடங்கன் முறையில் எழுதி வெளியிட்ட திருமுறைப்பெருமை என்ற கட்டுரையும், க.சி.குலரத்தினம் அவர்கள் எழுதிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரின் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையும் அடங்கியுள்ளன.

110

திருவாசகரும் இலங்கைப் பௌத்தமும். ஆ.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: இவ்லின் இரத்தினம் பல்லினப்பண்பாட்டியல் நிறுவனம், திருநெல்வேலி. 1வது பதிப்பு, நவம்பர் 1989. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேஷன்ஸ்)

(8),12 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 21X14 சமீ.

கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் நினைவுப் பேருரை. மாணிக்கவாசகர் சுவாமிக்கும் இலங்கைப் பௌத்தத்துக்கும் இடையிலான தொடர்பு பற்றிய ஆய்வு.

111

திருவாதவூரடிகள் புராணம்: திருவெம்பாவை: உரைக் குறிப்புடன். நா.கனகரத்தினம்(பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்)

xiv,208 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18.5X12.5 சமீ.

மணிவாசகரின் வாழ்க்கை வரலாற்றை வழங்கும் புராணநூல். சைவசித்தாந்த ஞானத்தை உள்ளீடாகவும், சிவாகம விதி முறைகளைச் சட்டகமாகவும் வனப்புமிக்க திவ்வியசரிதையை வண்ண வடிவாகவும் கொண்டுள்ள உயிர்ப்புள்ள திருநூல்.

112

தில்லைக் கூத்தன் பக்திப்பாமாலை. சிவநாயகி தியாகராஜா (மூலம்), மு.கந்தையா(உரையாசிரியர்). தெல்லிப்பழை: சிவநிலையம், 1வது பதிப்பு, சித்திரை 1987. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்)

xx,53 பக்கம், 2 தகடுகள். விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

சிவதத்துவவிளக்கமான சைவசித்தாந்த உண்மைகளை உள்ளடக்கியதான இப்பக்திப்பனுவலின் ஒவ்வொரு பாவுக்கும் எல்லோரும் எளிதில் விளங்கிக்கொள்ளும் வகையில் விளக்கமும் உள்ளது.

113

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். தங்கம்மா அப்பாக்குட்டி. யாழ்ப்பாணம்: முரசொலி வெளியீடு, 1வது பதிப்பு,

ஆவணி 1988. (யாழ்ப்பாணம்: முரசொலி அச்சகம்).
(2),16 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. 18X12.5 சமீ.

தெல்லிப்பழை, துர்க்காதேவி ஆலயத்தின் பூர்வீகச்சிறப்பும் இன்றைய எழுச்சிப் பெருநிலையும் சுருங்க விளக்கப் பெற்றுள்ளது.

114

தேர். குளோபல். யாழ்ப்பாணம்: குளோபல் கொம்யுனிக்கேஷன்ஸ், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1984. (யாழ்ப்பாணம்: நியுலட் சுமி அச்சகம்)
(6),14 பக்கம். விலை: இலவசம். அளவு: 20.5X14 சமீ.

திருத்தேரின் மகிமையை சித்திரிப்பதும் தேர்த்திருவிழா பற்றிய கட்டுரைகள் கொண்டதுமான சிறுநூல்.

115

தேவாரத்திரட்டு. சி.கனகசபாபதி (தொகுப்பாளர்). இலண்டன்: உயர்வாசற் குன்று முருகன் கோவில், நவம்பர் 1995. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
112 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு 20X14 சமீ.

தேவார, திருவாசக, பஞ்சபுராணங்களின் தொகுப்பு.

116

நல்லைக்கந்தரந்தாதி. நாக பரமசாமி. யாழ்ப்பாணம்: நா. பரமசாமி, 15/6 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1986. (யாழ்ப்பாணம்: கண்ணன் அச்சகம், நல்லூர்)
26 பக்கம், தகடு. விலை: இலவசம். அளவு: 18.5X12.5 சமீ.

இப்பிரபந்தத்தின் பாட்டுடைத்தலைவன் நல்லடியார் நாடும் நல்லை நாதனாகிய முருகப்பெருமானாவார். இந்நூலின் பாணி, ஈழத் தமிழரின் துயரினை, அவர் தம் இன்னலை முருகனிடம் முறையிடுவதாக அமைந்துள்ளது

117

பகவான் ஸ்ரீ சத்யசாயி சுப்ரபாதம்: குழந்தைகளுக்கான பஜனைப்பாடல்கள். சாயி சமித்தி. யாழ்ப்பாணம்: திருநெல்வேலி சாயி சமித்தி, 1வது பதிப்பு, நவம்பர் 1990. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)
16 பக்கம், தகடு. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14சமீ.

ஸ்ரீ சத்யசாயி சுப்ரபாதம், அஷ்டோத்திரமும் குழந்தைகளுக்கான பஜனைப்பாடல்களும், ஸ்ரீருத்திரத்தின் சில பகுதிகளும் பகவானின் பொன்மொழிகளும் அடங்கியது. 65ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

118

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் கீதவாஹினி. என்.கஸ்தூரி (ஆங்கில மூலம்), பி.கே.சுந்தரம் (தமிழாக்கம்). கொக்குவில்: பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம், பிள்ளையார் கோவிலடி, தாவடி, 1வது பதிப்பு, நவம்பர் 1990. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
xii,304 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

தமிழ்நாடு பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா நிறுவனத்தின் வெளியீட்டு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் (Tamil Nadu Publications Trust) வெளியிடப்பட்ட மூலநூலின் மறுபிரசுரமான இந்நூல் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 65வது ஜனன ஜெயந்தி விழா-அவதாரம் பிரகடனப்பொன்விழா என்பவற்றின் நினைவாக வெளியிடப்பட்டுள்ளது.

119

பராசக்தி பாமாலை. மு.கணபதிப்பிள்ளை. கோட்டைக் கல்லாறு: சதுராலயம், 1வது பதிப்பு, 1989. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்).
42 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

சக்தி வழிபாட்டுக்குரிய பாடல்களின் தொகுப்பு. கல்லாற்றுக் கண்ணகை அம்மன் காவியம், கடல்நாச்சி அம்மன் காவியம், கண்ணகை அம்மன் காவடிவிருத்தம், பேச்சிஅம்மன் காவியம், பராசக்தி இசைப் பாடல்கள் ஆகிய தலைப்புகளில் பாடல்களும் ஓலைச்சுவடிகளிலிருந்து பிரதி செய்யப்பட்ட கண்ணகை அம்மன் குளிர்த்தி, மாரிஅம்மன் குளிர்த்தி, கண்ணகை கலியாணக்கால் சுற்றுக்காவியம் ஆகியனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

120

பன்னிரு திருமுறைத் தோத்திரத் திருவருட்பாத்திரட்டு. நீ.சி.முருகேசு (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: சக்தி நூல்நிலையம், 2வது பதிப்பு, பங்குனி 1989. 1வது பதிப்பு, சித்திரை 1986. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)
(8),150 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 21X14 சமீ.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்

புராணம், திருப்புகழ், திருமந்திரம், ஆகியவற்றை உள்ளடக்கிய பன்னிருதிருமுறைகளின் தொகுப்பு, ஆலயங்களிலும், மடங்களிலும், பிரார்த்தனை மண்டபங்களிலும் பண்ணோடு பாடிப் பாராயணம் செய்ய ஏற்ற நூல்.

121

பன்னிரு மாத நினைவுகள். நா.முத்தையா. கனடா: இந்து சமயப் பேரவை, ஒன்ராறியோ, 3வது பதிப்பு, மார்ச் 2000. 1வது பதிப்பு, 1978. 2வது பதிப்பு, 1997). (கனடா: விவேகா பிரின்டர்ஸ், ஒன்ராறியோ)
167 பக்கம், சித்திரங்கள். விலை: குறிக்கப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

இந்நூல் விரதங்களின் மகிமையையும் மாதாந்தம் அனுட்டிக்கப்பட வேண்டிய விரதங்கள் பற்றிய விளக்கங்களையும் வழங்குகின்றது. பிள்ளைகள் இந்துசமயம் பற்றிக் கேட்கும் பல கேள்விகளுக்கு விளக்கங்களைப் பெற்றோர் வழங்க முடியாதவர்களாக இருக்கும் வேளை இந்நூல் அவர்களுக்குக் கைகொடுக்கும்.

122

புராதனி நயினை நாகபூஷணி ஆலய வரலாறும் அருட் பாமாலையும். நயினை நா.க.சண்முகநாதபிள்ளை. யாழ்ப்பாணம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, 1வது பதிப்பு, ஜூன் 1981. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில் வடக்கு)
xii,136 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12.5 சமீ.

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயவரலாறு பற்றிக் கூறும் நூல். சக்தி வழிபாட்டின் சிறப்பு, அம்பிகையின் பல்வேறு கோலங்களில் அருளும் வனப்பும், அம்பிகையின் வழிபாடு அடைப்பிக்கும் பெறுபேறுகள் சாக்தமத சம்பிரதாயங்கள் ஆகிய விடயங்கள் பற்றியும் பல நூல்களிலிருந்து பிழிந்தெடுத்த தேறலாக அமைகின்றது.

123

மட்டக்களப்புச் சைவக்கோயில்கள்: 1வது தொகுதி. வீ.சீ.கந்தையா. கொழும்பு 4: இந்துசமயத் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, 1வது பதிப்பு, 1983. (கொழும்பு10:கூட்டுறவு மொத்த விற்பனை அச்சக நிலையம்)
(24),216 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22X14 சமீ.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சைவக்கோயில்களைப் பற்றிய

விபரத்தெகுப்பு. கறுப்பு-வெள்ளைப்படங்களுடன் கூடியது. ஈச்சரங்கள், மலைக் கோவில்கள், திருப்படைக் கோயில்கள், பிள்ளையார் கோயில்கள், அம்மன் கோவில்கள், ஆகிய தலைப்புக்களில் கோவில்கள் வகைப்படுத்தப்பெற்று ஒவ்வொரு கோவிலுக்கும் உரிய விபரங்கள் தனித்தனிக் கட்டுரையுருவில் தரப்பட்டுள்ளன.

124

மடாலயத் திறப்புவிழா மலர். மலர் வெளியீட்டுக்குழு. திருக்கோணமலை: ஸ்ரீமுருகன் தொண்டர்சபை, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: உதயன் அச்சகம்)
54 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22X14 சமீ.

திருக்கோணமலை, வில்லூன்றி ஸ்ரீ முருகப்பெருமான் ஆலயத்தினை ஆதாரமாகக்கொண்டு சைவசமயப் பணிகளைச் செய்துவரும் சமய ஸ்தாபனமாகிய ஸ்ரீமுருகன் தொண்டர்சபை தமது நற்பணிகளுக்கு ஒரு செயற்பாட்டு மையமாக அமைத்த கட்டிடத்தைத் திறந்துவைத்த நாளில் வெளியிடப்பட்ட நினைவு மலர். மேற்படி கோவிலின் தலவரலாற்றுடன் திருக்கோணமலை நகரில் இயங்கும் பல்வேறு இந்துசமய நற்பணிமன்றங்கள் பற்றிய தகவல்களையும் இந் நூலின் வாயிலாக அறியமுடிகின்றது.

125

மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும். மாத்தளை பெ.வடிவேலன். கொழும்பு 13: கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு, 39/21 அல்விஸ் பிளேஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48 B, புளுமென்டால் வீதி)
68 பக்கம். விலை: ரூபா 60. அளவு: 21.5x14 சமீ.

வரலாறு மனிதனுக்கு மட்டுமல்ல மாரியம்மனுக்கும் உண்டென்பதை துணிச்சலுடன் முன்வைக்கிறார் மாத்தளை வடிவேலன். இந்நூல் உருவில் சிறிதாயினும் ஆன்மீகத்தத்துவம், வழிபாட்டு நெறிமுறைகள், ஆலய அமைப்பு முறை, புராதன ஐதீக வழிபாட்டு நடைமுறைகள் போன்ற பாரிய கருப்பொருள்களையும் தொட்டுப் பார்க்கின்றது.

126

வல்லிபுர மாயவன் பிள்ளைத்தமிழ். மு.கந்தையா. ஊரெழு: சிங்கைநகர் ஆழ்கடலார், 1வது பதிப்பு, தை 1989. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)
xxvi,206 பக்கம். விலை: ரூபா 50. அளவு: 18X12.5 சமீ.

இலங்கையின் வட பகுதியை அலங்கரிக்கும் விஷ்ணு தலங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருத்தலமான வல்லிபுரக்கோயிலில் வீற்

றிருக்கும் மாயவன் மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம்.

127

வல்லிபுரத்தான் தலபுராணம். ஆழ்கடலான். (இயற்பெயர்-கு. பெரியதம்பி) புலோலி: வல்லிபுரம், இந்து கல்வி கலாசார மன்றம், 1வது பதிப்பு, ஜூலை 1987. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

xxviii,122 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18X12 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தின் கிழக்குத்திசையிலுள்ள வல்லிபுரத்து மாயவனைத் தலைவனாகக்கொண்டு பாடப்பட்ட தலபுராணம். இது பதினொரு சருக்கங்களாகப் பிரிக்கப்பெற்று 655 செய்யுள்களாகப் பாடப்பெற்றுள்ளது.

128

விபுலானந்தக் கவித்தேனில் விளைந்த பக்தி அமுதம். சொக்கன். யாழ்ப்பாணம்: வாணி, நாயன்மார்கட்டு, 1வது பதிப்பு, ஜனவரி 1984. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)

X,26 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18.5X12.5 சமீ.

வீரகேசரி வாரமலரில் 27.3.83 தொடக்கம் 4 வாரங்கள் தொடராக வெளிவந்தது. சுவாமி விபுலானந்தரின் கவிதைகளில் இடம்பெறும் பக்திநெறி தொடர்பான ஆய்வுநூல் இதுவாகும். பக்திப்பாடல்கள் பொதுவாகவும் அவற்றின் தத்துவங்கள் விரிவாகவும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. விபுலானந்தருடன் சமகாலப் பக்திப்பாவனைகளை ஒப்பிட்டு நோக்கும் இந்நூலின் பின்னிணைப்பில் அடிகளாரின் மகாலட்சுமி தோத்திரமும் தரப்பட்டுள்ளது.

129

லண்டன் லூசியம் சிவன் கோவில் கீர்த்தனைகள். செ. நாகேந்திரன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: Scripts Offset)

52 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

இலண்டன், லூசியம் சிவன்கோவிலுக்காக இயற்றப் பெற்ற 17 கீர்த்தனைகளுடன் விநாயகர், முருகன், சக்தி, சத்யசாயிபாபா ஆகியோர் மேற் பாடப்பெற்ற 4 கீர்த்தனைகளுமாக மொத்தம் 21 பாடல்களின் தொகுப்பு. சமூக வாழ்வியல் சிந்தனைகளை பக்திப் பாசுரங்களில் இணைத்துப் பாடியிருப்பது நூலில் குறிப்பிடத்தகுந்த அம்சமாகும்.

மேலும் பார்க்க: 144, 234, 285, 355, 841, 842, 857

297 இஸ்லாம்

130

அறிவும் உணர்வும். எம்.ஐ.எம்.மீரா லெவ்வை. கல்முனை: இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம், சாய்ந்த மருது, 1வது பதிப்பு, 1989. (மட்டக்களப்பு: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்)

106 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12.5 சமீ

அறிவும் உணர்வும், இறைமறை அருளப்பட்ட சூழல் பற்றிய அறிமுகம், திருக்குர் ஆனின் வாழ்க்கை வழிகாட்டும் வசனங்களில் ஒரு சில, ஆகிய மூன்று பகுதிகளாக இஸ்லாமியக் கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

131

உத்தமத் தூதர். எஸ்.எம்.ஹனிபா. கொழும்பு 10: இஸ்லாமிக் புக் ட்ரஸ்ட், 323 ஜும் ஆ மஸ்ஜித் வீதி, 4வது பதிப்பு, 1984. 1வது பதிப்பு, 1976. (கொழும்பு 2: அல் ஜசீரா லிமிட்டெட், 90 ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை)

44 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 18X12 சமீ.

நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல். இது 1980ம் ஆண்டு சிங்களமொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறுவர்களுக்கு ஏற்ற சமய அறிவுநூல்.

132

நபி பெருமானின் நல்லுரைகள். எம்.வை.எம்.மீஆத். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன. 1வது பதிப்பு, 1989. (கொழும்பு12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

56 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 18X12 சமீ.

நபிபெருமானின் நல்லுரைகளை விளக்கும் 40 கவிதைகளைக் கொண்டது. நபிபெருமானின் வாழ்வும் வாக்கும் திரண்டு உருவானது ஹதீஸ். பல துறைகளையும் பற்றி நபி பெருமான் நவின்ற 40 பொன்மொழிகள் பல்வேறு ஹதிஸ் கிரந்தங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு கவிதை உருவில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு கவிதையின் முன்னும் ஹதிஸின் அரபு மூலமும் தரப்பட்டுள்ளது.

133

முஹம்மது(ஸல்) மனிதரில் தலை சிறந்தவர்கள். கு.ஆ. நதிம் பாரி. (மூலம்), ம.மு.உவைஸ் (தமிழாக்கம்). கொழும்பு 10: ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையம், ராஜபொக்குண, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு10: ருகுண பிரின்டர்ஸ், 44, மாளிகாவத்தை வீதி.)

78 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22X14 சமீ.

பாக்கிஸ்தான் அரசின் 1985ஆம் ஆண்டு தேசியவீரர் பரிசு பெற்ற மூலநூலின் தமிழாக்கம். நாயகம்(ஸல்) அவர்களின் நற்பண்பு களை விளக்கும் நூல்.

மேலும் பார்க்க: 142

300 சமூக விஞ்ஞானம்

301 சமூகவியல்

134

இதயம் தழுவிய நினைவுகள். ஊரவன். (இயற்பெயர்: இரா. சிவரஞ்சன்) சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: Scripts Offset)

128 பக்கம். விலை: இந்திய ரூபா 26. அளவு: 18X12.5 சமீ.

ஜேர்மனியிலிருந்து வெளிவரும் கலைவிளக்கு, மண் ஆகிய சிறுசஞ்சிகைகளில் வெளியான 19 சமூக ஒழுக்கவியல் கட்டுரை களின் தொகுப்பு.

135

சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும். வெகு ஜனன், இராவணா. யாழ்ப்பாணம்: புதியபூமி வெளியீடு, 15/1 மின் சார நிலைய வீதி, 1வது பதிப்பு, பங்குனி 1989. (யாழ்ப்பாணம்: யாழ்ப்பாண அச்சகம், 407 ஸ்டான்லி வீதி)

viii,144 பக்கம், தகடு. விலை: ரூபா 25. அளவு: 22X14 சமீ.

சாதி அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும், இலங்கையில் அதன் இறுக்கம், தமிழர் மத்தியில் சாதி அமைப்பின் தாக்கம் காலனித்துவ காலத்திலிருந்து சுதந்திரம் வரை சாதியம், ஐம்பது களிலிருந்து 66 ஒக்டோபர் வரை சாதியமைப்பின் தாக்கம், 1966 ஒக்டோபர் 21 எழுச்சியும் அதன் பாதையில் போராட்டங்களும் அதன் தாக்கங்களும் போன்ற அம்சங்கள் இந்நூலில் ஆராயப்பட் டுள்ளன.

136

சிதம்பர சக்கரம். பாலகிருஷ்ணா ஸ்ரீதரன். லண்டன்: கிருஷ்ணா பப்ளிகேஷன்ஸ், த.பெ.இலக்கம் 35326, 1வது பதிப்பு, ஜனவரி 2001. (அச்சக விபரம் அறியமுடியவில்லை)

(10),198 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

நாம் வாழும் இந்த உலகம் நமக்குப் புறம்பான ஒரு தனிமையா? அல்லது நாம் தான் இந்த உலகமா? மனிதன் தோன்றிய காலத் திலிருந்தே ஆரம்பித்த இக் கேள்விக்கு நமது அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களையே உதாரணம் காட்டி, நாம் பார்க்கும் இந்த உலகம் நம்மாலேயே உருவாக்கப்பட்டது. நாம் தான் இந்த உலகம் என்று கூறுவது தான் இந்த நூலின் சாராம்சம். சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் குறுங்காதைகள்.

137

யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை. கார்த்திகேசு சிவத்தம்பி. சென்னை 26: குமரன் புத்தக இல்லம், 3 மெய்கை விநாயகர் தெரு, 1வது பதிப்பு, ஆவணி 2000. சென்னை 14: மொனார்க் கிரபிக்ஸ்).

xxiii,204 பக்கம். விலை: இந்திய ரூபா 100. அளவு: 21X14 சமீ.

இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் இதுவரை தமிழில் ஆழமாகப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படாத யாழ்ப்பாணத்துச் சமூகத்தை, சமூக வியல், சமூக வரலாறு ஆகிய துறைகளினூடாகச் சித்திரிக்க முனைகின்றது. யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் இயங்கியல் விவரணம், அச்சமூகத்தில் மேலாண்மை பெற்று விளங்கும் கருத்து நிலைகள் ஆகியவற்றையும் அவற்றின் பின்புலத்தில் யாழ்பாணத்தின் புலமைத் துவ மரபு, மதநிலைச் சமூக அசைவியக்கம் ஆகியவற்றையும் அச்சு ஊடகங்களின் தொழிற்பாட்டினையும் எடுத்துக் கூறும் இக்கட்டுரைகள் யாழ்ப்பாணச் சமூக வரலாற்றையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

மேலும் பார்க்க: 971

301.1 பண்பாடு

138

அவன் அவள் அவர்: கிறிஸ்தவத் திருமணம். சுவாமி வி. மா.தாசன். இளவாலை: குடும்ப மேய்ப்புப்பணி நிலையம், சேந்தான் குளம், 1வது பதிப்பு, டிசம்பர் 1981. (திருச்சி 2: பிரஸ் டீலக்ஸ், 40 பாபு ரோட்)

(14),234 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

கிறிஸ்தவ மணவாழ்வின் இயல்பு, மணவாழ்வில் புண்ணியமலர்ச்சி, கிறிஸ்தவ மணவாழ்வில் மகிழ்ச்சி, பால்-உறவு, மக்கள் ஆகிய பிரிவுகளின் கீழ், குடும்பவாழ்வில் ஈடுபடவுள்ள கிறீஸ்தவர்களுக்கேற்ற அறிவுரைகள் அமைகின்றன. இது மணமக்களுக்குத் திருமணப்பரிசாக அளிப்பதற்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

139

இதயரஞ்சனி-சமூக பண்பாட்டுக் கோலங்கள். எஸ்.கே. பரராஜசிங்கம், என்.சண்முகலிங்கன். சென்னை: காந்தளகம், 1வது பதிப்பு, ஜனவரி 1988. (சென்னை: ஸ்ரீ கோமதி அச்சகம்)

92 பக்கம். விலை: இந்திய ரூபா 10. அளவு: 17.5X12.5 சமீ.

இலங்கைவானொலியில் இதயரஞ்சனி என்ற கலை இலக்கிய மஞ் சரியின் பண்பாட்டுக் கோலங்கள் என்ற அங்கத்திலிருந்து 25 கீற் றுக்கள் தேர்ந்து தரப்பட்டுள்ளன. தமிழர் பண்பாட்டின் விழாக்கள், வழிபாட்டு மரபுகள், கிராமியக் கலைகள், சடங்குகள், நம்பிக்கை கள், மனவெழுச்சிகள் தொடர்புசாதனங்கள், ஆளுமைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பான கட்டுரைகள் அடங்கியது.

140

இந்துப் பண்பாடு சில சிந்தனைகள். கா.கைலாசநாதக் குருக்கள். சென்னை: தமிழியல், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1986 (சென்னை 600005: ஜீவன் பிரஸ், 63 பெரிய தெரு, திருச்சிராப் பள்ளி)

68 பக்கம். விலை: இந்திய ரூபா 15. அளவு: 18X12 சமீ.

சேர் பொன் இராமநாதன் அவர்களின் துணைவியார் லீலாவதி ராமநாதன் நினைவுப் பேருரையின் நூல்வடிவம்.

141

இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும். கா.சிவத்தம்பி. கொழும்பு 3: உதயம் நிறுவனம், 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 6: யுனி ஆர்ட்ஸ் பி. லிமிட்டெட்)

200 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22X15 சமீ.

மலையகத் தமிழ் மக்களுடைய பண்பாட்டுப் பாரம்பரியத் தினை இனம் காண்பதும், அம்மக்களின் மதங்களுடன் தொடர் புடைய பண்பாட்டு அம்சங்களை அறிந்து விளக்குவதும் இவ்வாய் வின் முக்கிய நோக்கமாகும்.

142

இலங்கை முஸ்லீம்களின் திருமண சம்பிரதாயங்கள். அ.முகமது சமீம். கலகெதர: றிசானா பப்ளிகேஷன்ஸ், றசானா மன்சில், மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (சென்னை 6: சுமதி லேசர்ஸ்)

xi,56 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X13.5 சமீ.

இலங்கை முஸ்லீம்களின் திருமணச் சம்பிரதாயங்கள் அலாதி

யானவை. தமிழகத்திலும் இலங்கையிலும் வாழும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய திருமணச் சம்பிரதாயங்களில் பல் வேறு மார்க்கங்களைப் பின்பற்றுபவர்களின் பழக்கவழக்கங்கள் இடம் பெற்றிருப்பது கண்கூடு. இவற்றைக் கோடிட்டுக் காட்டுகின்றார் ஆசிரியர்.

143

இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழக்கங்களும். சி.பத்மநாதன். சென்னை: குமரன் புத்தக இல்லம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வட பழநி, 1வது பதிப்பு, 2001. (சென்னை: குமரன் அச்சகம்)

410 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: இந்திய ரூபா 500. விஷேட பதிப்பு: இந்திய ரூபா 1000. அளவு: 21X14 சமீ. ISBN 955-9429-043 (Ordinary), 955-9429-051 (Special).

இலங்கைத்தமிழர் வாழும் பிரதேசங்களில் நிலவிய வழமைகளைப் பற்றி ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்திலும், பிரித்தானியரின் ஆட்சியின் ஆரம்பக் கட்டத்திலும் எழுதப்பட்டுள்ள ஆவணங்கள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, புத் தளம், உட்பட பல்வேறு பிராந்தியங்களிலும் வாழ்ந்த இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள் ஆகியோரின் வரலாறு பற்றிய பல அம்சங் களும் இந்நூலில் விரிவாக பேராசிரியர் பத்மநாதனால் விளக்கப்பட் டுள்ளது.

144

இலங்கைத் தமிழர்களின் கைலாச பாரம்பரியம். ஆ.வேலுப் பிள்ளை. யாழ்ப்பாணம்: கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம். 1வது பதிப்பு, மே 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

26 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

கயிலாச பாரம்பரியம் இலங்கைத் தமிழர்களின் பண்பாட்டைக் காத்து வந்துள்ளதென்பதை ஆசிரியர் இக்கட்டுரையின் வாயிலாக நிறுவ முற்பட்டுள்ளார். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய நிறுவகர் நினைவுப் பேருரையாக வெளியிடப்பட்டது.

145

எழுச்சி மாநாட்டு மலர். 13-14. 07.1996, றைன, சேர்மனி. சி. இராசகருணா (மலராசிரியர்). ஜேர்மனி: உலகத்தமிழ்ப் பண் பாட்டு இயக்கம், ஜேர்மன் கிளை, 1வது பதிப்பு, ஜூலை 1996. (பாரிஸ்: ஸ்ரீ பாரதி அச்சகம், 13 rue Cail 75010)

84 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 25X18.5 சமீ.

ஜ°லை 1996 இல் 13-14ம் திகதிகளில் ஜேர்மன், றைன நகரில் நடந்தேறிய உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடாத்திய ஐரோப்பிய எழுச்சி மகாநாட்டின் நினைவாக அமையும் சிறப்பு மலர். மாநாட்டுக்கு உலகெங்கணும் இருந்து வந்த வாழ்த்துச் செய்திகளும் தமிழியல் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

146

தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள்கண்டுபிடிப்பும். கா.சிவத்தம்பி. சென்னை: நியு செஞ்சுரி புக்ஹவுஸ், 1வது பதிப்பு, நவம்பர் 1994. (திருவல்லிக்கேணி: கண்ணப்பா ஆர்ட் பிரின்டர்ஸ்)

87 பக்கம். விலை: இந்திய ரூபா 15. அளவு: 17.5X12 சமீ.

தமிழர் பண்பாடு பற்றியதும், யாழ்ப்பாணச் சமூகத்தின் உருவாக்கம், இயல்பு பற்றியதுமான இரு ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்டது.

147

தமிழர் திருமண நடைமுறைகள் (முதற்பாகம்). அ.சண் முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக்கழகம், 1வது பதிப்பு, ஜ°லை 1984. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி)

xiv,250 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 25. நூலகப்பதிப்பு: ரூபா 30. அளவு: 19X13 சமீ.

பழந்தமிழர் திருமண முறைகள் (கி.பி.300 வரை), தமிழர் திருமண முறைகள் (கி.பி.300க்குப் பின்), யாழ்ப்பாணத் தமிழ் உயர் சாதி இந்துக்களின் திருமண முறைகள், யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட தமிழ் இந்துக்களின் திருமண முறைகள், யாழ்ப்பாணத் தமிழ்க் கிறிஸ்தவர்களிடையே நிலவும் திருமண நடைமுறைகள் ஆகிய ஐந்து பிரிவுகளாக இத்தொகுதி வகுக்கப்பெற்றுள்ளது. ஒவ்வொரு பிரிவும் முறையே மனோன்மணி சண்முகதாஸ், அ.சண் முகதாஸ், சொக்கன், சி.வன்னியகுலம், கே.டானியல் ஆகியோரால் எழுதப்பட்டுள்ளன.

148

தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்பகளும். வண. பிதா.தனிநாயகம் அடிகள். யாழ்ப்பாணம்: தந்தை செல்வா அறங்காவற் குழு, 1வது பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)

32 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 21X14 சமீ.

தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுத் தொடரில் 1980ம்

ஆண்டு நிகழ்த்தப்பட்ட நினைவுதின உரையின் நூல்வடிவம். ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைந்துள்ளது.

149

தமிழனா தமிங்கிலனா? காசி ஆனந்தன். சென்னை 20: மாணவர் புத்தகப்பண்ணை, அடையாறு, 1வது பதிப்பு, நவம்பர் 1995. (சென்னை 17: மாணவர் மறுதோன்றி அச்சகம், தி.நகர்)

126 பக்கம், விலை: இந்திய ரூபா 35. அளவு: 17.5X12 சமீ.

தமிழைப் புறம்தள்ளி ஆங்கிலத்தைத் தமிழன் கொஞ்சுவது ஏன்? ஆங்கிலம் கலந்து தமிங்கிலமாய் ஆகிக்கொண்டிருக்கும் தமிழ் மொழியைக் காப்பாற்றும் ஆதங்கம் இந்நூல் எங்கும் பரந்துள்ளது.

150

நாவலர் பண்பாடு. பொ.பூலோகசிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.1447, தியாகராயநகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை: ஸ்கிரிப்ட் ஆப்செட்)

136 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 18X12.5 சமீ.

நாவலர் பண்பாட்டம்சங்களும் அவர்தம் சமுதாயத்தின் பண்பாட்டம் சங்களும் காணப்பெறும் 11 கட்டுரைகள் இடம்பெறுகின்றன. நாவலர் பண்பாடு, அவர் காலத்தின் பின்பு, அவர் வாழ்ந்திருந்த சமூகத்தில் எத்தகைய மாற்றத்தை அடைந்தது என்பதையும், எவ்வளவு தூரம் அது முத்திரை பதித்துச் சென்றுள்ளது என்பதையும் உணர இக் கட்டுரைகள் உதவும்.

151

பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ்ப் பாரம்பரியம். ஆ.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: அ.பஞ்சாட்சரம், (காரியதரிசி), பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய், 1வது பதிப்பு, 1989. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

42 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர் களின் நினைவு விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நினைவுப் பேருரையின் நூல்வடிவம்.

152

வித்தியானந்தம். சு.வித்தியானந்தன். யாழ்ப்பாணம்: சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ், 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்)

xiv,92 பக்கம், தகடுகள், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப் படவில்லை. அளவு: 20X13 சமீ.

ஈழத்துத் தமிழ்ப்பண்பாட்டின் அமைப்புக்கோலம், அமிசவிபரம் ஆகியன பற்றிப் பேராசிரியர் எழுதிய 10 கட்டுரைகளின் தொகுப்பு. பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் அறுபதாவது பிறந்த நாள் நினைவுமலராக வெளியிடப்பட்டது.

மேலும் பார்க்க: 296, 736, 840, 972

302 பெண்ணியம்

153

இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை. விக்னா பாக்கியநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: Scripts Offset)

96 பக்கம், விலை: இந்திய ரூபா 20. அளவு: 18X12.5 சமீ.

ஜேர்மனியிலிருந்து வெளிவரும் கலைவிளக்கு சஞ்சிகையின் துணை ஆசிரியரான நூலாசிரியர் அச்சஞ்சிகையில் தொடராக எழுதிய பெண்ணியம் தொடர்பான 13 சமுகவியல் கட்டுரைகளின் தொகுப்பு.

154

இன்னுமொரு ஜாதி: இலங்கைத் தமிழ்ப் பெண்கள். எல் ஸெஸ் யோன்ஸ் பேர்க்(மூலம்), பார்வதி கந்தசாமி.(தமிழாக்கம்) யாழ்ப்பாணம்: பெண்கள் ஆய்வுவட்டம், பணிக்கர் வளவு, திருநெல் வேலி. 1வது பதிப்பு, 1989. (சென்னை: 600002: சென்னை புக்ஸ், 6, தாயார் சாஹிப் 2வது சந்து).

277 பக்கம், 21 அட்டவணைகள். விலை: இந்திய ரூபா 25. அளவு: 18X12 சமீ.

பெண்கள் தொடர்பான சமூகவியல் பிரச்சினைகளை வெளிக் கொணரும் சமூகவியல் ஆய்வு. மூலநூல் ஆசிரியர், தான் காரைநகர் திமில, பள்ள சமூகத்தவருடன் வாழ்ந்து கண்ட பல உண்மைகளின் அடிப்படையிலான ஆதாரங்களைத் திரட்டி எழுதிய நூல்.

155

தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு. செல்வி திருச்சந்திரன். கொழும்பு 12: குமரன் புத்தக சாலை, 1வது பதிப்பு, ஜூன்1997. (சென்னை 26: குமரன் அச்சகம்)

218 பக்கம். விலை: இந்திய ரூபா 75. அளவு: 21X14 சமீ.

பெண்களுக்குத் தோற்றுவிக்கப்பட்ட இறுக்கமான கட்டுப்பாட்டு நிலை, சங்ககாலத்துக்கு முன் தொடங்கி 20ஆம்நூற்றாண்டு வரை எப்படிப் பின்னிப் பிணைந்து விரிந்து, இறுகி, கருத்தியல்களையும், கட்டு மானங்களையும், ஸ்தாபனங்களையும் உருவாக்கிவிட்டன என்பது நூலில் இனம்காட்டப்பட்டுள்ளது.

156

நான் ஒரு பெண். சரிநிகர் ஆசிரியர் குழு (தொகுப்பு). கொழும்பு: பாரதி வெளியீடு, 1வது பதிப்பு, மே 1997. (தெகிவளை: டெக்னோ பிரின்ட், 83, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில)

126 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 21X13.5 சமீ.

பெண்கள் தொடர்பான சரிநிகர் (கொழும்பு) பருவ இதழில் 1990-1996 காலப்பகுதியில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். தமிழில் பெண்ணியம் தொடர்பான விழிப்புணர்வையும் சிந்தனைத் தேடல்களையும் தெளிவுகளையும் தர முற்படுகின்றது.

157

பெண்களின் சுவடுகளில். சாந்தி சச்சிதானந்தம். சென்னை: தமிழியல், 1வது பதிப்பு, மார்ச் 1989. (சென்னை 600020: இராசகிளி பிரின்டர்ஸ், அடையாறு)

xv,160 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 18X12.5 சமீ.

தாயுரிமைக் குடும்பப்பண்பு பற்றிய பெண்ணியல் பார்வை. பெண்கள் வரலாற்று மூலங்களை, தாய்வழிச்சமூக அமைப்பை நோக்கிய ஒரு தேடல் முயற்சியாக இது அமைந்துள்ளது.

158

பெண்ணடிமை தீர. செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 27, 2வது தெரு, குமரன் காலனி, வடபழனி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1995. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிரப்பி)

iv,164 பக்கம், விலை: இந்திய ரூபா 28. 18X12.5 சமீ.

பெண் எவ்வாறு அடிமைப்பட்டாள். இன்றும் எவ்வாறெல்லாம் அடக்கி ஒடுக்கப்படுகின்றாள். அவளது உழைப்பு எவ்வாறெல்லாம் சுரண்டப் படுகின்றது. அவளது விடுதலைக்கு வழி என்ன. வரலாற்றில் அவளது எதிர்காலம் என்ன. இது போன்ற பல்வேறு கேள்வி களுக்கு இந்நூல் விஞ்ஞானபூர்வமாக விடை காண்கின்றது.

159

பெண்நிலைவாதம் பொருத்தமானதே. பெண்நிலைவாத ஆய்வு வட்டம். யாழ்ப்பாணம்: பெண்கள் ஆய்வு வட்டம், 1வது பதிப்பு, 1985. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)
18 பக்கம். விலை: ரூபா 3.50. அளவு: 21X14 சமீ.

கொழும்பு பெண்நிலைவாத ஆய்வு வட்டத்தினால் வெளியிடப்பட்ட ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. பெண்நிலை வாதத்தின் அரசியல், பொருளாதார, வரலாற்று அம்சங்களை இந்நூல் மிகச் சுருக்கமாக எடுத்துக்காட்டுகின்றது.

320 அரசறிவியல்

160

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் போலி முகங்கள். பொன் வேலுசாமி. அளவெட்டி: படைப்பாளிகள் வட்ட வெளியீடு, நிழல், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1984. (அளவெட்டி: ஜெயா பிரிண்டிங் வேர்க்ஸ்)
vi,26 பக்கம். விலை: ரூபா 3. அளவு: 18.5X12.5 சமீ.

இலங்கைத் தமிழர் இனப்பிரச்சினையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நோக்கும் செயற்பாடுகளும் பற்றிய ஒரு விமர்சனம்.

161

இலங்கையின் இனக்குழும அரசியல். சி.அ.யோதிலிங்கம். கொழும்பு: மூன்றாவது மனிதன் வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (அச்சக விபரம் அறிய முடியவில்லை)
ix,64 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 21X14 சமீ.

சுதந்திரத்திற்குப் பின்வந்த இலங்கையின் அரசியல் யாப்பு களும் இனப்பிரச்சினைகளும், இலங்கை-இந்திய உறவுகள் ஆகிய இரு கட்டுரைகள் உள்ளடங்கிய தொகுப்பு. முதலாவது ஆக்கம் செம்பாட்டான் என்ற பெயரில் ஆசிரியரால் சரிநிகர் (கொழும்பு) பத்திரிகையில் தொடராக எழுதப்பட்டது. இலங்கை - இந்திய உறவுகள் என்ற இரண்டாவது கட்டுரை இலங்கை இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகள் இலங்கை இந்திய உறவுகளில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி ஆய்வு செய்கின்றது. இது வீரகேசரியின் திங்கள் இணைப்பான இளங்கதிரில் தொடராக வெளிவந்துள்ளது.

162

இன்றைய வளைகுடாப் போர். அ.சி.உதயகுமார். உடுவில்:

Tamil Institute for Strategic Studies, 1வது பதிப்பு, பெப்ரவரி 1991. (யாழ்ப்பாணம்: துருவன் அச்சகம்)
x,80 பக்கம். விலை: ரூபா 50. அளவு: 21X14 சமீ.

1990இல் ஈராக்கினால் குவைத் கைப்பற்றப்பட்டதும், அதையடுத்து 1991 ஜனவரியில் அதை மீட்கத் தொடர்ந்த வளைகுடா யுத்தமும் அதன் பின்னணியும் ஆராயப்பட்டுள்ளது. போர் தந்திரோபாயங்கள், விளைவுகள், தாக்கங்கள் ஆகிய பல்வேறு அம்சங்களும் இந்நூலில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

163

கட்சித் தொண்டர் கொள்கை பற்றி, கட்சிக் கட்டுப்பாட்டை வழுவாது பின்பற்றுங்கள். சென் யுன்(மூலம்), எஸ்.கே.(தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: சுகந்தம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை).
viii,35 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 18X12.5 சமீ.

சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் சென் யூன் அவர்களின் ஆங்கில நூலான Selected works of Chen Yun இலிருந்து எடுக்கப் பட்டு பீக்கிங் ரிவியு சீன சஞ்சிகையில் 1984இல் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளின் தமிழாக்கம்.

164

சர்வதேச அரசியல் நிகழ்வுகள்(1979-1982). க.கைலாசபதி. சென்னை: புதிய பூமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 1992 (சென்னை 17: சூர்யா அச்சகம்)
190 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 21X13.5 சமீ

1979-1982 காலப்பகுதியில் செம்பதாகை, நெட்பார்னா பத்திரிகை களுக்கு எழுதிய சர்வதேச அரசியல் நிகழ்வுகள் பற்றிய விமர்சனக் கட்டுரைகளின் தொகுப்பு.

165

சர்வதேசியம்: சமகாலச் சிந்தனைகள், கருத்தும் நடப்பும். வி.ரி. தமிழ்மாறன். மதுரை 625020: கவிதா பதிப்பகம், தாசில்தார் நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (மதுரை 1: சங்கர் அச்சகம்)
69 பக்கம். விலை: இந்திய ரூபா 35. அளவு: 21X14 சமீ.

ஐ.நா.சபையின் நோக்கமும் அதன் செயற்பாடுகளும், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனமும் அதன் சட்ட அந்தஸ்தும், மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் ஆயுதப் படையினரதும் போராளி களினதும் கடப்

பாடுகள், இன முரண்பாடுகளை தீர்த்து வைப்பதில் உகந்த மார்க்கமெதுவென்பன போன்ற பல விடயங்களைச் சுருக்கமாக விளக்கும் நூல்.

166

சன்டினிசப்புரட்சி: நிக்கரகுவா. ஆசிரியர் விபரம் குறிப்பிடப்படவில்லை. யாழ்ப்பாணம்: மறுமலர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை)

viii,140 பக்கம், புகைப்படங்கள். விலை: ரூபா 12. அளவு: 21.5X14 சமீ.

மத்திய அமெரிக்காவில் மாபெரும் அரசியல் எழுச்சியாகவும் பல்வேறு மாற்றங்களுக்கான அடிப்படையாகவும் நிக்கரகுவாப் புரட்சி அமைகின்றது. நகர்ப்புற கெரில்லாப் போர்முறை மூலம் கருக் கொண்ட போராட்டம் மக்கள் கெரில்லா யுத்தமாகப் பரிணமித்து புதிய நிக்கரகுவாவைத் தோற்றுவித்த வரலாற்றை இந்நூலில் காண முடிகின்றது.

167

சனநாயகமும் மனித உரிமைகளும். நீலன் திருச்செல்வம். கொழும்பு: இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம், (ICES) 1வது பதிப்பு, 1996. (கொழும்பு: Unie Arts)

296 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5X14.5 சமீ.

சர்வதேச. தேசிய மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகளில் அவ்வப்போது எழுதப்பட்ட அரசியல் கட்டுரைகள், பாராளுமன்ற உரைகள், அரசியல் பிரமுகர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் என நான்கு பெரும் பிரிவுகளாகக் கொண்ட 40 கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

168

தமிழ்மாறன் கட்டுரைகள். வி.ரி.தமிழ்மாறன். கொழும்பு 6: தர்ஷனா பிரசுரம், 58-1/3, 37வது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ்)

88 பக்கம். விலை: ரூபா 80. அளவு: 22x14 சமீ.

சர்வதேச அரசியல். சட்ட, மனித உரிமைகள் பற்றிய சிந்தனை

169

தான்பிரீன்-தொடரும் பயணம். ப.ராமஸ்வாமி. யாழ்ப்பாணம்: மறுமலர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், 1வது பதிப்பு,

1985. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை)

(8),158 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 21X14 சமீ,

அயர்லாந்து விடுதலைப் போராட்டம் பிரித்தானிய ஆதிக்கத்தை எதிர்த்து 750 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. 1916-1948 காலப் பகுதியில் சிறப்பினைப்பெற்ற தலைவர்கள் ஆர்தர் கிரிபித், மைக்கல் கொலின்ஸ், டி வலெரா பொன்றோருக்கு இணையாகக் குறிப்பிடத் தகுந்த ஒரு போராளியான தான்பிரீன் அவர்களின் வீரம் செறிந்த போராட்ட வரலாறு இந்நூல்.

170

தெலுங்கானா போராட்டம். சுகந்தம். யாழ்ப்பாணம்: சுகந்தம் வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை)

60 பக்கம். விலை: ரூபா 8. அளவு: 21X13 சமீ.

தெலுங்கானா ஹைதராபாத் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்த காலகட்டத்தில் (இன்று அது ஆந்திரப்பிரதேசத்தின் ஒரு பகுதி) நடைபெற்ற நிலவுடைமைக்கு எதிரானதோர் போராட்டத்தின் வரலாறு.

171

தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள்: மோதல்களும் தீர்வுகளும். வி.ரி.தமிழ்மாறன். கொழும்பு: கார்த்திகேயன் வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஜூன் 1996. (கொழும்பு 6: Karthikeyan Ltd, Hotel Ceylon Inn Shopping Complex, 50 1/2 Galle Road)

x,134 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 18.5X12.5 சமீ.

1995இன் பிற்பகுதி முதல் உலக அரங்கில் அண்மைக்காலத்தில் நடந்தேறிய அல்லது இப்போதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காஷ்மீர், வட அயர்லாந்து, தென்னாபிரிக்கா, பயாஃப்ரா (நைஜீரியா), பாஸ்க் (ஸ்பெயின்), எரித்திரியா, சூடான், கிழக்கு ரிமோர், இந்தொனேஷியா, திபேத், ஆகிய பத்து நாடுகளின் தேசிய இனங்களின் விடுதலைப்போராட்டம் பற்றிய 12 கட்டுரைகளின் தொகுப்பு. சரிநிகரில் 1994-95 காலப்பகுதியில் எழுதப்பட்டவை.

172

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம். பி.ஏ.காதர். கொழும்பு 7: தொழிலாளர் கல்வி வெளியீடு. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், 1வது பதிப்பு, அக்டோபர் 1981. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்)

42 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

மலையக மக்களின் நாடு எது, இவர்கள் தனியான ஒரு தேசிய இனமா, இந்தியா செல்வதா அன்றேல் வடக்குக் கிழக்கு மாவட்டங்களுக்குக் குடிபெயர்வதா, மலையகத்தில் நிலைத்து வாழ்வதா என்பன போன்ற கேள்விகளுக்கு பல்வேறு நாட்டுத் தேசிய இனங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்து விடைகாண முயலும் நூல்.

173

மரபும் மார்க்சியவாதிகளும். சி.சிவசேகரம். சென்னை 600002: சென்னை புக்ஸ், தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, 1989. (சென்னை 24: அலைகள் அச்சகம்).

60 பக்கம். விலை: இந்திய ரூபா 8. அளவு: 18X13 சமீ.

அரசியல், சமூக விஞ்ஞானம் தொடர்பாக அவ்வப்போது *தாயகம்* சஞ்சிகையில் எழுதப்பட்ட கட்டுரைகளில், மரபும் மார்க்சியவாதியும், மதமும் மார்க்சியமும், மு.தளையசிங்கமும் மார்க்சியமும் ஆகிய மூன்று கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு.

174

யாவரும் கேளிரென. பொதுமை அசிரியர் குழு. யாழ்ப்பாணம்: ஈழப்புரட்சி அமைப்பு, 39 கோவில் வீதி. 1வது பதிப்பு, செப்டெம்பர் 1988. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை.)

88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

பொதுமை - ஈழப்புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) வெளியீடாகும். இவ் விதழில் *'யாவரும் கேளிரென...'* என்ற தலைப்பில் தொடர்ச்சியாக வெளிவந்த அரசியல் மடல்கள் தொகுக்கப்பெற்று நூலுருவாக்கப் பட்டுள்ளன. இவை 1985-1987 காலப்பகுதியில் எழுதப்பட்டவை. சமகால அரசியல் பிரச்சினைகளை ஆராய்கின்றன.

175

வெகுஜன அமைப்புகளுக்கும் கட்சிக்கும் இடையான உறவுகள். செழியன். யாழ்ப்பாணம்: நதி வெளியீட்டகம், 1வது பதிப்பு, மார்ச் 1986. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் குறிப்பிடப் படவில்லை)

22 பக்கம். விலை: ரூபா 2. அளவு: 13X12 சமீ.

வெகுஜன அமைப்புகளுக்கும் கட்சிக்கும் இடையிலான உறவின் முக்கியத்துவமும் விஞ்ஞானபூர்வமாக இவ்வுறவை வலுவடைய வைக்கும் கருத்துக்களும் இதில் சுருங்கக் கூறப்பட்டுள்ளது.

மேலும் பார்க்க: 868-873

330 பொருளியல்

176

இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி 1948-1956: வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள். வி.நித்தியானந்தன். யாழ்ப் பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு 1990. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேஷன்ஸ்)

(5),323 பக்கம். விலை: ரூபா 150. அளவு 13.5X20.5 சமீ.

இலங்கை அரசியற் பொருளாதார மட்டத்தில் எதிர்நோக்கியுள்ள பிரச் சினைகளுக்குப் பொறுப்பாகவுள்ள காரணிகளுள் வர்க்க, இனத்துவ மட்ட வளர்ச்சிகளுக்கும் மாறுபாடுகளுக்கும் பெரும் பங்குண்டு. அவை எவ்வாறு இலங்கையின் அரசியற் பொருளாதாரத்தைப் பாதித் துள்ளன என்பதை இந்நூல் விளக்குகின்றது.

177

இலங்கையின் முதலாவது வேலைநிறுத்தம்: அச்சுத் தொழிலாளர் போராட்டம், 1893. குமாரி ஜெயவர்த்தனா(மூலம்), மு.நித்தியானந்தன்(தமிழாக்கம்). கொழும்பு: சஞ்சீவ வெளியீடு, 69 கிரெகரிஸ் வீதி, 2வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: நியுஈரா பப்ளிக் கேஷன்ஸ்)

26 பக்கம். விலை: ரூபா 7.50. அளவு: 18X12 சமீ.

1893ஆம் ஆண்டில் இலங்கையில் முதல் தொழிற்சங்கம் உருவாக வழிவகுத்த எச்.டபிள்யு. கேவ் அன் கொம்பெனியைச் சேர்ந்த 60 அச்சகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் பற்றிய வரலாற்றுக் கட்டுரையின் தமிழ் வடிவம்.

178

எமது பிரதேசங்களில் விவசாய உற்பத்தியும் சுயதேவைப் பூர்த்தியும். ஆய்வு நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரைகள். கொக்கு வில்: ஆய்வு நிறுவனம், 81/1, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1988. (யாழ்ப்பாணம், கல்லச்சுப்பிரதி)

136 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 28X19.5 சமீ.

தமிழ்ப்பிரதேசங்களில் விவசாய உற்பத்திக்குரிய வளங்களும் வாய்ப் புகளும், விவசாய உற்பத்திகள்- இன்றும் நாளையும், பயிரின பீடைகள்- நோய்கள் தடுப்பு முறை, விவசாயத்தில் விரிவோகம் ஆகிய நான்கு தலைப்புகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 13 ஆய்வுரை களின் தொகுப்பு.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

179
மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளும். தென்னாசியவியல் கருத்தரங்கக் கட்டுரைகள். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலைப்பீடம், 1வது பதிப்பு, ஜூலை 1980. (யாழ்ப்பாணம்: கல்லச்சுப் பிரதி)
90 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 27X21.5 சமீ.

இக்கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பில் பேராசிரியர் கா.இந்திர பாலாவின் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் வரலாற்றுப் பின்னணி, மா. அந்தோணிமுத்துவின் மாவட்ட அபிவிருத்திச்சபையும் தமிழ்ப் பிரதேச பொருளாதார அபிவிருத்தியும், மு.நித்தியானந்தனின் அதிகாரமாற்றமும் நிர்வாகப் பரவலாக்கமும், மு.திருநாவுக்கரசுவின் மாவட்ட அபிவிருத்திக்கான உத்தேச அமைப்பும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையும் ஆகிய நான்கு கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

334 கூட்டுறவு

180
கூட்டுறவுக்கோர் அறிமுகம்- முதலாம் பாகம். வை.சி. சிவஞானம். தெல்லிப்பழை: பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், 1வது பதிப்பு, ஜூலை 1980. (யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்)
(8),248 பக்கம். விலை: ரூபா 12.50. அளவு: 21X14 சமீ.

கூட்டுறவுக் கொள்கைகள், அறிஞர்களின் கருத்துக்கள், ஆகியவற்றைத் தொகுத்துத் தந்துள்ளதுடன் இன்று இலங்கையில் உள்ள கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாட்டு முறைகளையும் விளக்கியுள்ளார்.

336 வங்கியியல்

181
வங்கியியல் சட்டமும் நடைமுறைகளும்-பாகம் 2. துரைசிங்கம் ரகு. யாழ்ப்பாணம்: வணிக மஞ்சரி வெளியீடு, 1வது பதிப்பு, தை 1990. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)
X,146 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

இந்நூல் வங்கிச்சட்டம் சம்பந்தமாகப் பல உபயோகமான பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இதன் முதற்பாகம் 1987 ஆவணியில் வெளியிடப்பட்டது.

340 சட்டவியல்

மேலும் பார்க்க: 181

342 அரசியலமைப்புச் சட்டம்

182
இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியும் மாற்றங்களும்: 1833-1978. அம்பலவாணர் சிவராசா. நீர்வேலி: வே.சின்னத்துரை, நீர்வேலி மத்தி. 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1980. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)
X,131 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 21X14 சமீ.

கோல்புரூக் முதல் இரண்டாம் குடியரசு வரையிலான இலங்கையின் அரசியல் திட்டவளர்ச்சியும் அங்கு ஏற்பட்ட மாற்றங்களும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

183
இலங்கையின் அரசியல் யாப்புகள். சி.அ.யோதிலிங்கம். கொழும்பு12: குமரன் புத்தக இல்லம், 210 டாம் வீதி. 1வது பதிப்பு, 1999. (அச்சக விபரம் அறிய முடியவில்லை)
176 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

அரசியல் யாப்பு ஏற்பாடுகளைக் கற்றல், யாப்பின் பிரயோகத்தினைக் கற்றல் ஆகிய இரு விடயங்களையும் பிரதானமாகக் கவனத்திற் கொண்டு எழுதப்பட்ட நூல். யாப்பு ஏற்பாடுகளை விரிவாகக் கூறுவதோடு நடைமுறையில் அதன் செயற்பாடு, செயற்பாட்டின் போது சந்தித்த பிரச்சினைகள், அதன் நன்மை, குறைபாடுகள் என்பவை பற்றிய மதிப்பீடாகவும் இந்நூல் அமைகின்றது.

350 பொது நிர்வாகம்

360 சமூக சேவை நிறுவனங்கள்

184
அவசரகாலம் 1979: இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம். ஏ.ஜே.கனகரத்தினா (தமிழாக்கம்). கண்டி: இ.நீ.ச.இயக்கம், 30 புஷ்பதான மாவத்தை, 1வது பதிப்பு, ஆவணி,1980. (யாழ்ப்பாணம்: அர்ச். பிலோமினா அச்சகம், 102, பிரதான வீதி)

(4),113 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18.5X13 சமீ.

இரு பாகங்களாக ஒழுங்கமைக்கப்பெற்றுள்ள இந்நூலின் முதற் பாகத்தில் யாழ்ப்பாணத்தில் 1979 ஆம் ஆண்டில் நிலவிய அவசர கால ஆட்சி பற்றியும் இரண்டாம் பாகத்தில் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தோற்றம், அதன் குறிக்கோள்களும் நடவடிக்கைகளும் பற்றிய ஆவணத்தொகுதியும் காணப்படுகின்றன.

மேலும் பார்க்க: 875

370 கல்வியியல்

185

அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம். சீ.டீ.வேலுப்பிள்ளை. வட்டுக்கோட்டை: யாழ்ப்பாணக் கல்லூரி, 2வது பதிப்பு, 1984. முதற் பதிப்பு, 1922. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்.)
xvi,287 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X13 சமீ.

போதகர் சீ.டீ வேலுப்பிள்ளை அவர்களால் 1922இல் உருவாக்கப் பெற்ற இந்நூல், அமெரிக்க இலங்கை மிஷன் வரலாற்றை மாத்திர மின்றி அக்காலத்தில் நிலவிய யாழ்ப்பாணக் கல்வி முறையையும் அதன் வளர்ச்சியையும் விளக்குகின்றது.

186

அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும். எஸ். ஜெபநேசன். வட்டுக்கோட்டை: யாழ்ப்பாணக்கல்லூரி, 1வது பதிப்பு, 1983. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
xvi,104 பக்கம், 10 தகடுகள். விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

அமெரிக்கன் மிஷன் இயக்கத்தினால் தமிழ் அடைந்த பன்முகப் பட்ட வளர்ச்சியைப் பற்றிய ஆய்வுநூல். அமெரிக்கன் மிஷனரி மாரும் யாழ்ப்பாணச் சமுதாயமும், அமெரிக்கன் மிஷன் பாடசாலை கள், வட்டுக்கோட்டைச் செமினரி, அமெரிக்கன் மிஷனரிமார் தொகுத்த அகராதிகள், அமெரிக்கன்மிஷன் அச்சுப்பணி, மிஷனின் சாதனைகள் ஆகிய 6 இயல்களில் மேற்படி விடயங்கள் ஆய்வுக் குட்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலின் பின்னிணைப்பாக, இலங்கையில் பணியாற்றிய அமெரிக்கன் மிஷனரிமார் வரிசை, கிறிஸ்தவ தோத் திரப் பாடல்களை இயற்றிய புலவர்கள் அட்டவணை, வட்டுக் கோட்டைச் செமினரியில் கற்பித்த ஆசிரியர்கள் அட்டவணை, செமினரியில் சேர்த்துக்கொள்வதற்கு வேண்டப்பட்ட தகைமைகள், அமெரிக்கன் மிஷனரிமாரின் ஆறுமுக நாவலர் பற்றிய குறிப்புக்கள்

ஆகியவை தரப்பட்டுள்ளன.

187

ஆசிரியரும் உளவியலும். சபா.ஜெயராஜா. இணுவில்: அம்மா வெளியீடு. 1வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப் படவில்லை)
50 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18X12 சமீ.

உளவியலும் கல்வியும் மிகப்பரந்த ஆய்வுத்துறைகளாக விளங்கு கின்றன. வேகமாகப் பெருக்கெடுக்கும் அறிவு, மிகவும் சிக்கலடைந்து செல்லும் சமூகம் என்பவற்றின் மத்தியில் கற்றலையும் கற்பித்தலை யும் எளிமைப்படுத்த, கல்வி உளவியலறிவு துணைபுரிகின்றது. கல்வி உளவியலைப் பற்றிய விஞ்ஞானபூர்வக் கருத்துக்களை பயிற்சி ஆசிரியர்களுக்கு இந்நூல் வழங்குகின்றது.

188

1981-ம் ஆண்டுக் கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகள் மீதான மதிப்பீடு. ப.சந்திரசேகரம். யாழ்ப்பாணம்: ப.சந்திரசேகரம், கல்வித் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1981. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)
16 பக்கம். விலை: ரூபா 3. அளவு: 21X14 சமீ.

இலங்கை அரசினால் 1981 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகள் மீதான இந்த மதிப்பீடு, யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் கல்வியியல் பீடப் பேராசிரியரினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

189

இருபதாம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி. சுப்பிரமணியம் சந்திரபோஸ். யாழ்ப்பாணம்: ஆசிரியர், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)
44 பக்கம், தகடு 1. விலை: ரூபா 10. அளவு: 18X12 சமீ.

தாழ்த்தப்பட்ட தமிழர்கள் யார்? கல்வி என்றால் என்ன? கல்வி யாருக்காக? 20ம் நூற்றாண்டுக்கு முன்னர் தாழ்த்தப்பட்ட தமிழர் களின் கல்வி வளர்ச்சி, 20ம் நூற்றாண்டில் தாழ்த்தப்பட்ட தமிழர் களின் கல்வி வளர்ச்சி ஆகிய தலைப்புக்களின் கீழ் ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

190

இலங்கையில் தோட்டப்பள்ளிக்கூடங்களின் கல்வியமைப்பும் பிரச்சினைகளும். சொர்ணவல்லி பத்மநாபஐயர். யாழ்ப்பாணம்:

தமிழியல், இல.6, மத்திய மேற்குத்தெரு, குருநகர், 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேஷன்ஸ்)
(12),108 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 20X14.5 சமீ.

பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களின் கல்விநிலை பற்றியும் அவர்கள் முகம் கொடுக்கவேண்டியுள்ள பிரச்சினைகள் பற்றியும் யதார்த்த நிலையில் எடுத்துக்காட்டும் நூல். கல்வி முதுமானிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரை.

191

ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களின் கல்விச்சிந்தனைகளும் பங்களிப்பும். S.H.M.ஜெமீல். கல்முனை: ஸாஹிராக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், 1ம் பதிப்பு, 1980. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம், 18, மத்திய வீதி)
94 பக்கம், தகடு 1. விலை: ரூபா 9. அளவு: 18X12 சமீ.

கல்வியியல் துறையில் ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்களது சிந்தனை, பங்களிப்பு ஆகியன பற்றி 11 அத்தியாயங்களில் ஆராயப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக ஜனாப் அஸீஸ் அவர்களால் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், உரைகள், என்பனவற்றின் விபரப்பட்டியல் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

192

கல்விச் சிந்தனைகள். எஸ்.எச்.எம்.ஜெமீல். கல்முனை: இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம், 1வது பதிப்பு, 1990.(சென்னை 01: மில்லத் பிரின்டர்ஸ்)
132 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 17X12 சமீ.

கல்வியியல் தொடர்பான 13 கட்டுரைகளையும் இஸ்லாம், சமூகவியல், வரலாறு தொடர்பான 7 கட்டுரைகளையும் கொண்ட தொகுப்பு. சில கட்டுரைகள் கிழக்கிலங்கையைப் பின்னணியாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

193

கல்வியியற் கோவை. ப.சந்திரசேகரம். யாழ்ப்பாணம்: கல்விக் கழகம், கல்வியியற்புலம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).
(6),156 பக்கம். விலை: ரூபா 35. அளவு: 21X13.5 சமீ.

மூன்று ஆங்கில மூலக்கட்டுரைகள் உள்ளிட்ட 21 கட்டுரைகளில் மேலைத்தேய, கீழைத்தேயக் கல்வியாளர்களின் சிந்தனைகள் ஒப்பு

நோக்கப்பட்டுள்ளன.

194

கல்வியில் அளவீடும் மதிப்பீடும். க.சின்னத்தம்பி. அச்சுவேலி: நா.சின்னத்தம்பி, வளர்மதி, இடைக்காடு. 1வது பதிப்பு, ஏப்ரல் 1986. (யாழ்ப்பாணம்: செட்டியார்அச்சகம், 430 காங்கேசன்துறை வீதி)
xii,204 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

கல்வித்தொழிற்பாடானது இன்று வகிக்கும் உன்னத நிலை ஏற்பட உறுதுணையாக அமைந்ததும், எதிர்காலக் கல்வி அபிவிருத்தியை நிர்ணயிப்பதுமான அளவீடு பற்றிய அறிவு நூல். மதிப்பீட்டுத் தொழிற்பாட்டின் ஒரு பிரதான கூறாக இருக்கும் அளவீடு பற்றிய அறிவினை ஆசிரியர்களும் கல்வியியலாளர்களும் பெற உதவும் நூல்.

195

கீழைத்தேயக்கல்வியியற் சிந்தனைகள். என்.கே.தர்மலிங்கம். யாழ்ப்பாணம்: திருமதி சுகலட்சுமி தர்மலிங்கம், தமிழ்த் தென்றல், சுண்டிக்குளி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம் 411/1, காங்கேசன்துறை வீதி)
xx,185 பக்கம். விலை: ரூபா 35. அளவு: 18X12.5 சமீ.

இராமகிருஷ்ணர், விவேகானந்தர், ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார், பாரதி, ஜவகர்லால் நேரு, ஆறுமுக நாவலர், விபுலாநந்தர், சேர் பொன் இராமநாதன், அருணாசலம், ஆ.கனகரத்தினம், தவத்திரு லோங் அடிகளார், ஏ.எம்.ஏ.அஸீஸ், தனிநாயக அடிகள் ஆகிய கீழைத்தேய அறிஞர்களின் கல்விச்சிந்தனைகள் ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளன. யாழ்ப்பாண இளைஞர் சங்கக் கல்விச்சிந்தனைகள், பெருந்தோட்டப் பள்ளிக்கூடங்கள், கிழக்கிலங்கை கல்வி மறுமலர்ச்சி போன்ற விடயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

196

புதிய கல்விச் சிந்தனைகள். சபா ஜெயராசா. சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் விஷன், 6, தாயார் சாஹிபு 2வது சந்து, 1வது பதிப்பு, ஜூன் 2000 (சென்னை 5: மணி ஆப்செட்)
94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X13.5 சமீ.

ஆசிரியரின் நோக்கு உட்பட 19 இயல்களில் நவீன கல்விச்சிந்தனையாளர்களின் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறிஞரின் சிந்தனையும் ஒவ்வொரு இயலாக நூலில் வகுக்கப்பட்டுள்ளது.

197

முறைசாராக் கல்வி. ச.சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: கல்வித் திணைக்களம், 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

68 பக்கம், வரைபடம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18.5X12.5 சமீ.

முறைசாராக்கல்வி- அவற்றின் பிரிவுகள், யாழ்ப்பாண மாவட்டத்தில் அதன் செயற்பாடுகள், முறைசாராக் கல்விப்பயிற்சி நிலையங்கள், மாணவர் தெரிவு, அபிவிருத்திப் பின்னணியும் பொருத்தமான தொழில் வழி காட்டலின் அவசியம், வழிவகைகள், தொழிற்கல்வி வாய்ப்புக்களும் பொருத்தமான தொழில்நுட்பம், வளர்ந்தோர் கல்வி வளர்ச்சி, யாழ்ப்பாண மாவட்டத்தில் அதன் பணி ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

198

முறைசாராக்கல்வியில் புதிய பரிமாணங்கள். ச.சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: கல்வித்திணைக்களம், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப் பாணம்: செட்டியார் அச்சகம்)

27 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

இலங்கைக் கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவு நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டங்களைப் பற்றிய தகவல்களைக் கொண்ட அறிமுக நூல்.

199

லெனினது கல்விச் சிந்தனைகள். அவுறாம்பிள்ளை யோன் பெனடிக்ற். (யோ.பெனடிக்ற் பாலன்) சென்னை 600002: தேசிய கலை இலக்கியப்பேரவையுடன் இணைந்து சவுத்விஷன், 6 தாயார் சாஹிப் 2வது சந்து, 1வது பதிப்பு, ஜுலை 2000. (சென்னை 600005: மணி ஆப்செட் பிரின்டர்ஸ்)

246 பக்கம். விலை: இந்திய ரூபா 80. அளவு: 21X13.5 சமீ.

பல்கலைக்கழக முதுமானிப்பட்டப் படிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை.

200

வகுப்பறைக் கற்பித்தல். வ.ஆறுமுகம். உரும்பிராய்: திருமதி செல்வராணி ஆறுமுகம், பழைய தபால்கந்தோர் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

xiii,134 பக்கம். விலை: ரூபா 45. அளவு: 18.5X12.5 சமீ.

ஆசிரியர் தொழிலை மேற்கொள்ளும் அனைவருக்கும் ஏற்றவகையில் பிள்ளையை அறிந்து கொள்ளல், கற்பித்தல் முறைகள், துணைச் சாதனங்கள், உத்திகள், செயற்பாடுகள் போன்றவற்றையும் பாடத் திட்டமிடுதல், மதிப்பிடுதல், கட்டுப்பாடு போன்றவற்றையும் ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

201

வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும். எஸ். சிவலிங்கராஜா. பருத்தித்துறை: வடமராட்சிக்கல்வி வட்டம், பொன் னுச்சாமி கோட்டம். 1வது பதிப்பு. மே 1984. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

XX,82 பக்கம், தகடுகள். விலை: ரூபா 25. அளவு: 21X14 சமீ.

ஈழத்தின் வடமராட்சிப் பிரதேசத்தின் கல்விப் பாரம்பரியத்தையும் அதன் விளைவுகளில் ஒன்றாகிய இலக்கிய வளத்தினையும் கண் டறியும் முயற்சி.

370.1 கல்வி நிறுவனங்கள்

202

பூபாள ராகங்கள் 2001. மகாலிங்கம் சுதாகரன்.(மலராசிரியர்), லண்டன்: யாழ். கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கொம்மாந்துறை, பழைய மாணவர் சங்கம், 1வது பதிப்பு, ஜுலை 2001. (லண்டன்: வாசன் அச்சகம்)

136 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x15 சமீ.

22 July 2001 அன்று இடம்பெற்ற பழைய மாணவர் சங்க விழாவில் வெளியிடப்பட்ட சிறப்புமலர். வாழ்த்துக்களும் பலவினக்கட்டுரைகளும் உள்ளடங்கியது.

203

மஹாஜனாக் கல்லூரியின் இலக்கியப் பாரம்பரியம். நா. சண்முகலிங்கன். தெல்லிப்பழை: பாவலர் துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரை, மஹாஜனக் கல்லூரி, 1வது பதிப்பு, ஜுன் 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலட்சுமி அச்சகம்)

18 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

தெல்லிப்பழை மஹாஜனக்கல்லூரி உருவாக்கிவிட்ட இலக்கியப் படைப்பாளிகள் பற்றிய தொகுப்பாக அமையும் இந் நினைவுப் பேருரை பாவலர் துரையப்பா பிள்ளை நினைவுப் பேருரையின் ஏழாவது தொடராகும்.

மேலும் பார்க்க: 293

204
வாணியின் வீடு. பழைய மாணவர் சங்கம். இலண்டன்: தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம், 1வது பதிப்பு, 1988. (தெல்லிப்பழை: பதிப்பக விபரம் குறிப்பிடப்படவில்லை.)
24 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியினரின் இலக்கிய உலகப்பணிகள் பற்றிய மதிப்பீடு. மஹாகவியின் *தெ.து.ஜெயரத்தினம், மஹாஜனக்கல்லூரி (வாணியின் வீடு)* ஆகிய இரு கவிதைகளும் *பாவலர் துரையப்பாபிள்ளையின் யாழ்ப்பாணம் - அன்றும் இன்றும்: மீள்பார்வை* என்ற ஆ.வேலுப்பிள்ளையின் கட்டுரையும், *ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகை - புதுசு- வின் பண்பும் பணியும்* பற்றிய நா.சுப்பிரமணியனின் கட்டுரையும், *இவர்கள்*(சிறுகதைத்தொகுப்பு) *ஓர் அறிமுகம்* என்ற எம்.ஏ.நு:மானின் அறிமுகக்குறிப்பும் அடங்குகின்றன.

380 வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து

381 வர்த்தகம்

205
நடைமுறை விடயங்கள்: வர்த்தகமும் நிதியும். இ.இரட்ணம். யாழ்ப்பாணம்: Higher Education Services Centre, 211/21, கோவில் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, மே 1989. (யாழ்ப்பாணம்: உமா பிரின்டர்ஸ், 32 நல்லூர் குறுக்குத்தெரு, நல்லூர்)
100 பக்கம். விலை: ரூபா 28. அளவு: 20X14 சமீ.

கல்விப்பொதுத் தராதரப்பத்திர உயர் வகுப்பு மாணவர்களுக்குரிய வர்த்தகமும் நிதியும் தொடர்பான பாடத்திட்டத்துக்குரிய வெளி நாட்டு வியாபாரம் என்ற பகுதி முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.

388 தரைப் போக்குவரத்து

206
இங்கிலாந்து சாரதிகளின் எழுத்துப் பரீட்சை: உத்தியோக ரீதியான வினா விடை 2001-2002. பூ.சுபோதீஸ் (தொகுப்பாளர்) லண்டன்: பூபாலசிங்கம் புத்தகசாலை, லண்டன் கிளை, 110 ஹொலண்ட் வீதி, ஈஸ்ட்ஹாம். 2வது பதிப்பு, 2001. 1வது பதிப்பு, 2000. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
190 பக்கம், வண்ணப் புகைப்படங்கள். விலை: ஸ்டேர்லிங் பவுண் 20. அளவு: 21x15 சமீ.

பிரித்தானிய அரசின் அங்கீகாரம் பெற்ற Driving Standards Agency யினால் வெளியிடப்பெற்ற The Official Theory Test for Cars என்ற நூல் தமிழில் மொழிபெயர்ப்பு உரிமை பெற்றுத் தமிழாக்கம் செய்யப் பட்டுள்ளது.

390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும்

207
இலங்கைத்தமிழ் நாட்டார் வழக்கியல். கார்த்திகேசு சிவத்தம்பி (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1991. (கல்லச்சுப்பிரதி).
364 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 31X21 சமீ.

இலங்கைத்தமிழ் நாட்டார் வழக்கியல் பற்றி இடம்பெற்ற பேராசிரியர் கணபதிப்பிள்ளை நினைவுக்கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட 15 கட்டுரைகளின் தொகுப்பு.

மேலும் பார்க்க: 139, 296

390.1 இடப்பெயர் ஆய்வு

208
இடப்பெயர் ஆய்வு: காங்கேசன் கல்வி வட்டாரம். இ.பாலசுந்தரம். இளவாலை: பண்டிதர் அப்புத்துரை மணிவிழாக்குழு, புனித வாசம், பத்தாவத்தை, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)
X,73 பக்கம், தகடு. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14சமீ.

நீர்நிலைப்பெயர், நிலவியல்பு, நிலப்பயன்பாட்டு நிலை, குடியிருப்பு நிலை, ஊராட்சி நிலை, தாவரப்பெயர், சிறப்பு நிலைப்பெயர் ஆகிய தலைப்புக்களின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட, காங்கேசன் கல்விவட்டார எல்லைக்குள் அமைந்துள்ள இடங்களின் பெயர்கள் ஆய்வு செய்யப் பட்டுள்ளன.

209
இலங்கை இடப்பெயர் ஆய்வு 2: வடமராட்சி, தென்மராட்சி. இ. பாலசுந்தரம். புலோலி: வல்லிபுரம் இந்து கல்வி கலாச்சார மன்ற வெளியீடு, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: மேர்க்குரி அச்சகம்)
XVi,150 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 21X14 சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடகரையிலே தொண்டைமானாறு பிரிக்கும் வடபகுதியும், அதனோடு இணைந்த வடகிழக்குப்பகுதியும், தென்பகுதியும் வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களாகும். இப் பிரதேசத்து இடப்பெயர்களின் ஆய்வு ஒன்பது இயல்களில் விரிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

210

தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும். கதிர். தணிகாசலம். சென்னை 600095: சரவணா பதிப்பகம், 127 மேற்குத் தெரு, இராகவரெட்டி காலணி, 1வது பதிப்பு, ஜூன் 1992. (சென்னை 600014: மூவேந்தர் அச்சகம், இராயப்பேட்டை)

268 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 18X12.5 சமீ.

இலங்கை ஊர்ப்பெயர்களை ஆராய்ந்து, தக்க விதிமுறைகள் கொண்டு தன் ஆய்வை உறுதிப்படுத்தி, திராவிட இன, மொழியிலிருந்தே இலங்கை நாடும் சிங்கள மொழியும் தோன்றியுள்ளன என்பதை ஆசிரியர் விபரித்துள்ளார். தமிழின் தொன்மை, அதன் பரம்பல், சிங்கள மொழியின் தோற்றம், இடப்பெயர்களிலும் தமிழினது செல்வாக்கு மற்றும் பண்பாடு, கலாச்சாரம், போன்ற துறைகளில் உள்ள ஒற்றுமை ஆகியவை தேவை கருதி இந் நூலில் தரப்பட்டுள்ளன.

395 நாட்டார் கலைகள்

211

தாளக்காவடி. ஏ.ரி.பொன்னுத்துரை. குரும்பசிட்டி: சன்மார்க்க சபை, 1வது பதிப்பு, அக்டோபர் 1988. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

32 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18.5X12.5 சமீ.

கிராமியக் கோலங்களும் கலைத்துவமும் இணைந்த கலைவடிவம் தாளக்காவடியாகும். ஆசிரியர் காலத்துக்குக்காலம் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளையும் ஒரு வானொலி உரையையும் உள்ளடக்கிய சிறுநூல். தாளக்காவடிக்கலை, அண்ணாவிமாரின் கலைப்பங்களிப்பு, உடுக்கின் பெருமை, அரங்குகளும் அவைகளும் ஆகிய விடயங்கள் கட்டுரைகளின் கருப்பொருளாக அமைந்துள்ளன.

212

நாட்டார் இசை: இயல்பும் பயன்பாடும். இளையதம்பி பாலசுந்தரம். யாழ்ப்பாணம்: நாட்டார் வழக்கியல் கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1991. (யாழ்ப்பாணம்: மேர்க்குரி பிரின்டர்ஸ்)

viii,132 பக்கம். விலை: ரூபா 75. அளவு: 21X14 சமீ.

நாட்டார் இசையின் தோற்றம்-வளர்ச்சி, அதன் வகைகளும் பயன்பாடும், தனித்துவமும் இந்நூலில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. நாட்டார் இசை வாய்ப்பாடுகள், அதன் பண்பாட்டில் வளர்ந்த இசைக் கருவிகள் போன்றன பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது

213

நாடகம்: நாட்டாரியற் சிந்தனைகள். சு.வித்தியானந்தன், அ. சண்முகதாஸ் (தொகுப்பாசிரியர்கள்). தெல்லிப்பழை: எஸ்.குணநிதி, தமிழகம் வெளியீடு, வீமன்காமம், 1வது பதிப்பு, தை 1990. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)

vi,112 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12.5 சமீ.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களது நாடகம், தமிழ்க்கூத்து மரபு, பாரம்பரிய இசை போன்றவை தொடர்பான நாட்டாரியல் சிந்தனைகளை உள்ளடக்கிய 10 கட்டுரைகளின் தொகுப்பு.

214

வட இலங்கை நாட்டார் அரங்கு. காரை செ.சுந்தரம்பிள்ளை. சென்னை 26: குமரன் புத்தக இல்லம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (சென்னை 5: தேவா ஓப்செட் அச்சகம்)

403 பக்கம், விளக்கப்படங்களும் புகைப்படங்களும். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X13.5 சமீ.

வட இலங்கை நாட்டார் அரங்கின் பாரம்பரியம் பற்றி இந்நூல் முழுமையாக ஆய்வு செய்கின்றது.

215

வன்னிப்பிராந்தியக் கூத்துக்கள்: பாரம்பரியத் தேடல். அருணா செல்லத்துரை. கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், A15/1/1 Maning Town Housing Complex, Mangala Road, 1வது பதிப்பு, 2000 (கொழும்பு: யுனி ஆர்ட்ஸ்)

xvii,133 பக்கம், விலை: ரூபா 150. அளவு: 22X14.5 சமீ. ISBN 955-96159-3-9

வன்னியின் வரலாறும், வரலாற்றிற்கூடாக அவ் வளநாட்டில் முகிழ்ந்தெழுந்த கலைகளும் சிறப்பாகக் கூத்து, இசை, நாடகம், நவீன நாடகக் கலைகளும் அவற்றின் இன்றைய போக்குகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. தான் தயாரித்த நாடகங்கள் சம்பந்தமாக ஏனையோர் கூறிய தகவல்களையும் ஆசிரியர் இதில் தந்துள்ளார்.

மேலும் பார்க்க: 882, 883

398 கிராமிய இலக்கியங்கள்

216

இலங்கைத் தெனாலிராமன் கதைகள். சந்திரிகா சோமசுந்தரம். சென்னை 600017: அநுராகம், இல.10, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 1988. (சென்னை: 600024: அலைகள் அச்சகம்)

32 பக்கம். விலை: இந்திய ரூபா 2.50. அளவு: 17X12 சமீ.

புத்திக்கூர்மையுள்ள 'அந்தரே' இலங்கையைச் சேர்ந்தவர். இலங்கைத் தெனாலிராமன் என்று ஒப்பிடப்படும் பாத்திரம் இது. அந்தரே பற்றிய கதைகள் சிங்கள மக்களால் இன்றும் நாட்டாரிலக்கியமாக வழங்கி வருகின்றன. இக்கதைகள் நகைச்சுவையாகவும் அர்த்த முள்ளதாகவும் அமைந்து நீதியையும் போதிக்கின்றன. அத்தகைய 22 குட்டிக்கதைகளின் தொகுப்பு இந்நூலாகும்.

217

கண்ணகி அம்மன் கஞ்சிவார்ப்புத் தண்டற் பாட்டு. த.சண்முகசுந்தரம். தெல்லிப்பழை: அருள் வெளியீட்டகம், மாவை. கந்தசாமி கோவிலடி, 1வது பதிப்பு, மார்ச் 1983. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்)

12 பக்கம். விலை: ரூபா 3. அளவு: 18.5X12 சமீ.

மாவிட்டபுரம் வீணியவரை கண்ணகிஅம்மை கஞ்சிவார்ப்புத்தண்டற் பாட்டும் அது பற்றிய அறிமுகக் குறிப்பும்.

218

கனிந்த காதல். ஆ.மு.ஷரிபுத்தீன். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, 1985. (வெள்ளவத்தை: சாமர அச்சகம், 22ஏ, மல்லிகா ஒழுங்கை).

72 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X13 சமீ.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் களவொழுக்கம் குறித்துப் பாடப்பட்டுள்ள கிராமியப் பாடல்களின் தொகுப்பு இதுவாகும். கதவு திற கண்மணியே, கதைத்திருக்க வாங்க மச்சான் என்ற இரண்டு தலைப்புக்களில் முறையே கற்பும், களவும் விளங்க இரு கதைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

219

தாய் தரும் தாலாட்டு. அநு.வை. நாகராஜன். தெல்லிப்பழை: வைரமான் வெளியீடு, மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, மே 1988. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

16 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

அரிய நாட்டாரிலக்கியப் படைப்பான தாலாட்டுப் பாடல் பற்றிய சிறு நூல். (தாலாட்டு=தால்+ஆட்டு. தால்- நாக்கு, ஆட்டு-அடக்குதல், ஆட்டுதல்) தமிழிலும் பிறமொழிகளிலும் வழங்கும் தாலாட்டுக்கள், தாலாட்டின் இலக்கிய நயம் பற்றி விளக்கும் கட்டுரை.

220

தாலாட்டுக்கள். சண்முகம் ஜெயதாசன், சுலோஜனா ஜெயதாசன். மாவிட்டபுரம்: புது வீடு, கருகம்பனை, 1வது பதிப்பு, பெப்ரவரி 1988. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

32 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18.5X12.5

இலங்கைத் தமிழரிடையே வழங்கி வரும் 20 தாலாட்டுப் பாடல்களின் தொகுப்பு.

மேலும் பார்க்க: 415

221

நாட்டார் இலக்கியத்தில் மழை இரங்கிப்பாடல். த.சண்முகசுந்தரம். தெல்லிப்பழை: அருள் வெளியீட்டகம், மாவைக் கந்தசுவாமி கோவிலடி, 1வது பதிப்பு, தை 1984. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்)

24 பக்கம். விலை: ரூபா 8. அளவு: 18.5X12.5 சமீ.

கட்டுவன் வீரபத்திரர் வசந்தன், மாரியம்மன் மழை இரங்கிப்பாடல், மாருதப்புரவல்லிப் பாடல், கொடும்பாவிப்பாட்டு ஆகிய நான்கு வகை மழை இரங்கிப் பாடல்கள் பற்றிய விளக்கத்தை வழங்கும் நூல்.

222

பண்ணைப்பாலக்கும்மி. சிவஸ்ரீ சி.அகிலேஸ்வர சர்மா(மூலம்), வே.இ.பாக்கியநாதன்(பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: வே.இ.பாக்கியநாதன், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஆவணி 1986. (யாழ்ப்பாணம்: காயத்ரி அச்சகம்)

22 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முற்பட்ட இக்கும்மி, அந்நாளில் யாழ்ப்பாணத் தீவுகளில் ஒன்றாகிய மண்டைதீவையும் யாழ்ப்பாண நகரையும் இணைக்கும் பண்ணைப்பாலத்தின் தேவையை வலியுறுத்தி ஆக்கப் பெற்றதாகும்.

223

பாட்டி சொன்ன கதைகள் (உருவகம்). முருகபூபதி. கொழும்பு 13: மல்லிகைப்பந்தல், 201, 1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (சென்னை 26: குமரன் பப்ளிஷர்ஸ், 79, 1வது வீதி, குமரன் காலனி, வடபழநி)

96 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18x12.5 சமீ.

இக்கதைகளில் வரும் மிருகங்களும் பறவைகளும் மற்றும் உயிரினங்களும் மரம்-செடி-கொடிகளும் பேசுகின்றன.தத்தமக்கே யுரிய பண்பைப்போதிக்கின்றன. கதையில் நாம் அன்றாடம் சந்திக் கும் அரசியல், சமூகம், குடும்பம், மனிதர்களை நாம் இங்கு இனம் காண முடிகின்றது.

224

மலைநாட்டு மக்கள் பாடல்கள். சி.வி.வேலுப்பிள்ளை. சென்னை17: கலைஞன் பதிப்பகம், 54, பாண்டிபஜார், 1வது பதிப்பு, 1983. (சென்னை17: தமிழோசை அச்சகம், 84, ஹபிபுள்ளா வீதி)

104 பக்கம். விலை: இந்திய ரூபா 7. அளவு 18X12 சமீ.

மலையகத்தில் வாய்மொழியாக வழங்கிவரும் நாட்டார் பாடல் களின் தொகுப்பு.

225

மலையக வாய்மொழி இலக்கியம். சாரல்நாடன். சென்னை: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 1வது பதிப்பு, ஏப்ரல் 1993. (சென்னை02: சூர்யா அச்சகம்)

88 பக்கம். விலை: இந்திய ரூபா 10. அளவு: 18X12 சமீ.

எழுத்தறிவற்ற பாட்டாளி மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் நாட்டார்பாடல்கள் எல்லா நாடுகளிலும் எல்லா இன மக்களிடை யேயும் இருப்பது போலவே இலங்கை மலையக மக்களிடையேயும் வாய்மொழி இலக்கியமாக இருந்து வருகின்றது. தென்னிந்தியத் தமிழ்மக்களின் வம்சாவளியினர் என்பதால் தென்னிந்திய- தமிழக நாட்டார் பாடல்களையொத்த பல பாடல்கள் இவர் தம்வாய்மொழி வழக்கில் இருந்துவந்துள்ளன. தம் வாழ்க்கைச்சூழல் இயல்புகளுக் கேற்ப அவை திரிபடைந்து மலையக மக்களுக்கேயுரிய தனித் துவமான பாடல்களாக மிளிர்வதைக் காணலாம். மலையக மக் களின் வாய்மொழி இலக்கியம் பற்றிய 12 கட்டுரைகளும் இதை ஆய்வுரீதியாக வெளிக்கொணர்கின்றது.

226

மாருதப்புரவல்லி கப்பற்பாட்டு. த.சண்முகசுந்தரம். தெல்லிப்பழை: அருள் வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1980. (தெல்லிப் பழை: குகன் அச்சகம்)

X,36 பக்கம். விலை: ரூபா 4. அளவு: 18X12.5 சமீ.

மறுமலர்ச்சிப்பாதையில் மக்கள் கலைகள் என்ற தொடரில் முதல் நூலாக வெளிவந்துள்ளது. மக்கள் கலைகளின் மறுமலர்ச்சிக்கான தேவை பற்றிய ஆசிரியரின் கருத்தும் கப்பற்பாட்டும் இதில் இடம் பெற்றுள்ளன.

227

மாவை முருகன் காவடிப்பாட்டு. த.சண்முகசுந்தரம். தெல்லிப் பழை: அருள் வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1981. (தெல்லிப் பழை: குகன் அச்சகம்)

18 பக்கம். விலை: ரூபா 2.50. அளவு: 18.5X12 சமீ.

மறுமலர்ச்சிப்பாதையில் மக்கள் கலைகள் தொடரில் 3வது நூல். காவடிக்கலை பற்றிய தகவல்களும் ஈழத்தில் காவடிப்பாட்டுக்களின் வரலாறும் மாவிட்டபுரம் முருகன் மேற்பாடப்பெற்ற காவடிப் பாட் டும் இடம் பெறுகின்றன.

228

வன்னிவள நாட்டுப்பாடல்கள். செ.மெற்றாஸ் மெயில். ஒட்டு சுட்டான்: முல்லை இலக்கிய வட்டம், மிதிலை. 1வது பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி)

XXXX,132 பக்கம், விளக்கப்படம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 15, நூலகப்பதிப்பு: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

ஈழத்தின் வன்னிப்பகுதியில் வழக்கிலுள்ள நாட்டார்பாடல்களின் தொகுப்பு.

229

விறகு வெட்டி: ஒரு தமிழ் நாடோடிக்கதை. ஜெகதீஸ்வரம் பிள்ளை. லண்டன்: The Refugee Council, 3 Bond way, London SW8 1SJ, 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் அறியமுடியவில்லை)

16 பக்கம், வண்ணப்படங்கள். விலை: ஸ்டேர்லிங் பவுண் 2.70. அளவு: 29.5X21 சமீ.

பிரபல தமிழ் நாடோடிக்கதைகளில் ஒன்றான விறகு வெட்டியின் கதை ஆங்கில மொழிபெயர்ப்புடனும் வண்ணப்படங்களுடனும்

வெளியிடப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக இலங்கையின் வரலாற்றுக் குறிப்பு இறுதி இரு பக்கங்களில் ஆங்கிலத்தில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

230

வெறியாட்டு: பாட்டுக்கூத்து. இ.முருகையன். யாழ்ப்பாணம்: தேசிய கலை இலகுகியப் பேரவை, 1வது பதிப்பு, ஜூலை 1986. (யாழ்ப்பாணம்: யாழ்ப்பாண அச்சகம், 407 ஸ்ரான்லி வீதி)

46 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 20.5X13 சமீ.

"வேலியே பயிரை மேய்வது போல" என்பது காலங்காலமாகத் தமிழ் மக்களிடையே வழங்கி வரும் ஓர் உவமைத்தொடர். இதில் வரும் உவமையை விரிவாக்கி அழுத்தம் தந்து காட்சிப்படுத்துவதே இந்த நாடகம். நமது மக்கள் வாழ்விலே அழியாத வடுக்களையும் தாக்கங்களையும் சேதங்களையும் உண்டு பண்ணி வரும் நிகழ்ச்சிகள் யாவற்றின் கூட்டு மொத்தமே இதன் உள்ளடக்கமாகும்.

- ஆசிரியர் (முன்னுரையில்)

1981-ஆம் ஆண்டு யாழ்ப்பாண நூலகம் பேரினவெறியர்களால் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டது. வேலியே பயிரை மேய்வதாகக் காட்சிப்படுத்தப்பட்டு பாட்டுக்கூத்தாக யாழ்ப்பாணம் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது.

மேலும் பார்க்க: 487, 618

398.1 பழமொழிகளும் விடுகதைகளும்

231

உருமாறும் பழமொழிகள். என்.செல்வராஜா. ஆனைக்கோட்டை: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம், அச்சக விபரம் தரப்படவில்லை).

v,30 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 21X14 சமீ.

பழமொழிகள், மரபுத்தொடர்கள் போன்றவற்றில் காலப்போக்கில் ஓரிரு எழுத்துக்கள் சேர்வதாலோ, அல்லது விடுபடுவதாலோ சொற்களில் இரட்டை அர்த்தம் தொனிப்பதாலோ பழமொழிகளில் திரிபுகள் ஏற்படுகின்றன. காலத்துக்குக்காலம் சமுதாயத்தில் ஏற்படும் கருத்து மாற்றங்களுக்கு ஏற்பவும் பழமொழிகள் உருமாற்றம் பெற்றுள்ளன. இன்று நடைமுறையில் இப்படியாக உருமாற்றம் பெற்ற பழமொழிகள், உவமைத்தொடர்கள் மரபுத்தொடர்கள்

போன்றவற்றைத் தொகுத்து, அவற்றின் மூலக்கருத்துக்களையும் தற்காலக் கருத்துக்களையும் இலக்கிய, நாட்டாரியல் சான்றாதாரங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் நூல்.

232

தொடியும் விடையும்: பாகம் 2. கோப்பாய் சிவம் (இயற்பெயர்: பா. சிவானந்த சர்மா). ஆவரங்கால்: பா.சிவானந்த சர்மா, 1வது பதிப்பு, 1989. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்.)

32 பக்கம். விலை: ரூபா 10. அளவு 17X12சமீ.

ஈழத்துக் கிராமங்களில் நிலவி வரும் பழமையானதும் புதியதுமான விடுகதைகளின் தொகுப்பு. சிறுவர்களுக்கு உகந்தது.

233

மக்கள் வாழ்வில் பழமொழிகள்: பழமொழிக் கட்டுரைகள். க. சத்தியானந்தசிவம் (சச்சி மாஸ்டர்). யாழ்ப்பாணம்: சுகிர்தா பதிப்பகம், 40, ஈச்சமோட்டை வீதி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: அன்னை அச்சகம், குருநகர்)

128 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18X12 சமீ.

தமிழ்ப் பிரதேசங்களில் வழக்கிலுள்ள தமிழ்ப் பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கான விளக்கங்கள் கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளன. மக்களின் மனப்பாங்குகளைப் பொதுவாகவும், யாழ்ப்பாணத்துத் தமிழரின் மனப்பாங்கினைக் குறிப்பாகவும் வெளிப்படுத்தும் சமூக, பண்பாட்டுக் கட்டுரைகள்.

400 மொழியியல்

491.2 சம்ஸ்கிருத மொழி

234

இந்து சமயத்தின் மூலமொழி சம்ஸ்கிருதமா ஆதித் திராவிடமா? ஜே.டி.சேவியர்(மூலம்), ஏ.ஜே.கனகரத்தினா, எம்.சின்னத்துரை (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க சனசமூகநிலையம், பலாலி பருத்தித்துறை வீதிச்சந்தி, 1வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)

26 பக்கம், தகடு 2. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14சமீ.

மதுரையில் தை 1981 இல் நடைபெற்ற 5வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுரையின் தமிழ் வடிவம்.

494.8 தமிழ்மொழி

235

உலகம் பரவிய தமிழின் வேர்: கல். பகுதி 1. கு.அரசேந்திரன். ஐக்கிய இராச்சியம்: இரத்தினம் அறக்கட்டளை, 179, Norval Road, North Wembley, Middlesex, HA0 3SX, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (Chennai: Student Offset Services, T.Nagar)
xx,216 பக்கம். விலை: ஸ்டேர்லிங் பவுண் 5. அளவு: 21x14 சமீ.

தமிழில் உள்ள கல் என்ற வேர்ச்சொல்லைப் பற்றிய விரிவான ஆய்வின் முதற் பகுதி. கல் என்பது பல நூறு தமிழ்ச் சொற்களுக்கும் பிறமொழிகளில் வழங்கும் சில நூறு சொற்களுக்கும் மூலமான ஒரு பழந்தமிழ் மூலச்சொல். இந்நூலில் விரித்து விளக்கப்படுத்தும் சொற்கள் அனைத்துக்கும் இச்சொல் ஒன்றே வேரும் மூலமும் ஆகும் என்பதை ஆசிரியர் தன் விரிவான ஆய்வின் மூலம் நிரூபிக்க முனைகின்றார்.

236

தமிழ் எழுத்தின் வரிவடிவங்கள் - மாற்று நோக்கு. க. சச்சிதானந்தன். யாழ்ப்பாணம்: க.சச்சிதானந்தன். 1வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், கே.கே.எஸ். வீதி)
24 பக்கம், விளக்கப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 25x19 சமீ.

தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்களில் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படக் கூடிய மாற்று அமைப்புக்கள் பற்றிய ஒரு நோக்கு. தை 1981 இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை.

237

தமிழிற் தரிப்புக்குறிகளின் பயன்பாடு. சி.சிவசேகரம். France: EXIL, 27 Rue Jean Moulin, 92400 Courbevoie, 1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (அச்சக விபரம் அறிய முடியவில்லை)
30 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x15 சமீ.

எழுத்தாளரிடையே தரிப்புக்குறிகளின் பிரயோகம் பற்றிய அறியாமை காரணமாக ஏற்படும் தவறுகளை நிவர்த்திக்கும் பொருட்டு அவற்றின் முறையான பயன்பாடு உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

238

தமிழும் உலகமும்: உலகளாவிய தமிழுறவு மாநாட்டு ஆய்வுரைத் தொகுப்பு. வெ.செ.குணரத்தினம் (தொகுப்பாளர்). புதுச்சேரி: 605011: விஜயா பதிப்பகம், 5, 2வது தெரு, வெங்கட்டா நகர், 1வது பதிப்பு, மார்ச் 1998 (சென்னை 600032: R.G.Graphics, பிள்ளையார் கோவில் தெரு, மடுவன்கரை, கிண்டி)
viii,148 பக்கம், புகைப்படம். விலை: இந்திய ரூபா 50. அளவு: 21.5x14 சமீ.

1993ம் ஆண்டு ஆகஸ்ட் 12ம் திகதி முதல் 15ம் திகதி வரை ஜேர்மனியின் புதிய தலைநகர் பேர்லின் மாநகரில் நடந்தேறிய ஐரோப்பாவின் முதலாவது உலகளாவிய தமிழுறவு மாநாட்டு ஆய்வுரைத் தொகுப்பு. பின்னிணைப்புகளாக இணைக்கப்பட்ட 11 ஆவணங்களில், மாநாட்டுக்கு வருகை தந்தோர் விபரம், மாநாடு நிறைவுற உழைத்தவர்களின் விபரம், நிகழ்ச்சி அட்டவணை, செயற்குழு விளக்க அறிக்கை, உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் இர.ந.வீரப்பன் ஆற்றிய உரைச்சுருக்கம், மாநாட்டுக்கான ஜேர்மன் மொழி அழைப்பிதழ், முன்னூறு ஆண்டுக்கால ஜெர்மன்உறவு பற்றி மாநாட்டு அமைப்பாளர் வெ.செ.குணரத்தினம் அவர்களின் உரையின் ஜேர்மன் மொழிவடிவம் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

239

தமிழும் தமிழரும்.வி.சிவசாமி. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தக சாலை, 1வது பதிப்பு, 1998. (சென்னை 5:Page Offset, 6/2 Devarajan Street)
128 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 17x12.5 சமீ

பேராசிரியர் விநாயகமூர்த்தி சிவசாமி அவர்களின் மணிவிழா வெளியீடு. ஒன்பது இயல்களைக் கொண்ட இந்நூலில், சங்ககாலம் தொட்டுக் கம்பதாசன் வரை தமிழகத்திலும், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் வரை இலங்கையிலும் வாழ்ந்த புலவர் பெருமக்கள் பலர் தமிழ் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் - குறிப்பாகத் தமிழ் பற்றிய அடைமொழிகள், உருவகங்கள், உவமைகள் முதலியனவற்றை அடிப்படையாக வைத்துச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. கால முறைப்படி தமிழ்ப்பற்று வளர்ச்சி, அது பற்றிய புதிய நோக்கு, மாற்றங்கள் முதலியன சுருக்கமாக அரசியல், சமய, சமூகப் பின்னணியில் வைத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

240

பாரதியின் மொழிச்சிந்தனைகள்: ஒரு மொழியியல் நோக்கு. எம். ஏ. நு:மான். யாழ்ப்பாணம்: பல்கலைக்கழகக் கலைப்பீட வெளியீடு,

1வது பதிப்பு, மே 1984. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)
(8).106 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 24X18 சமீ.

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் மொழி பற்றிய கருத்துக்கள் தொகுத்து நோக்கப்பட்டுள்ளது. அவை நவீன மொழியியல் கண்ணோட்டத்தில் ஓரளவு விரிவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பார்க்க: 758

494.8(1) தமிழ் இலக்கணம்

241
அடிப்படைத்தமிழிலக்கணம். எம்.ஏ.நு:மான். கல்முனை: வாசகர் சங்கம், 2வது பதிப்பு, ஜூலை 2000. 1வதுபதிப்பு, ஆகஸ்ட் 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்)
214 பக்கம். விலை: ரூபா 225. அளவு: 21.5x14 சமீ.

தமிழ்மொழியை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படும் வகையில் விரிவாக எழுதப்பட்ட இலக்கண ஆய்வுநூல்.

242
இலக்கண விதி மூலங்களும் விதிகளும். க.வீரகத்தி. சென்னை 108: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1984. (சென்னை 108: அப்பா அச்சகம்)
92 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

தமிழ் இலக்கணம் பற்றிய எட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு.

243
இலக்கணத் தெளிவு: உயர்தர வகுப்புகளுக்குரியது. க.சொக்கலிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235 காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, 1989. 1வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுபபிரமணிய அச்சகம், 63 பீ.ஏ.தம்பி வீதி)
viii,166 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 21X13.5 சமீ.

க.பொ.த.(உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கான விடயங்களை உள்ளடக்கிய இந்நூல் சாதாரணதர மாணவர்களின் அடிப்

படை இலக்கணத் தேவைகளையும் நிறைவு செய்வதோடு, பொதுக் கலைத்தகுதி காண்தேர்வு (GAQ) நாடிகளுக்கு உசாத்துணை நூலாகவும் உதவும்.

244
இலக்கணம் கற்போம். விக்னா பாக்கியநாதன். ஜேர்மனி: கலை விளக்கு வெளியீட்டகம், Droote 13, 4600 Dortmund.14, 1வதுபதிப்பு, 1992. (Germany: VIDI, Druckwerktatt, Offset Cruck, Am Zippen. I,4600, Dortmund 1)
(10),60 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

ஜேர்மனியில் இருந்து வெளிவரும் கலைவிளக்கு என்ற சஞ்சிகையில் வெளிவந்த இலக்கணம் கற்போம் என்ற தலைப்பிலான கட்டுரைகளின் தொகுப்பு.

245
இலக்கணமும் சமூக உறவுகளும். கா.சிவத்தம்பி. சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 1வது பதிப்பு, 1982. (சென்னை 600002: மக்கள் அச்சகம்)
68 பக்கம். விலை: இந்திய ரூபா 4. அளவு: 18X12.5 சமீ.

தமிழ்ச் சொல்லிலக்கணக்கூறுகள் பற்றிய ஒரு மார்க்சிய நோக்கு.

246
தமிழ்மொழி இலக்கண இயல்புகள். அ.சண்முகதாஸ். யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், 1வது பதிப்பு. மார்ச் 1982. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)
xvi,248 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 25. நூலகப்பதிப்பு: ரூபா 30. அளவு: 18X12 சமீ.

தமிழ் இலக்கணம் பற்றி அறிய வேண்டியவற்றை மரபுவழி நின்று மொழியியல் நோக்கில் ஆராயப்பட்டுள்ளது. இதன் மறுபதிப்பு 1989 இல் வெளியிடப்பெற்றது

247
நன்னூல் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும். F.X.C. நடராசா. காரைநகர் (யாழ் மாவட்டம்): தமிழ் வளர்ச்சிக் கழகம், 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).
24 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

விசாகப்பெருமானைப் பற்றி எழுதிய காண்டிகைஉரையைத்

தழுவியும் கூட்டியும் திருத்தியும் புதுக்கியுமே நன்னூலுக்கு நாவலர் உரை எழுதினார் என்பது ஒரு சாராரின் கொள்கை. அக் கொள்கையைத் தக்க சான்றுகள் காட்டி மறுத்து இந்நூல் எழுதப் பட்டுள்ளது.

494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்

248
குறுகிய காலத்தில் தமிழை எப்படிக் கற்பிக்கலாம். (ஆய்வுக் கட்டுரைகள்). விக்னா பாக்கியநாதன். மேற்கு ஜேர்மனி: கலை விளக்கு வெளியீடு,Droote 13,4600 Dortmund 14, 1வது பதிப்பு, ஜூன் 1997. (சென்னை 24: சதுர்வேந்தன் அச்சகம், 3, சிவன் கோவில் தெற்குத்தெரு, கோடம்பாக்கம்)
38 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ

கனடாவில் இடம்பெற்ற உலகத்தமிழர் பண்பாட்டு இயக்க மகா நாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரையின் நூலாக்கம். புலம் பெயர் நாடுகளில் தமிழ்ச்சிறார்களுக்கு தாய்மொழியைப் பதிய வைத்து ஆர்வமூட்டவும், தமிழ் தெரிந்தவர்களாகவும் வாசிப்பறிவு பெற்றவர்களாகவும் உருவாக்கும் நோக்கத்துடனும் எழுந்த நூல்.

249
செயல்நூல் ஆண்டு 1: தமிழ்மொழி. நகுலா சிவநாதன். ஜேர்மனி: Jakob. Kaiser Str 5, 59379, Selm, 1வது பதிப்பு, 1995. (ஜேர்மனி: Caritas, Dannecker Str 94, 72458, Albstadt)
32 பக்கம், சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 30X21 சமீ.

இலங்கைப் பாடத்திட்டத்துக்கு அமைய 1988 இல் கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீடான *தமிழ் ஆண்டு 1* என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றது.

250
செயல்நூல் ஆண்டு 2: தமிழ்மொழி. நகுலா சிவநாதன். ஜேர்மனி: Ludinghausener Str.12A, 59379, Selm, 1வது பதிப்பு, ஏப்ரல் 1996. (ஜேர்மனி, அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
38 பக்கம், சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 30X21 சமீ.

இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய 1988 இல் கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீடான *தமிழ் ஆண்டு 2* என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றது.

251
செயல்நூல் ஆண்டு 3: தமிழ்மொழி. நகுலா சிவநாதன். ஜேர்மனி: Ludinghausener Str.12A, 59379, Selm, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. (ஜேர்மனி, Caritas verband, Dormund e.v.)
27 பக்கம், சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 30X21 சமீ.

இலங்கைப்பாடத்திட்டத்திற்கு அமைய 1988 இல் கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீடான *தமிழ் ஆண்டு 2* என்ற நூலை அடிப் படையாகக் கொண்டு எழுதப்பெற்றது. புலம்பெயர்நாடுகளில் வாழும் சிறார்களின் தமிழறிவை வளர்க்கவும் அவர்களின் உளப்பாங்கைக் கருத்திற்கொண்டும் ஆர்வத்துடன் செயற்படக்கூடிய முறையில் ஆக்கப் பெற்ற நூல்வரிசையில் ஆசிரியரின் மூன்றாவது நூல்.

252
தமிழ் ஆண்டு 3 செயல்நூல். விக்னா பாக்கியநாதன். ஜேர்மனி: கலைவிளக்கு வெளியீடு, Droote 13, 44328, Dortmund, 1வது பதிப்பு, 1994. (Germany: Caritas of Dortmund)
66 பக்கம், விளக்கப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய 1986 இல் கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீடான *தமிழ் ஆண்டு 3* என்ற நூலை அடிப் படையாகக் கொண்டு எழுதப்பெற்றது.

253
தமிழ்ச்சுவடி -1. மங்கையர்க்கரசி வில்வராசா, மு.அருளம்பலம், சுமத்திரி பிரான்சிஸ், கி.பி.அரவிந்தன். பிரான்ஸ்: தமிழ்ச்சோலை, 22 Rue Perdonnet, 75010, பாரிஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (பாரிஸ்: தமிழ் அச்சகம்)
(4),58 பக்கம், சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 25x19 சமீ.

ஐரோப்பிய புலத்தில் வளரும் ஆறு வயதுக்குட்பட்ட தமிழ்ச்சிறார் களுக்கான தமிழ்மொழிப்பாடநூல். முதல் தடவையாகத் தமிழைக் கற்போருக்கும் ஏற்புடையது.

254
பாலர் கல்வி. செல்வநாயகி மகாலிங்கம். லண்டன்: லண்டன் தமிழ்ச்சங்கம், 1வது பதிப்பு, நவம்பர் 1999. (லண்டன்: ஜே.ஆர். அச்சகம்)

32 பக்கம். விலை: இலவசம். அளவு: 30X21 சமீ.

அமரர் திரு. முத்துலிங்கம் தயாபரன் அவர்களின் நினைவாக 4.11.1999 அன்று வெளியிடப்பெற்ற நினைவு மலர். பாலர்களுக்குத் தமிழ் பயிற்றும் பாடநூலாக மலர்ந்துள்ளது.

255

மாணவர் கட்டுரைகள். விக்னா பாக்கியநாதன். ஜேர்மனி: கலைவிளக்கு வெளியீடு, Droote 13,44328 Dortmund, 1வதுபதிப்பு, 1995. (Gernamy: Caritas, Dortmund)

76 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

ஜேர்மனியில் இயங்கும் தமிழ்க் கல்வி நிலையங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு கட்டுரைஅறிவை வளர்க்கும் பொருட்டும், போட்டிகளில் பங்குபற்றும் பொருட்டும் தமிழ்மொழிப் பரீட்சைக்குத் தம்மைத் தயார்படுத்திச் செல்வதற்கும் ஏற்றவகையில் தயாரிக்கப் பட்ட 25 கட்டுரைகள் கொண்டது.

500 தூய விஞ்ஞானம்

256

விந்தைகள் செய்த விஞ்ஞானிகள். இர.சந்திரசேகரன். பருத்தித்துறை: விண்மதி வெளியீடு, 2வது பதிப்பு, புரட்டாதி 1989. 1வது பதிப்பு, புரட்டாதி 1974. (அல்வாய்: அபிராமி அச்சகம்)

(12),82 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18X12 சமீ.

விஞ்ஞான அறிவு நூல். கலிலியோ கலிலி, ஐசாக் நியுட்டன், ஜோசப் பிறீஸ்ற்லி, ஹம்பிறி டேவி, ஜோர்ஜ் ஸ்டீபன்சன்,மைக்கல் பரடே, சார்ள்ஸ் டார்வின், தோமஸ் அல்வா எடிசன், கிரஹம்பெல், ஜோர்ஜ் வாஷிங்டன் காவர், ஐன்ஸ்டின், சி.வி.ராமன் ஆகிய பன்னிரு விஞ்ஞான மேதைகளின் வாழ்க்கைச் சாரம்.

510 கணிதம்

257

இணைந்த உயர்கணிதம்: பிரயோக கணிதக் கூறு: நிகழ் தகவும் புள்ளிவிபரவியலும் (Probability and Statistics) V.T. மதியழகன். கொழும்பு 11: Bright Book Centre, Colombo Central Super Market Complex, 1வது பதிப்பு, நவம்பர் 1998. (கொழும்பு 13: லட்சுமி அச்சகம், 195 ஆட்டுப்பட்டித் தெரு)

vi,250 பக்கம். விலை: ரூபா 125. அளவு: 21X14 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்குரியது. 333 வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் கொண்டது.

258

இணைந்த கணிதம்(தூயகணிதக் கூறு) ஆள்கூற்றுக் கேத்திரகணிதம்.(Co-ordinate Geometry) V.T.மதியழகன். கொழும்பு 6: Admiral Graphics, 403 1/1 Galle Road, 1வது பதிப்பு, மார்ச் 1999. (கொழும்பு 6: அட்மிரல் கிரப்பிக்ஸ்)

vii,269 பக்கம். விலை: ரூபா 200. அளவு: 21X14 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்குரியது.

259

கணிதம். வி.ரி.மதியழகன். கொழும்பு 12: லங்கா புத்தகநிலையம், டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1998. (கொழும்பு 6: Admiral Graphiics, 403 1/1 Galle Road)

iv,177 பக்கம். விலை: ரூபா 195. அளவு: 28X21 சமீ.

10 மாதிரி வினாக்களும் முழுமையான விடைகளும் கொண்ட தொகுதி. க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கு ஏற்றது.

260

தூயகணிதம்: வரிசை மாற்றமும் சேர்மானமும். (Permutation and Combination). V.T.மதியழகன். கொழும்பு 11: Bright Book Centre, Colombo Central Super Market Complex, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (கொழும்பு 13: லட்சுமி அச்சகம், 195 ஆட்டுப்பட்டித் தெரு)

42 பக்கம். விலை: ரூபா 45. அளவு: 21X14 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்குரியது. 125 வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் கொண்டது.

527 விண்வெளிப்பயணம்

261

விண்வெளியில் விஞ்ஞானிகள்: பூர்வீகமும் முன்னோடிகளும். க.இந்திரகுமார்(மூலம்). லே.தமிழ்வாணன் (பதிப்பாசிரியர்). சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.எண். 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 1996. (சென்னை 14: ஜோதி ஆப்செட்,159/1, வி.எம்.தெரு)

258 பக்கம், விளக்கப்படங்கள். விலை: இந்திய ரூபா 100. அளவு: 24X18 சமீ.

விண்வெளிப்பயணங்களும் அது தொடர்பான முன்னோடி நடவடிக்கைகளும் பற்றிய சுவையான விஞ்ஞானக்குறிப்புகள். விளக்கப் படங்களுடன் இலகு தமிழில் வெளிவந்தது.

600 பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்.

610 மருத்துவம்

612 உடற்கூற்றுத் தொழிலியல்

262

பிறப்புரிமை நெறியாள்கை. ஐயாத்துரை கருணானந்தன். யாழ்ப்பாணம்: EASOSEAC, 33 பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: உமாஅச்சகம், கனகசபை அவென்யு, நீராவியடி.)
40 பக்கம், விளக்கப்படம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22x14 சமீ.

பிறப்புரிமை நெறியாள்கை (Genetic Engineering) எவ்வாறு தனிப் பட்டவரையும் நாட்டின் குடிகளையும் உருவாக்க வழிகாட்டும் என்று விளக்கும் நூல். நற்பரம்பரையியல், நற்சூழலியல், பரம் பரையலகில் பிழைதிருத்தல், சூழலொழுங்காக்கல் ஆகிய 4 அத் தியாயங்களில் இவை விளக்கப்பட்டுள்ளன.

613 பொது உடல் நலவியல்

263

போதையைத் தவிருங்கள். எம்.கே.முருகானந்தன். பருத்தித் துறை: எம்.கே.முருகானந்தன், பிரதான வீதி, 1வது பதிப்பு, செப் டெம்பர் 1990. (அல்வாய்: அபிராமி அச்சகம்)
20 பக்கம். விலை: ரூபா 6. அளவு: 14X10 சமீ.

போதைப்பொருட்பாவனையினால் விளையும் தீங்குகளும் போதைப் பொருட் பாவனையாளரை அடையாளம் காணலும், அவர்களால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகள், போதையிலிருந்து மீளல் போன்ற அம்சங்களை விளக்கும் அறிவு நூல்.

614 பொதுச் சுகாதாரம்

264

ஆரம்ப சுகாதார சேவையாளர்கட்கு ஒரு வழிகாட்டி. த.இராமதாஸ். யாழ்ப்பாணம்: ஆரம்ப சுகாதார ஆராய்ச்சிப்பிரிவு, போதனா வைத்தியசாலை, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்)
viii,102 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

நாம் எமது முயற்சியால் அநேகமான நோய்களைக் கட்டுப்படுத் தலாம். இதற்கான அடிப்படை முறைகளே ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைகளாகும். இந்நூலில், குழந்தைகளையும் தாயையும் மனதில் இருத்தி நோய்களைப் பற்றிய விளக்கங்களும் அவற்றைப் பராமரிக்கும் முறைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. எப்படிப்பட்ட நோயாளரை சுகாதார நிலையத்துக்கு அல்லது மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

265

குடும்ப முதலுதவி. க.சுகுமார். கரவெட்டி: கட்டைவேலி நெல் லியடி ப.நோ.கூ.சங்கம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஈகள் பிரிண்டிங் வேர்க்ஸ், 161, சிவன் பண்ணை வீதி)
(10),178 பக்கம், விளக்கப்படம். விலை: ரூபா 24.50. அளவு: 21X14 சமீ

மேலைத்தேய நாடுகளுடன் ஒப்பிடும் போது எமது நாட்டில் முக்கியத் துவம் பெறும் விடயங்களான பாம்புக்கடி, வயிற்றோட்டம், போன்றவை பற்றியும் ஏனைய முதலுதவிச்சிகிச்சைகள் பற்றியும் விரிவாக எழுதப் பட்டுள்ளது. பொதுவான முதலுதவி சிகிச்சை முறைகளும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

266

முதல் உதவி. செல்வி பேர்ட்டன் றீட்டா (தொகுப்பாளர்). யாழ்ப் பாணம்: மனித முன்னேற்ற நிலையம், 1வது பதிப்பு, 1985. (யாழ்ப் பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)
(6),38 பக்கம், விளக்கப்படங்கள். விலை: குறிக்கப்படவில்லை. அளவு: 24X18 சமீ.

முதலுதவிச் சிகிச்சை முறைகளுக்கான கைநூல்.

267

முதல் உதவி. ந.சிவராஜா. ஆனைக்கோட்டை: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, 1985. (யாழ்ப்பாணம்: ஆரெஸ் அச்சகம்)

viii,104 பக்கம். விளக்கப்படங்கள். விலை: ரூபா 25. அளவு: 21X14 சமீ.

முதல் உதவி செய்வதற்கு வேண்டிய அடிப்படை அறிவை நூல்கள் தரமுடியும். ஆனால் ஆற்றலை எந்த நூலும் ஊட்ட முடியாது. அதை சாதனாமுறையில் பயிலவேண்டும். அப்படிப்பயில்வதற்கு முன்னும் பயின்ற பின் அதி அவசியமான மருத்துவ அறிவை ஞாபகத்தில் வைப்பதற்குச் சுருக்கமான ஒரு நூல் அவசியம். அந்தத் தேவையை இந்த நூல் திறமையுடன் பூர்த்தி செய்கின்றது.

-பேராசிரியர் சிவஞானசுந்தரம் (வாழ்த்துரையில்)

616 நோய்கள்

268

எயிட்ஸ். எம்.கே.முருகானந்தன். பருத்தித்துறை: யதார்த்தா, உதயன் புத்தகசாலை, 2வது பதிப்பு, 1990. 1வது பதிப்பு, தை 1989 (நெல்லியடி: கலாலயா)

(6),40 பக்கம், விளக்கப்படம். விலை: ரூபா 15. அளவு 18X12 சமீ.

எயிட்ஸ் நோய் தொடர்பான அடிப்படை மருத்துவச் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் சுகாதாரக் கைநூல்.

618 பெண் நோயியல், மகப்பேற்று மருத்துவம்

269

தாயாகப் போகும் உங்களுக்கு. எம்.கே.முருகானந்தன். பருத்தித்துறை: யதார்த்தா, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேஷன்ஸ்)

108 பக்கம், விளக்கப்படம், அட்டவணை. விலை: சாதாரண பதிப்பு: ரூபா 25, விஷேட பதிப்பு: ரூபா 30. அளவு: 21X14 சமீ.

கர்ப்பம், தாய்மை, ஆரோக்கியம், உடல் வனப்பு, பிரசவம், பிறந்த குழந்தையின் பராமரிப்பு ஆகிய விடயங்கள் மருத்துவ விளக்கங்களுடன் தரப்பட்டுள்ளன. எளிய தமிழில் விடயங்களும் கருத்துக்களும் படவிளக்கங்களுடன் தெளிவாகக் காணப்படுகின்றன.

619 கீழைத்தேய மருத்துவம்

619.(1) சித்த மருத்துவம்

270

மூலதத்துவம்: வினாவிடை. உள்ளகப்பயிற்சி மருத்துவர்கள் கைதடி: சித்த மருத்துவத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1989. (இணுவில்: துர்க்கா அச்சகம்)

10 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20X14 சமீ.

சித்த மருத்துவ அடிப்படைத் தத்துவம் பற்றிய வினாவிடை. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் தருக்க சங்கிரகம், கலாநிதி ஸ்ரீ அருணாசலம் அவர்களது பதார்த்தவிஞ்ஞான விரிவுரைக்குறிப்புகள் ஆகியனவற்றின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது.

மேலும் பார்க்க: 890

640 இல்லப் பொருளியல், குடும்பக்கலை

271

அழகே அமுதே: மங்கையர்க்கான அழகுக்குறிப்புகள். ராஜி(தொகுப்பாளர்). யாழ்ப்பாணம்: ஷஜா வெளியீடு, 43, பழைய சந்தை, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம்).

36 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 21X14 சமீ.

பெண்களுக்கான அழகுக்குறிப்புக்கள் அடங்கிய கைநூல். அழகும் இளமையும் பெற இலகுவான வழிகள், கூந்தல், முகம், கண்கள், பற்கள், கைவிரல், நகங்கள், ஆகியவற்றைப் பாதுகாக்க ஏற்ற சுகாதாரவிதிமுறைகள், சில கைவைத்தியங்கள், உடற்பயிற்சி, அலங்காரம் செய்கையில் கவனிக்க வேண்டியவை போன்ற அழகுக் குறிப்புகள் 13 தலைப்புக்களின் கீழ் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

மேலும் பார்க்க: 041

642 உணவும் பரிமாறலும்

272

சிறீலங்கா தாவரபோசன சமையல். புஷ்பாஞ்சலி முருகேச பிள்ளை. கொழும்பு 13: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340 செட்டியார் தெரு, 5வது பதிப்பு, 2000. 1வது பதிப்பு 1971. (கொழும்பு: சக்தி என்ர்பிரைசஸ்)

xvi,559 பக்கம். விலை: ரூபா 790. அளவு: 22x14.5 சமீ. ISBN 955-9409-02-6.

தனித் தாவர போசனம் உண்போருக்கு மட்டுமல்லாது, ஏனையோருக்கும், புதிதாகச் சமையல் செய்யத் தொடங்குவோருக்கும், மனையியல் கற்கும் மாணவர்களுக்கும் ஏற்றவகையில் தயாரிக்கப் பெற்றது.

273

சுவையான இலங்கைச் சமையல். பத்மினி சற்குணராஜா. சென்னை 600017: பார்வதி கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், 3வது பதிப்பு, மே 2001. 1வது பதிப்பு, ஏப்ரல் 1996. (சென்னை 34: கியுபிகோ பிரஸ்)

160 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 18x12.5 சமீ.

இலங்கையரின் சமையற்பாகங்களில் தேர்ந்தெடுக்கப்பெற்ற குறிப்புகள், அனுபவ வாயிலாக, முறைப்படி வகுக்கப்பெற்று இந்நூலில் தரப்பட்டுள்ளது

274

யாழ்ப்பாணத்துச் சமையல்: சைவ அசைவ உணவு வகைகள். லக்சுமி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை: M.K.என்டர்பிரைஸ்)

88 பக்கம். விலை: இந்திய ரூபா 17. அளவு: 18x12.5 சமீ

96 வகையான சைவ அசைவ உணவு வகைகள் பற்றிய சமையல் குறிப்புகள். ஆசிரியரின் முன்னுரையும் வித்துவான் க.ந. வேலன் அவர்களின் ஆய்வுரையும் நூலின் சிறப்பம்சமாகும். யாழ்ப்பாணத்தவரின் பாரம்பரிய உணவு வழக்கங்களின் வலிமையையும் தாவர உணவு வகைகளின் பெருமையையும் இலக்கிய நயத்தோடு இவ்வுரைகளினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

649 குழந்தை பராமரிப்பு

275

சிறுவர் வளர்ப்பில் சிறப்பான வழிமுறைகள். நகுலா சிவநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை: M.K.என்டர்பிரைஸ்)

90 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 18x12.5 சமீ

புலம்பெயர்ந்த நாட்டுச் சூழலில் தமிழ்ச்சிறார்களை வளர்ப்பது பற்றிய தான ஆசிரியரின் வானொலி உரைகளின் தொகுப்பு.

மேலும் பார்க்க: 029

650 முகாமைத்துவம்

657 கணக்கியல்

276

கணக்கியல் கொள்கைகளும் கணக்கீட்டு நியமங்களும். பா.பாலச்சந்திரன். யாழ்ப்பாணம்: கணக்கியற்கற்கை நிறுவன வெளியீடு, 1வது பதிப்பு,1990. (யாழ்ப்பாணம்: உமாஅச்சகம், நல்லூர்)

166 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20x14 சமீ.

கணக்கியலை ஒரு உயர்தர வகுப்புப்பாடமாகத் தமிழ்மொழி மூலம் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய நூல். கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான விளக்கங்கள் கொண்டது.

277

கம்பனிக் கணக்குகள். க.தங்கராஜா. யாழ்ப்பாணம்: 50/5 சங்கிலியன் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, மே 1990. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், 340 காங்கேசன்துறை வீதி)

viii,108 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14 சமீ.

கம்பனி தொடர்பான விளக்கங்கள், பங்குகள் வழங்கல், தொகுதிக் கடன்கள் வழங்கல், மீட்டல், உபகாரப்பங்கு வழங்கல், உரித்து வழங்கல், முன்னுரிமைப்பங்கு மீட்டல், மூலதனக்குறைப்பு, வியாபாரக் கொள்வனவு, முடிவுக்கணக்குகள் என எட்டு இயல்களில் கம்பனிக் கணக்கு முறைகள் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

278

நியமக்கிரயவியல். பா.பாலச்சந்திரன். யாழ்ப்பாணம்: முகாமை கணக்கியல் நிறுவன வெளியீடு, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: முரசொலி அச்சகம், 62 ஏ, ஸ்டான்லி வீதி)

96 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20.5x14 சமீ.

பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கணக்கியல் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஏற்ற கிரயக் கணக்கியல் (Cost Accountancy) நூல்.

700 கலைகள், நுண்கலைகள்

750 ஓவியக்கலை

279

இருபதாம் நூற்றாண்டுக்கான ஓவியக்கொள்கைகள். சோ.கிருஷ்ணராஜா. சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/1 தாயார் சாகிப் 2வது சந்து. 1வது பதிப்பு, ஜூன் 1994. (சென்னை: சூர்யாஅச்சகம்)
80 பக்கம், ஓவியம், விலை: இந்திய ரூபா 12. அளவு: 16X10.5சமீ.

இருபதாம் நூற்றாண்டின் பிரதான ஓவியக்கூடங்களின் தத்துவார்த்த நிலைப்பாடுகள் இந் நூலில் விளக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு பல்வேறு ஓவியக் கூடங்களின் கொள்கைகளை அறிமுகம் செய்து வைக்க இந்நூல் பெரிதும் உதவும்.

280

சிரித்திரன் சித்திரக்கொத்து. எஸ்.சிவஞானசுந்தரம் (சுந்தர்). யாழ்ப்பாணம்: சிரித்திரன் வெளியீடு, 1வது பதிப்பு, ஆவணி 1989. (யாழ்ப்பாணம்: விஜயா அச்சகம்)
(6),128 பக்கம், கார்ட்டூன் வரைபடங்கள். விலை: விஷேட பதிப்பு: ரூபா 75, சாதாரணபதிப்பு: ரூபா 45. அளவு: 24X18.5 சமீ.

சிரித்திரன் சஞ்சிகையின் சுவையான கார்ட்டூன் சித்திரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவை. தட்டுப்பாட்டுக்காலச் சித்திரங்கள், அரசியல் கருத்தோவியங்கள், சித்திரகானம், போன்ற சுந்தரின் அழியாப்புகழ் பெற்ற கார்ட்டூன்களின் தொகுப்பு.

மேலும் பார்க்க: 892

281

தேடலும் படைப்புலகமும். அ.யேசுராசா, இ.பத்மநாப ஐயர், க.சுகுமார் (தொகுப்பாளர்கள்). யாழ்ப்பாணம்: தமிழியல்,36, கலட்டி அம்மன் வீதி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: நியுஈரா பப்ளிக் கேஷன்ஸ்)
136 பக்கம், தகடுகள், வண்ணப்படங்கள். விலை: ரூபா 100. அளவு: 25x19 சமீ.

ஓவியர் மாற்கு சிறப்புமலராக வெளிவந்தது. மாற்கு மாஸ்டர் என்று பரவலாக அழைக்கப்பட்ட ஓவியர் மாற்குவின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள், செவ்விகள் முதற்பாகத்திலும், ஓவியக் கலை பற்றிய பல்வேறு கலைஞர்களினதும் கருத்துத்தொகுப்பு இரண்டாம்

பாகத்திலும் காணப்படுகின்றன. ஓவியர் மாற்குவின் ஓவியங்கள் வண்ண, கருப்பு வெள்ளைப்பிரதிகள் ஆங்காங்கே தகடுகளாக இணைக்கப்பட்டுள்ளன. நவீன ஓவியக்கலை பற்றிய பரந்த அறிவினைத் தரக் கூடிய ஒரு நூல்.

மேலும் பார்க்க: 966

750.(1) ஒப்பனைக்கலை

282

ஈழத்தில் ஒப்பனைக்கலை. இ.பாலசுந்தரம். சுன்னாகம்: மகவம் கலை இலக்கிய நிறுவனம், ஊரெழு, 1வது பதிப்பு, ஜூன் 1990. (யாழ்ப்பாணம்: மேர்க்குரி அச்சகம்)
30 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12 சமீ.

யாழ்ப்பாணத்து ஒப்பனைக்கலைஞர் சாமுவேல் பெஞ்சமீன் அவர்களின் பாராட்டு விழாவின் சிறப்பம்சமாக வெளியிடப்பட்ட கட்டுரை நூல்.

780 இசைக்கலை

283

இசையும் நடனமும். சபா.ஜெயராசா. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340 செட்டியார் தெரு. 1வது பதிப்பு, 1998. (சென்னை 14: Chitra Printography)
70 பக்கம். விலை: இந்திய ரூபா 15. அளவு: 17x12 சமீ.

சமூகவியற் கண்ணோட்டத்திலும் உளவியற் பின்புலத்திலும் இசையையும் நடனத்தையும் ஆராய்ந்துள்ளார். இசை உணர்வு, தொழிற்பாடு, கற்பனை இசையாக்கம் எனப்பிரித்து அழகியல் சார்ந்து இசையை வரலாற்று நோக்கிலும் ஆராய்ந்துள்ளார். நடனத்தில் மந்திரம், சடங்கு, மதவழியான கருத்தியல் பண்புகளை இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

284

கீதாஞ்சலி: கிறிஸ்தவ தமிழ் துதிப்பாடல்கள். பரமேஸ்வரி விஜயரட்ணம். யாழ்ப்பாணம்: வட இலங்கை சங்கீதசபை, 1வது பதிப்பு, 1998. (Colombo: Unie Arts pvt Ltd)
79 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு 22X14.5 சமீ.

வட இலங்கை சங்கீத சபை (North Ceylon Oriental Music Society)

யின் வெளியீடாக வெளிவந்த இசை, ஸ்வர தாள அமைப்புடனான கிறிஸ்தவ தமிழ்த் துதிப்பாடல்களின் தொகுப்பு.

285

நற்சிந்தனைக் கீர்த்தனைகள். சிவயோகசுவாமிகள். யாழ்ப் பாணம்: சிவதொண்டன் நிலையம், 434 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)
136 பக்கம், புகைப்படம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 12.50, நூலகப் பதிப்பு: ரூபா 15. அளவு: 19X13 சமீ.

சிவயோக சுவாமிகளின் 35 கீர்த்தனைகள் சென்னை, மாம்பலம் ஸ்ரீ ஓம்ஆனந்தாச்சிரமம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த தீர்த்த சுவாமிகள் அவர் கள் இயற்றியுதவிய சுர தாளக் குறிப்புகளுடன் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

286

மிருதங்க சங்கீத சாஸ்திரம். அ.நா.சோமாஸ்கநத சரமா. மருதனார்மடம்: இராமநாதன் நுண்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜூலை 1989. (மட்டுவில்: திருக்கணித அச்சகம்)
xiv,188பக்கம், தகடுகள். விலை: ரூபா 45. அளவு: 17.5X12.5 சமீ.

மிருதங்கக்கலையின் வரலாறு, இன்றைய அபிவிருத்தி நிலை ஆகியன விளக்கப்பட்டுள்ளன. தாளம் சம்பந்தமான விடயங்கள் அனைத்தையும் ஒருங்கே தொகுத்து, சங்கீதத்தில் லயத்தின் முக் கியத்துவம் என்ன என்பதையும் லயவாத்தியங்களின் பங்கு என்ன என்பதையும் தெளிவாக விளக்கியுள்ளார்.

287

வட இலங்கை சங்கீத சபை பொன்விழா மலர். மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: வட இலங்கை சங்கீத சபை, 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).
(38),80 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 24X18 சமீ.

ஈழத்து இசைக்கலைஞர் பற்றிய குறிப்புகளும், இசையின் வரலாறு, தமிழ்ப்பணணிசை, சங்கீத மும்மணிகள், இசை கற்பிக்கும் முறை, ஸ்ருதிகளும் அவற்றின் உபயோகமும், இசையின் தத் துவம் ஆகிய விடயங்கள் தொடர்பான கட்டுரைகளும் அடங்கியுள் ளன.

மேலும் பார்க்க: 129

790 நிகழ் கலைகளும் பொழுதுபோக்குக் கலைகளும்

791 நாட்டியக்கலை

288

பரதக்கலை. வி.சிவசாமி. யாழ்ப்பாணம்: வி.சிவசாமி, சம்ஸ்கிரு தத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேஷன்ஸ்).
146 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 30, விசேட பதிப்பு: ரூபா 50. அளவு: 20.5x14 சமீ.

பரதக்கலை பற்றிய 15 கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. நடராஜத் திருவுருவம், தமிழகத்தில் பல்வேறு காலங்களில் பரதக் கலை வளர்ச்சி, இலங்கையில் பரதக்கலை, சில நடன ஆசான்கள், வட மொழியில் உள்ள பரதசாஸ்திர நூல்கள் முதலியன அவற்றுள் குறிப்பிடத்தக்க சில கட்டுரைகளாகும்.

மேலும் பார்க்க: 283

792 அரங்கியல், நாடகக்கலை

289

அரங்கின் பரிமாணங்கள்: நாடகக் கட்டுரைத் தொகுப்பு. தெ.மதுசூதனன், ச.ஜீவாகரன். இராஜகிரிய: விபவி-மாற்றுக் கலாச்சார மையம், 51/7 இராஜகிரிய வீதி. 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (அச்சக விபரம் அறியமுடியவில்லை)
(4),169 பக்கம். விலை: ரூபா 150. அளவு: 20.5x14.5 சமீ.

அரங்கு குறித்த அறிவார்ந்த சிந்தனைப்பாங்கில் சிரத்தையையும் தேடலையும் எம்மிடையே வளர்த்தெடுக்கும் நோக்கில் தொகுக்கப் பெற்றுள்ளது.

290

ஈழத்தில் தமிழ் நாடகம். அந்தனி ஜீவா. தமிழ்நாடு: அகரம் வெளியீடு, சிவகங்கை, 1வது பதிப்பு, 1981. (சிவகங்கை: அகரம்).
42 பக்கம். விலை: இந்திய ரூபா 4. அளவு: 18.5X12 சமீ.

உலக நாடகப் பின்னணியில் தமிழ் நாடகத்தின் படிமுறை வளர்ச்சி ஆராயப்பெற்றுள்ளது. நாடகவளர்ச்சியிலும் கூத்து ஆராய்ச்சிகளிலும் பங்குபற்றிய சில பிரபல்யமான பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களது பணியையும் ஆசிரியர் சுருக்கமாக விளக்கியுள்ளார். 1978இல் தமிழ்

நாடு, திருப்பூரில் நடைபெற்ற கலை இலக்கியப்பெருமன்ற மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் நூலுரு இதுவாகும்.

291

ஈழத்து இசை நாடக வரலாறு. காரை செ.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜனவரி 1990. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

xxxii,130 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 18.5X12.5 சமீ.

இசைநாடக வருகையின் போது ஈழம், ஈழத்தில் இந்தியக் கலைஞர்களும் இசைநாடகமும், இசைநாடகமும் இலங்கைக் கலைஞர்களும், இசைநாடகத்தின் மறுபக்கம், இசைநாடக அரங்கம், சிங்கள இசை நாடகங்கள், ஆகிய ஐந்து இயல்களில் ஈழத்து இசைநாடக வரலாறு ஆராயப்பட்டுள்ளது.

292

ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு. சி.மௌனகுரு. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1993. (கொழும்பு 12: United Merchants Ltd.)

220 பக்கம். விலை: ரூபா 120. அளவு: 21.5X14.5 சமீ.

பண்டைக்காலம் தொட்டு இன்றுவரையிலான ஈழத்து நாடக அரங்கின் வரலாற்றை இலக்கியக் கலையாக மட்டுமன்றி ஓர் அரங்கக் கலையாகவும் நோக்கும் நூல்.

293

ஈழத்துத் தமிழ் நாடக மரபில் மகாஜனக் கல்லூரி. சி.மௌனகுரு. தெல்லிப்பழை: மகாஜனக்கல்லூரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1989. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேஷன்ஸ்)

24 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரைத் தொடரில் எட்டாவது உரையின் நூல்வடிவம்.

294

கலைமுகம். நீ.மரிய சேவியர். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 1வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)

(10),94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு 21X14 சமீ

இந்நூலில் நாடகம் சார்ந்த உயரிய கருத்துக்களை அடிகளார் நயம்பட உரைத்துள்ளார். நாடகம் பற்றிய நிறைவான கருத்துக்களையும் ஆழ்ந்த அனுபவத்தையும் கற்றறிந்த அறிவையும்,

கலந்து வழங்கும் உயரிய தமிழ் நூலாக இது வெளிவருகின்றது. நாடகப்பண்பை வெளிப்படுத்தும் நல்ல தமிழ்நூல்கள் தமிழில் இல்லை என்ற குறையைப் போக்குவதாகவுள்ளது.

-குழந்தை ம.சண்முகலிங்கம் (முன்னுரையில்)

295

சங்காரம்: ஆற்றுகையும் தாக்கமும். சி.மௌனகுரு. சென்னை 2: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 1வது பதிப்பு, ஜூலை 1993. (சென்னை: சூர்யா அச்சகம்)

96 பக்கம். விலை: ரூபா 21. அளவு: 20X16 சமீ.

சமூகப் பிரச்சினைகளை மையப்படுத்தி நவீன அரசியல் நுட்பங்கள், உத்திகள் ஆகியவற்றை உள்வாங்கும் கூத்துக்களின் வகையில் சங்காரம் என்ற இந்த நாடகம் நூலில் இடம்பெறுகின்றது. நாடகம் பற்றிய விமர்சனங்களும் இடம் பெற்றுள்ளன.

296

சடங்கிலிருந்து நாடகம் வரை. சி.மௌனகுரு. தெல்லிப்பழை: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, ஜூன்1988. (யாழ்ப்பாணம்: கத்தோலிக்கஅச்சகம், ஸ்ரீலட்சுமி அச்சகம்)

63 பக்கம், விளக்கப்படம். விலை: ரூபா 15. அளவு: 17.5x12.5 சமீ.

ஈழத்துத் தமிழ் நாடக மூலங்கள் என்ற வரிசையில் ஈழத்துத் தமிழர் மத்தியில் வழங்கும் சில சடங்குகளில் காணப்படும் நாடகத் தன்மைகள் பற்றிக் கூறும் நூல்.

297

சமூக மாற்றத்துக்கான அரங்கு. க.சிதம்பரநாதன். சென்னை 2: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 1வது பதிப்பு, பெப்ரவரி 1994. (சென்னை41: சூர்யா அச்சகம்)

157 பக்கம். விலை: இந்திய ரூபா 18. அளவு: 18X12 சமீ.

மக்கள் போராட்டத்தில் பண்பாடு மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. மானுடநேயம் மிக்க பண்பாடு நிலவாத ஒரு சமூகத்தில் மானுட விடுதலைக்கான போராட்டம் அதன் முழு வீச்சை அடையமுடியாது. மானுடப் பண்பற்றதாகி விட்ட நமது ஒடுக்குமுறைப் பண்பாட்டை மானுடப்படுத்துகின்ற பணியை ஊக்குவிக்கும் ஒரு கருவியாக அரங்கைப் பயன்படுத்த முடியுமா என்ற ஆசிரியரின் சிந்தனையின் விளைவே இந்நூலாகும்.

298

பழையதும் புதியதும்: நாடகம்-அரங்கியல். சி.மௌனகுரு. மட்டக்

களப்பு: விபுலம் வெளியீடு, 7 ஞானசூரியம் சதுக்கம், 1வதுபதிப்பு, ஜூன் 1992. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் அச்சகம், 1 இயேசு சபை வீதி)

xxiv,149 பக்கம். விலை: ரூபா 60. அளவு: 21.5X14 சமீ.

இந்நூலில் அடங்கியுள்ள 10 கட்டுரைகளும் ஈழத்தில் தமிழரி டையே வழங்கும் மரபுவழி நாடகங்கள் பற்றி ஆய்வு ரீதியாகவும் அனுபவ ரீதியாகவும் ஆசிரியர் பெற்றுள்ள தகவல்களையும் முடிவுகளையும் வெளிப்படுத்தி அவ்வப்போது வெளியிடப்பட்டவை.

299

மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள். சி.மௌனகுரு. சென்னை 14: பார்க்கர், 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (சென்னை14: Parker Computers & Publications)

664 பக்கம். விலை: இந்திய ரூபா 250. அளவு: 13.5X21.5 சமீ.

1983இல் கலாநிதிப்பட்ட ஆய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. இது ஈழத்தின் அரங்கியல் பற்றியதொரு விரிவான நூல்.

300

யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கு: விமர்சனக் கட்டுரைகள். கந்தையா ஸ்ரீகணேஷன். வவுனியா: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, நவம்பர் 1997. (வவுனியா: ஒன் லைன் பப்ளிஷர்ஸ்)

121 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 19X13 சமீ

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தமிழ் நாடக அரங்கின் 30 வருடகால வரலாற்று வெட்டுமுகமாக அமையும் வகையில் அரங்கியல் திறனாய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வந்துள்ளது. பெரும்பான்மை யானவை தமிழக, ஈழத்துச் சிறுசஞ்சிகைகளில் காலத்துக்குக் காலம் பிரசுரமான கட்டுரைகள்.

மேலும் பார்க்க: 213, 893-896

793 திரைப்படக்கலை

301

இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை. தம்பிஐயா தேவதாஸ். சென்னை 2: காந்தளகம், 834 அண்ணாசாலை, 1வது பதிப்பு, மார்கழி 1994. (நுங்கம்பாக்கம்: ஜே சீ பி டாட்ஸ்.)

(10),315 பக்கம், புகைப்படங்கள். விலை: இந்திய ரூபா 75. அளவு: 17.5X12 சமீ.

இலங்கையில் திரைப்படக்கலை முயற்சிகள் தமிழில் மேற்கொள்ளப் பட்ட நாள் முதல் 1993 வரையுள்ள காலப்பகுதியில் வெளிவந்த ஈழத்துத் தமிழ்த்திரைப்படங்களின் வரலாற்றினைப் பதிவு செய்துள்ள நூல்.

800 இலக்கியம்

800.(1) இலக்கிய அமைப்புகள்

302

குரும்பசிட்டியின் இலக்கியப் பாரம்பரியம். அம்பலவாணர் சிவராசா. குரும்பசிட்டி: சன்மார்க்க சபை வெளியீடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1988. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

15 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

அமரர் த.இராசரத்தினம் அவர்களின் நினைவு நாள் உரை. குரும்ப சிட்டி சன்மார்க்கசபைச் சூழலில் வளர்ந்த இலக்கியகர்த்தாக்களின் பணிகளைக் கால, வர்த்தமானங்களுடன் ஒப்புநோக்கி ஆராய்ந்து தயாரித்த சிறப்புச் சொற்பொழிவின் நூலுருவாக்கம்.

303

யாழ் இலக்கிய வட்டம்- இருதசாப்தங்கள்: சில நினைவுகள். யாழ்வாணன். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1986. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம்)

32 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X12 சமீ.

யாழ். இலக்கிய வட்டம் என்னும் இலக்கிய அமைப்பின் இருபது ஆண்டுக்கால இலக்கியப்பணி பற்றிய வரலாறு ஆவணம்.

மேலும் பார்க்க: 003

801 சிறுவர் இலக்கியங்கள்

801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்

304

அ முதல் ∴ வரை குழந்தைகளுக்கான பாடல்கள். சின்னத் துரை இராஜகருணா. சென்னை17: மணிமேகலைப் பிரசுரம், தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: ஸ்கிரிப்ட்ஸ் ஆப்செட்)

53 பக்கம். விலை: இந்திய ரூபா 13. அளவு: 18.5X12.5 சமீ.

தமிழ்மொழியைப் படிக்கும்போதே கவிதை உணர்வையும் ஊட்டினால் மொழிப்பற்று மிகும் என்ற நுட்பத்தை அறிந்த கவிஞர் ஆறே வரிகளில் கவிதையோடு கூடிய தமிழை அறிமுகப்படுத்துகின்றார்.

305

அன்னை நினைவமுதம். ஆனைக்கோட்டை: தென்மயிலை சின்னப்பிள்ளை செல்லத்துரை நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, மார்ச் 1987. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம்)

22பக்கம், தகடு. விலை: இலவசம். அளவு: 18X12.5 சமீ.

பல்வேறு ஈழத்துக் கவிஞர்களின் குழந்தைப் பாடல்கள் 12 இன் தொகுப்பு

306

ஈழத்துச் சிறுவர் கதைப்பாடல்கள். நாயன்மார்கட்டு: திருமதி பத்மாவதி கணேசமூர்த்தி நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, 1986. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

8 பக்கம், தகடு. விலை: இலவசம். அளவு: 18.5X12.5 சமீ.

ஈழத்துக் குழந்தைக்கவிஞர்களின் ஐந்து குழந்தைப் பாடல்கள்.

307

ஊஞ்சல் ஆடுவோம்: சிறுவர் கவிதைகள். மு.பொன்னம்பலம். கொழும்பு 02: மூன்றாவது மனிதன் பதிப்பகம், ஜூன்2001. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

54 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 22X14.5 சமீ.

சிறுவர்களுக்கான இலக்கியங்கள் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய இந்நூல் வழிகாட்டுகின்றது. சிறார்களைக் கவரும் வகையில் சித்திரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

308

கதிரேசனின் சிறுவர் பாடல்கள். செ. கதிரேசர்பிள்ளை. டென்மார்க்: Mrs. Puvaneswari Chathiresar pillai, Priorensgade 32, 1th 5600 Faaborg, 1வது பதிப்பு, 1993. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

24 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22.5X16.5 சமீ.

30 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட சிறுவர் கவிதைகளின் தொகுப்பு.

309

கப்பல்: சிறுவர்க்கான புதிர்ப்பாட்டுக்கள். பா.சத்தியசீலன். மானிப்பாய்: திருமதி எஸ்.கலாதேவி, நவாலி தெற்கு. 1வது பதிப்பு, 1985. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை).

32 பக்கம், வண்ணப்படங்கள். விலை: ரூபா 10. அளவு: 21X16 சமீ.

எளிய நடையில் அமைந்த சிறுவர்க்கான புதிர்ப்பாட்டுக்களும் விடைகளும் வண்ணப்படங்களுடன் தரப்பட்டுள்ளன. கவிதையினைப் பாடி இரசிக்கும் அதேவேளை சிறுவர்கள் தம் சிந்தனை வளத்தைப் பெருக்கும் விடுகதைகளுக்கு விடைநாடும் ஆர்வத்தினையும் பாடல்கள் ஏற்படுத்துகின்றன. விடைகளும் கவிதையுருவிலேயே அமைவது சிறப்பம்சமாகும்.

310

கவிதைத் தொகுப்பு 1: சிறுவர் பாடல். மயிலங்கூடலூர் த. கனகரத்தினம். கொழும்பு 6: கொழும்புத்தமிழ்ச்சங்க வெளியீடு, இல. 7, 57வது ஒழுங்கை, உருத்திரா மாவத்தை வழி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1991. (கொழும்பு 13: லட்சுமி அச்சகம்)

36 பக்கம், சித்திரங்கள். விலை: ரூபா 35. அளவு: 21.5X14 சமீ.

இந்நூலில் 24 தலைப்புக்களில் சிறுவர்க்கான பாடல்கள் அமைந்துள்ளன. பாடசாலைகளிலும் ஆசிரியர்சேவைப் பயிற்சிநெறிகளிலும் இசையுடன் பாடிமகிழக்கூடிய பாடல்களும் கவிதை நாடகம் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

311

குழந்தைக் குயில். முதலாம் பகுதி. க.ப. லிங்கதாசன். ஹட்டன்: மலையக எழுத்தாளர் மன்றம், 1வது பதிப்பு, 1985. (மஸ்கெலியா: விக்டோரியா அச்சகம்)

32 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22X14 சமீ.

32 குழந்தைப் பாடல்களின் தொகுப்பு. உறவுமுறை, பறவைகள், விலங்குகள், இயற்கைக் காட்சிகள் என்பவற்றை மையமாக வைத்து இளஞ்சிறார்களுக்கு ஏற்ற வகையில் பாடல்கள் புனையப்பட்டுள்ளன.

312

கூடல் மழலைகள். மயிலங்கூடலூர் நடராஜன் (தொகுப்பாளர). இளவாலை: மயிலங்கூடல் பிள்ளையினார் தெய்வானைப்பிள்ளை நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, மார்ச் 1991. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் அறியமுடியவில்லை)

16 பக்கம், தகடு. விலை: இலவசம். அளவு: 19X14 சமீ.

புலவர் ம.பார்வதிநாதசிவம், ஆடலிறை, பாரதி பார்வதிநாதசிவம், பா.மகாலிங்கசிவம், பா.பாலமுரளி, ந.திருச்செந்தூரன், வே.செவ்வேட்குமரன் ஆகிய ஏழு கவிஞர்களின் சிறுவர் பாடல்களின் தொகுப்பு.

313

சிறுவர் கவிமலர். இணுவில் திருமதி சரஸ்வதி சோதிப் பெருமாள் நினைவுவெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 1988. (யாழ்ப் பாணம்: செட்டியார் அச்சகம்)

30 பக்கம், தகடுகள். விலை: இலவசம். அளவு: 20.5X14 சமீ.

ஈழத்துக் கவிஞர்களின் 25 குழந்தைக் கவிதைகளின் தொகுப்பு.

314

சிறுவர் பாட்டு. சாரணாகையூம். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன. 1வது பதிப்பு, 1983.(கொழும்பு 9: டெவலோபிரின்ட், 69, அல்பியன் வீதி)

48 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 18X12 சமீ

8-12 வயதிற்கிடைப்பட்ட சிறார்களை இலக்காகக்கொண்டு அவர் களின் இரசனைக்குத் தீனியாக அமையத்தக்கதாகத் தொகுக்கப் பெற்ற கவிதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

315

சிறுவர்க்குப் பாரதியார். மாவிட்டபுரம் கருகம்பனை சிவகாம சுந்தரி சிவசம்பு நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1982. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

38 பக்கம், தகடு. விலை: இலவசம். அளவு: 21X14 சமீ.

பாரதியார் பாடல்களில் உள்ள சிறுவர்களுக்குகந்த சில பாடல் களின் தொகுப்பு.

316

சின்ன வண்ண மலரே. சுதுமலை: திசைவீரசிங்கம் சியாமினி நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, மே 1981. (யாழ்ப்பாணம்: செட்டி யார் அச்சகம்)

20 பக்கம், தகடு. விலை: இலவசம். அளவு: 18X12 சமீ.

23 குழந்தைக்கவிதைகளின் தொகுப்பு.

317

தமிழில் பாடுவோம். வரதா சண்முகநாதன். லண்டன்: வரதா சண் முகநாதன், 9 Wolseley Road, Harrow,Middx, HA3 5RZ,1வது பதிப்பு, ஆனி 1995. (London: Liso Printing)

40 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

வெளிநாடுகளில் உள்ள தமிழ்ப்பிள்ளைகள் தமிழைப் பாடல் மூலம் கற்றுணர்வதற்கும் தமிழின் இனிமையை இசைவடிவில் சுவைப்பதற் குமாக இப்பாடல்கள் எளியநடையில் பாடப்பட்டவையாகும். முதற் பகுதியில் உள்ள 25 பாடல்கள் இசையோடு பாடப்பட்டு ஒலியிழை நாடாவாகவும் வெளிவந்துள்ளதாக நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

318

தலை காத்த தலையீர். சத்தியசீலன். நவாலி: கலை வண்ணம், சின்னப்பா வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1985. (சுன்னாகம்:சுரபிஅச்சகம்)

8 பக்கம், ஓவியங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18.5X12 சமீ.

சிறுவர்க்கான கதைப்பாடல். ஓவியத் திறமையால் உயிர்தப்பிய ஒரு எலிக்குஞ்சின் கதை.

319

பன்றியாரை வென்றுவிட்ட பாட்டியம்மா. சத்தியசீலன். மானிப்பாய்: கலைவண்ணம், சின்னப்பா வீதி, நவாலி தெற்கு, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்:சுவர்ணாஅச்சகம், காங்கேசன்துறை வீதி)

32 பக்கம், வண்ணப்படங்கள். விலை: ரூபா 15. அளவு: 21X14 சமீ.

சிறுவர்களுக்கேற்ற எளிய நடையில், அந்த அதிசயமான பாத அணிகள், பன்றியாரை வென்றுவிட்ட பாட்டியம்மா, உயிர் காத்த ஓவியம், குழப்படியும் குழப்படியும் ஆகிய சிறுவர் கதைகளை கவிதையுருவில் ஆக்கியுள்ளார். இவற்றில் உயிர் காத்த ஓவியம் என்ற பாடல் ஒரு பாட்டுக்கூத்து உருவில் ஆக்கப்பட்டுள்ளது.

320

பாடு பாப்பா. கல்வயல் வே. குமாரசாமி. சாவகச்சேரி: அறிவழகுப் பதிப்பகம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஸ்வர்ணம் பப்ளிசிட் டீஸ், 125 ஏ, புகையிரத நிலைய வீதி)

20 பக்கம். விலை: ரூபா 6.50. அளவு: 17.5X12 சமீ.

குழந்தைகள் எளிதில் வாசிப்பதற்கு ஏற்றதாகப் பெரிய எழுத்தில் அமைந்த 18 சிறுவர் பாடல்களின் தொகுப்பு.

321

பாப்பாட்டா. கல்வயல் வே. குமாரசாமி. சாவகச்சேரி: அறிவழகுப் பதிப்பகம், பெரிய அரசடி, 1வது பதிப்பு, 1984. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம்)
16பக்கம். விலை: ரூபா 6. அளவு: 18X12 சமீ.

பதினாறு சிறுவர்பாடல்கள்.

322

பாலர் பா அமுதம். கல்வி வள நிலையம், நல்லூர். (தொகுப் பாசிரியர் குழு). யாழ்ப்பாணம்: இந்து மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1985. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)
38 பக்கம், தகடு. விலை: ரூபா 6. அளவு: 21X14 சமீ.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளால் இயற்றப்பட்ட பாடல்களில் தேர்ந்த சிலவற்றின் தொகுப்பு.

323

பாலர் பாடல். வி.பாக்கியநாதன். ஜெர்மனி: நெல்சன் வெளியீடு, Jens Nelson, Postfach 100729, 5270 Gummersbach,1வது பதிப்பு, ஜூலை 1989. (ஜேர்மனி: நெல்சன் மொழிபெயர்ப்பு நிலையம்)
34 பக்கம், வண்ணப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X15 சமீ.

வண்ணப்படங்களுடன் கூடியதான குழந்தைகளுக்கான பாடல்கள்.

324

பாலர் பாடல். வி.பாக்கியநாதன். ஜெர்மனி: Droote 13, 4600, Dortmund 14, 1வது பதிப்பு, தை 1989. (Germany: Karl Schuler Publishers. Untere bach Str. 38, D7470 Albstadt 2)
36 பக்கம், சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 30X21 சமீ.

34 பாலர் பாடல்கள். புகலிடத் தமிழ்ப்பாடசாலைகளில் தமிழ் மொழிப்போதனைக்கு ஏற்ற குழந்தைப் பாடல்களின் தொகுப்பு.

325

மழலைகளுக்கான பாடல்கள். நகுலா சிவநாதன். சென் னை 17: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை94: Scripts Offset)
72 பக்கம். விலை: இந்திய ரூபா 16. அளவு: 18X12.5 சமீ.

புகலிடத் தமிழ்ச்சிறார்களின் உணர்வுகளுக்கும் இரசனைகளுக்கும் ஏற்றவகையில் இலகு நடையில் அமைந்துள்ள சிறுவர் பாடல்களைக் கொண்டது. அந்நிய தேசத்தில் வாழ்கின்ற தமிழ்க் குழந்தைகளுக்கு அவர்கள் அறிந்திராத வாழ்க்கை முறையியல் அம்சங்களான தேர், கோழிக்குஞ்சு, நிலா, பட்டம், போன்றவற்றையும் நவீன தொழில்நுட்ப வாழ்க்கை முறையோடு தொடர்பான கணனி, தொலைபேசி போன்ற அம்சங்களையும் உள்ளடக்கிய சிறுவர் பாடல்களின் தொகுப்பு.

மேலும் பார்க்க: 395

801.(2) சிறுவர் நாடகங்கள்

326

சிறார்களுக்கான சிறு நாடகங்கள். சு.விக்னா பாக்கியநாதன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.1447, 7, தணிகாசலம் சாலை, தி.நகர். 1வது பதிப்பு 1999. (சென்னை 5: எம்.கே. என்டர் பிரைசஸ்)
164 பக்கம். விலை: இந்திய ரூபா 32. அளவு: 18X12.5 சமீ.

ஜெர்மன் தமிழ்க் கல்விச்சேவை அமைப்பின் வருடாந்தப் பரிசளிப்பு விழாக்களில் இடம்பெற்று வந்த 11 சிறுவர் நாடகங்களின் தொகுப்பு.

801.(4) சிறுவர் சிறுகதைகள்

327

உறவுக்குப் போராட்டம். விக்னா பாக்கியநாதன். ஜேர்மனி: கலைவிளக்கு வெளியீடு, Droote19, 44328 Dortmund, 1வது பதிப்பு, ஜூன் 1997. (சென்னை 24: சதுர்வேந்தன் அச்சகம், சிவன் கோவில் தெற்குத் தெரு, கோடம்பாக்கம்)
96 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

உறவுக்குப் போராட்டம், பிஞ்சுமனம், வருங்காலச் சிற்பிகள், புதிய கோணங்கள் ஆகிய நான்கு சிறுவர்களுக்கான சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. குழந்தை வளர்ப்பில் பெற்றோரின் பங்கை வலியுறுத்து பவையாக இக்கதைகள் அமைந்துள்ளன.

328

சசிபாரதி கதைகள். சு.சபாரத்தினம். (புனைபெயர்-சசிபாரதி). யாழ்ப்பாணம்: கலைஇலக்கிய பத்திரிகை நண்பர்கள், 123/1, கோவில் வீதி, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: சுவர்ணா பிரிண்டிங்வேர்க்ஸ், 295/7, காங்கேசன்துறை வீதி).
xii,60 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X12 சமீ.

1963-68 காலப்பகுதியில் எழுதப்பட்ட குட்டிக்கதைகளின் தொகுப்பு. இக்கதைகள் பெரும்பாலும் இளம்வாசகர்களை நோக்கியே எழுதப் பட்டதெனக் கொள்ளலாம். சிறுவர்க்கான கதை இலக்கியங்கள் எம் நாட்டில் தனிப்பிரிவாக. வளர்ச்சி பெறவில்லை. மிகச்சில நூல் களே வெளிவந்துள்ளன. அவ்வகையில் இந்நூலில் இடம்பெறும் குறுங்கதைகளிற் குறிப்பிடத்தக்க தொகையின சிறுவர் இலக்கிய மாகவும் பயன்படக்கூடியன.

-சு.வித்தியானந்தன் (முன்னுரையில்)

329

சூரியனைத் தேடியவன்: குழந்தைகள் படிப்பதற்கான அற்புதக் கதைகள். செ.யோகநாதன். சென்னை 600017: தமிழோசை பதிப்பகம், தி.நகர், 1வது பதிப்பு, நவம்பர் 1986. (சென்னை 17: தமிழோசை அச்சகம், 84 ஹபிபுள்ளாவீதி, தி.நகர்)

402 பக்கம், படங்கள். விலை: இந்தியரூபா35. அளவு: 18X12.5சமீ.

உலக மொழிகளில் வெளியான சிறந்த குழந்தைக் கதைகளை அழகிய எளிய தமிழிலே வழங்கியுள்ளார். அன்பு, மனிதநேயம், நேர்மை, கற்றல், துணிவு, கொடுமைகளுக்கு எதிராக நிற்றல் ஆகிய உள்ளடக்கங்களைக் கொண்டனவாக அமைந்த கதைகள்.

330

பாலர் நீதிக்கதைகள்: பாகம் 1. த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 3வது பதிப்பு, புரட்டாதி 1989. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்)

14பக்கம், வண்ணப்படங்கள். விலை: ரூபா10. அளவு: 24.5X18.5சமீ.

331

பாலர் நீதிக்கதைகள்: பாகம் 2. த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 2வது பதிப்பு, வைகாசி 1990. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்)

14பக்கம், வண்ணப்படங்கள். விலை: ரூபா12. அளவு: 24.5X18.5சமீ.

முதற்பாகம் சிறுவர்களுக்குரிய ஏழு நீதிக்கதைகளையும் இரண் டாம் பாகம் 10 நீதிக்கதைகளையும் கொண்டது. பெரிய எழுத்துக் களில் படங்களுடன் கூடியது. பாலர்களுக்கு ஏற்றது.

801.(5) சிறுவர் நாவல்கள், குறுநாவல்கள்

332

ஆறுகால்மடம்: சிறுவர் நாவல். செங்கை ஆழியான். யாழ்ப் பாணம்: ஹம்சா வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1991. (யாழ்ப்

பாணம்: அபிராமி அச்சகம், செம்பியன் ஒழுங்கை)

(4),56 பக்கம். விலை: ரூபா 16. அளவு: 16X10 சமீ.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்ததாகப் புனையப்பட்ட விறுவிறுப்பான சிறுவர் நவீனம். தில்லை என்ற சிறுவன் எதிர்பாராத வகையில் தான் சந்தித்த கள்வர்களை சட்டத் தின் கையில் பிடித்துக் கொடுக்க முயல்வதே கதையாகும்.

333

இராவணன் கோட்டை. கே.எஸ்.ஆனந்தன். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, டேவிட் லிகோரி, 38 வேம்படி வீதி, 1வது பதிப்பு, மே 1990. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம்)

75 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

வீரதீரச் செயல்கள் அடங்கிய சிறுவர்க்குகந்த சரித்திரக்கதை.

334

காட்டில் ஒரு வாரம். அனு.வை.நாகராஜன். தெல்லிப்பழை: வைரமான் வெளியீடு, மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 1988. (யாழ்ப்பாணம்: அம்மா பிரிண்டிங் வேர்க்ஸ், இணுவில்)

xi,135 பக்கம், தகடுகள் 8. விலை: சாதாரண பதிப்பு: ரூபா20. நூலகப் பதிப்பு: ரூபா50. அளவு: 18X12 சமீ.

சிறுவரின் காட்டு நவீனக்கதை. 12-16 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் உளவியற் கோட்பாட்டுக்கேற்ப ஆய்வூக்கம், பின்பற்றலூக்கம், வீரதீரச்சாகசச் செயலூக்கம் போன்ற இயல்பூக்கங்களை முன்வைத்து எழுதப்பட்டுள்ளது.

335

திசை மாறிய பாதைகள். சோ.ராமேஸ்வரன். இரத்மலானை: சர்வோதய விஷ்வலேகா வெளியீடு, 41, லும்பினி மாவத்தை, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்)

68 பக்கம். விலை: ரூபா80. அளவு: 21x14சமீ. ISBN 955-59910-9- x

எல்லோராலும் புரிந்து கொள்ளத்தக்க, எளிதான நடை, பழக்கப்பட்ட சொற்கள், நவீனமான வார்த்தையமைப்புக்கள், நாள்தோறும் நம் மிடையே உலாவரும் பாத்திரப்படைப்புக்கள் போன்ற அம்சங்கள் இச் சிறுவர் நவீனத்தின் சிறப்புக்கள்.

336

பூதத் தீவுப் புதிர்கள். செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்:

கமலம் பதிப்பகம், 82 பிரவுண் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (கொழும்பு: ஸ்ரீ லங்கா புத்தகசாலை)
128 பக்கம், சித்திரங்கள். விலை: ரூபா 100. அளவு: 21.5x14 சமீ.

பூதங்களிடம் அகப்பட்டுப் பல அபாயங்களைக் கடந்து அவற்றை வெற்றி கொண்டு வந்த வசந்தனதும் அவனது நண்பர்களதும் கதை. வீரகேசரி வாரமலரில் 1994 மே 08 முதல் 26 வாரங்கள் தொடராக வெளிவந்தது.

801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள்

337
பாரதச்செல்வம். வை.ஏரம்பமூர்த்தி. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 6வது பதிப்பு, 1984. 1வது பதிப்பு, 1957. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்)
ix,192 பக்கம். விலை: ரூபா 12.70. அளவு: 18X12.5 சமீ.

மகாபாரதம் சிறுவர்க்கேற்ற வகையில் எளியநடையில் வசன நூலாக எழுதப்பெற்றுள்ளது.

801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள்

338
தேடலும் பதித்தலும். அநு.வை.நாகராஜன். தெல்லிப்பழை: வைரமான் வெளியீடு, சங்கரபரணம், தென்மயிலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1992. (கொழும்பு 12: Super Tech Services, 12, Andi wal Street)
vi,64 பக்கம். விலை: ரூபா 60. அளவு: 19X12.5 சமீ.

இது ஏழாவது வைரமான் வெளியீடாக வரும் மேதைகள் வரிசைத் தொடரில் முதல் தொகுதி. இதில் 5 அறிவியல் மேதைகளின் வாழ்க்கைக் குறிப்புக்கள் அவர்களின் தேடல்களையும் பதித்தல் களையும் மிகச் சுருக்கமாகத் தருகின்றது. கலிலியோ, ஐசாக் நியுட்டன், வில்லியம் ஹேர்ஸ்ஷெல், ஜேம்ஸ் யங் சிம்சன், லுயிஸ் பாஷ்யர் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

மேலும் பார்க்க: 037, 117, 131, 256

891.2 சம்ஸ்கிருத இலக்கியம்

339
சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள். வி.சிவசாமி. யாழ்ப்பாணம்: வி.சிவசாமி, சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: நியூரா பப்ளிக்கேஷன்ஸ்)
183 பக்கம், தகடு. விலை: சாதாரண பதிப்பு: ரூபா 50, நூலகப் பதிப்பு: ரூபா 65. அளவு: 20.5x13.5 சமீ.

இந்நூலிலுள்ள 12 கட்டுரைகளிலும் சம்ஸ்கிருத இலக்கியத்தின் சில முக்கியமான அம்சங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. சம்ஸ்கிருத இலக் கியப் பரப்பு, இருக்குவேதக் கவிதை, காளிதாசரும் இலக்கியப் பணிகளும், சம்ஸ்கிருத நாடகம், தோத்திர இலக்கியம், யாழ்ப்பாணத் துச் சம்ஸ்கிருதமரபில் நாவலர், சம்ஸ்கிருத காவியவியல் முதலியன குறிப்பிடத் தகுந்தவையாகும்.

340
வடமொழி இலக்கிய வரலாறு: பாகம் 1: வைதீக இலக்கியம். கா.கைலாசநாதக் குருக்கள். கொழும்பு: கலா நிலையம், 175 செட்டி யார் தெரு. 1வது பதிப்பு, ஒக்டோபர் 1962. (கொழும்பு 11: மெய்கண் டான் அச்சகம், 161 கடற்கரை வீதி)
viii,208 பக்கம். விலை: ரூபா 3. அளவு: 18.5X12.5 சமீ.

வடமொழி இலக்கிய வரலாறு. கா.கைலாசநாதக் குருக்கள். சென்னை 17: நர்மதா பதிப்பகம், 2வது பதிப்பு, டிசம்பர் 1981. 1வது பதிப்பு, 1962. (சென்னை 17: பிரபு பிரிண்டிங் ஹவுஸ்)
208 பக்கம். விலை: இந்திய ரூபா 12. அளவு: 18.5X12.5 சமீ.

வேதங்களையும் அவற்றின் வழிவந்த பிராமணங்களையும் ஆரணியகங்களையும் வேதங்களின் முடியாக அமைந்த உபநிடதங் களையும் வேதங்களைச் சார்ந்த அறங்களையும் குறிப்பிடும் வைதீக இலக்கியம் பற்றிய அறிவைப்பெற உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

891.48 சிங்கள இலக்கியம்

மேலும் பார்க்க: 773, 834

894.8 தமிழ் இலக்கியம்

341
பெருங்காப்பியம் பத்து. எஸ்.பொன்னுத்துரை. சென்னை: மித்ர

வெளியீடு, 2வது பதிப்பு, ஜனவரி 1997. 1வது பதிப்பு, 1964. (சென்னை: மித்ர அச்சகம்)

184 பக்கம். விலை: இந்திய ரூபா 55. அளவு: 18X12 சமீ.

தமிழ் இலக்கியங்களில் காப்பியங்களுக்கு பல்வேறு அறிஞர்கள் வழங்கிய உரைகளின் தொகுப்பு.

894.8(1) தமிழ்க் கவிதைகள்

342

அக்கரைக்குப் போன அம்மாவுக்கு. ஹம்சத்வனி. சென்னை: தமிழியல், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1985. (சென்னை 600017: தமிழோசை அச்சகம்)

68 பக்கம். விலை: இந்திய ரூபா 8. அளவு: 18.5X12 சமீ.

தமிழ்ஈழத்தின் மிகப்பயங்கரமான கணங்கள் என்னுள்ளே ஏற்படுத்திய ஆழமான அதிர்வின் பிரதிபலிப்புக்களே எனது கவிதைகள். எனது கிராமங்களும் வீதிகளும் பச்சை வயல்வெளிகளும் ஒரு நாள் சிறைமீட்கப்படும். அந்த மீட்சிக்கு ஒரு உரமாக எனது கவிதைகள் அமையுமாயின் நான் மகிழ்வேன்.

- ஹம்சத்வனி (முன்னுரையில்)

1980-1985 ஆண்டுகளுக்கிடைப்பட்ட ஈழத்தமிழரின் துயர்மிகு அவல வாழ்வை இக்கவிதைகள் பதிவு செய்கின்றன.

343

அகங்களும் முகங்களும். சு.வில்வரத்தினம். யாழ்ப்பாணம்: அலை வெளியீடு, 1வது பதிப்பு, ஆவணி 1985. (யாழ்ப்பாணம்: புனித வளன் அச்சகம்)

XX,84 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18.5X11.5 சமீ.

என்னைப் பாதித்தவற்றை உள்ளுறை அனுபவ ஒளி கொண்டு பின்னி இழைத்தெடுத்து வேய்ந்ததோர் சிறு கவிக்குடில் இது.

-ஆசிரியர் (முன்னுரையில்)

344

அடைப்புக்குறிகள். அல்லை க.வ.ஆறுமுகம் (புனைபெயர்-மாஜினி, ஈழமாஜினி) அல்லைப்பிட்டி: எஸ்.திருநாவுக்கரசு, 1வது பதிப்பு, மாசி 1987. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்)

xii,39 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 18X12.5 சமீ.

ஈழத்தின் இன்றைய அரசியல் நிலைமைகளையும் சமூகப்பிரச்சினைகளையும் மரபுக்கவிதைகளாக ஆக்கியுள்ளார்.

345

அணையாத அறிவாலயம். சார்ள்ஸ். (இயற்பெயர்: ஜங்கரன்) யாழ்ப்பாணம்: மாணவர் இளைஞர் பொதுமன்றம், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: கே.ரீ.அச்சகம்).

40 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X13 சமீ.

1981 இல் எரிந்த யாழ். பொதுசன நூலகம் பற்றிய கவிதைகளின் தொகுப்பு. ஈழநாடு, முரசொலி, திசை பத்திரிகைகளில் நூலகளரிப்பை நினைவு கூர்ந்து வெளியிடப்பெற்ற கட்டுரைகளும் இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெறுகின்றன.

346

அது-அவர்கள். இ.முருகையன். யாழ்ப்பாணம்: தேசிய கலை இலக்கியப் பேரவை, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஸ்வர்ணம் பப்ளிசிட்டிஸ், 125 ஏ, ஸ்டான்லி வீதி)

(12),42 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 20X13.5 சமீ.

நேரிசை வெண்பாக்களினாலான நெடிய பாட்டு.

இக்கவிதை நூலில் கூறமுயலும் பொருள் நவீனசிந்தனை சார்ந்தது. கதை சொல்லும் பாங்கில் அவர் தன் கருத்துக்களை விருத்திசெய்து கொண்டு போகிறார். அதே சமயம், தமிழ்க்கவிதை மரபில் நீதிகளைக் கூற மிகவும் பயன்பட்டு வந்த வெண்பா வடிவத்தை அவர் தெரிந்தெடுத்தமை அவரது கவிதை நூலின் நோக்கத்தை வலியுறுத்துகின்றது.

- சி.சிவசேகரம்

347

அந்த விடியலுக்கு. க.இளங்கோ. சென்னை 94: சிவா பதிப்பகம், 18, சங்கரபுரம், சூளைமேடு, 1வது பதிப்பு, 1985. (சென்னை5: ஸ்ரீ கோமதி அச்சகம், 41 சூரப்பமுதலி தெரு, திருவல்லிக்கேணி.)

48 பக்கம். விலை: இந்திய ரூபா 5. அளவு: 18X12 சமீ.

"... தான் பார்த்து-தான் ரசித்து-தான் வெதும்பி-தான் பாடிய சுதந்திர கீதங்கள் ஈழப்போர்முனைக்கு இசையமைக்க வருகின்றது. மக்களே! மக்களே!! என்பதே இந்தக் கவிதைக்குப் பின்னால் கேட்கும் மிருதங்கம். எழுக! எழுக! என்பதே இந்தக் கவிதையோடு இயல்பாகப் பின்னப்பட்ட வயலின் இசை."

-முல்லையூரான் (முன்னுரையில்)

348

அம்பி கவிதைகள். அம்பி. சென்னை 24: மித்ர வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 1994. (சென்னை 24: ஏ.ஆர்.பிரின்ட்)

232 பக்கம். விலை: இந்திய ரூபா 43. அளவு: 17.5X12 சமீ.

ஆசிரியரின் நாற்பது ஆண்டுக்காலக் கவிதை ஊழியத்தை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இத்தொகுதி அமைந் துள்ளது.

349

அல் அஸுமத் கவிதைகள்: மலைக்குயில். அல் அஸுமத் (இயற்பெயர்: அப்துல் அஸீஸ்). கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1வது பதிப்பு, 1987 (கொழும்பு 12: ரோயல் பிரின்ட்ஸ், 42 பேய்ரா ரோட்)

100 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18.5X12சமீ.

மலையக மக்களின் வாழ்க்கையை அவர்களது சோகங்களை பகைப்புலமாகக் கொண்ட கவிதைத் தொகுப்பு.

350

அழியாத ஞாபகங்கள். சாந்தி ரமேஷ் வவுனியன். ஜேர்மனி: பார்த்திபன் வெளியீடு, Bahnhof Str 4, 55743 Idar, Oberstein, 1வது பதிப்பு, சித்திரை 2001. (ஜேர்மனி: அச்சகவிபரம் குறிப்பிடப் படவில்லை)

64பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X14 சமீ.

இத்தொகுப்பிலுள்ள போராளிகளுடனான, போராளிகள் பற்றிய அழியாத நினைவுகளும் அவர்கள் மாவீரர்களான போது மனதில் ஏற்பட்ட வேதனையில் அடக்க முடியாத ஆனால் எமக்குள்ளேயே அடங்கிப்போன துயர் தோய்ந்த விசும்பல்களுமே இவ்வழியாத ஞாபகங்களுக்குள் பதிவாகியுள்ளன.

-சந்திரவதனா செல்வகுமாரன் (முன்னுரையில்)

351

அழியா நிழல்கள். எம்.ஏ.நு.ம்மான். சென்னை: நர்மதா பதிப்பகம், 1வது பதிப்பு, 1982. (சென்னை: சாதனா ஆர்ட் பிரின்ட்ஸ்)

72 பக்கம். விலை: இந்திய ரூபா 4.50. அளவு: 18X12சமீ.

தனி மனித உணர்வுகள் சார்ந்த 22 கவிதைகளின் தொகுப்பு.

352

அழுகின்ற தேசமும் ஒளிர்கின்ற சூரியனும். கஜன். பிரான்ஸ்: தமிழர் கலை பண்பாட்டுக்கழகம், பாரிஸ், 1வது பதிப்பு, (ஆண்டு, அச்சக விபரங்கள் குறிப்பிடப்படவில்லை.)

102 பக்கம், ஓவியங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22x13.5 சமீ.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் சில நாட்டுக்கூத்து, நாடகம், ஒலிநாடா, ஒலித்தட்டு ஆகியவற்றுக்கான தேவை கருதி தமிழீழ விடுதலைப் போராளி கப்டன் கஜனால் எழுதப்பட்டவை. இவரது ஆரம்ப காலக்கவிதைகளும் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

353

அறியப்படாதவர்கள் நினைவாக. அ.யேசுராசா. சென்னை 600014: க்ரியா, 1வது பதிப்பு, நவம்பர் 1984. (சென்னை 600014: ரசானா ஓப்செட் பிரின்ட்ஸ்)

34 பக்கம். விலை: இந்திய ரூபா 8. அளவு: 19X12 சமீ.

1968 முதல் 1981 வரையிலான காலப்பகுதியில் இயற்றப்பெற்ற புதுக்கவிதைத் தொகுப்பு.

354

அஸ்தமனத்துடன் ஒரு வாதம். நயினை குலம். யாழ்ப்பாணம்: வெளியீட்டுவிபரம் குறிப்பிடப்படவில்லை, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப் பாணம்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

66 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X11 சமீ.

சமூக, அரசியல் கவிதைகளின் தொகுப்பு.

355

ஆத்ம அலைகள்: பக்திப்பாடல்கள். செ.நாகேந்திரன். சென்னை 600017: மணிமேகலைப்பிரசுரம், தபால்பெட்டி எண் 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை: M.K.என்டர்பிரைஸ்)

iv,104 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 18.5X12.5 சமீ.

இறைபக்தியும் வாழ்க்கையும் கலந்த இலக்கியப் படைப்புக்களை மையமாக வைத்து இயற்றப்பட்ட பாடல்களின் தொகுப்பு.

356

ஆதங்கம். விக்னா பாக்கியநாதன். ஜேர்மனி: கலை விளக்கு, Droote 13, 4600 Dortmund 14, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1990.

56 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 19X14 சமீ.

ஈழ விடுதலைப்போராட்டம், இறப்பு, பொருளிழப்பு, அச்சம், வறுமை, நோய், துயரம், கண்ணீர் எனப் பலவகைப்பட்ட பயங்கர முத்துக்களைக் கொண்டிணைந்த எமது சமுதாயத்தில் பெண்ணடிமைத் தனமும் இணைந்து வளர்கிறது. இவற்றின் பாதிப்பு, ஆக்கிரமிப்பு, என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்டே **ஆதங்கம்** என்ற இப் புதுக்கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது.

-ஆசிரியர் (என்னுரையில்)

357

இதயமலர். எம்.எச்.எம்.ஹலிம்தீன். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன. 1வது பதிப்பு, 1985. (கொழும்பு 9: எஸ்.எச்.நிலாப்தீன், டெவலோ பிரின்ட், 69, ஸ்ரீ தர்மராமா மாவத்தை).

135 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 20X14 சமீ.

இஸ்லாமிய மணம், தமிழ் மணம், ஆங்கில மணம் ஆகிய மூன்று பகுதிகளின் கீழ் மொத்தம் 130 கவிதைகள் தரப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றவை.

358

இந்த மண்ணும் எங்கள் நாட்களும். தர்க்கீகம். யாழ்ப்பாணம்: தர்க்கீகம் வெளியீடு, தபால்பெட்டி இல.103, 1வது பதிப்பு, வைகாசி 1982. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)

44 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 20.5X14 சமீ.

குறிஞ்சித்தென்னவன், மு.புஷ்பராஜன், வ.ஐ.ச.ஜெயபாலன், சாருமதி, க.ஆதவன், எம்.ஏ.நு:மான், ஹம்சத்வனி, கவியரசன், புசல்லாவை குறிஞ்சிவளவன், சு.வில்வரத்தினம், சுந்தரன், அ.யேசுராசா, அரு.சிவானந்தன், யோகராணி, ரவீந்திரன், ஆகிய கவிஞர்களின் விடுதலைக்கவிதைகள்.

359

இயந்திர சூரியன். மேமன் கவி. சென்னை 600017: T.S.இராமலிங்கம், நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம்வீதி, தியாகராஜநகர், 1வது பதிப்பு, 1984. (சென்னை: 600017: தமிழோசை அச்சகம், 84, ஹபிபுல்லா வீதி, தி. நகர்.)

136 பக்கம். விலை: இந்திய ரூபா 9. அளவு: 18X12 சமீ

ஐம்பது புதுக்கவிதைகளின் தொகுப்பு.

360

இயேசுபிரான் பற்றிய கவிதைகள். செ.நாகேந்திரன். சென்னை 17: மணிமேகலைப்பிரசுரம், 1வது பதிப்பு, 2001. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்)

80 பக்கம். விலை: இந்திய ரூபா 18. அளவு: 18X12.5 சமீ.

இயேசுநாதர் பற்றிய 27 கவிதைகளின் தொகுப்பினூடாகக் கிறிஸ்தவ ஆராதனைகளின் போது உள்வாங்கிய இறையியல் கருத்துக்களை இலக்கிய நயத்துடன் கவியுருவம் கண்டிருக்கின்றார்.

361

இரண்டாவது சூரிய உதயம். சேரன். தெல்லிப்பழை: வயல் கலை இலக்கிய வட்டம், மஹாஜனக்கல்லூரி, 1வது பதிப்பு, ஜனவரி 1983. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

28 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 21X14 சமீ.

இரண்டாவது சூரிய உதயம். சேரன். சென்னை 33: பொதுமை வெளியீடு, M23/10, முத்தாலம்மன் கோவில் தெரு, 2வது பதிப்பு, ஜூன் 1983, (சென்னை 5: பி.ஆர்.வி. பிரஸ், 143, பெரிய தெரு)

44 பக்கம். விலை: இந்திய ரூபா 3. அளவு: 18X12 சமீ.

சேரனின் மூன்று நெடுங்கவிதைகளும் ஏழு சிறுகவிதைகளும் ஒரு பாடலும் இத்தொகுப்பில் உள்ளன. 1978-82 காலப்பகுதியில் சிங்கள பேரினவாதத்தால் தொடர்ந்து அவமதிக்கப்பட்டு வரும் சிறுபான்மை யினத்தவர்களின் உண்மையான-வாழ்ந்து பெற்ற-அனுபவம். 2வது பதிப்பு, எஸ்.வி.ராஜதுரை அவர்களின் முன்னுரையுடன் வெளியிடப் பட்டுள்ளது.

362

இரண்டாவது பிறப்பு.அருந்ததி. பிரான்ஸ்: Art & Social Sciences of Eelam Academy (ASSEAY), 3 Alles Paul Leautaud, 95200, Sarcelles, 1வது பதிப்பு, டிசம்பர்/ 1990. (பிரான்ஸ்: ஈழம், கலைகள் சமூக விஞ்ஞானக்கழகம்)

29 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X15 சமீ.

வெறும் வார்த்தைகளின் குவியல்களாக இல்லாமல் துன்புறும் எமது மக்களின் வலிமுனைகளையும், குமுறும் அவர்களது மனவுணர்வுகளையும் மாத்திரமன்றி, சகல அடக்குமுறைகளையும் துணிவுடன் எதிர்த்து நிற்கும் எண்ணங்களையும் தாங்கி நிற்கும் கவிதைகள்.

363

இரு இளசுகளின் கவிதைகள். சுட்டா, யுகநேசன். யாழ்ப் பாணம்: பயிர்வட்டம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை)
(4),46 பக்கம், தகடுகள் 2. (கேலிச்சித்திரங்கள்). விலை: குறிப் பிடப்படவில்லை. அளவு: 17x12 சமீ.

சமூகத்துயர்களையும் துன்பங்களையும் அரசியல் பார்வையினூ டாக மக்களை அடையச்செய்து சிந்தனையைத் தூண்டிவிடும் நோக்குடன் வெளியிடப்பட்டுள்ள இளம்படைப்பாளிகள் இருவரின் கவிதைத்தொகுப்பு.

364

இன்னமும் இருட்டினிலே. சார்ள்ஸ். யாழ்ப்பாணம்: மாணவர் கலை இலக்கிய மன்றம், 1ம் பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: கே.ரி. அச்சகம்).
40 பக்கம், விளக்கப்படங்கள், ஓவியம். விலை: ரூபா 15. அளவு: 18X13 சமீ.

நம் தேசத்தின் சமகால நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் கவிதைத் தொகுப்பு. சிறையினில் வாடும் இளைஞர்களின் உணர்ச்சிகளை கவிதை மூலம் இந்நூலில் வெளிப்படுத்த ஆசிரியர் முயன்றிருக் கின்றார்.

365

இனி ஒரு வைகறை. கி.பி.அரவிந்தன். சென்னை 20: பொன்னி, 25, அருணாசலபுரம் பிரதான சாலை, அடையாறு, 1வது பதிப்பு, மார்ச் 1991. (சென்னை 20: இராசகிளி பிரின்டர்ஸ்)
45 பக்கம். விலை: இந்திய ரூபா 6.00. அளவு: 16X12 சமீ.

இவை எனது குறிப்பேடுகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டவை. எழுத்துக்களினாலான இவ்வுணர்வுகள் கவிதைகளாயிருப்பின் போராளியாயிருந்த ஒருவன் கவிஞனாகின்றான்.

- கி.பி.அரவிந்தன் (முகவுரையில்)

366

இனி வரும் காலம்: சபேசன் கவிதைகள். நா.சபேசன். சென்னை 31: அருட்குமரன், 8/1 டாக்டர் TV தெரு, சேத்துப்பட்டு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1986. (Madras 20: Blaze Printers, 12 First Main Road, Nehru Nagar)
68 பக்கம். விலை: ரூபா 6. அளவு: 16.5X10 சமீ.

தமிழீழ விடுதலைக்கான அரசியல்செயற்பாடுகளில் தன்னை இணைத் துக்கொண்ட-அதன் மூலம் தன்னை வளர்த்துக் கொண்ட-ஒரு மனிதன் தன் கவிதைகளின் மூலம் தான் கடந்து வந்த பாதையில் நிகழ்ந்தனவற்றை இங்கு சொல்லியிருக்கின்றான்.

367

ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும். வ.ஐ.ச.ஜெயபாலன். சென்னை 2: காந்தளகம், 1வது பதிப்பு, 1986. (சென்னை 86: சாலை அச்சகம்)
144 பக்கம். விலை: இந்திய ரூபா 11.50. அளவு: 18X12.5சமீ.

இச்சிறு காவியம் ஈழத்தில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்தின் கோரத்தையும் கொடுமையையும் மட்டு மல்லாது தீரத்தையும் தியாகத்தையும் சித்திரிக்கின்றது.

368

ஈழத்துப் போராட்டம். கயல்விழி. சென்னை600024: த.கோவேந்தன், புதுமைப்பதிப்பகம், பாவேந்தர் தெரு, ஆண்டவர் நகர், 1வது பதிப்பு, மே 1983. (சென்னை 600014: நாவல் ஆர்ட் பிரின்டர், 137 ஜானி ஜான்சன் தெரு)
32 பக்கம். விலை: இந்திய ரூபா 3. அளவு: 18X12.5 சமீ.

கயல்விழி அவர்கள் எழுதியுள்ள ஈழத்துப் போராட்டம் என்ற இந்தச் சொல்லோவியம், விடுதலை பெறத் துடிக்கும் ஈழத்துக்கான வீர உரையாகவும், விடுதலை பெற்ற பின்னர் இருந்திடவேண்டிய சமதர்ம பூமி குறித்த விளக்கஉரையாகவும் அமைந்துள்ளது.

-கலைஞர் மு.கருணாநிதி (பாராட்டுரையில்)

369

உணர்வுகள்: கவிதைத்தொகுப்பு. செ.நாகேந்திரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை: M.K.என்டர்பிரைஸ்)
iv,136 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 17.5X12.5சமீ.

பல்வேறு உணர்வலைகளை வீசும் 54 கவிதைகளின் தொகுப்பு. தமிழ்த்தாய், அழகு, வெண்ணிலா, சூரியன், காலை, மாலை இப்படிப் பல்வேறு தலைப்புக்களில் தம் உணர்வுகளை கவிஞர் மீட்டியுள்ளார். வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர் தம் துயர அனுபவங்களும் புலம்பெயர் வாழ்வின் அவலங்களும் சில கவிதைகளில் புலப்படுத்தப் படுகின்றன.

370

உரத்த இரவுகள். தமயந்தி. யாழ்ப்பாணம்: தமயந்தி, 1வது பதிப்பு, நவம்பர் 1986. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை.)

(16),36 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 17X10 சமீ.

களத்திலே நின்று மக்களின் சத்தியாவேசத்தோடு கலந்து தம்மைச் சுற்றி நடப்பனவற்றைத் தமது கவிதையூடகம் முலம் வெளிப்படுத்தும் ஆசிரியரின் முயற்சி இது. நம்மக்களின் மாண்புக்காகவும் விடுதலைக்காகவும் போரிடவும், எக்கணமும் தமது நலன்களைத் தாயகத்தின் நலன்களுக்காகக் கீழ்ப்படுத்தவும் கூடிய ஆத்ம வளமை இங்கே இருக்கின்றன. இவற்றின் பிரதிபலிப்புக்களை இக்கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

371

உள்வெளி. க.ஆதவன். சென்னை: திருமதி மல்லீஸ்வரி ஆதவன், இல.16, 10வது குறுக்குத்தெரு, இந்திராநகர்,அடையாறு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1985. (சென்னை: அச்சகவிபரம் குறிப்பிடப்படவில்லை)

48 பக்கம். விலை: இந்திய ரூபா 5. அளவு: 17.5X12 சமீ.

இலங்கை இனச்சிக்கலின் அவலங்களை விளக்கும் 24 அரசியல் கவிதைகளின் தொகுப்பு.

372

எட்டாவது நரகம். சோலைக்கிளி (இயற்பெயர்:U.L.M.அத்தீக்). கல்முனை 4: வியூகம், 374 செயிலன் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1988. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்)

viii,62 பக்கம். விலை: 18 ரூபா. அளவு: 18.5X12 சமீ.

கவிஞர் எம்.ஏ.நு.ஃமானின் முன்னுரையுடன் வெளியாகியுள்ள கவிதைத்தொகுதி. காலஓட்டத்தில் புதைந்தும் புதையாமலும் தோன்றுகின்ற கிழக்கிலங்கையின் கவிதை ததும்பும் கிராமியச் சொற்றொடர்களை, கைவேலை வண்ணப்பாட்டுடன் கவிதையாகப் பின்னியுள்ளார்.

373

எப்போதாவது ஒரு நாள். நட்சத்திரன் செவ்விந்தியன். (அருண் அம்பலவாணர்) சென்னை 78: தாமரைச்செல்வி பதிப்பகம், 31/48 இராணிஅண்ணாநகர், கலைஞர்நகர், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1999. (சென்னை 33: விக்னேஸ் பிரிண்டர்ஸ்)

62 பக்கம். விலை: இந்திய ரூபா 25. அளவு: 17.5X12 சமீ.

1994ம் ஆண்டு சிறந்த கவிதை நூல்களுக்கான சுதந்திர இலக்கிய விழா விருது பெற்ற ஆசிரியரின் இரண்டாவது கவிதைத்தொகுதி. முதற்தொகுதியின் (வசந்தம் 91) 21 கவிதைகளுடன் சரிநிகர், அருவி, படி, காலச்சுவடு, நந்தலாலா, எனவே இனி, இன்னுமொரு காலடி ஆகிய இதழ்களில் வெளியான மேலும் 12 கவிதைகளும் சேர்ந்து 33 கவிதைகளுடன் இத்தொகுப்பு வெளியிடப்பெற்றுள்ளது. ஏழு ஆண்டுக்கால கவிதைகளின் தேர்ந்த தொகுப்பு இது.

374

எல்லை கடத்தல். ஒளவை. கொழும்பு 2: மூன்றாவது மனிதன் பதிப்பகம், 3 7/14 வொக்சோல் லேன், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000 (அச்சகம் குறிப்பிடப்படவில்லை)

56 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 20X13 சமீ.

எரிகின்ற ஈழத்து மண்ணிலிருந்து கிளம்பியுள்ள குரல்கள் தான் எத்தனை? அவை எழுப்பிடும் புதுக்கேள்விகளும் தான் எத்தனை? குறிப்பாக, தமிழில் கவிதைத்துறையில் புதிய வீச்சினைத் தருவது ஈழத்துக் கவிதைகளே என்பதை மறுக்க இயலாது. அதிலும் சிறப்பாகப் பெண்கள் பலர் கவிதையினைத் தம்வெளிப்பாட்டு ஊடகமாகத் தேர்ந்தெடுத்தது இன்றைய வரலாற்றில் புதிய கண்ணி.

-அ.மங்கை (முன்னுரையில்)

375

எழுவான் கதிர்கள். அன்பு முகையதீன், பாலமுனை பறூக். (தொகுப்பாளர்கள்). கல்முனை: இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம், சாய்ந்தமருது. 1வது பதிப்பு, 1986. (கல்முனை: அஸீஸ் பிறின்டிங்).

138 பக்கம். விலை: ரூபா 22. அளவு: 18.5X12.5 சமீ.

இது மரபுக்கவிதைகளும், புதுக்கவிதைகளும் அடங்கிய தொகுப்பாகும். 1970ம் ஆண்டின் பின் கவிதையாக்கத் தொடங்கிய கல்முனைப் பிரதேசக் கவிஞர்கள் 24 பேரின் ஆக்கங்கள் இவை. பின்னிணைப்பில் (10 பக்கங்கள்) இக்கவிஞர்கள் பற்றிய யார் எவர்? அறிமுகக் குறிப்பும் காணப்படுகின்றது.

376

என்னில் விழும் நான். வாசுதேவன். யாழ்ப்பாணம்: மல்லிகைப் பந்தல், 234B, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்)

48 பக்கம். விலை: ரூபா 9. அளவு: 18.5X13 சமீ.

மனிதவாழ்வின் துளிர்ப்பிற்கான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் நிறைந்த புதுக்கவிதைத் தொகுப்பு.

377

எனது இராகங்கள். வவுனியா திலீபன். வவுனியா: வன்னி இலக்கிய கலாமன்றம், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம்)

(8),40 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12சமீ.

... இக்கவிஞன் போராட்டங்களையும் காதலுணர்வினையும் நிறையவே பாடியுள்ளான். சில கவிதைகள் *கவிப்பொருளை* நேராகப் பாட, சில உருவ அமைவில் உறக்கம் கொள்கின்றன. இத்தகைய முயற்சிகள் கவிஞனை முன்னணிக்கு நகர்த்துகின்றன.

-செம்பியன் செல்வன் (முன்னுரையில்)

378

ஒரு அகதியின் பாடல். வ.ஐ.ச.ஜெயபாலன். கனடா: தேடல் பதிப்பகம், ரொரன்ரோ, 1வது பதிப்பு, மார்ச் 1991. (நோர்வே: Peenads Graphics, Oslo)

49 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X13.5 சமீ.

தான் வாழுகின்ற காலத்தின் நெருக்கடியைப் பல்வேறு தளங்களில் அனுபவித்துக் கவிதையாக்கியுள்ளார். அவை ஒரு அகதியின் குரலாகத் துயரங்களைச் சொல்லி நிற்கின்றது.

379

ஒரு சரித்திரம் தீக்குளித்தது. கவிதாராஜன். கனடா: உலகத் தமிழர் இயக்கம், கனடாக் கிளை. 1வது பதிப்பு, ஜனவரி 1994. (அச்சக விபரம் அறியமுடியவில்லை)

36 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22X14 சமீ.

தமிழீழத்தின் அடிமை இருள் போக்கத் தம்மை அக்கினிக் குஞ்சுகளாக்கிய மறவர்களை மதித்து அவர்களை ஏற்றிப்போற்றும் கவிதாராஜனின் கவிதைப்பூங்கா.

-பதிப்பாசிரியர்

380

ஒரு யாழ்ப்பாணக் குயில் பேசுகின்றது. ச.சுதாகர். சென்னை 94: சுதா பதிப்பகம், 6, சங்கரபுரம், 3வது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, 1986. (சென்னை 24: பாம்ஸ் பிரின்டர்ஸ், 52 ஆர்க் காடு ரோடு, கோடம்பாக்கம்)

48 பக்கம், விலை: இந்திய ரூபா 3. அளவு: 18X12 சமீ.

ஒடுக்கப்பட்டு நசுக்கப்படுகின்ற ஈழத்தமிழர்களின் விடுதலைக் குரலாக விடிவான விரிப்பாக விளங்குகின்ற இளைஞர் ச.சுதாகரின் கவிதைகள் காலத்தைக் கனப்படுத்துகின்றன. நமது கண்களை கௌரவப்படுத்துகின்றன.

- வலம்புரிஜான் (முன்னுரையில்)

381

ஓ சமுதாயமே: கவிதைத் தொகுதி. கி.மங்களராணி. யாழ்ப்பாணம்: யாழ். ரோட்டரிக்கழகம், 1வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: ஆர். எஸ்.அச்சகம்)

vi,30 பக்கம். விலை: ரூபா 8. அளவு: 18X12.5 சமீ.

ஊனமுற்றவர்களின் உள்ளக் குமுறலை, அவர்களின் ஏக்கங்களை, எதிர்பார்ப்புக்களை ஏமாற்றங்களை அதே நிலையிலுள்ள ஒருவனால் அனுபவபூர்வமாக உணர முடிவது போன்று, பிறிதோர் இரண்டாம் மனிதரால் உணர்வுபூர்வமாக உணர்ந்து உணர்வுகளுக்கு அழுத்தம் தர முடியாது என்பது எனது கருத்து. எனவே தான் எனது சக சகோதரர்களின் சார்பாக அவர்களே நானாக நின்று எம்மவரின் உள வெளிப்பாடுகளை என் கவிதைகளில் ஒலிக்க விட்டேன்.

-நூலாசிரியர் (முன்னுரையில்)

382

ஓவியம்: குறுங்காவியம். சி.ஏ.எலியாசன். கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், 57 மஹிந்த பிளேஸ், 1வது பதிப்பு, 1988. (ஹல்கிரன் ஓயா: நவலங்கா பிரஸ், ராகலை).

28 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 21X14 சமீ.

கொழுந்து ஆயவும் தெங்கு பொறுக்கவும் ரப்பர் பால் சேகரிக்கவும் உரித்தானவர்களாக மட்டுமே - முகம் தெரியாத முத்திரைப் பெண்களாக, இலங்கைத் தபால்தலைகளில் இன்றுவரையிலும் சித்திரிக்கப்படும் (மலையகப்) பெண்களுக்கு அருளன் என்ற ஓவியன் கதாபாத்திரம் மூலம் உருவம் கொடுக்கப்பட்டுள்ளது.

-சாரல் நாடன் (அணிந்துரையில்)

383

கட்டிடக் காட்டுக்குள்: செல்வம் கவிதைகள். செல்வம். பிரான்ஸ்: ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக்கழகம், (ASSEAX), 1வது பதிப்பு, மார்ச் 1992. (பிரான்ஸ்: ASSEAX)

44 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14.5 சமீ.

முகத்தை இழந்து விட்ட அகதி மனிதனின் மனக்குமுறல் ஒவ்வொரு கவிதையிலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

384

கல்லறை மேலான காற்று. (தொகுப்பு) சார்ள்ஸ். யாழ்ப்பாணம் மாணவர் இளைஞர் பொது மன்றம். 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம்)

VIII,41 பக்கம், படங்கள். விலை: ரூபா.15. அளவு: 21X14 சமீ.

வடமராட்சியில் நிகழ்ந்த ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கைகளின் போது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை நினைவுகூரும் 'வகையில் ஈழத்தின் வளரும் கவிஞர்கள் எண்மரால் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு.

385

கவித்தொகை. கிருஷ்ணா வைகுந்தவாசன் (தொகுப்பாசிரியர்). லண்டன்: தமிழர் ஒருங்கிணைப்புச் சபை, 1வது பதிப்பு, தை 1997. (UK: 55 Warren Road, Collierswood, London SW19)

50 பக்கம். விலை: ஸ்டேர்லிங் பவுண் 1.50. அளவு: 21X15 சமீ.

தமிழறிஞர் கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்களின் வாழ்க்கை, விருப்புக்கள், தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட கவிதைகளின் தொகுப்பு. பல்வேறு தமிழறிஞர்களின் மேற்பாடப்பட்ட கவிதைகள் பல உள்ளடங்குகின்றன.

386

கவிதைச்சோலை. விக்னா பாக்கியநாதன். ஜேர்மனி: கலை விளக்கு,Droote 13, 4600 Dortmund 14, West Germany, 2வது பதிப்பு, ஜூலை 1996. முதற் பதிப்பு, நவம்பர் 1988. (Germany: Caritas of Dortmund)

104 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X15 சமீ.

கவிதைச் சோலை. விக்னா பாக்கியநாதன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.எண். 1447, 7 தணிகாசலம் சாலை, தி.நகர். 1வது பதிப்பு, 2000. (சென்னை 4: முருகன் ஆப்செட்)

112 பக்கம். விலை: இந்திய ரூபா 23. அளவு: 18.5X12.5 சமீ.

1978 முதல் எழுதப்பட்டதும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டது இக்கவிதைத்தொகுப்பு. மரபுக்கவிதையாக மலர்ந்துள்ள பல்லினக்கவிமலர்கள் அறுபத்தெட்டினை இது கொண்டுள்ளது.

387

கனல்: நான்கு பெண்களின் கவிதைகள். சுதாகரி சுப்பிரமணியம், விஜயலட்சுமி கந்தையா, ஜயந்தி தளையசிங்கம், சுதாசினி சுப்பிரமணியம். மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், 27ஏ லேடி மனிங் டிரைவ், 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (மட்டக்களப்பு: ஈஸ்ரன் கிரபிக்ஸ்)

32 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 17.5X13 சமீ.

நான்கு பெண்கள் எழுதிய பதின்மூன்று கவிதைகள் அடங்கிய தொகுதி. ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்ற சமூகத்தின் இரட்டை நிலைப்பாடு பற்றிய அதிருப்தி கவிதைகளின் அடிநாதமாக ஒலிக்கின்றது.

388

கனவின் மீதி. கி.பி.அரவிந்தன். சென்னை 600091: பொன்னி, 29 கண்ணகி தெரு, மடிப்பாக்கம், 1வதுபதிப்பு, ஆகஸ்ட்1999. (சென்னை 600005: மணி ஆப்செட்)

96 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 21X14 சமீ.

ஒரு நாட்டில் வாழகின்ற ஓர் இனத்திலுள்ள அகதியின் அவலத்தை இனத்தின் அவலமாக, நாட்டின் அவலமாக, உலகின் அவலமாகக் காட்டுகின்ற திறமை அரவிந்தனுக்கு கைவந்துள்ளதென்றே கருதுகின்றேன்.

- கா.சிவத்தம்பி (முன்னுரையில்)

இத்தொகுப்பில் 31 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. புலம்பெயர்வாழ்வின் நெருக்கடிகள் பற்றி இவை பேசுகின்றன.

389

காக்கும் நிலைக்கு உயிராகி... பசீர் (முகம்மது தாவுத் பசீர் உசேன்). யாழ்ப்பாணம்: பொதுமை வெளியீடு, 39, கோவில் வீதி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை)

(3),51 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 17.5X12 சமீ.

இவன் எழுதுகோல் வரலாற்றை எழுதும்கோலாக இருக்க வேண்டும் என்ற உத்வேகத்தால் உற்சாகத்துடன் எழுதப் புறப்பட்டவன். ஸ்ரீலங்கா இராணுவம் ஈழப்பகுதிகளில் செய்த அநியாய அட்டூழியங்களைப் பதிவுசெய்தது இவன் பேனா. கடந்த காலங்களில் கூட நடந்து வந்த தோழர்களை இழந்தபோது இவன் எழுதியவை உற்சாகத்தை விதைப்பவையாக விரிந்தன. எதிர்காலத்தை நம்பிக்கையோடு நோக்கும் தெம்பைப் பிறப்பிக்கும் கருவூலங்களாக அவை விளங்கின.

-இளையவன் (முன்னுரையில்)

390

காதோடு சொல்லி விடு. மேஜர்பாரதி (இயற்பெயர்: சத்திய பாமா விஸ்வலிங்கம்). பிரான்ஸ்: தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீடு, 2ம் பதிப்பு, ஒக்டோபர் 1995. 1வது பதிப்பு, புரட்டாதி 1993. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

98 பக்கம். விலை: ரூபா 65. அளவு: 18X12.5 சமீ.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளியான மேஜர் பாரதியின் 18 கவிதைகள் அடங்கிய தொகுதி. *கப்டன் அக்கினோ* பற்றிய ஒரு போராட்டக் குறிப்பும். *களத்தில் கலைஞர்கள், களத்திலிருந்து ஒரு கடிதம்* ஆகிய இரு கட்டுரைகளும் *வெள்ளையம்மா* என்ற ஒரு சிறுகதையும் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் விடுதலைப்போராட்டத்தைப் பகைப்புலமாகக் கொண்டவையே.

391

காலங்கள்: கவிதைகள் நாட்குறிப்புகள். கிருஷாந்தி ரட்ணராஜா. திருக்கோணமலை: கூடல் பதிப்பகம், 1வது பதிப்பு, செப்ரெம்பர் 1998. (தெகிவளை: த நியுட் குரூப்)

48 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 19X12.5 சமீ.

ஈழத்தின் தமிழ்க்கவிதைத்துறையில் பெண் படைப்பாளிகள் வரிசையில் நூலாசிரியருக்கும் இடம் உண்டு என்பதை இந்நூல் புரிய வைக்கின்றது.

392

காலத்தின் கோலங்கள். M.H.M.ஹலீம்தீன். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, 1984. (கொழும்பு 2: VAT Print, 96, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை)

140 பக்கம், தகடுகள், புகைப்படம். விலை: ரூபா 20. அளவு: 18X14 சமீ.

சமுதாய முன்னேற்றத்தையும், தனி மனிதன் சீர்திருத்தத்தையும் தத்துவச் சிந்தனையையும் தாங்கி வரும் கவிதைத் தொகுப்பு.

393

காலத்துயர் (கவிதைகள்). சு.வில்வரத்தினம். திருக்கோணமலை: வி.ஜெ.வெளியீடு, 1வது பதிப்பு, 1995. (தெகிவளை: டெக்னோ பிரின்ட்)

(8),35 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 19.5X11.5 சமீ.

அக்டோபர் 1992 இல் யாழ்ப்பாணத் தீவுகள் சிறைப்பிடிக்கப்பட்டது

முதல் ஆசிரியர் தன் குடும்பத்துடன் இணையத்துடித்த எட்டு மாத காலத்துயர் கவிதைகளாகியுள்ளன. தமிழ்பேசும் மக்களின் சமகாலத் துயர்களையும், வடபகுதி மக்களின் புலப்பெயர்வின் அவலங்களையும் தொடரும் இன்னல்களையும் கவித்துவத்தோடு பதிவு செய்துள்ளார்.

394

காலி லீலை. மு.பொன்னம்பலம். சென்னை 600028: த்வனி புக்ஸ், 25, III Trust Cross Street, 1வது பதிப்பு, மார்ச் 1997. (சென்னை 600001: Students Offset Centre)

(14),184 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

இந்நூலில் அடங்கியுள்ள படைப்புகள் நான்கு காலப்பகுதியைக் கொண்டவை. முதற்பகுதி (1960-70) *அது* என்னும் ஆசிரியரின் கவிதைத் தொகுதியிலும் ஏனைய சிறு பிரசுரங்களிலும் வெளியானவை. இரண்டாவது பகுதி (1970-80) *அக வெளிச் சமிக்ஞைகள்* என்னும் தலைப்பில் நூலுருப்பெறக்காத்திருந்த படைப்புக்களாகும். மூன்றாவது பகுதி (1980-90), *விடுதலையும் புதிய எல்லைகளும், விலங்கை விட்டெழும் மனிதர்கள்* ஆகிய ஆசிரியரின் இரு நூல்களில் வெளியானவை. நான்காவது பகுதியான 1990க்கு உரியவை *பேரியல்பின் சிற்றொலிகள்* என்னும் தலைப்பில் பிரசுரிக்கப்படவிருந்த படைப்புகளாகும். இவை சில திருத்தங்களுடன் காலி லீலையாக வெளிவருகின்றது.

'கட்டற்ற காலத்தின்ருபமான காலியின் (காளி) சிறுஅசைவும் ஆனந்த விளையாட்டின் (லீலையின்) வெளிக்காட்டலே என்றவகையில் நூலின் தலைப்பு காலி லீலையாக அமைகின்றது.'

-ஆசிரியர் (முன்னுரையில்)

395

காற்று. மௌனகுரு சித்தார்த்தன். ஆனைக்கோட்டை: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

50 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 17.5X11.5 சமீ.

இந்தத் தொகுப்பில் 20 கவிதைகள் உள்ளன. மனவளர்ச்சி மிக்க ஒரு சிறுவனின் (வயது15) அனுபவங்கள், சிந்தனைகள், கற்பனைகளின் வெளிப்பாடுகள். இவை வழக்கமான அர்த்தத்தில் சிறுவர் இலக்கியத்தின் பாற்படுவனவல்ல. இளமையின் வாசற்படியில் கால் வைக்கும் ஒரு சிறுவனின் படைப்பு.

-எம்.ஏ.நு.ம்.மான் (முன்னுரையில்)

396

காற்றுவழிக் கிராமம். சு.வில்வரத்தினம். திருக்கோணமலை:

ஆகவே, 1வது பதிப்பு, மார்ச் 1995. (தெகிவளை: Techno Print)
26 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 17.5x12.5 சமீ.

யுத்த காலத்தில் சிதைக்கப்பட்ட ஈழத்தின் கிராமங்களின் பதிவை உள்வாங்கிய ஆவணமாக இக் கவிதைத்தொகுப்பு அமைகின்றது.

397

கானல் வரி. சேரன். சென்னை 20: பொன்னி, 12 முதல் பிரதான சாலை, நேரு நகர், அடையாறு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1989. (சென்னை: இராசகிளி பிரின்டர்ஸ்)

1975 முதல் 1981 வரையிலான காலப்பகுதியில் சேரன் எழுதிய கவிதைகளில் தேர்ந்தெடுத்த 28 கவிதைகளின் தொகுப்பு.

398

குறிஞ்சித்தென்னவன் கவிதைகள். குறிஞ்சித்தென்னவன். கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், 57 மஹிந்த பிளேஸ், 1வது பதிப்பு, 1987. (கண்டி: யூனியன் அச்சகம்)
40 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 18x12 சமீ.

தேயிலைக் காடுகளிலும் மலை முகடுகளிலும் வாழும் மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றிக்கூறும் கவிதைகள்.

399

கூடைக்குள் தேசம். சு முரளீதரன். கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், 57 மஹிந்த பிளேஸ், 1வது பதிப்பு, 1988. (கண்டி: ரோயல் பிரின்டர்ஸ், 190, கொழும்பு வீதி)
36 பக்கம், ஓவியங்கள். விலை: ரூபா 9.75 அளவு: 18x11 சமீ.

இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த எழுபத்தியாறு ஹைக்கூ கவிதைகளின் தொகுப்பு. மாதிரிக்குச் சில:

(1) கூடையைக் கனக்க
கனக்கச் சுமந்து சென்றார்கள்.
உள்ளே இந்த தேசம் (கவிதை இல. 1)

(2) சில்லறை விலையில்
சின்னச் சின்ன சவப்பெட்டிகள்
சிகரெட் பாக்கெட்டுகள் (கவிதை இல. 67)

400

கொக்கூர் கிழான் கவிதைகள்: 1962-1982. கொக்கூர் கிழான் (இயற்பெயர்: கா.வை.இரத்தினசிங்கம்) கொழும்பு 2: அறிவராய வெளியீடு, 21 ரைபிள் வீதி, 2வது பதிப்பு, 1983. 1வது பதிப்பு, 1977. (கொழும்பு 12: சிலோன் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்)
102 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 20.5x13.5 சமீ.

என்னளவில் யாப்பும் எழிலும் கவியுணர்வும்
மின்னி மின்னி ஆங்காங்கு மிளிர, சமூகத்தில்
மாற்றம் பல- துறைத்தும் வருவிக்க வே துடிக்கும்
சீற்றம் படைத்த ஒரு செய்ய மனத்தை, இந்த
நூலில் பல இடத்தும் நோட்டமாய்க் கண்டேன் நான்.
-சில்லையூர் செல்வராசன் (அணிந்துரையில்)

401

கோசல்யா கவிதைகள். கோசல்யா சொர்ணலிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7 தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (சென்னை 600094: Script Offset)
128 பக்கம். விலை: இந்திய ரூபா 26. அளவு: 18.5x12.5 சமீ.

ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் ஆசிரியரின் இரண்டாவது கவிதை நூலாக வெளிவரும் இத்தொகுதியில் 51 கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

402

சக்தி பாலஐயாவின் கவிதைகள். சக்தி பாலஐயா. கொழும்பு 13: துரைவி பதிப்பகம், 85 ஸ்ரீ இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை, 1வதுபதிப்பு, பெப்ரவரி 1998 (சென்னை14: பார்க்கர் கொம்பியுட்டர்ஸ், 293 அகமட் காம்ப்ளெக்ஸ், கீழ்த்தளம், இராயப்பேட்டை நெடுஞ் சாலை)
160 பக்கம். விலை: இந்திய ரூபா 50. அளவு: 21x13.5 சமீ.

மலையக மூதறிஞர் தமிழ்ஒளி சக்தி பால ஐயாவின் இக்கவிதைத் தொகுப்பு துரைவி பதிப்பகத்தின் ஐந்தாவது நூலாகும்.

403

சாகுந்தல காவியம். க.தி.சம்பந்தன். (க.திருஞானசம்பந்தன்). யாழ்ப்பாணம்: சு.இராஜநாயகம், திருநெல்வேலி தெற்கு, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)
xvi,316 பக்கம். விலை: ரூபா 60. அளவு: 21x14 சமீ.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை நெறிப்படுத்திய தமிழ் மரபுக்கமைய அபிஞ்ஞான சாகுந்தலக் கதையில் சில மாற்றங்கள் இன்றியமை யாதனவாகின. படலங்களைக் காண்டங்களாக வகுத்தருளியவரும்

பண்டிதமணியவர்களே. பெண்மையின் மாட்சிமையை சான்றோர் உணர்த்திய வழி காட்ட முயன்றிருக்கின்றேன்.

-நூலாசிரியர் (நூன்முகத்திலிருந்து)

404

சிரமம் குறைகிறது. கல்வயல் வே. குமாரசாமி. சாவகச்சேரி: அறிவழகுப் பதிப்பகம், பெரிய அரசடி, 1வது பதிப்பு, 1980. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்)

xvi,96 பக்கம். விலை: ரூபா 7.75. அளவு: 18x12.5 சமீ.

மொழியாற்றற், செம்மையும் ஓசையுணர்வுப் பெருமிதமும் தெளிவும் திட்டமும் திறம்பட அமைந்து மிளிறும் மரபுவழிக் கவிதைகளின் தொகுப்பு. பேராசிரியர் கைலாசபதியின் முன்னுரையுடன் வெளி வந்துள்ளது.

405

சில்லையூர் செல்வராசன் கவிதைகள்: தொகுதி 1. கமலினி செல்வராசன். கொழும்பு: அதிசயன் பதிப்பகம், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ்)

184 பக்கம், புகைப்படம். விலை: ரூபா 200. அளவு: 22x14 சமீ.

ஈழத்தில் குறிப்பிடத் தகுந்த கவிதைகள் எழுதித் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்ட சில்லையூர் செல்வராசனின் கவிதைகள் அடங்கிய முதலாவது தொகுதி.

406

சுடலைகளாகும் நகரங்கள். தீரன். பிரான்ஸ்: Ceylon Arts Centre, Boite No.2, 1 Allee Moliere, 95140 Gorges Les, Gonesse, France. 1வது பதிப்பு, 1989. (சென்னை 2: காந்தளகம், 834, அண்ணா சாலை)

88பக்கம், வரைபடம். விலை: இந்திய ரூபா 8. அளவு: 17x10 சமீ.

புண்பட்டுப் புரையோடிப்போன ஈழத்தமிழரின் அவலவாழ்வு புதுக் கவிதைகளின் வாயிலாக மரண ஓலங்களாக எழுகின்றன.

407

சுபத்திரன் கவிதைகள். சுபத்திரன். மட்டக்களப்பு: பூவரசுகள் வெளியீடு, 37, 2வது குறுக்குத் தெரு, வேலூர், கல்லடி. 1வது பதிப்பு, மே 1997. (Colombo 4: Pressmate, 90/7 Louries Road)

148 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 21.5x14சமீ.

இத்தொகுதியில், கவிஞர் சுபத்திரன் 1963ம் ஆண்டு முதல் இயற்

றிய கவிதைகள் 91 தொகுக்கப்பெற்றுள்ளன. அவரின் அகால மரணத்தின் பின் 18 ஆண்டுகள் கழிந்து இவை நூலுருப்பெறுவது குறிப்பிடத்தக்கது.

408

சுவைக்கச் சில துளிகள்: கவிதைகள். கே.கே.பீதாம்பரம் (புனைபெயர்:ஏறாவூர் பரம்) ஏறாவூர் 5: வெளியீட்டுவிபரம் அறிய முடியவில்லை. 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1980. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்)

(8),20 பக்கம். விலை: ரூபா 3. அளவு: 18.5x12 சமீ.

மனித வாழ்க்கையிலே இயல்பாகவே நடக்கின்ற பல அன்றாடச் சம்பவங்கள் சுவையான கவிதைகளாக இந்நூலில் இடம்பெறுகின்றன.

409

சூரியனோடு பேசுதல். வ.ஐ.ச.ஜெயபாலன். கோவை 641015: யாழ்.பதிப்பகம், 386, காமராஜர் வீதி, உப்பிலிப்பாளையம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1986. (கோவை 641030: Printopack)

72 பக்கம். விலை: இந்திய ரூபா 8. அளவு: 18x12 சமீ.

சூரியனோடு பேசுதல். வ.ஐ.ச.ஜெயபாலன். பிரான்ஸ், ஆசிரியர். 2வது பதிப்பு, ஜூலை 1987 (சென்னை 04: மிதிலா அச்சகம், மைலாப்பூர்)

78 பக்கம். விலை: இந்திய ரூபா 10. அளவு: 18x12 சமீ.

போர்க்களமாய் மாறிப்போன ஈழமண்ணிலிருந்து முகிழ்க்கும் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையைப் பலப்பல பரிமாணங்களுடன் புலனாக்குவதால் இவற்றை மக்களுக்கு வழங்குவதும் கூடப் போராட்டத்துக்குப் புரியும் உதவியே.

-துரை மடங்கன் (வெளியீட்டுரையில்)

410

செப்பனிட்ட படிமங்கள். சி.சிவசேகரம். சென்னை 600002: சென்னை புக்ஸ், 6, தாயார் சாஹிப் 2வது ஒழுங்கை, 1வது பதிப்பு, 1988. (சென்னை 20: இராசகிளி பதிப்பகம், 12 முதலாவது பிரதான வீதி, நேரு நகர், அடையார்).

56 பக்கம், விலை: இந்திய ரூபா. 7.50. அளவு: 18x12 சமீ.

தாயகம், புதியபூமி, செம்பதாகை, செங்கொடி ஆகிய சஞ்சிகைகளில் வெளியான ஆசிரியரின் கவிதைத் தொகுப்பு.

411

சேரர் வழியில் வீரர் காவியம். அகளங்கள். யாழ்ப்பாணம்: செ.சண்முகநாதன், 1வது பதிப்பு, ஆடி 1982. (யாழ்ப்பாணம்: வஸ் தியான் அச்சகம்)

32 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 18.5X12 சமீ.

சிலப்பதிகாரத்தில் வஞ்சிக்காண்டத்தில் வரும் பகுதியினை இலகு தமிழில் ஒரு குறுங்காவியமாக்கி, சேரன் செங்குட்டுவனின் வீரத் தினை இலக்கிய ரசிகர்கள் சுவைக்க வழி செய்துள்ளார்.

412

சொல்லாத சேதிகள். அ.சங்கரி, சிவரமணி ... இன்னும் பிறர். யாழ்ப்பாணம்: பெண்கள் ஆய்வுவட்டம், 51, சங்கிலியன் வீதி, நல் லூர். 1வது பதிப்பு,1986. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், 360 பிரதான வீதி.)

(6),42 பக்கம். விலை: ரூபா 8. அளவு: 17X11 சமீ.

அ.சங்கரி. சிவரமணி, சன்மார்க்கா, ரங்கா, மசூரா ஏ.மஜிட், ஒளவை, மைத்ரேயி, பிரேமி, ரேணுகா நவரட்ணம், ஊர்வசி ஆகிய பத்துப் பெண்கவிஞர்களின் 24 கவிதைகளின் தொகுப்பு. இலங் கைத் தமிழ்ப்பெண்கவிஞர்களது முதலாவது கவிதைத் தொகுதி யாகவும் அமையும் இந்நூலில் ***பெண்*** என்ற நிலையிலிருந்து அவர்களது உணர்வுகள், கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

413

தண்டிகை கனகராயன் பள்ளு. மாவை சின்னக்குட்டிப் புலவர். காங்கேசன்துறை: தமிழ் மன்றம், மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, நவம்பர் 1983. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்)

XiV,(14),67 பக்கம், தகடு. விலை: இலவசம். அளவு: 18X12.5சமீ.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் வலிகாமப் பகுதியில் அதிகார முதலியாகத் தெல்லிப்பழையில் இருந்த தண் டிகைக் கனகராய முதலியாரைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு அவரால் ஆதரிக்கப்பட்டவரான மாவை சின்னக்குட்டிப் புலவரால் இயற்றப்பட்டது தண்டிகைக் கனகராயன் பள்ளுப் பிரபந் தமாகும். கி.பி.1792 ஆண்டளவில் இயற்றப்பட்ட இந்த இலக்கியம் 1932இல் தெல்லிப்பழை வ.குமாரசுவாமி அவர்களைப் பதிப்பா சிரியராகக் கொண்டு சென்னையில் பதிப்பிக்கப்பட்டது. இப்புதிய பதிப்பு, ஆசிரியர் ஆ.ஞானசுந்தரம் அவர்களின் நினைவு வெளி யீடாக வந்துள்ளது. முன்னைய பதிப்பிலுள்ளது போன்று நாற்று நடுகை வரையிலான 153 பாடல்களே இப்பதிப்பிலும் உள்ளன.

414

தாயகச் சமாதானம். ஜெயா நடேசன். சென்னை 600017: மணி மேகலைப் பிரசுரம், த.பெ.எண். 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: ஸ்கிரிப்ட்ஸ் ஓப்செட்)

80 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 18.5x12.5 சமீ.

புலம்பெயர்ந்த நாடுகளில் தாம் தேடிக்கொண்ட, கண்டு கொண்ட அனுபவங்களையும், தாயகமண்ணின் அவலங்கள், சமாதானத்தை நோக்கிய எதிர்பார்ப்பு, ஆகியவற்றையும் எண்ணக்கருவாகக்கொண்டு, சமுதாய நலன் நாடி முகிழ்த்த கவிதைகளின் தொகுப்பு.

415

தாலாட்டுக்கள் 2 (சினிமா). சண்முகம் ஜெயதாசன், சுலோஜனா ஜெயதாசன். காங்கேசன்துறை: புதுவீடு, கருகம்பனை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

30 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

தமிழ்த் திரையுலகில் திரைப்படப்பாடல்களாக வெளிவந்து பிரபல்ய மான 14 தாலாட்டுப் பாடல்களின் தொகுப்பு.

மேலும் பார்க்க: 219, 220

416

திசைகள் வெளிக்கும். தாட்சாயணி (இயற்பெயர்: சபா.சிவானந்தன்) கனடா: தமிழ்த்தேசம் வெளியீடு, 1வது பதிப்பு, கார்த்திகை 1999. (அச்சகவிபரம் குறிப்பிடப்படவில்லை)

141 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22X14.5 சமீ.

கவிஞர் காசி ஆனந்தன் தொடக்கி வைத்த தமிழீழப் பரணிப்பாடல் களைப் பின்பற்றிப் பாடிவரும் இளங்கவிஞர் வரிசையில் தாட்சா யணியும் திகழ்கிறார். பரண் மீது அமர்ந்து போர்க்களக்காட்சி களைக் கண்டு வியந்து *பரணி* பாடிய பழந்தமிழ்க் கவிஞர்களைப் போலத் தொலைதூர கனடாவில் இருந்தவண்ணம் தமிழீழப் போராட் டக் காட்சிகளை மனக்கண்ணில் கண்டு இவர் பாடியுள்ள கவிதை கள் அந்தக் காலத்திற்கே நம்மைக் கொண்டு செல்கின்றன.

-பழ.நெடுமாறன் (அணிந்துரையில்)

417

தியாக யந்திரங்கள். சு.முரளிதரன். கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், 57, மஹிந்த பிளேஸ், 1வது பதிப்பு, 1986. (கண்டி: ஹொந்த ஹித்த நியு பிரின்டர்ஸ், 79, திருக்கோணமலை வீதி)

40 பக்கம். விலை: ரூபா 10.50. அளவு: 18X12 சமீ.

புதுக்கவிதைத் தொகுப்பு.

418

தீவ்வியா. புதுநகர் செல்லத்துரை. பிரான்ஸ்: தமிழர் கலைக் கலாச்சார மாமன்றம், செர்ஜிபோந்த்வாஸ், 1வது பதிப்பு, ஒக் டோபர் 1999. (Chennai 600007: D.P. Tech, V.M.Printing Works)
168 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

தாயகத்தில் வன்னிப் பெருநிலப்பகுதியில் நலிந்து வாழும் தமிழ் மக்களின் பண்பாட்டை, அன்றாட வாழ்க்கை முறைகளைப் புகைப் படமாக்கித் தான் புலம்பெயர்ந்த நாட்டுக்கு எடுத்துவந்து அப்படங் களின் விம்பங்கள் தரும் உணர்வலைகளைத் தொகுத்து புலம் பெயர் சூழலில் கவிதைகளாக்கித் தொகுத்துத்தரும் ஒரு முயற்சி. தமது வேரை அறுத்துக் கொண்டு உலகின் பல்வேறு நாடு களிலும் வாழும் நம்மவர்கள் தமது பழைய வாழ்வின் மலரும் நினைவுகளை மீட்டெடுக்க இத்தொகுப்பு உதவும்.

419

திறக்கப்படாத தீப்பெட்டிகள். மு.இ.அ.ஜப்பார். கல்முனை:35, சென்றல்ரோட், மருதமுனை 2, 1வது பதிப்பு, 1986 (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்)
(12),44 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12.5 சமீ.

இங்கு இளமையின் துடிப்புக் காணப்படுகின்றது. சமகாலத்து நிகழ் வுகள் ஜப்பாரின் மனதில் ஏற்படுத்திய சலனங்களை இத்தொகுதி பதிவு செய்துள்ளது.

-கா.சிவத்தம்பி (முன்னுரையில்)

420

தீயின் வார்ப்புகள். அம்பலவன் புவனேந்திரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7 தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (சென்னை: ஸ்கிரிப்ட் ஓப்செட்)
128 பக்கம். விலை: இந்திய ரூபா 26. அளவு: 18.5X12.5 சமீ.

ஜேர்மனியிலிருந்து வெளியிட்ட தீயின் வார்ப்புகள், கவிஞன், இன் னொரு ஜனனம் ஆகிய மூன்று சிறு கவிதைத் தொகுப்புகளிலி ருந்து தேர்ந்தெடுத்த 63 கவிதைகள் இதில் அடங்கியுள்ளன.

421

துப்பாக்கியில் துளிர்விடும் தேசம். தி.திலீபன். (நோர்வே நக்கீரனார்). நோர்வே: துருவமகள் பிரசுரம், Ammerudhellinga 72,

Leil 653, 0959 Oslo, 1வது பதிப்பு, 1997. (சென்னை 600040: தொல் காப்பியனார் அச்சகம், 8 நீலா மேற்கு வீதி)
104 பக்கம், சித்திரங்கள். விலை: இந்திய ரூபா 20. அளவு: 17.5x 12 சமீ. ISBN 82-91866-01-05

ஈழமக்களின் அவலங்களை, அவைக்குக் கொண்டுவந்துள்ளேன். சம்பவங்கள் சிலவற்றையும் சமர்ப்பித்துள்ளேன். எந்தவொரு விடுதலை இயக்கத்தையோ, தனிமனிதனையோ கண்டிப்பதோ எழுத் துக்களைத் தண்டிப்பதோ எனது நோக்கமல்ல. இது ஈழத்துக்குயிலின் துருவக்குரல்.

-நூலாசிரியர் (என்னுரையில்)

422

தூரத்து விடியல். விக்னா பாக்கியநாதன். சென்னை 600017: மணிமேகலைப்பிரசுரம், 7 தணிகாசலம்சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை: ஸ்கிரிப்ட் ஓப்செட்)
96 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 18.5X12.5 சமீ.

மூன்று பகுதிகளாக அமைந்த இக்கவிதைத்தொகுதியில் முதற் பகுதி மொழிப்பற்று, நாட்டுப்பற்று, தத்துவம், பெண்ணுரிமை ஆகிய அம்சங்களைக் கருப்பொருளாகக் கொண்டமைந்த எழுச்சிக் கவிதை கள். இரண்டாம் பகுதி, *குறளின் நிழல்கள்* என்ற தலைப்பில் திருக் குறளின் சாயலில் அமைந்த 133 ஈரடிக் குறட்பாக்கள். இவை புலம் பெயர் வாழ்வின் கோலங்களை சித்திரிப்பவை. மூன்றாவது பகுதி, *ஜேர்ம(னி)னிக்குறள்கள்* என்ற தலைப்பில், ஜேர்மனியில் வாழும் எம் மவரின் வாழ்வு முறைமைகள், சிக்கல்கள், மொழிப்பிரச்சினை, அந்நி யச் சூழலில் அவதியுறும் நிலைமை மற்றும் தாயகப்பண்பாடுகள் புலம்பெயர் வாழ்வில் கடைப்பிடிக்கப்படுவதால் ஏற்படும் மோதல்கள் என்பன நகைச்சுவை உணர்வுடன் 70 குறட்பாக்களில் சித்திரிக்கப் பட்டுள்ளன. மாதிரிக்குச் சில:

> **"அதிபர் ஆசிரியர் மெக்கானிக்கர் முதலாளிகளே- நீவிர்**
> **கொதிக்காதீர் கோப்பை கழுவும் வேளை."**
>
> **"பெறுமவற்றுள் யாமறிந்த தொன்று அறிவறிந்த**
> **மக்களைச் சோஷியலில் இருக்கும் போது பெறல்"**

423

தேடல்: கவிதைத் தொகுப்பு. ரமேஷ் வவுனியன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7 தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஓப்செட்)
76 பக்கம். விலை: இந்திய ரூபா 16. அளவு: 18.5X12.5 சமீ.

1989 முதல் 1995ம் ஆண்டுக்காலப்பகுதியில் ஜேர்மனியிலிருந்து வெளிவந்த இளைஞன், பயணம், ஆகிய இதழ்களிலும் ஈழநாடு (பிரான்ஸ்), உதயன்(கனடா) போன்ற பத்திரிகைகளிலும் வெளி வந்த உயிரோட்டம் மிக்க கவிதைகளின் தொகுப்பு. ஈழமண் ணின் இன்னல்களால் பதினேழு வயதில் புலம்பெயர்ந்து தனிமைச் சிறையில் சிக்கி உயிரறுந்து போன ஒரு இளைஞனின் உணர் வலைகளாக எழும் கவிதைகள்.

424

நதிக்கரை மூங்கில். சி.சிவசேகரம். பெங்களூர் 38: காவ்யா, 8, சாஸ்திரிநகர், 1வது பதிப்பு, 1983. (தமிழ் நாடு: வண்ணம் அச்சகம், வாணியம்பாடி)

70 பக்கம். விலை: இந்திய ரூபா 6. அளவு: 18X12 சமீ.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக எழுதப்பட்ட 29 கவிதை களின் தொகுப்பு. ஆசிரியரின் முதலாவது கவிதைத்தொகுதி.

425

நமக்கென்றொரு புல்வெளி. வ.ஐ.ச.ஜெயபாலன். சென்னை 14: க்ரியா, 1வது பதிப்பு, மார்ச் 1987 (சென்னை 14: பகவதிஅச்சகம்)

104 பக்கம். விலை: இந்திய ரூபா 12. அளவு: 18X12 சமீ.

தற்கால ஈழத்துக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற் றிருக்கும் ஆசிரியரது கவிதைகள் அடங்கிய தொகுப்பு.

426

நல்லை அமிழ்தன் கவிதைகள். நல்லை அமிழ்தன். யாழ்ப் பாணம்: வித்தியோதயம், புதிய செம்மணி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1981. (நல்லூர்: நாவலன் பதிப்பகம்)

58 பக்கம். விலை: ரூபா 6. அளவு: 18X12 சமீ.

புரட்சிக் கருத்துக்கள் பொதிந்த புதுக்கவிதைகளின் தொகுப்பு.

427

நாங்கள் மனிதர். இ.முருகையன். சென்னை 02: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து, சவுத் ஏசியன் புக்ஸ், 1வது பதிப்பு, பெப்ரவரி 1992. (சென்னை: சூர்யா அச்சகம்)

152 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 17.5X12.5 சமீ.

இக்கவிதைத் தொகுதியில் ஏறத்தாழ 30 ஆண்டுக்காலத்துக்கு மேலாக முருகையன் இயற்றிய தனிப்பாட்டுக்கள் உள்ளன. இவை

தனிப்பாட்டுக்களேயாயினும் ஒரே படைப்பாளியின் ஆக்கங்கள் என்ற முறையில் உள்ளார்ந்த தொடர்புகளையுடையன. ஆனால் பல்வகைப் பண்பு படைத்தவையாயும் உள்ளன. இக்கவிதைகள் எல்லாம் மனித குல மேம்பாட்டை நோக்கிய உள்ளுந்தல்களாகவும், தேடுதலாகவும், விசாரணையாகவும், அங்கலாய்ப்புகளாகவும் தேற்றமாகவும், தெளிகையாகவும், உறுதியாகவும் இடையறாத பரிசீலனைகளின் ஆவணங்களாகவும் அமைகின்றன.

428

நாளைய நாயகி. சூரியன். யாழ்ப்பாணம்: நதி வெளியீட்டகம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை)

24 பக்கம். விலை: ரூபா 3. அளவு: 18X12 சமீ.

1983 ஜூலை கலவரத்தின் தாக்கத்தால் எழுந்த தேசிய அலையில் பெண்கள் ஈர்க்கப்பட்டபோது எழுதப்பட்ட கவிதைத்தொகுதி.

429

நிகழ்வுகளும் உணர்வுகளும்: இருவர் கவிதைகள். ரமேஷ், உதயன். ஊர்காவற்றுறை: காவலூர் இலக்கிய வட்டம், கரம் பொன், 1வது பதிப்பு, தை 1985. (யாழ்ப்பாணம்: வானதி அச்சகம், 30/1, கே.கே.எஸ். வீதி)

(6),48 பக்கம். விலை: ரூபா 7. அளவு: 18.5X12 சமீ.

எமது சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகளை, சொல்லுக்கும் செயலுக் கும் இடையேயான மனிதமுகங்களை பல்வேறுபட்ட மனித உணர்வு களை, சமகாலப்பிரச்சினைகளை களமாகக் கொண்ட கவிதைத் தொகுப்பு.

430

நித்தியானந்தம். பரமலிங்கம் நித்தியானந்தன் நினைவு மலர். 1வது பதிப்பு, ஜூலை 1987. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்)

80 பக்கம். விலை: இலவசம். அளவு: 21X14 சமீ.

ஈழத்துக் கவிஞர் ஐவரது எழுபத்தியேழு கவிதைகளின் தொகுப்பு. கவிஞர் சத்தியசீலன், வ.இராசையா, யாழ்.ஜெயம், வளவை வளவன், த.துரைசிங்கம் ஆகியோரது கவிதைகள் இதில் அடங்கியுள்ளன.

431

நித்யகல்யாணி. முல்லை அமுதன். யாழ்ப்பாணம்: இ.மகேந்திரன். 1வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: கவின் அச்சகம், 559,காங்கேசன் துறை வீதி).

(8),40 பக்கம், விலை: ரூபா 5. அளவு: 18X12 சமீ.

சமூகமலர்கள், துயரகீதங்கள், புதுவகைவிளக்கம் என்னும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இப் புதுக்கவிதைத் தொகுதியிலுள்ள சில கவிதைகள் அவ்வப்போது சிரித்திரன் மாத இதழில் வெளிவந்துள்ளன.

432

நிறமற்றுப் போன கனவுகள். இளவாலை விஜயேந்திரன். சென்னை 2: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் விஷன், 1வது பதிப்பு, மார்ச் 1999. (சென்னை 05: மணி ஆப்செட் பிரின்டர்ஸ்)

vi,103 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 21.5X14 சமீ.

ஈழத்தமிழரின் புலப்பெயர்வு தமிழிலக்கியத்தின் கவிதை வரலாற்றில் சில பரிமாணங்களை ஏற்படுத்தியது. தமிழ்மக்களின் தற்கால விதியாவது, புலப்பெயர்வு விழுமியங்களின் வேறுபாடான பெறுமானங்கள் என்பவற்றால் தீர்மானிக்கப்படுவனவாயின. கவிஞனின் நெஞ்சில் இவை ஆழமாக உறுத்தியபோது புலப்பெயர்வு இலக்கியத்தில் தமிழ்க் கவிதைக்கு வளஞ் சேர்ப்பனவாய் கவிதைகள் வெடித்துக் கிளம்பின. அவ்வகையில் நோர்வேயிலிருந்து வெடித்த ஒரு சிறுபொறி இது. இளவாலை விஜயேந்திரனின் 1987-1992 வரையுள்ள காலப்பகுதிக் கவிதைகள்.

433

நினைதைகள். க.சிவபாலன். New York: K.Sivapalan, 3R, 52-21, Skillman Avenue, Woodside, 1வது பதிப்பு, ஜனவரி 1987. (Madras 5: Jeevan Press, Triplicane)

84 பக்கம். விலை: இந்திய ரூபா 8. அளவு: 18X12.5 சமீ.

புதுக்கவிதை ஒரு புதிய இலக்கியம். அதைப் புதுக்கவிதை என்று அழைப்பதைத்தான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இத் தன்மையால் என் நெஞ்சில் எழுந்த எழுச்சியே இந்த நினைதைகள் என்ற சொற்பிரயோகம்.

-ஆசிரியர் (முன்னுரையில்)

434

நினைவழியா நாட்கள்: கவிதைத்தொகுதி. புதுவை இரத்தினதுரை. பிரான்ஸ்: தமிழ்த்தாய் வெளியீடு, 2வது பதிப்பு, ஆவணி 1993. (யாழ்ப்பாணம்: மாறன் பதிப்பகம், 664 மருத்துவமனை வீதி)

174 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

விடுதலைப் போராட்டச் சூழலில் எழுந்த கவிதைகளின் தொகுதி. மனித அவலங்களையும், ஏக்கங்களையும் படிமக்காட்சிகளாகச் சித்திரித்து, இனவாதக் கொடூரத்தை அழுத்தமாக உணர்த்திக்காட்டுவதுடன், ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசம் மிக்க கொதிப் புணர்வையும் இந்நூலிலுள்ள கவிதைகள் தட்டி எழுப்புகின்றன.

435

நீ இப்பொழுது இறங்கும் ஆறு: சேரன் கவிதைகள் ஒரு நூறு. சேரன். நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. (சென்னை: பிரிண்ட் ஸ்பெஷலிட்டீஸ்)

206 பக்கம். விலை: இந்திய ரூபா 90. 21X13.5 சமீ.

ஈழத்து முன்னணிக் கவிஞர்களுள் ஒருவரான சேரனின் கவிதைகள் போர்ச்சூழலின் கொடுமைகள், புலம் பெயர்ந்த வாழ்வின் அந்தர நிலை, இடைவிடாது பெருகும் மெல்லிய உணர்வுகளைப் பதிவு செய்கிறது.

436

நீர் வளையங்கள். சண்முகம் சிவலிங்கம். (புனைபெயர்: சசி). சென்னை: தமிழியல், 1வது பதிப்பு, நவம்பர் 1988. (சென்னை 4: மிதிலா அச்சகம், 5, கச்சேரி சந்து, மைலாப்பூர்)

xxv,142 பக்கம். விலை: இந்திய ரூபா 16. அளவு: 18X12.5 சமீ.

கிழக்கிலங்கையில், பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் சசியின் இக்கவிதைத் தொகுப்பு, இலங்கைத் தமிழ்த்தேசிய இனப் போராட்டத்துடன் சம்பந்தப்படாததும் 1983க்கு முன்னையதுமான கவிதைகளை உள்ளடக்கியுள்ளது.

437

நெற்றிமணி. சு.வில்வரத்தினம். திருக்கோணமலை: கூடல்பதிப்பகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (கொழும்பு13: ராஜ் பிரவீண் பிரின்டர்ஸ்)

78 பக்கம். விலை: ரூபா 100. அளவு 19X13 சமீ.

எமது மண்ணின் யதார்த்தச் சித்திரிப்பு என்பதை விட மண்ணின் ஆத்மார்த்த குரலாய் ஒலிக்கின்ற கவிதைகள் அடங்கிய தொகுப்பு.

438

பதம். பாலமுனை பாறூக். அக்கரைப்பற்று: அம்பாறை மாவட்ட மக்கள் காங்கிரஸ், உடையார் வீதி, அக்கரைப்பற்று, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1987. (அக்கரைப்பற்று: பாத்திமா மின் அச்சகம்)

80 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18.5X12.5 சமீ.

33 தலைப்புக்களில் அமைந்துள்ள ஆசிரியரின் புதுக்கவிதைகளின் தொகுப்பு.

439

பதினொரு ஈழத்துக் கவிஞர்கள். எம்.ஏ.நு:மான், அ.யேசுராசா. சென்னை 600014: கிரியா, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1984. (சென்னை 600017: அன்னம் அச்சகம்)

216 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 18X12 சமீ.

மஹாகவி, முருகையன், நீலாவணன், மு.பொன்னம்பலம், நு:மான், சண்முகம் சிவலிங்கம், தா.இராமலிங்கம், சி.சிவசேகரம், அ.யேசுராசா, வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன் ஆகிய 11 கவிஞர்களின் தேர்ந்த கவிதைகளும் கவிஞர்களது வாழ்க்கைக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளது.

440

பனியில் மொழி எழுதி. சோலைக்கிளி. கோவை 641015: விடியல் பதிப்பகம், 3 மாரியம்மன்கோயில் வீதி, உப்பிலி பாளையம். 1வது பதிப்பு, ஜனவரி 1996. (சென்னை 600005: மனோ ஆப்செட்)

xv,107 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 17.5X12 சமீ.

போர்- அது எந்தவகையான போராக இருந்தாலும்சரி, அதன் பக்கச் சார்பாளர்கள் யாராக இருந்தாலும் சரி- அதற்கு எதிரான பிரகடனம் இத்தொகுப்பில் உள்ள கவிதைகள்.

441

பனை நூறு. ச.சு.பொன்னம்பலம். யாழ்ப்பாணம்: 81, செட்டித் தெரு, நல்லூர், 1வது பதிப்பு, 1981 (நல்லூர்: ஸ்ரீ நிரஞ்சனா அச்சகம்)

v,41 பக்கம். விலை: ரூபா 6.10. அளவு: 18X12.5 சமீ.

பனைநூறு என்ற இந்த நூல் 100 பாக்களைக் கொண்டு ஆக்கப்பட்டது. அநேகமானவை இசைப்பாக்களாகும். தமிழ் இலக்கண மரபு தழுவி இயற்றப்பெற்ற இந்நூல் இலக்கிய நயங்கொண்டு கற்போருக்கு நல்விருந்தாக அமைகின்றது.

442

பாரதி கவிதைச்சமர். கமலினி செல்வராஜன் (தொகுப்பு). சென்னை 02: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் விஷன், 6 தாயார் சாஹிபு 2வது சந்து, 1வது பதிப்பு, ஜூன் 2000. (சென்னை 600005: மணி ஆப்செட் பிரின்டர்ஸ்)

60 பக்கம். விலை: இந்திய ரூபா 25. அளவு: 21X13 சமீ.

7.9.1958ம் திகதித் தினகரனில் சில்லையூர் செல்வராசன் தான்தோன்றிக் கவிராயர் என்ற புனைபெயரில் பாரதி பற்றி எழுதிய அங்கதக் கவிதை சமகால ஈழத்தமிழ்க் கவிஞரிடையே சுவைமிகு கவிதைச் சமரைத் தொடக்கி வைத்தது. முருகையனின் எதிர்க்கவிதை அடுத்த வாரம் பிரசுரமாயிற்று. அதையொட்டி மோட்டுக்கவிராயர், மஹாகவி, நீலாவணன், இராஜபாரதி, மு.பொன்னம்பலம், பாவேந்தர் பட்டிக்காடனார், பரமஹம்சதாசன், பரணன் என்று ஒரு கவிஞர் குழாமே கவிதைச்சமர் நிகழ்த்தியது. இவை அனைத்தும் தேடித்தொகுக்கப் பெற்று இங்கு நூலுருவாகியுள்ளது.

443

பாரதி பிள்ளைத்தமிழ். க.த.ஞானப்பிரகாசம். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 7, 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு, 1983. (நெல்லியடி (கரவெட்டி): கலாலயா)

xxiv,113 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 18X12.5 சமீ.

மஹாகவி பாரதியாரைப் பாட்டுடைத்தலைவராக வைத்து ஆக்கப் பெற்றதும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினால் சிறந்த சிறு பிரபந்தங்களுக்கான போட்டியில் முதற்பரிசு பெற்றதுமான பிரபந்தம்.

444

பாரதியின் சக்திப்பாடல்கள். சொக்கன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: கல்வியங்காடு, திருவாட்டி உமையவல்லி சேதுராசா நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)

44 பக்கம், தகடு. விலை: இலவசம். அளவு: 18.5X12.5 சமீ.

க.சொக்கலிங்கம்(சொக்கன்) அவர்களின் சக்தி வழிபாடு பற்றிய முன்னுரையுடன் கூடிய பாரதியின் சக்திப் பாடல்களின் தொகுப்பு.

445

பாலங்கள்: கவிதைத்தொகுதி. பீ.எம்.புன்னியாமீன்.(தொகுப்பாசிரியர்). உடத்தலவின்னை (இலங்கை), சிந்தனை வட்டம்,14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஜூலை 1996. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிராப்)

70 பக்கம். விலை: ரூபா 18. அளவு: 17.5X12 சமீ.

ஈழத்து இளம்கவிஞர்கள் ஐவரின் கவிதைத்தொகுதி. பஹிமா ஜஹான், மரினா இல்யாஸ், உஸ்மான் மரிக்கார், ஜெயந்தன்,

சுமைரா அன்வர் ஆகிய ஐவரின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

446

பாலையில் வசந்தம். ஜின்னாஹ் ஷரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, 1989. (சென்னை: மில்லத் பிரின்டர்ஸ்)

98 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18.5X12.5 சமீ

அன்னல் நபியின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளும் நம் முன்னோர் வாழ்வில் நடந்தனவும் மரபுக் கவிதைகளாக எழுதப்பட்டுள்ளன.

447

புதிய தலைமுறை: கவிதைகள். இராகலை பன்னீர்செல்வம். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, எஸ்.44 3வது மாடி, மத்தியசந்தைக் கட்டிடத் தொகுதி, 1வது பதிப்பு, மார்ச் 1999. (கொழும்பு: யு.கே. அச்சகம்)

44 பக்கம். விலை: ரூபா 50. அளவு: 21.5x15 சமீ.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 25வது ஆண்டு நிறைவை யொட்டிய நூல்வெளியீட்டு நிரலில் 1999ம் ஆண்டிற்கான முதலாவது நூல். முழு மானிட விடுதலைப்போக்குடன் மலையக மக்களின் விடிவினை இணைத்துக் கவிதையாக்கம் இடம்பெற்றுள்ளது.

448

புதியதல்ல புதுமையுமல்ல. எழிலன். மலேஷியா: உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கோலாலம்பூர், 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (Madras 24: Ilampirai Book Makers, 375-8, Arcot Road)

232 பக்கம். விலை: இந்திய ரூபா 50. அளவு: 18X12.5 சமீ.

கவிதைகள், மெல்லிசை மெட்டுப்பாடல்கள், உரைவீச்சுக்கள், என்னும் மூன்று வடிவங்களிலும் சமுதாய விழிப்புணர்வூட்டும் கருத்துக்களை வெளிப்படுத்தும் தொகுப்பு. சமூகத்தில் புரையோடிப் போயுள்ள குறைகளை அடையாளம் காணும் முயற்சி.

449

புது உலகம்: பசுபதி கவிதைகள். க.பசுபதி. (புனைபெயர்: யாழ்ப்பாணக் கவிராயர்) சென்னை 600002: சவுத் விஷன், 2வது பதிப்பு, ஜூன் 2000. 1வது பதிப்பு, 1965. (சென்னை 5: மணி ஆப் செட்)

103 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 20.5X13.5 சமீ.

கவிஞர் க.பசுபதி (1925-1965) அவர்கள் எழுதிய கவிதைகளின்

முதற்தொகுதி. 1965இல் எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. வர்க்கபேதமற்ற-ஏற்றத்தாழ்வற்ற ஒரு சுபீட்சமான சமூக அமைப்பை-ஒரு புதிய உலகைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற இலட்சியவேட்கையினால் உந்தப்பட்டு வடிக்கப்பட்ட கவிதைகள். தேசிய கலை இலக்கியப் பேரவையின் 25வது வருட நினைவு வெளியீட்டு வரிசையில் 11வது நூலாக வெளிவந்துள்ளது.

450

புதிய அடிமைகள். கணபதி கணேசன், முல்லை அமுதன். திருநெல்வேலி: மேகம், 8/2 சிவன் கோவில் தெற்கு வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1983. (யாழ்ப்பாணம்: கௌரி அச்சகம், 216 மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்)

80 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 15X10.5 சமீ.

1970களின் பிற்பகுதியில் எழுத்துத்துறையில் புகுந்த கணபதி கணேசன், முல்லை அமுதன் ஆகிய இரு கவிஞர்களின் 50 கவிதைகளைக் கொண்ட தொகுதி. பாலஸ்தீனப் பிரச்சினை போன்ற சர்வதேச அரசியல் பிரச்சினை முதல் பல்வேறு சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் வரை கருப்பொருளாக இங்கே கையாளப்பட்டுள்ளன.

451

புதுப்புனல். அன்பு முகையதீன். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, 1988. (சென்னை 600001: மில்லத் பிரின்டர்ஸ்).

88 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18X12 சமீ.

மனித உணர்வுகளையும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் அன்பு முகையதீன் கவிதையாக வடித்திருக்கிறார். இருபத்தியெட்டு கவிதைகளின் தொகுப்பு.

452

புலராத பொழுதுகள். அல்அஸுமத். கொழும்பு 12: கமல் பிரதர்ஸ் பப்ளிக்கேஷன்ஸ், 75/45 அப்துல் ஹமீது வீதி. 1வது பதிப்பு, 1982. (கொழும்பு12: வீனஸ் அச்சகம், 107/18 பண்டாரநாயக்கா மாவத்தை)

(8),66 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18.5X12.5 சமீ

வெண்பாவின் பல்வேறு விகற்பங்களையும் கையாளும் கவிஞர் மலையகத்தின் வரலாற்றிலே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைத் தமது கவிதைப்பொருளாக எடுத்து ஆக்கியுள்ள உருவகக் குறுங்காவியம்.

453

புலவர்மணி கவிதைகள். எ.பெரியதம்பிப்பிள்ளை. மட்டக்களப்பு:

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம், 1வது பதிப்பு, 1980. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்)
(10),107 பக்கம். விலை: ரூபா 16. அளவு: 21X14 சமீ.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பல்வேறு கவிதைகள். நாடும் மக்களும், குருவணக்கம், தமிழ்மொழியும் தமிழ்ப் புலவரும், சான்றோர், கடவுள்வணக்கம், தனிப்பாக்கள், சிந்தனை ஆகிய ஏழு தலைப்புக்களில் அவை தொகுக்கப்பெற்றுள்ளன.

454

பேரன் கவிதைகள். நெல்லை க.பேரன். நெல்லியடி: ஷர்மிளா பதிப்பகம், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: பார்வதி அச்சகம்)
26 பக்கம், தகடு. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20X14சமீ.

இருபத்தியெட்டு பலவினக் கவிதைகளின் தொகுப்பு.

455

மக்களே எழுக. சூரியன். சென்னை 94: சிவா பதிப்பகம்,18 சங்காபுரம் 3வது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, நவம்பர் 1985. (சென்னை: அச்சக விபரம் அறியமுடியவில்லை)
22 பக்கம். விலை: இந்திய ரூபா 6. அளவு: 17.5X12.5 சமீ.

ஈழத்து அரசியல் கவிதைகள் எட்டின் தொகுப்பு.

456

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழா நினைவு. க.சி.குலரத்தினம் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: க. கனகராசா, மில்க்வைற் தொழிலகம், 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம், காங்கேசன்துறை வீதி)
24 பக்கம். விலை: இலவசம். அளவு: 18.5X13 சமீ.

மகாகவி பாரதியாரின் பாடல்களில் சிலவற்றின் தொகுப்பு. அவரின் நூற்றாண்டுவிழா நினைவையொட்டிப் பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

மகாகவி மேலும் பார்க்க **மஹாகவி**

457

மரண நனவுகள். கல்வயல் வே.குமாரசாமி. யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ், 125ஏ, ஸ்டேஷன் வீதி.)

40 பக்கம். விலை: ரூபா 6. அளவு: 18X12 சமீ.

சமகால இனவிடுதலைப் போராட்டத்தையும் சமூகப்பிரச்சினையையும் மையமாக வைத்து இயற்றப்பட்ட கவிதைகளின் தொகுப்பு.

458

மரணத்துள் வாழ்வோம். உ.சேரன், அ.யேசுராசா, இ.பத்மநாப ஐயர், மயிலங்கூடலூர் பி.நடராஜன் (தொகுப்பாளர்கள்). யாழ்ப்பாணம்: தமிழியல், 36, கலட்டி அம்மன் வீதி, 1வது பதிப்பு, 1985. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)
XV,170 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

மரணத்துள் வாழ்வோம். உ.சேரன், அ.யேசுராசா, இ.பத்மநாப ஐயர், மயிலங்கூடலூர் பி.நடராஜன் (தொகுப்பாளர்கள்) கோவை 641015: விடியல் பதிப்பகம், உப்பிலிபாளையம், 2வது பதிப்பு, டிசம்பர் 1996. (சென்னை 600017: மாணவர் மறுதோன்றி அச்சகம்)
172 பக்கம். விலை: இந்திய ரூபா 25. அளவு: 21X14 சமீ.

31கவிஞர்களின் 82 கவிதைகளின் தொகுப்பு. சமகால ஈழத்து இனப் பிரச்சினையைப் பகைப்புலமாகக் கொண்ட கவிதைத் தொகுப்பு. மூன்று பெண் கவிஞர்களின் பெண்நிலைப்பட்ட அநுபவங்கள் உயிர்த்துடிப்புடன் வந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

459

மரணம். செழியன். சென்னை 94: சிவா பதிப்பகம், பதிப்பு விபரம் குறிப்பிடப்படவில்லை. (சென்னை 18: சங்கரபுரம் 3வது தெரு, சூளைமேடு).
(40) பக்கம். விலை: இந்திய ரூபா 4. அளவு: 16X10.5 சமீ.

தினமும் துப்பாக்கி வேட்டுக்களும் உயிரற்ற உடல்களும் எரிகின்ற மணமும் கொண்ட தேசத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அழகிய அந்திக்காட்சிகளை, பௌர்ணமி நிலாவைப்பற்றி எண்ணி எங்களால் எழுத முடியவில்லை. சிறையிடப்பட்ட எங்கள் இரவுகளை, அதிகாலைப் பொழுதுகளை, முட்களை ஏந்தும் பூக்களைப் பற்றியே எழுதமுடிகிறது.

-செழியன் (முன்னுரையில்)

460

மல்லிகைக் கவிதைகள். டொமினிக் ஜீவா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: மல்லிகைப் பந்தல், 234B, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்)

72 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12 சமீ.

மல்லிகை சஞ்சிகையில் வெளிவந்த 51 ஈழத்துக் கவிஞர்களின் நவீன கவிதைகளின் தொகுப்பு.

461

மழைநாட்கள் வரும். எம்.ஏ.நு.:மான். சிவகங்கை: அன்னம், 1வது பதிப்பு, மே, 1983. (சிவகங்கை 623560: அகரம்)
80 பக்கம். விலை: இந்திய ரூபா 5. அளவு: 18X12 சமீ.

1967-1981 காலப்பகுதியில் அவ்வப்போது எழுதப்பட்ட கவிதை களுள் சமூக. அரசியல் சார்பான சில கவிதைகளின் தொகுப் பாக இது அமைகின்றது.

462

மறையாத மறுபாதி: புகலிடத்துப் பெண்கள் கவிதைத் தொகுப்பு. பிரான்ஸ்: Exil, 27, Rue Jean Moulin, 924000, Courbe voie, 1வது பதிப்பு, பெப்ரவரி 1993. (அச்சகவிபரம் அறியமுடிய வில்லை)
84 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

புகலிடக்கருத்து இலக்கியம் என்ற அமைப்பின் முதலாவது வெளியீடு. இத்தொகுப்பில் ஜேர்மன், பிரான்ஸ், நோர்வே ஆகிய நாடுகளிலிருந்து வெளிவரும் புகலிடத் தமிழ்ச்சஞ்சிகைகளான நமது குரல், கண், சக்தி, தூண்டில், பெண்கள் சந்திப்பு மலர், புதுமை, மனிதம், ஓசை ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பெற்ற பெண் கவிஞர்களின் 48 கவிதைகள் உள்ளடக்கப்பெற்றுள்ளன. பெரும்பான்மைக் கவிதைகள் பெண் விடுதலை சார்பான அடிமைத் தனத்தை இனம் காணல், ஆணாதிக்க எதிர்ப்பு, சீதனம், அடிமைத் துவக் கலாச்சார எதிர்ப்பு, புதிய சூழலில் பழமையின் பலவந்தம் ஆகிய அம்சங்களை மூலக்கருவாகக் கொண்டு அமைந்துள்ளன வாயினும் சில கவிதைகள் புகலிடத்தின் பொதுவான முரண்பாடு களையும் ஈழத்தின் இன்னல்களையும் இனம்காட்டி நிற்கின்றன.

463

மஹாகவியின் கவிதைகள். எம்.ஏ.நு.:மான்(தொகுப்பாசிரியர்) சிவகங்கை: அன்னம். சிவன்கோவில் தெற்கு வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1984. (சிவகங்கை: அகரம்)
136 பக்கம். விலை: இந்திய ரூபா 12. அளவு: 20.5X14 சமீ.

1943க்கும் 71க்கும் இடைப்பட்ட காலத்தில் மஹாகவி(து.உருத்திர

மூர்த்தி) யினால் இயற்றப்பெற்ற கவிதைகளிலிருந்து தெரிந்தெடுக்கப் பட்ட 50 கவிதைகளின் தொகுப்பு. மஹாகவியின் சுமார் 30 ஆண்டுக் கால வளர்ச்சிப்போக்குகளை இனம்காட்டக்கூடியதாக அமையும் தொகுப்பு நூல். மஹாகவி பற்றிய, எம்.ஏ.நு.:மானின் அறிமுகக் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

மஹாகவி மேலும் பார்க்க **மகாகவி**

464

மாதுளம் முத்துக்கள். அன்பு முகைதீன். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1வது பதிப்பு, 1984. (கொழும்பு 9: எஸ்.எச்.நிலாப்தீன், டெவலோ பிரின்ட், 69 அல்பியன் வீதி)
80 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12.5 சமீ.

1970க்குப் பின்பு ஆசிரியரால் எழுதப்பட்ட பல்வகைக் கவிதைகளின் தொகுப்பு.

465

மீண்டும் வசிப்பதற்காக. மேமன்கவி. கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (Colombo 13: Laxsu Graphic Ltd., 98, Vivekananda Hill)
144 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 20x14சமீ. ISBN 955-8250-02-3

பல்வேறு இலக்கியச் சஞ்சிகைகளில் பிரசுரமான புதுக்கவிதைகளின் தொகுப்பு.

466

முகம்கொள்.கி.பி.அரவிந்தன். சென்னை 21: கீதாஞ்சலி வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 1992. (சென்னை 5: மனோ அச்சகம்)
96 பக்கம், ஓவியங்கள். விலை: இந்தியரூபா 20. அளவு: 18x12.5சமீ.

இக்கவிதைகள் மூன்று வகை அனுபவங்களை உள்ளடக்கியவை. யாழ்ப்பாணத்து அனுபவங்கள், தமிழகத்தில் வாழ்ந்த இடைக்காலத் தனுபவங்கள், அகதி வாழ்வின் பாதிப்புக்கள். இக்கவிதைகள் வரலாற்று அனுபவங்களில் தோய்ந்து எழுந்தவை மட்டுமல்ல, அவ் வனுபவங்கள் அலாதியான ஒரு கற்பனைத் திறத்தால் பளிங்கு போன்றதொரு தெளிவான மொழியால் சீரமைக்கப்பட்டு பண்படுத்தப் பட்டு கவிதைகளாக வார்த்தெடுக்கப்பட்டுள்ளன.

467

முகமறியா வீரர்களுக்காக. மட்டுவில் ஞானகுமாரன். ஜேர்மனி: ஞானம் பதிப்பகம், Seminar Str 2, 49074 Osnabruick, 1வது பதிப்பு,

செப்டெம்பர் 2000. (சென்னை: மணிமேகலைப் பிரசுரம்)
112 பக்கம். விலை: இந்திய ரூபா 23. அளவு: 18.5x12.5 சமீ.

ஈழத்தமிழர் படும் இன்னல்களையும் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் சாடிநிற்கும் 33 கவிதைகள். கவிஞர் காசி ஆனந்தன், சுப.வீரபாண்டியன், முகத்தார் ஜேசுரட்ணம், புஷ்பவனம் குப்புசாமி ஆகியோரது வாழ்த்துரைகளும் இடம்பெற்றுள்ளன.

468

முத்து நகை. ஜின்னாஹ் ஷரிப்புத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம். 1வது பதிப்பு, 1989. (சென்னை: மில்லத்பிரின்டர்ஸ்)
144 பக்கம். விலை: ரூபா 35. அளவு: 18X12.5 சமீ.

இயற்கை அழகினை, வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை, நாட்டில் நடந்த வரலாற்று நிகழ்வுகளை, பாட்டாளிகளின் துன்பங்களை ஆசிரியர் மரபுக்கவிதைகளாக எழுதியுள்ளார்.

469

யமன். சேரன். அளவெட்டி: படைப்பாளிகள் வட்டம், நீழல், 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)
(4),28 பக்கம். விலை: ரூபா 6. அளவு: 18.5.X10.5 சமீ.

இக்கவிதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகள் அனைத்தும் ஜூலை 1983க்குப் பிறகு எழுதப்பட்டவை. ஈழத்தமிழரின் பல்வேறு இன்னல்களைச் சொல்லிச் செல்பவை.

470

வடிவங்கள். நீர்கொழும்பூர் ந.தருமலிங்கன். நீர்கொழும்பு: ந.தருமலிங்கன், 195 கடற்கரை வீதி. 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (கொழும்பு 13: லட்சுமி அச்சகம், 195 ஆட்டுப்பட்டித் தெரு)
82 பக்கம். விலை: ரூபா 55. அளவு: 18x12 சமீ.

ஆங்கிலக்கவிஞன் யீட்ஸ் சொல்வது போல *கவிதை சொற்களில் இல்லை. சொற்களுக்கு இடையில் இருக்கின்றது* (Poetry is not in the words. It is in between the words- W.B.Yeates) இக்கூற்றின் உண்மை இவரது பாடல்களில் பரிணமிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது

-செ.குணரத்தினம் (வாழ்த்துரையில்)

471

வருக தமிழர் பொற்காலம். க.ந.வேலன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.எண்.1447, தணிகாசலம் சாலை, தி.நகர்,

1வது பதிப்பு, 2000. (சென்னை: ஸ்கிரிப்ட் ஆப்செட்)
108 பக்கம். விலை: இந்திய ரூபா 23. அளவு: 18.5x12.5 சமீ.

வித்துவான் க.ந.வேலன் தன் நினைவிலிருந்து மீட்டெடுத்த 33 கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளடங்கியுள்ளன.

472

வாழ்வின் எளிய பாடல்கள். மஜீத். கோயமுத்தூர் 641015: விடியல் பதிப்பகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (சென்னை 05: மணி ஆப்செட்)
56 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 17.5x12 சமீ.

தன் தேசத்தின் நதிகள் கல்லானதை, பறவைகள் அழுததை, காடுகள் சிறகசைத்துப் பறந்ததை எண்ணிக் கவிஞர் கவிதை படைத்துள்ளார்.

473

வானதியின் கவிதைகள். பத்மசோதி சண்முகநாதபிள்ளை (கப்டன் வானதி). ஜெர்மனி: தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவு, 1வது பதிப்பு. டிசம்பர் 1991. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
55 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

ஆனையிரவு மோதலில் வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளியான கப்டன் வானதி, போராட்டச் சூழலில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு.

474

விடியத்துடிக்கும் ராத்திரிகள். முல்லை அமுதன். கல்வியங்காடு: ஷோபா க்ரியேஷன்ஸ், G.B.S.வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1984. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம், 310 மணிக்கூண்டுக்கோபுர வீதி)
20 பக்கம். விலை: ரூபா 5.50. அளவு: 18X12.5 சமீ.

பதினாறு கவிதைகளின் தொகுப்பு.

475

விடியலின் கானல். சார்ள்ஸ். யாழ்ப்பாணம்: மாணவர் இளைஞர் பொது மன்றம், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: கே. ரி. அச்சகம்).
40 பக்கம், சித்திரங்கள். விலை: ரூபா 12. அளவு: 18X13 சமீ.

இலங்கையில் நிகழ்ந்த சமகால அரசியல் இனப்படுகொலைகளின் சோக நிகழ்வுகளின் வெளிப்பாட்டைக் கவிதைகளாக்கித் தரும் ஒரு நூல்.

476

விடிவை நோக்கி. வண்ணைதெய்வம். பிரான்ஸ்: ரஜனி பதிப் பகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (அச்சகவிபரம் அறியமுடிய வில்லை)

35 பக்கம். விலை: பிராங்க் 20. அளவு: 18X12.5 சமீ.

புலம்பெயர்ந்து வாழும் மண்ணில் தன் ஏக்கங்களை, உணர்வு களைக் கவிதையாக்கியுள்ளார்.

477

விடுதலையும் புதிய எல்லைகளும். மு.பொன்னம்பலம். புங் குடுதீவு: சுயம் வெளியீடு, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை)

(8),84 பக்கம், விலை: ரூபா 15. அளவு: 18X12 சமீ.

ஒவ்வொரு மனிதனது விடுதலையும் அவனவன் அறிவுக்கேற்ப நடைபெறுகின்றது. ஒரு சமுதாயத்துக்கும் இனத்துக்கும் அப்படியே. அதனது அளவுக்கேற்ப அதன் விடுதலை குறுகவும் விரியவும் செய்கின்றது. பல்வேறு சிந்தனைத்தளத்துக்குரிய விடுதலை முயற் சிகள் இத்தொகுதியில் காட்டப்பட்டுள்ளன. அவையெல்லாம் எல் லையற்று விரியும் விடுதலையின் பின்னணியிலேயே வைத்துக் காட்டப்படுகின்றன.

478

விலங்கிடப்பட்ட மானுடம். சுல்பிகா. சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏஷியன் புக்ஸ், 6-1, தாயார்சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, ஏப்ரல் 1995.

54 பக்கம். விலை: இந்திய ரூபா 8. அளவு: 17.5X12 சமீ.

இன்றைய ஈழத்துப்பெண்களின் கலாசார விழிப்புணர்வையும் சம காலப் பிரச்சினைகள் பற்றிய அவர்களது பிரக்ஞையையும் வெளிப் படுத்தும் 20 கவிதைகளின் தொகுப்பு. பெண்(1983) என்ற கவிதை தவிர்ந்த அனைத்தும் 1990-95ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எழுதப்பட்டவை.

479

விழித்தெழு விசிறும் காற்றாய் மாறிடு. அருள் தெய்வேந்திரன். சுவிட்சர்லாந்து: அருள் தெய்வேந்திரன், via Martignoni.6, 6900

Massagno, Swiss, 1வது பதிப்பு, 2000. (சென்னை 14: G.P.Printers)

112 பக்கம். விலை: இந்திய ரூபா 22. அளவு: 18X12.5 சமீ.

நாம் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் கடமை உணர்வுடனும் நாட்டுப்பற்றுடனும் வாழ வேண்டும் என்ற நோக்கத்தைப் பிரதிபலிக் கும் வகையில் புனையப்பெற்ற கவிதைகளின் தொகுப்பு. ஒவ்வொரு கவிதையின் இறுதியிலும் அவை புனையப்பட்டமைக்கான பின்னணி ஆசிரியரால் கூறப்பட்டுள்ளது.

480

விழுதுகள் மண்ணைத்தொடும். முல்லைஅமுதன். சென்னை 02: காந்தளகம், 834, அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஜூன் 1992. (சென்னை 02: காந்தளகம்)

68 பக்கம், விலை: இந்திய ரூபா 10. அளவு: 18X12 சமீ.

ஈழத்து மக்களின் சோகங்களும், காயங்களும் கருப்பொருளாயமைந்த கவிதைத் தொகுதி.

481

வெற்றுடல்கள் அல்ல அவை வெடிமருந்துப் பொதிகள். ஆசிரியர் விபரம் குறிப்பிடப்படவில்லை. யாழ்ப்பாணம்: பிரச்சார வெளியீட்டு வாரியம், அரசியற்பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை).

12 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X13 சமீ.

சுதந்திரப்பறவைகள் இதழில் வெளியான அரசியல் கவிதைகளின் தொகுப்பு.

482

ஹிரோஷிமாவின் ஹீரோக்கள். மேமன்கவி. சென்னை 600017: 10 சோமசுந்தரம் தெரு, தியாகராய நகர். 1வது பதிப்பு, 1982. (மதுரை: சாதனா ஆர்ட் பிரின்டர்ஸ், 59 கம்பர் நகர்)

112 பக்கம், விலை: இந்திய ரூபா 6. அளவு: 18X12.5 சமீ.

பதினைந்து தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்ட புதுக்கவிதை.

894.8(2) தமிழ் நாடகங்கள்

483

அறுவடை: நாடகத் தொகுப்பு. எம். அரியநாயகம். பிரான்ஸ்: தமிழர் கலை கலாச்சார மன்றம், GIFT, Groupement Inter Cultural

Franco-Tamou,No.1,Rue Jean Moulin, 93130 Noisyle Sec, 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (சென்னை 600024: M L M Offset)
xx,152 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18.5X12.5 சமீ.

தீர்ப்பு, விளம்பரம், நாளைய அறுவடைகள் ஆகிய மூன்று நாடகங்களின் நூலுரு. புலம்பெயர்ந்தவர்கள் தாயகம் திரும்புவதைப் பகைப்புலமாகக் கொண்டு புனையப்பெற்ற நாடகமாக நாளைய அறுவடைகள் அமைகின்றது. மற்றைய இரண்டும் ஓரங்க நாடகங்களாகும்.

484

இது எமது படைப்பு: எட்டு நாடகங்களின் தொகுப்பு. வாசுகி ஜெயசங்கர், ஜெயந்தி தளையசிங்கம் (தொகுப்பாளர்கள்). மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், 20 டயஸ் வீதி. 1வது பதிப்பு, வைகாசி 2001. (மட்டக்களப்பு: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்)
viii,88 பக்கம். விலை: ரூபா 75. அளவு: 22x14.5 சமீ.

1995 முதல் 2000 வரை மட்டக்களப்பு, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தால் மேடையேற்றப்பட்ட எட்டு வீதி நாடகங்களின் தொகுப்பு. பெண்ணைப் பாரபட்சமாக நடத்தும் எமது சமூகக் கட்டமைப்பில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் பாதிப்புக்களையும் அறிவுபூர்வமாக வெளிப்படுத்தும் அரங்கியல் முயற்சி.

485

இலண்டனில் நாரதர்: குறுநாடகங்கள். M.T.செல்வராஜா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.இல.1447, 4, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 1999. (சென்னை: எம். கே. என்டர்பிரைசஸ்)
xvi,254 பக்கம். விலை: இந்திய ரூபா 50. அளவு: 18X12.5 சமீ.

ஐரோப்பிய வானொலிகளிலும் மேடைகளிலும் அரங்கேறிப் புகழ் பெற்ற ஒன்பது குறுநாடகங்களின் தொகுப்பு.

486

ஏழு நாடகங்கள். தமிழ்மன்றம். யாழ்ப்பாணம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).
(14),136 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

பெண் விடுதலை, பெண்களின் சமூகவிழிப்புணர்வு, தமிழர்கள் எதிர் நோக்கும் பல்வேறு சமூகப்பிரச்சினைகள் ஆகியன குறித்த ஏழு நாடகங்களின் தொகுப்பு. இவை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 1984ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக கல்லூரியின் தமிழ்த்தினங்களில் மேடையேறியவை. மழை, சரிபாதி, நம்மைப்பிடித்த பிசாசுகள், ஆகிய மூன்று நாடகங்களும் கலாநிதி சி.மௌனகுரு அவர்களின் நெறியாழ்கையிலும், புழுவாய் மரமாகி, மாதொரு பாகம், தாயுமாய் நாயுமானார், எங்கள் தவப்பயன் ஆகிய நான்கு நாடகங்களும் குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் நெறியாழ்கையிலும் மேடையேற்றப் பட்டவையாகும்.

487

காத்தவராயன் நாடகம். இ.பாலசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ்.மாவட்டக் கலாசாரப் பேரவை, நாட்டார் கலைக்குழு, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)
xxx,72 பக்கம், தகடுகள். விலை: ரூபா 15. அளவு: 42X26 சமீ.

காத்தான்கூத்து என்று வழங்கப்பட்டு வரும் நாட்டார் இலக்கிய வடிவான காத்தவராயன் நாடகத்தின் பதிப்பும் அறிமுகமும்.

488

குருவின் சுவடுகளில். இன்பராஜன். வண.என்.எம்.சவேரி(பதிப்பாசிரியர்) கொழும்பு: நாடகப் பிரதியாக்கப் பகுதி, திருமறைக் கலாமன்றம், 1வது பதிப்பு. (ஆண்டு குறிப்பிடப்படவில்லை). (கொழும்பு 13: கீதா பப்ளிகேஷன்ஸ்)
100 பக்கம், சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5x14 சமீ. ISBN 955-9262-18-1

திருமறை நூல் நாடக வரிசையில் 29வது நூலாக வெளிவந்துள்ளது. சலமொன் மன்னரின் ஆட்சிக்காலத்தில் இருந்த தீர்க்கதரிசியான எலியாவும் அவரது சீடரான எலிசாவும் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களே இந்நாடக நூலின் பிரதம பாத்திரங்களாவர்.

489

கெட்டிக்காரர்கள். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. கொழும்பு 13: ஒலி, ஒளி நேயர் மன்றம், 90/5, புதுச்செட்டித் தெரு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1988. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம்)
xxii,154 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 17.5.X12 சமீ.

இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட கெட்டிக்காரர்கள், ஐயாயிரம், பெறுமதி, அப்பாவுக்குச் சலரோகம், வாத்தியார் கவனம்,

ஆடு வளர்ப்பது எப்படி, மலராத மொட்டுக்கள், கடன்படாதே கடன் கொடாதே ஆகிய 9 ஓரங்க நாடகங்களின் தொகுப்பு.

490

கோயிலும் சுனையும்: நாடகத்தொகுதி. தா.பி.சுப்பிரமணியம். திருக்கோணமலை: ஈழத்து இலக்கியச் சோலை, 21, ஒளவையார் வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: உதயன் அச்சகம்).

(8),60 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 19X12 சமீ.

பணத்தையல்ல, கோவிலும் சுனையும், மகாஜோதி, மூன்றில் இரண்டு, பட்ட காலிலே, சத்தியவானும் சாவித்திரியும் ஆகிய ஆறு சிறு நாடகங்களின் தொகுப்பு.

491

சந்ததிச் சுவடுகள். சு.ஸ்ரீஸ்கந்தராஜா. களுவாஞ்சிக்குடி: ம.தெ.எ.பற்று, களுவாஞ்சிக்குடி பிரதேச கலாசாரப்பேரவை, 1வது பதிப்பு, ஜூலை 1988. (மட்டக்களப்பு: புனிதசெபஸ்தியார் அச்சகம்)

120 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12 சமீ.

வரலாற்றுக் கற்பனையான பகையிலும் நட்பு, சிதைந்த கனவுகள், புத்திரபாசம், ஆகிய மூன்று நாடகங்களும், சமூகச்சித்திரமான உணர்ச்சிகள், சந்ததிச்சுவடுகள், பிராயச்சித்தம், ஆகிய 3 நாடகங்களுமாக மொத்தம் 6 சிறு நாடகங்களின் தொகுப்பு.

492

தடயம்.இளங்கீரன். சென்னை 2: குறிஞ்சி வெளியீடு, இளவழகன் பதிப்பகம், 1வது பதிப்பு, மார்ச் 1992 (சென்னை 05: கோமதி அச்சகம்)

148 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 17.5X12.5 சமீ.

ஈழத்து முதுபெரும் எழுத்தாளரான ஆசிரியர், வெவ்வேறு கால கட்டங்களில் எழுதிய மூன்று நாடகங்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

493

நாடகம் நான்கு. சி.மௌனகுரு, இ.முருகையன், இ.சிவானந்தன், நா.சுந்தரலிங்கம். கொழும்பு: நடிகர் ஒன்றியம் வெளியீடு, 1வது பதிப்பு, மே 1980. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம். மட்டுவில்)

xxiv,182 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 21X14 சமீ.

சங்காரம்(மௌனகுரு), அபசுரம்(சுந்தரலிங்கம்), கடுழியம்

(முருகையன்), காலம் சிவக்கிறது (சிவானந்தன்), ஆகிய நான்கு நாடகங்கள். இவற்றில் சங்காரம், கடுழியம் இரண்டும் இசை நாடக வடிவிலும், மற்றைய இரண்டும் வசன நாடக வடிவிலும் அமைந்துள்ளன.

494

பாரதம் தந்த பரிசு. கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை. தெல்லிப்பழை: பழைய மாணவர் சங்கம், மஹாஜனக் கல்லூரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1980. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50 கண்டி வீதி.)

xxii,172 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18.5X12 சமீ.

மகாபாரதத்தில் ஒரு சில பகுதிகள் தெரிந்தெடுக்கப்பட்டு காங்கேயன் சபதம், ஜீவமணி, அம்பையின் வஞ்சினம், கோமகளும் குருமகளும், குருதட்சிணை ஆகிய தலையங்கங்களில் நாடகமாக்கப்பட்டுள்ளன. இலங்கை கலைக்கழக நாடகக்குழுவினர் நடாத்திய பாடசாலை மாணவர்களுக்கான நாடகப் போட்டிகளில் 1965-69 வரை தொடர்ந்து 5 ஆண்டுகள் முதற்பரிசு பெற்ற தெல்லிப்பழை மஹாஜனக்கல்லூரியினரின் நாடகங்கள் இவை.

495

மத மாற்றம். அ.ந.கந்தசாமி. கொழும்பு 5: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், 215 G1/1, பார்க் வீதி, 1வது பதிப்பு, 1989. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி.)

80 பக்கம். விலை: ரூபா 30, அளவு 21X14 சமீ.

அமரர் அ.ந.கந்தசாமியின் மேடைநாடகத்தின் நூலுருவாக்கம். மதம் என்ற கருத்தியல் இந்த நாடகத்தில் சாடப்பட்டுள்ளது. கதாநாயகன் அசல் கிறிஸ்தவன். கதாநாயகி சைவப்பழம். காதலுக்காக இருவரும் மதம் மாறுகின்றனர். மாறிய மதத்தை இறுகத்தழுவிக் காதலைக் கை விடுகின்றனர்.

496

மருமகள். இன்பராஜன். வண.என்.எம்.சவேரி (பதிப்பாசிரியர்) கொழும்பு: திருமறைக்கலா மன்றம், 1வது பதிப்பு, (ஆண்டு குறிப்பிடப்படவில்லை). (கொழும்பு 13: கீதா பப்ளிகேஷன்ஸ்)

34 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு 21X13.5 சமீ. ISBN 955-9262-18-1

மோவாயியப் பெண்ணும் கைம்பெண்ணுமான ரூத்து, யூதப் பெண்ணான நகோமியின் மருமகள். இனச்சுத்தம், மரபுவழித்தவறாமை என்பவைகளால் பரம வைதிகளான யூதர்களின் விடுதலை வரலாற்றுத் தொடரில், அந்நியப் பெண்ணான ரூத்து ஒரு நிலையான இடத்தை

வகிப்பது இக்கதையின் முக்கியஅம்சம். மனித வரலாற்றின் துயர்க் கட்டங்களைக் கடவுள் வெற்றிகரமாக மாற்றுகின்றார் என்பது ரூத் துவின் கதையின் கரு.

497

மேற்பூச்சு. இ.முருகையன். சென்னை 2: தேசிய கலை இலக் கியப் பேரவையுடன் சவுத் ஏசியன் புக்ஸ், 6/1 தாயார் சாஹிப் 2வது சந்து, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (சென்னை 41: சூர்யா அச்சகம்)

195 பக்கம். விலை: இந்திய ரூபா 35. அளவு: 17.5X13 சமீ.

செங்கோல், கல்லக்கடல், கொண்டு வா தீயை கொழுத்து விறகை யெல்லாம், சுமசும மஹாதேவா, அப்பரும் சுப்பரும், ஆகிய ஐந்து நாடகங்களின் தொகுப்பு. செங்கோலில்-செழியனின் பார்வைக் கோணத்திலிருந்து கண்ணகி கதை சொல்லப்படுகின்றது. கலைக் கடலில்-இலக்கியவாதி ஒருவரின் ஈடுபாடுகள், சங்கடங்கள், வேடிக் கையாகச் சொல்லப்படுகின்றன. கொண்டுவா தீயை ..., சுமசும மஹாதேவா இரண்டும் நாடோடிக்கதைகளை மையமாக வைத்து ஆக்கப்பட்டவை. இறுதியான அப்பரும் சுப்பரும் முழுநேர மேடை நாடகமாகும்.

498

மௌனகுருவின் மூன்று நாடகங்கள். சி.மௌனகுரு. யாழ்ப் பாணம்: நாடக அரங்கக் கல்லூரி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: கத்தோலிக்க அச்சகம்)

XX,54 பக்கம், விலை: ரூபா 10. அளவு: 21X14 சமீ.

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி மகளிர்கல்லூரி, இந்து மகளிர்கல்லூரி, ஆகிய கல்லூரிகளில் அக்கல்லூரி மாணவியரால் அரங்கேற்றப் பட்ட மழை, சரிபாதி, நம்மைப் பிடித்த பிசாசுகள் ஆகிய மூன்று நாடகங்களின் நூலுரு. பெண்களின் சமூகவிழிப்புணர்வு, தமிழர் களின் பல்வேறு சமூகப்பிரச்சினைகள் என்பவற்றை மையமாக வைத்து இவை தயாரிக்கப்பட்டுள்ளன.

894.8(3) கவிதை நாடகங்கள்-காவியங்கள்

499

அகதி: நெடுங்கவிதை. கௌரி. கனடா: Social Research Circle,1477 Eglinton Ave. West, P.O.Box3, Toronto, 1வது பதிப்பு, ஏப்ரல் 1991. (கனடா: அச்சக விபரம் அறியமுடியவில்லை)

90 பக்கம். விலை: கனேடிய டொலர் 3. அளவு: 17X10.5 சமீ.

அகதி ஒரு அகதியின் சுயசரிதையாக நகர்கின்றது. தமிழ் அகதிகள் எப்படி உருவாகுகின்றனர் என்பதைக் கவிஞரின் பார்வையில் தான் சந்திக்கும் சில தனிமனிதர்களின் சரிதைகளுக்கூடாக வெளிப்படுத்து கின்றார்.

500

இரண்டு வரம் வேண்டும்: குறுங்காவியம். ம.பார்வதி நாத சிவம். இளவாலை: கூடலகம், மயிலங்கூடல், 1வது பதிப்பு, ஜூன் 1985. (தெல்லிப்பழை: காந்தன் அச்சகம்)

42 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18.5X12.5 சமீ.

உழைப்பு, ஆடவர்-மகளிர் இருபாலாருக்கும் சொந்தமானது. அதிலும் தொழிலில் ஏற்றத்தாழ்வு கருதாது உழைக்கும் உழைப்பாளிகள் வணக்கத்துக்குரியவர்கள், சமூகத்தால் என்றும் வேண்டப்படுபவர்கள் என்ற கருத்தை வலியுறுத்தும் குறுங்காவியம்.

501

இரு வேறு உலகம். ம.பார்வதிநாதசிவம். இளவாலை: கூடல் அகம், மயிலங்கூடல், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1980. (தெல்லிப் பழை: குகன் அச்சகம்)

72 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 18.5X12.5 சமீ.

இந்நூலில் உலகமாதாவை வேண்டுதல் செய்து, தமிழை வாழ்த்தி, நாவலர் பெருமானைப் போற்றி, பண்டிதமணியின் பெருமைகளை நினைந்து களிகூர்ந்து, மேல் லௌகீகமான பணம், பசி, வறுமை முதலியவற்றின் செயற்பாடுகளை வர்ணித்து, செல்வம், அந்தஸ்து ஆகியவற்றின் மிடுக்கையும் புனிதமான காதலின் சிறப்பையும் காதலின் தியாகத்தையும் ***இரு வேறு உலகங்கள்*** என்னும் குறுங் காவியமாக்கி நிறைவு செய்துள்ளார் நூலாசிரியர்.

502

இன்னும் ஒரு திங்கள்: குறுங்காவியம். ம.பார்வதிநாத சிவம். யாழ்ப்பாணம்: வி.ஆறுமுகம், 1வது பதிப்பு, ஜூலை 1988. (தெல்லிப் பழை: காந்தன் அச்சகம்)

38 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X12.5 சமீ.

கணவன்-மனைவி உறவில் காணப்படும் பொருந்தாநிலையைக் கருவாகக் கொண்டு அமைந்த குறுங்காவியம்.

503

கோடை. மஹாகவி (இயற்பெயர்:து.உருத்திரமூர்த்தி) யாழ்ப்பாணம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, 2வது பதிப்பு, நவம்பர் 1988. 1வது

பதிப்பு, செப்டெம்பர் 1970. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)
xiv,74 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 20x14 சமீ.

மேடைப்பா நாடகம். அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியினால் கிராம சமுதாய மனப்பாங்கில் ஏற்பட்ட விளைவுகள், முரண்பாடுகளே கோடையின் அடிப்படையாகும். காதலையும் நாயனக்கலையையும் இம்முரண்பாடுகளை வெளிக்கொண்டு வரும் ஊடகமாக ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

504

தமிழ்ப்பாவை: நெடும்பாடல். வாகரைவாணன். யாழ்ப்பாணம்: சண்முகா பதிப்பகம், நல்லூர், 1வது பதிப்பு, பங்குனி 1980.(யாழ்ப்பாணம்: கண்ணன் அச்சகம், நல்லூர்)
(6),24 பக்கம். விலை: ரூபா 2.50. அளவு: 20x14 சமீ.

இந்நூலில் தமிழின் அருமை, பெருமை, வரலாறு, தாய்நாட்டு வளம், இவை சுருக்கமாகக் கவிதையாக்கப்பட்டுள்ளது.

505

நீதியின் இருக்கைகள்: கவிதை நாடகங்கள். எம்.சாம். பிரதீபன். யாழ்ப்பாணம்: திருமறைக்கலா மன்றம், 1வது பதிப்பு, நவம்பர் 2000. (கொழும்பு 13: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்)
(12),103 பக்கம். விலை: ரூபா 150. அளவு: 21x13.5 சமீ.

நீதியின் இருக்கைகள், மீன் தங்காத பட்டிகள், புயலான பூவை, மலையோரக் கருங்குயில்கள், இலக்கியம் இட்ட தீ, ஆகிய 5 கவிதை நாடகங்களின் தொகுப்பு. சிலப்பதிகாரம், புறநானூறு, கவித்தொகை போன்ற இலக்கியங்களில் இருந்து கதைக்கருக்களைப் பெற்று அவற்றை சமகால வாழ்வியலுக்குள் கொண்டு வந்து எமது யுத்தத்தின் நாட்களையும், இழப்புக்களையும், நீதி தவறிய தேசத்தின் நிலையையும் சுட்டுகின்றனவாக இந்நாடகங்கள் அமைந்துள்ளன.

506

நெடும்பா 3: சொக்கன். யாழ்ப்பாணம்: ஜனனி வெளியீடு, 1வது பதிப்பு. ஜூன் 1982. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)
vi,96 பக்கம், வரைபடம். விலை: ரூபா 12.50. அளவு: 18x12 சமீ.

நசிகேதன், ஒபியசு, மலர்விழி ஆகிய 3நெடும்பாக்களின் தொகுப்பு.

507

பாதை மாறிய போது: குறுங்காவியம். காரை செ.சுந்தரம்

பிள்ளை. யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, மே 1986. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, கே.கே.எஸ். வீதி)
64 பக்கம். விலை: ரூபா 8. அளவு: 18.5x11 சமீ.

ஏழைக் கடற்தொழிலாளியின் மகனான தருமன், பொருளாதாரக் கஸ்டத்தின் மத்தியிலும் திறமையுடன் படித்து, அரசின் தரப்படுத்தலால் பல்கலைக்கழகம் புகமுடியாது, வெளிநாடு செல்ல முயன்று, முகவர்களால் ஏமாற்றப்பட்டு, விவசாயம்செய்ய முனைந்து அங்கும் அரசின் இறக்குமதிக் கொள்கைகளால் நட்டமடைந்து, காவல் படையின் கெடுபிடிகளால் ஆத்திரமுற்று விடுதலைப்போராளியாக மாறும் கதை.

508

மருத மடுமாதா காவிய மல்லிகை. அமுதசாகரன் அடைக்கல முத்து (புனைபெயர்: அமுது). லண்டன்: தமிழ் அரங்கம், 87, Hazelmere Walk, Northolt, Middlesex, UB5 6UR. 1வது பதிப்பு, 1998 (கொழும்பு 13: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்)
(32),162 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x13.5 சமீ.

இலங்கையில் மருதமடுத்திருப்பதியில் வீற்றிருக்கும் மடுமாதா பேரில் பாடப்பெற்றதும், மரபுக்கவிதைகளில் எழுதப்பெற்றதுமான காவிய நூல். அட்டையில் *மடுமாதா காவியம்* என்ற தலைப்புடன் வெளிவந்துள்ளது.

509

மஹாகவியின் ஆறு காவியங்கள். மஹாகவி. எம்.ஏ.நு.ஃமான் (பதிப்பாசிரியர்) கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப்பேரவை, South Asian Books, Vasantham Pvt. Ltd., 44, 3rd Floor, CCSM Complex. 1வது பதிப்பு, மார்ச் 2000. (தெகிவளை: டெக்னோபிரின்ட்)
ix,296 பக்கம். விலை: ரூபா 250. அளவு: 19x13 சமீ.

கல்லழகி, சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கண்மணியாள் காதை, கந்தப்ப சபதம், (கவிஞர் முருகையனுடன் இணைந்து எழுதிய) தகனம் ஆகிய ஆறு காவியங்களின் தொகுப்பு.

510

வேளாண்மை: குறுங்காவியம். நீலாவணன். மூதூர்: தங்கம் வெளியீடு, திரிகூடம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1982. (மூதூர்: அமுதா அச்சகம்)
88 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 21x14 சமீ.

இயந்திர நாகரீகத்தால் கற்பழிந்து விடாத மட்டக்களப்பின் குமரி யழகையும், மட்டக்களப்பாரின் விருந்திருக்க உண்ணாத வேளாண் மைத்தனத்தையும் வெளியுலகுக்குக் காட்டத்தான் நீலாவணன் ஆசைப்பட்டிருக்கிறார். மட்டக்களப்பின் பழகுதமிழ்ச் சொற்கள் அவரின் கவிதா காம்பீர்யத்துக்குக் கைகட்டிச் சேவகம் புரிந்துள் ளது.

-வ.அ.இராசரத்தினம் (முன்னுரையில்)

894.8(4) சிறுகதைகள்

511

அகஸ்தியர் கதைகள். எஸ்.அகஸ்தியர். ஆனைக்கோட்டை: ஜனிக்ராஜ் வெளியீடு, உயரப்புலம், 1வது பதிப்பு, தை, 1991. (யாழ்ப்பாணம்: விஜயா அழுத்தகம், 551, கே.கே.எஸ். வீதி)
28+147 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12.5 சமீ.

தமிழ்ச்சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்த அகஸ்தியரின் 14 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

512

அண்மையில் ஒரு நட்சத்திரம். செ.யோகநாதன். சென்னை 17: தமிழோசைப் பதிப்பகம், 84, அபிபுள்ளா சாலை, தி.நகர், 1வது பதிப்பு, நவம்பர் 1984. (சென்னை17: தமிழோசைப்பதிப்பகம்)
224 பக்கம். விலை: இந்திய ரூபா 15. அளவு: 18X12.5 சமீ.

1975-84 காலப்பகுதியில் எழுதிய 15 சிறுகதைகளின் தொகுப்பு. வளர்முகநாடுகளின் பொதுப்பிரச்சினைகளும் ஈழமக்களின் இன் றைய நிலைமையும் இக்கதைகளில் பேசப்படுவதால் அவை பரந்துபட்ட மக்களின் வாழ்வுக்குப் பொருந்துகின்றன.

513

அதிர்ச்சி நோய் எமக்கல்ல: உருவகங்கள். நாக.பத்மநாதன். யாழ்ப்பாணம்: தமிழ்த்தாய் வெளியீடு, 1வது பதிப்பு, புரட்டாதி 1993. (யாழ்ப்பாணம்: மாறன் பதிப்பகம், 664 மருத்துவமனை வீதி)
xiii,96 பக்கம். விலை: ரூபா 50. அளவு: 21X13 சமீ.

மண்பற்றும், இன விடுதலையும்-இதற்கான தியாகங்களும் அலை வீசி நிற்கும் 34 உருவகக் கதைகளின் தொகுப்பு.

514

அது வேறுவிதமான காதல். வி.கந்தவனம். சென்னை

600002: காந்தளகம், 834 அண்ணா சாலை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2001. (சென்னை 600002: காந்தளகம்)
168 பக்கம். விலை: இந்திய ரூபா 65. அளவு: 21.5X14 சமீ.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இலக்கியப் படைப்பாளி, கவிஞர் கந்தவனத்தின் 20 சிறுகதைகளின் தொகுப்பு. இத்தொகுப்பிலுள்ள கதைகள் சமூக யதார்த்தங்களின் பிரசவங்களாகும். சில கதைகள் ஈழத்து வாழ்வியலையும் பல கதைகள் கனேடிய மண்ணின் நிகழ் வுகளை, புலம்பெயர்நிலையில் புகலடைந்த ஈழத்தமிழர்களின் இயங் கு நிலைகளைப் பிரதிபலிப்பவையாகும்.

515

அந்நிய விருந்தாளி. க.பாலசுந்தரம். யாழ்ப்பாணம்: யாழ்.இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்).
xii,128 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18X12 சமீ.

இத்தொகுப்பில் இடம்பெறும் சிறுகதைகளில் மனிததெய்வம், அந்நிய விருந்தாளி ஆகிய இரண்டும் மனித சமுதாயம் முழுமைக்கும் பொது வான மனிதநேயம் என்ற பண்பை வெளிப்படுத்துவன. மற்றையவை ஈழத்தமிழர் சமூகத்துக்குள் புரையோடிப் போயுள்ள சமூக-பொருளா தாரப்பிரச்சினைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டவை.

516

அம்மாளைக் கும்பிடுறானுகள்: உண்மைக்கதைகள். தொகுதி 1. லண்டன்: வெளியீட்டுப்பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள், 2வது பதிப்பு, ஆகஸ்ட் 1997. 1வது பதிப்பு, ஆகஸ்ட்1994. (லண்டன்: வாசன் லித்தோ பிரின்ட்)
132 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X13.5 சமீ.

உண்மைச் சம்பவங்களைக் கருவாகக் கொண்ட 15 கதைகள். இந் திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்புக் காலகட்ட வாழ்க்கையையும், அந்த வாழ்க்கையின் அவலங்களையும் சோகங்களையும் சித்திரிக் கும் படைப்புக்களாக 14 கதைகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொடூரத்தினைச் சித்திரிப்பதாக ஒரு கதையும் அமைகின்றன.

517

அரைகுறை அடிமைகள். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 4 தணிகாசலம் சாலை, தி. நகர். 1வது பதிப்பு, 1998. (சென்னை 26: கார்த்திக் பிரின்டர்ஸ்)
200 பக்கம். விலை: இந்திய ரூபா 38. அளவு: 17.5X12 சமீ.

14 சிறுகதைகளைக் கொண்ட இத்தொகுதியில் பல அரசியல் பின்

னணியில் அமைந்த கதைகளும் உள்ளடங்கியுள்ளன. சிங்களப் பேரினத்தின் தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கையின் கொடுமைகளின் எதிரொலி ஆங்காங்கே தெரிகின்றன.

518

அவர்களின் தேசம்: சிறுகதைகள். மாத்தளை சோமு. திருச்சி 620002: தமிழ்க்குரல் பதிப்பகம், 23 தஞ்சாவூர் குளத் தெரு, சின்னக்கடை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1995. (சென்னை 24: இளவழகன் பதிப்பகம், 4, இரண்டாவது தெரு, ஆண்டவர் நகர், கோடம்பாக்கம்)

160 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 17.5X12 சமீ.

ஆசிரியரின் மூன்றாவது சிறுகதைத்தொகுதி. இத் தொகுதியில் உள்ள சிறுகதைகளின் களங்கள் வேறானவை. மலையகம், தமிழகம், யாழ்ப்பாணம், அவுஸ்திரேலியா என்று வெவ்வேறு தேசங்களை அடையாளம் காட்டுகின்றன. மொத்தம் 12 சிறுகதைகள் 1984-1995 இடைப்பட்ட காலத்தில் எழுதப்பெற்றவை.

519

அவர்களுக்கென்று ஒரு குழல். பொ.கருணாகரமூர்த்தி.சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழநி, 1வது பதிப்பு, ஜூன் 1999. (சென்னை 18: Nam Press)

238 பக்கம். விலை: இந்திய ரூபா 15. அளவு: 20.5X14 சமீ.

ஜேர்மனியில் வாழ்ந்த 20 வருடகால வாழ்க்கையில் ஆசிரியருக்கு ஏற்பட்ட அனுபவநிலை, இரண்டாவது உலக யுத்தம் ஏற்படுத்திய கொடுமைகள், இன்னும் ஜேர்மன் முதியவர்களிடம் உண்டாகும் துன்பியல் உணர்வுகள் மற்றும் அந்த நாட்டின் அதீத வளர்ச்சியின் போக்குகளின் பிரதிபலிப்புகள் என்பன இங்கு காணப்படும் சிறுகதைகளின் கருப்பொருளாகின்றன. இதில் இடம்பெறும் உபச்சாரம் என்ற சிறுகதை ஜேர்மன்-பூவரசு சஞ்சிகையினால் நடாத்தப் பெற்ற சிறுகதைப்போட்டியில் முதற்பரிசு பெற்றது.

520

அவளுக்குள் ஒருத்தி. விமல் குழந்தைவேல். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 1வது பதிப்பு, 1999. (சென்னை 5: எம். கே. என்டர்பிரைஸஸ்)

(iv),124 பக்கம், விலை: இந்திய ரூபா 24. அளவு: 18X12 சமீ.

பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுப்பு. ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு இரு பக்கங்கள் உள்ளன. ஒன்று அரசியல்தன்மை. மற்றது

சமூகத்தன்மை. இதிலுள்ள கதைகள் யாவும் சமூகத்தன்மை கொண்டமைந்தனவாக ஈழப்போராட்டம் சமூகத்தில் ஏற்படுத்திய ரணங்களை வெளிக்கொணர்வதாக உள்ளது. தாயன்பு, சகோதர பாசம், நட்பு, மனிதத்துவம், சமூக ஒற்றுமை என்னும் அம்சங்கள் கதைகளுக்கு உயிரூட்டுகின்றன. இது ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி.

521

அறிமுகவிழா. கோகிலா மகேந்திரன், புலோலியூர் ஆ.இரத்தினவேலோன். தெல்லிப்பழை: சிவன் கல்விநிலையம், விழிசிட்டி, 1வது பதிப்பு, 1984. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).

viii,123 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18X12 சமீ.

கோகிலா மகேந்திரனின் மூன்று சிறுகதைகளும், இரத்தினவேலோனின் மூன்று சிறுகதைகளும், இருவரும் இணைந்து எழுதிய ஒரு சிறுகதையும் கொண்ட தொகுப்பு. இச்சிறுகதைகள் பற்றிய பல்வேறு இலக்கியகர்த்தாக்களின் விமரிசனக் குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

522

ஆகுதி. என்.சோமகாந்தன். யாழ்ப்பாணம்: மல்லிகைப்பந்தல், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி)

xiv,124 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18X12 சமீ.

அநீதிக்கு எதிராகக் கிளர்ந்தெழுவைக்கும் 11 கதைகள். வர்க்க பேதங்களால் நாசமுற்றிருக்கும் மனிதசமூகத்தின் மனச்சாட்சியை சொடுக்கி எழுப்பும் சவுக்கின் சுரீர் ஒலி ஒவ்வொரு கதையிலும் பளிச்சென்று தொனிக்கின்றது.

523

ஆண்டவர் பிறந்த மண்: காலங்காட்டும் கற்பனைச் சிறுகதைகள். வெற்றிமகன் (வெற்றிவேல் விநாயகமூர்த்தி) மட்டக்களப்பு: பசிமுக நிறுவனம், பகுத்தறிவுச் சிந்தனை முத்தமிழ்க் கழகம், 2, வன்னியனார் தெரு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (மட்டக்களப்பு: நியுகீன், 73, முனை வீதி)

(38),84 பக்கம். விலை: ரூபா 195. அளவு: 19x14 சமீ.

கலாசூரி வெ.விநாயகமூர்த்தி அவர்களின் 14 சிறுகதைகள்.

524

ஆண்மை. எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர

வெளியீடு, 375-10 ஆர்க்காடு தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1994. (சென்னை 600094: கோகிலஸ்ரீ பிரின்டர்ஸ்)
400 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x12 சமீ.

அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் ***அக்கினிக் குஞ்சு*** என்ற சஞ்சிகையில் **ஆண்மை** என்ற தலைப்பில் பிரசுரமான சிறுகதைகள். அடங்கியுள்ள அனைத்துச் சிறுகதைகளும் ஆண்மை என்ற கருத்தியலை அடிப்படையாகச் சுட்டி நிற்பவையே.

525

இங்கேயும் மனிதர்கள். குரும்பசிட்டி ஐ.ஜெகதீஸ்வரன். கனடா: குரும்பசிட்டி நலன்புரி சபை, ரொரன்டோ, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000. (கனடா: விவேகா அச்சகம்)
xx,95 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 19x13 சமீ.

இந்நூலில் தாயகத்திலும் புலம்பெயர்ந்த மண்ணிலும் நிகழ்ந்த சம்பவங்களைக் கருப்பொருளாகக்கொண்ட கதைகள் இடம்பெறுகின்றன. இக்கதைகளின் வாயிலாக யுத்த அவலங்கள், இடப்பெயர்வுகள், கனேடிய வாழ்வியலும் அதன் போலித்தனமான போக்குகளும் இதனை நிவர்த்தி செய்யவேண்டிய அவசியமும் நன்கு காட்டப்பட்டுள்ளன.

526

இதயச்சிறை. விக்னா பாக்கியநாதன். சென்னை 17: மணி மேகலைப் பிரசுரம், த.பெ.1447, 7 தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 14: M.K.Enterprises)
216 பக்கம். விலை: இந்திய ரூபா 43. அளவு: 18x12.5 சமீ.

இருபத்தி மூன்று சிறுகதைகள் கொண்ட இத்தொகுப்பில் வெளிவந்துள்ள ஆக்கங்கள், புகலிடச்சஞ்சிகைகளில் பிரசுரமானவையும், வானொலிகளில் ஒலிபரப்பானவையுமாகும். கதைகள் ஜெர்மனியில் வாழும் தமிழர்களின் புகலிட வாழ்வியலை சித்திரிக்கின்றன.

527

இரவின் ராகங்கள். ப.ஆப்டின். யாழ்ப்பாணம்: மல்லிகைப்பந்தல், 1வது பதிப்பு, ஜூலை 1987. (யாழ்ப்பாணம்: விஜயா அழுத்தகம்)
120 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18x12.5 சமீ.

ஆசிரியரின் பன்னிரு சிறுகதைகளின் தொகுப்பு.

528

இவர்கள். படைப்பிலக்கிய மன்றம் (தொகுப்பாளர்கள்). தெல்லிப்

பழை: படைப்பிலக்கிய மன்றம், மஹாஜனக்கல்லூரி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1981. (அளவெட்டி: ஜெயா பிரின்டிங் வேர்க்ஸ்)
viii,41 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 18.5x13 சமீ.

1975-1980 காலப்பகுதியில் நிறுவுநர் நினைவுநாள் விழாவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப்போட்டிகளில் முதற்பரிசு பெற்ற சிறுகதைகளின் தொகுப்பு.

529

இன்னும் இரண்டு நாட்கள். செ.யோகநாதன். சென்னை 33: மானுடம் போற்றுதும், 48, ஏரிக்கரைத்தெரு, 1வது பதிப்பு, 1989. (சென்னை 15: துர்க்காதேவி அச்சகம், 13 குமரன் காலனி).
128 பக்கம். விலை: இந்திய ரூபா 14. அளவு: 18x12 சமீ.

தென்னிந்தியச்சஞ்சிகைகளான குங்குமம், குங்குமச்சிமிழ், அலைகள், ராஜம் ஆகியவற்றில் வெளியான இன்னும் இரண்டு நாட்கள் (ஈழத்து இளைஞர்கள் இந்தியாவில் படும் அவலத்தைச் சித்திரிப்பது), கீதம் இனிய குயில், அவளும் அவனும், இறுதியில் அப்படித்தான், ஒப்பனைகள், புற்று ஆகிய 6 புனைகதைகளின் தொகுப்பு.

530

உணராத உண்மைகள். ஜோசப் பாலா. யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, 1வது பதிப்பு, மார்கழி 1986. (யாழ்ப்பாணம்: மணிஓசை அச்சகம்)
72 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18x12 சமீ.

நான், அமிர்தகங்கை, தினகரன், இதழ்களில் வெளியான பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு. சமகாலக் கண்ணோட்டத்தில் இறை நம்பிக்கை, சமூக அரசியல் பொருளாதார சூழ்நிலைகளை பின்னணியாகக் கொண்டு அவற்றின் நெளிவுசுழிவுகளை நாகரீகமாகவும் நாசூக்காகவும் காட்டியிருக்கிறார்.

531

உயிர்ப்புகள்: சிறுகதைத் தொகுதி. கலாசார கூட்டுறவுப் பெருமன்றம் (தொகுப்பாளர்கள்). நெல்லியடி: கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூட்டுறவுச் சங்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1986. (நெல்லியடி: கலாலயா பதிப்பகம்)
144 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18x12.5 சமீ.

நெல்லியடி, அல்வாய், கரவெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த சமூகத்தவர்களின் பன்னிரு சிறுகதைகளும் அவற்

றிற்கான பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் விமர்சனக் குறிப்பும் இடம்பெறுகின்றது.

532

உழைக்கப் பிறந்தவர்கள்: மலையகச் சிறுகதைகளின் இரண்டாவது தொகுதி. துரை.விஸ்வநாதன் (பதிப்பாசிரியர்).சென்னை 17: துரைவி பதிப்பகம், 20A/9, கோபாலகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், 1வது பதிப்பு, ஜூலை 1997. (சென்னை 14: பார்க்கர் கம்பியூட்டர்ஸ், 293, அகமது வணிகவளாகம், இராயப்பேட்டை நெடுஞ் சாலை.)

495 பக்கம். விலை: இந்திய ரூபா 90. அளவு: 21X14 சமீ.

56 மலையக எழுத்தாளர்களின் தேர்ந்த சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு. இலங்கையின் பெருந்தோட்டத்துறை மக்களின் அன்றாட வாழ்வைச் சித்திரிக்கும் கதைகள். இவற்றுள் 14 கதைகள் மலையகம் தவிர்ந்த தமிழ்ப்பிரதேசங்களில் வாழ்கின்ற படைப்பாளிகளின் ஆக்கங்களாகும். எழுத்தாளர்கள் பற்றிய குறிப்பும் அவ்வச் சிறுகதைகளுக்கு முன்னதாகத் தரப்பட்டுள்ளது.

533

எரிகொள்ளி. எஸ்.எச்.நிஹ்மத். எருக்கலம்பிட்டி: இலக்கிய வட்டம். 1வது பதிப்பு, 1989. (கொழும்பு 11: பார்வை நியுஸ் பேப்பர்ஸ் அன்ட் பப்ளிக்கேஷன்ஸ், 77, 3வது குறுக்குத் தெரு.)

(8),120 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12 சமீ.

பன்னிரு சிறுகதைகளின் தொகுப்பு. பிரச்சினைகளை மட்டுமே சொல்வதும் பிரச்சினைக்குரிய தீர்வை வெளிப்படையாகச் சொல்லி விடுவதும் நல்ல சிறுகதைகளுக்குரிய பண்புகளல்ல என்று நான் கருதுவதால் எனது சிறுகதைகள் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி அவற்றுக்குரிய தீர்வினை மறைமுகமாகவே சொல்கின்றன.

-ஆசிரியர் (முன்னுரையில்)

534

ஏன். எஸ்.என்.வாகீசன். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏஷியன் புக்ஸ், 6/1 தாயார் சாஹிப் 2வது சந்து, 1வது பதிப்பு, 1991. (சென்னை20: இராசகிளி பிரின்டர்ஸ்)

142 பக்கம். விலை: இந்திய ரூபா 18. அளவு: 18X12 சமீ.

1983இல் எழுதிய ஒரு சிறுகதையையும் 90-91ம் ஆண்டுகளில் எழுதப்பட்ட ஏனைய கதைகளையும் உள்ளடக்கிய இத்தொகுதி

மொத்தம் 11 சிறுகதைகளைக் கொண்டுள்ளது. எதிர்பாராத ஒரு அரசியல் திருப்புமுனையில் அகப்பட்டு, மாறிவரும் சூழல் மீது ஆளுமையின்றி, அம்மாற்றங்களுக்கேற்ப வளைந்து கொடுக்கும் நிர்ப்பந்தத்துக்கும் நெடுங்காலம் பழகிய ஒரு வழக்கின் பிடிப்புக்கு மிடையே தத்தளிக்கும் ஒரு சமுதாயத்தை, அதில் வாழும் தனி மனிதரது நிலைமைகளூடு, முற்போக்கான ஒரு கோணத்தினின்றும் காணும் ஒரு படைப்பாளியின் பார்வையின் சில தெறிப்புகள் இச்சிறு கதைகள்.

535

ஒரு காவியம் நிறைவுபெறுகிறது. வ.அ.இராசரத்தினம்.சென்னை: மித்ர வெளியீடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1996. (சென்னை: Mitra Books Makers.)

448 பக்கம். விலை: இந்திய ரூபா 115. அளவு: 17X12 சமீ.

ஐந்து தசாப்தங்களாக ஆசிரியர் எழுதிய ஐம்பது சிறுகதைகள் இத் தொகுதியில் அடங்கியுள்ளன.

536

ஒரு கூடைக்கொழுந்து. என்.எஸ்.எம். ராமையா. யாழ்ப்பாணம்: வைகறை, 330, நாவலர் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1980. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம்)

124 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 17.5X12.5 சமீ.

ஈழத்து ஊடகங்களில் வெளிவந்த ஆசிரியரின் 12 சிறுகதைகளின் தொகுப்பு. மலையக மக்களின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள சகல அம்சங்களும் நேர்மை, கண்ணியம், சமூக தர்மம் பற்றிய உணர்வுவகை அனைத்தையும் இந்த மக்களின் உழைப்பு என்னும் உரைகல்லூடாக நிறுவுகின்றார். இக்கதைகளில் வரும் கதா பாத்திரங்களின் இயக்கப்பாடுகள் அனைத்தும் உழைப்பு என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டிருப்பது சிறப்பியல்பு.

537

ஒரு கூடைக் கொழுந்து: இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்: இரண்டாவது தொகுதி. யோ.சுந்தரலட்சுமி, செ.யோகநாதன். சென்னை 02: சத்தியபாரதி பதிப்பகம், 1வது பதிப்பு, மே 1994. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிரபி)

645 பக்கம். விலை: இந்திய ரூபா 100. அளவு: 17.5X12 சமீ.

1930-1990க்கு இடைப்பட்ட காலத்தில் ஈழத்தில் எழுதப்பட்ட சிறுகதைகள் சிலவற்றை இந்நூலில் தொகுத்துள்ளனர். சிறுகதையாளர்

கள் பற்றிய சிறுகுறிப்பும் நூலில் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

538

ஒரு நாளில் மறைந்த இரு மாலைப்பொழுதுகள். சுதாராஜ். யாழ்ப்பாணம்: மல்லிகைப்பந்தல், 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)

148 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18.5X13 சமீ.

இத் தொகுப்பில் அழகியல் உள்நோக்கப்பார்வை கொண்டவையும் மனிதநேய பேரபிமானம் படைத்தவையுமான பதினொரு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. சூழலோடு ஏதோ ஒரு வகையில் பிணைந்த மனித நடவடிக்கைகளின் அவலங்கள் இச் சிறுகதைத் தொகுதி மூலம் பேசப்படுகின்றது.

539

ஒரு பிடி மண். சாந்தன். சென்னை 17: நர்மதா பதிப்பகம், 1வது பதிப்பு, ஜூன் 1999. (சென்னை 04: மணியன் அச்சகம்)

192 பக்கம். விலை: இந்திய ரூபா 37. அளவு: 18X12.5 சமீ.

1975-1980காலப்பகுதியில் ஆசிரியர் எழுதிய கதைகளிற் சில இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் பெரும்பாலும் குறுங் கதைகளாகும்.

540

ஒரு வித்தியாசமான விளம்பரம்: சின்னஞ்சிறு கதைகள். ரூபராணி ஜோசப். கொழும்பு 13: துரைவி, 85, ஸ்ரீஇரத்தின ஜோதி சரவணமுத்து மாவத்தை, 1வது பதிப்பு, ஆனி 1998. (கொழும்பு 12: Perfect Printers)

121 பக்கம். விலை: ரூபா 80. அளவு: 18X13 சமீ.

40 குட்டிக்கதைகள். இலங்கையில் தமிழர்வாழ் பிரதேசங்களான வடக்கு கிழக்கு மத்திய மேல் மாகாணப்பிரதேசங்கள் கதைகளின் பகைப்புலமாகின்றன. அப்பிரதேசங்களுக்கே உரிய பேச்சுமொழிகள் விரவ, ஆசிரியர் தனது கதைகளைப் படைத்திருப்பது சிறப்பம்சமாகும்.

541

கசின் சிறுகதைகள். பொ.ஆனந்தலிங்கம் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1999.

(அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

xiii, 149 பக்கம், விலை: ரூபா 125. அளவு: 18.5X13 சமீ.

க.சிவகுருநாதன் (புனைபெயர்:கசின்) அவர்களின் 15 சிறுகதைகளின் தொகுப்பு. தமிழர் சமூகத்தின் பழக்கவழக்கங்கள், பேச்சுமுறை என்பன சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. குடும்பஉறவுகளே பெரும்பான்மையான சிறுகதைகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

542

கடலில் கலந்தது கண்ணீர். எஸ்.வி.தம்பையா. நீர்வேலி: அம்பிகா இல்லம், அச்செழு, 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: மயூரன் அச்சகம், 47 பிரப்பங்குளம் வீதி)

113 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X12.5 சமீ.

1956 முதல் 1960களின் பின்னரைப்பகுதி வரை எழுதப்பட்ட சிறுகதைகள். பல சிறுகதைகள் மலேஷிய மண்ணையும் வாழ்வையும் பகைப்புலமாகக் கொண்டவை.

543

கடலும் கரையும். மு.பொன்னம்பலம். கொழும்பு 6: நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, ஜூன் 1996. (தெகிவளை: ரெக்னோ பிரின்ட்)

144 பக்கம். விலை: ரூபா 80. அளவு: 21.5X14 சமீ.

இத்தொகுப்பில் பதினொரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

544

கண்களுக்கு அப்பால். நந்தி. (இயற்பெயர்: சிவஞானசுந்தரம்) சென்னை 17: சென்னை புக்ஹவுஸ், 6 மேட்லிசாலை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1984. (சென்னை 5: வெற்றி அச்சகம்)

xvi,106 பக்கம். விலை: இந்திய ரூபா 7. அளவு: 18X12.5 சமீ.

பேராசிரியர் நந்தியின் பன்னிரு சிறுகதைகள், பேராசிரியர் கா.சிவத்தம்பியின் முன்னுரையுடன் கூடியது.

545

கதைக்கனிகள்: பரிசுபெற்ற மலையகச் சிறுகதைகள். எஸ்.எம். கார்மேகம். சென்னை 24: குறிஞ்சி வெளியீடு, இளவழகன் பதிப்பகம், 2வது பதிப்பு, ஆவணி 1991. 1வது பதிப்பு, தை 1971. (சென்னை 5: ஜீவோதயம் பிரஸ்)

144 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 17.5X12.5 சமீ.

நான்கு சிறுகதைப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளுக்குரிய 12 கதைகள் மாத்திரம் தெர்ந்தெடுக்கப்பட்டு இத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. மலையக மக்களை மையப்படுத் துவதாகவே இத்தொகுப்பு அமைந்துள்ளது.

546

யாழ்ப்பாணக் கலாச்சாரம் புறக்காரணிகளால் எவ்வாறு மாறுபடுகின் றது என்றும், மனிதஉறவுகளில் பணவசதி எப்படி மாற்றத்தைக் கொண்டு வருகின்றது என்பதையும் கணவன் மனைவி உறவுகள் எவ்வாறு பூசி மெழுகலின்றி நேரடியாக வார்த்தைகளில் பரிணமிக் கின்றன என்பதையும் ஆசிரியர் இந்த நாவலில் காட்டுகின்றார்.

-கே.எஸ்.சிவகுமாரன் (வீரகேசரி 1.7.84 இதழில்)

ஈழநாடு வாரமலரில் தொடராக வெளிவந்ததுடன் 1982-85 காலப் பகுதியில் வெளியான சிறந்த குறுநாவலுக்கான 'தகவம்' பரிசை யும் பெற்ற நாவல். யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஒரு குறியீடாக கிடுகுவேலி அமைகிறது.

655

கிட்டி. செ.யோகநாதன். சென்னை 108: ஆதி பதிப்பகம், 27 சிங் கர்ஸ் தெரு, பிராட்வே, 2வது பதிப்பு, டிசம்பர் 1994, 1வது பதிப்பு, 1992. (Madras 6000005: Sri Yeses Print House)

144 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 17.5X12 சமீ.

காடுகளில் வாழ்ந்த ஒரு மக்கள் சமூகத்தின் வாழ்க்கையைப் பகைப் புலமாகக் கொண்ட நாவல்.

656

குடும்பச் சிறையில். செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் வெளியீட்டகம், 3 மெய்கை விநாயகர் வீதி, வடபழநி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1999. (Chennai 600014: Monark Graphics)

214 பக்கம். விலை: இந்திய ரூபா 55. அளவு: 18X12.5 சமீ.

பெண்ணியம் சார்ந்த சமூகநாவல். நிலப்பிரபுத்துவக் கூட்டுக்குடும்ப அமைப்பானது, முதலாளித்துவ உற்பத்திமுறை வளர்ச்சியில் எத்த கைய மாற்றமடைகின்றது என்பதையும் கோடிட்டுக்காட்டும் நாவல்.

657

குருதிமலை. தி.ஞானசேகரன். சென்னை 600026: குமரன் பப்ளி ஷர்ஸ், 27, 2வது தெரு, வடபழனி, 1வது பதிப்பு, ஜூலை 1995. (Madras 14: Chitra Printography)

viii,288 பக்கம். விலை: இந்திய ரூபா 50. அளவு: 18X12.5 சமீ.

ஈழத்தமிழரின் ஒரு முக்கிய சமூகப்பிரிவினரான மலையகத் தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் பௌத்த சிங்கள பேரினவாதச் சூழலில் தம் இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காகத் தற்காப்புப் போராட் டத்தை நிகழ்த்திவருபவர்களின் வரலாற்றின் ஒரு காலகட்டம் இந்த நாவலின் மூலம் எமது காட்சிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

658

குவேனி. செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: தமிழ்த்தாய் பதிப்பகம், 1வதுபதிப்பு, தை1991. (யாழ்ப்பாணம்:அச்சகம் குறிப்பிடப்படவில்லை)

(8),136 பக்கம். வரைபடம். விலை: ரூபா 40. அளவு: 21X14 சமீ.

இந்நாவல் நான் எழுதும் **தறுமறாசா வீடு** என்ற நாவலின் முன்னீடு ஆகும். வெறும் சரித்திர நாவலென்ற கருத்தில் இதனைப் படிக் கில் இந்த நாவலின் பண்பாட்டியல்புகளின் பாரம்பரியத்தையும் மனித குல வரலாற்றின் நெறிகளையும் புரிந்துகொள்ளத் தவறி விடுவோம்.

-செங்கை ஆழியான் (முன்னுரையில்)

மஹாவம்சத்தின் கதாபாத்திரங்களினூடாக இலங்கைக்குச் சிங்களவர் வந்து குடியேறுவதற்கு முன்னர் திராவிடர் இந்நிலத்தின் ஆதிமக்க ளாக இருந்துள்ளனர் என்பதையும், எமது மூதாதையர் விட்ட தவறு

கள் எவ்வாறு இன்று எமது தலைகளில் விடிந்திருக்கின்றன என் பதையும் சுட்டிக்காட்டும் வரலாற்று நாவல்.

659

கே.டானியலின் குறுநாவல்கள். கே.டானியல். பருத்தித்துறை: வாராவொல்லை வெளியீடு, நெல்லண்டைவீதி, தும்பளை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1989. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50 கண்டி வீதி)

viii,252 பக்கம். தகடுகள். விலை: ரூபா 45. அளவு: 18.5X12.5 சமீ.

முருங்கையிலைக்கஞ்சி, மையக்குறி, இருளின் கதிர்கள் ஆகிய மூன்று குறுநாவல்களின் தொகுப்பு. முதலிரண்டும் முறையே தினகரன், ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் தொடராக 1984இல் வெளிவந்தவை.

660

கோபுரங்கள் சரிகின்றன. எஸ்.அகஸ்தியர். யாழ்ப்பாணம்: ரஜனி வெளியீடு, 223, சிவன் பண்ணை வீதி, 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: அன்பு பிரின்டர்ஸ், 248/5, காங்கேசன்துறை வீதி)

70 பக்கம். விலை: ரூபா 4.90. அளவு: 19X13 சமீ

மலையக ஹோட்டல் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினை களை மையமாகவைத்துப் பின்னப்பட்ட நாவல். தமது உரிமை களை வென்றெடுக்க அவர்கள் ஒன்றுபட்டு உழைப்பதைச் சித் திரிக்கும் கதையமைப்பு.

661

கோவும் கோயிலும். ந.பாலேஸ்வரி. திருக்கோணமலை: நரெசி வெளியீடு, 157 டைக் வீதி, 1வது பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

120 பக்கம். விலை: ரூபா 7.90. அளவு 18X12.5 சமீ.

ஈழத்துக்குப் பெருமை தேடித்தரும் தேவாரம் பாடப்பெற்ற திருக் கோணேசர் ஆலய வரலாற்றைப் பகைப்புலமாகக் கொண்ட வரலாற்று நாவல். 1977 இல் தினகரன் வாரமஞ்சரியில் நெடுங் கதையாகப் பிரசுரமானது.

662

சங்கரன். வளவைவளவன் (இயற்பெயர்-மா.செல்லத்தம்பி) யாழ்ப் பாணம்: மீரா வெளியீடு, 38 வேம்படி வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: புதிய சித்திரா பதிப்பகம்)

x,71 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 17.5X12.5 சமீ.

அநாதையான சங்கரன் ஒரு பெரியவரின் அரவணைப்பினால் எழுத் தாளனாகி நாவல் பரிசுப்போட்டியில் பங்குபெறுவதற்காகக் கொழும்பு செல்கின்றான். அங்கே இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு கப்பலில் திரும்புவதான செய்தியை இக்குறுநாவல் தெரிவிக்கின்றது.

663

சத்தியங்கள் சமாதிகளாவதில்லை. சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: திருமதி ராமேஸ்வரன், 4 1/2, சித்ரா ஒழுங்கை. 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், நாவின்ன)

102 பக்கம். விலை: ரூபா 60. அளவு: 21.5X13.5 சமீ.

கலப்புத் திருமணத்தால் தமிழ்-சிங்கள உறவை வளர்க்க முடியாது, அது ஓர் இனத்தின் அழிவுக்கு வித்திடும் என்ற கருத்தை வலியுறுத் தும் நாவல்.

664

சந்தன ரோஜாக்கள். ரவிப்ரியா. மட்டக்களப்பு: உதயம் வெளி யீடு, 1வது பதிப்பு, மார்கழி 1988. (மட்டக்களப்பு: புனித செபஸ் தியார் அச்சகம், 65 லேடி மனிங் டிரைவ்)

138 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18X12 சமீ.

சந்தனரோஜாக்கள் எனது கற்பனைக் கண்ணோட்டத்தில் தரிசனமான புதியமலர்கள். தன்னையே சேர்த்துத்தருவது சந்தனம். தனித்துவம் காப்பது ரோஜா. இரண்டு தன்மைகளும் இணைந்துள்ள நெஞ்சங் களின் கதை தான் இந்த சந்தனரோஜாக்கள்.

-ரவிப்ரியா (முன்னுரையில்)

665

சலதி. சொக்கன். யாழ்ப்பாணம்: முரசொலி வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 1986. (யாழ்ப்பாணம்:சாந்தி அச்சகம், காங்கேசன்துறை வீதி)

xvi,110 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 20. நூலகப்பதிப்பு ரூபா 25. அளவு: 18X12.5 சமீ.

இந்நாவல் 1985 ஆகஸ்ட் 15 முதல் நவம்பர் 22 வரை தினகரன் வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்தது. சிலப்பதிகாரக் கதை புதிய கோணத்தில் சலதி· என்ற நாவலாக உருவாக்கப்பட்டுள்ளது.

666

சிதறிய சித்தார்த்தன். பாமினி செல்லத்துரை (ஆங்கில மூலம்),

சபா. இராசேந்திரன் (தமிழாக்கம்). சென்னை 600041: கோதை பதிப்பகம், 311-5வது தெற்கு குறுக்குத்தெரு, கபாலீஸ்வரர் நகர், நீலாங்கரை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1998. (சென்னை 600024: MLM Printers, கோடம்பாக்கம்)

vii,411 பக்கம். விலை: இந்திய ரூபா 75. அளவு: 21X13.5 சமீ.

North South and Death என்ற தலைப்பில் வெளியான ஆங்கில நாவலின் தமிழாக்கம். ஈழவிடுதலைப் போராட்டத்தைக் கருப் பொருளாகக் கொண்டது.

667

சிவபுரத்து சைவர்கள்: ஒரு சமகால வரலாற்று நாவல். சோ. ராமேஸ்வரன். கொழும்பு 5: செல்வி ராமேஸ்வரன், 4 1/2 சித்திரா ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (மஹரகம: தரஞ்ஜி பிரின் ட்ஸ், நாவின்ன)

iv,136 பக்கம். விலை: ரூபா 120. அளவு: 21.5X13.5 சமீ.

ஈழத்தமிழரின் சமகாலப்பிரச்சினைகளில் ஒன்று இடம்பெயர்ந் தோரின் வாழ்வாதாரப் பிரச்சினையாகும். மோதல்களின் போது, உறைவிடங்களை விட்டு வெளியேறி, மதத்தலங்களையும் பாட சாலைகளையும் நாடிய தமிழரின் புலம்பெயர்வாழ்வு மிகவும் மோச மானதாகும். அந்தச்சூழலின் பகைப்புலத்தில் எழுந்த நாவல் இது.

668

சிறுபொறி பெருந்தீ. செ.யோகநாதன். சென்னை600024: சத்திய பாரதி பதிப்பகம், கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிரபி)

80 பக்கம். விலை: இந்திய ரூபா 14. அளவு: 17.5X12.5 சமீ.

தமிழக ஹோட்டல் தொழிலாளர்களினதும் அதன் நிர்வாகத்தி னதும் அன்றாடப்பிரச்சினைகளின் பின்னணியில் அமைந்ததொரு சமூக நாவல்.

669

சிறைப்பறவைகள். து.வைத்திலிங்கம். சங்கானை: து.வைத்தி லிங்கம், உதவி அரசாங்கஅதிபர் பணிமனை, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: புதிய உதயன் வெளியீட்டகம், 15, 2ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி).

(8),66 பக்கம். விலை: ரூபா 10, அளவு: 21X14.5 சமீ.

உதயன் தினசரியின் வாரஇதழ் சஞ்சீவியில் தொடராக வெளிவந்த

குறுநாவல். தொடர்ச்சியான இன்னல்களைத் தினமும் அனுபவித்தும் அர்த்தமற்ற பத்தாம்பசலித்தனமான கருத்துக்களைத் தலையில் வைத்துக் கூத்தாடும் குடும்பங்கள், இளம் குருத்துக்களை வாழ விடாது தடுக்கும் ஆரோக்கியமற்ற சமுதாயச் சிக்கல்கள். படித்தும் அதற்குரிய பலனைக் காணாது விரக்தியின் எல்லைக்கோட்டுக்குள் தள்ளப்படும் இளைஞர்கள் இவர்களது பிரச்சினைகளைப் பின்னணி யாக வைத்து ஓடும் கதையம்சம்.

670

சுந்தரியின் முகங்கள். செ.யோகநாதன். சென்னை 600024: சத்ய பாரதி பதிப்பகம், 2வது பதிப்பு, ஏப்ரல் 1994. 1வது பதிப்பு, நவம்பர் 1985. (சென்னை14: சித்ரா பிரின்டோகிரபி, 24,பொன்னுச்சாமித் தெரு)

176 பக்கம். விலை: இந்திய ரூபா 28. அளவு: 18X12.5 சமீ.

மூன்று குறுநாவல்களின் தொகுப்பு. பிரதமர் அவர்களே என்ன சொல் கிறீர்கள்?(1985), சைக்கிள்(1984), சுந்தரியின் முகங்கள்(1968) ஆகிய குறுநாவல்கள் இதில் அடங்கியுள்ளன.

671

சுயம்வரம். கே.எஸ்.துரை. டென்மார்க்: கே.எஸ்.துரை, 1வதுபதிப்பு, பெப்ரவரி 1993. (அச்சக விபரம் அறியமுடியவில்லை)

109 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 17X11.5 சமீ.

ஆசிரியரின் அனுபவங்கள், வடமராட்சி மக்களின் போராட்ட உணர்வு கள் என்பன இந்த நாவலில் மண்வாசனையுடன் விரவிக்கிடக்கின்றன.

672

டானியலின் குறுநாவல்கள். கே.டானியல். கோவை: விடியல் பதிப்பகம், 3 மாரியம்மன்கோவில் வீதி, உப்பிலிபாளையம், 1வது பதிப்பு, மே 1994. (சென்னை 600024: அலைகள் அச்சகம், 36 தெற் குச் சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம்)

247 பக்கம். விலை: இந்திய ரூபா 35. அளவு: 18X12.5 சமீ.

முருங்கையிலைக்கஞ்சி, மையக்குறி, இருளின்கதிர்கள் ஆகிய மூன்று குறுநாவல்களின் தொகுப்பு. சாதிமறுப்பு, ஆதிக்க எதிர்ப்பு, மனித நேயம் ஆகிய பண்புக்கூறுகள் இறுகப் பின்னப்பட்ட கதைக்கரு. (இந்நூல் மூலப்பதிப்பாக 1989இல் பருத்தித்துறை வாராவொல்லை வெளியீடாக யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளது.)

673

தண்ணீர். கே.டானியல். பருத்தித்துறை: வராவெல்லை வெளியீடு, நெல்லண்டை வீதி, தும்பளை, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்:

ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி.)
xxii,228 பக்கம். விலை: ரூபா 35. அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் சாதிப்பாகுபாட்டை பகைப்புல மாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சமூக நாவல்.

674

தர்மங்களாகும் தவறுகள்.அ.ஸ.அப்துஸ் ஸமது. கல்முனை:இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், சாய்ந்தமருது, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (Chennai600014: V.Karunanithy,Parker Computers & Publications, 293, Royapettah High Road)
128 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 21x14 சமீ.

அரசியல் வக்கிரங்களையும் மீறி மனிதஉறவுகள் இன, மத, பேத மின்றி எவ்வாறு வாழ்வில் பரிணமிக்கின்றன என்பதை அழகுறச் சித்திரிக்கும் கதை.ஆசிரியரின் மூன்றாவது நாவல்.

675

தவறுகள். ரஜனி குகநாதன். கொழும்பு 5: ரஜனி பதிப்பகம், 1வது பதிப்பு, தை 1991. (சென்னை 2: காந்தளகம், 834,அண்ணா சாலை)
71 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18x12.5 சமீ.

ரஜனி மாத நாவல் வெளியீட்டாளரான குகநாதனின் முதலாவது குறுநாவல். இது தினகரனில் தொடராகவும் வெளிவந்தது.

676

தில்லையாற்றங்கரை.ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.சென்னை 17: மணிமேகலைப்பிரசுரம், 1வது பதிப்பு, 1998. (சென்னை 24: சதுர்வேந்தன் அச்சகம்)
352 பக்கம். விலை: இந்திய ரூபா 56. அளவு: 18.5x12.5 சமீ.

தில்லையாற்றங்கரை 1957ம் ஆண்டிலிருந்து 1962ம் ஆண்டு வரை யுள்ள 5 வருட காலத்தின் கதை. கிழக்கிலங்கையின் தில்லை யாற்றுடன்-கோளாவில் கிராமத்தின் பகைப்புலத்துடன் நகர்கின்ற கதையம்சம். குழந்தைப்பருவத்தைத் தாண்டிக் குமரிப்பருவத்தை அடையும் மூன்று பெண்கள் மூன்று தலைமுறைகளின் சட்டதிட் டத்தை எதிர்த்துப் போராடியதைப்பற்றிய கதை. இது ஆங்கில மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

677

தீ. எஸ்.பொன்னுத்துரை. சென்னை35: மித்ர வெளியீடு, 375/8-10 Arcot Road, 2வது பதிப்பு, செப்டெம்பர் 1996. 1வது பதிப்பு, 1961. (சென்னை 600085: Mithra Book Makers)
iv,196 பக்கம். விலை: இந்திய ரூபா 50. அளவு: 17.5x12.5 சமீ. ISBN 1 876 192 002.

இந்நாவல் மனிதரின் அடிப்படை உணர்ச்சிகள், அவர்களது ஆண்-பெண் உடலுறவு பற்றியது தான் என்ற மானிடவியல் நோக்கில் நகர்த்தப்படுகின்றது. வசதிபடைத்த ஓர் இளைஞன் தன்னுடைய வாழ்வில் சந்தித்த ஆறு பெண்களுடன் கொண்ட உறவு பற்றிய கதை. வெளிவந்த காலகட்டத்தில் சர்ச்சைக்கு உள்ளான நாவல்.

678

துயிலும் ஒரு நாள் கலையும்.கோகிலா மகேந்திரன்.தெல்லிப் பழை: சிவன் கல்வி நிலையம், விழிசிட்டி, 1வது பதிப்பு, 1986. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்)
x+ix,134 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18x12.5 சமீ.

இந்நாவல், கணவனின் தாழ்வுச்சிக்கலாலும் அன்பில்லாத பாலியல் உறவினாலும் பாதிக்கப்பட்டு அச்சிறைவாழ்விலிருந்து விடுதலை பெறத்துடிக்கும் ஒரு மனைவியின் கதையாகவும் கல்லூரிச்சூழலில் பொய்மைகளுக்கும் பொய்முகங்களுக்கும் இடையில் நட்பையும் நல்ல உள்ளங்களையும் காணவிழையும் ஒரு ஆசிரியையின் கதை யாகவும் அமைகின்றது

679

தூவானம் கவனம். கோகிலா மகேந்திரன். தெல்லிப்பழை: கலை இலக்கியக் கள வெளியீடு, 1வது பதிப்பு, 1988. (தெல்லிப் பழை: குகன் அச்சகம்).
(12),152 பக்கம். விலை: ரூபா 35. அளவு: 18x12 சமீ.

அந்நிய நாடுகளின் தொடர்பால் எமது நாட்டுக்கு ஏற்படக்கூடிய எயிட்ஸ் போன்ற பயங்கரநோய்களின் பாதிப்பே *தூவானம் கவனம்* என்ற சொல்லால் சுட்டப்படுகின்றது. கல்வியறிவும், கலையுணர்வும் காதலும் நிறைந்த ஒரு குடும்பத்தை மையமாகக் கொண்டு புனையப்பட்ட கதையின் சம்பவச் சூழல் 1987 ஜூன் மாதத்திற்கு முற்பட்ட 5 ஆண்டுக்கால யாழ்ப்பாணக் கிராமியக் களத்தைப் பகைப்புலமாகக் கொண்டது, பேரினவாதிகளின் இனக்கொலை நிகழ் ச்சிகளின் மத்தியில் கதை நிகழ்கின்றது.

680

தெய்வ தரிசனம். செ.குணரத்தினம். மட்டக்களப்பு: உதயம் வெளியீடு, புனித செபஸ்தியார் பிரசுராலயம், 1வது பதிப்பு, 1988. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் பிரசுராலயம், 65 லேடி மனிங் டிரைவ்)

152 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

மட்டக்களப்புப் பேச்சு வழக்கில் அமைந்து மண்வாசனை வீசும் நாவல். அம்பாறை-இங்கினியாகலை போன்ற குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பித்த வேளையில் தொழில்ரீதியாகத் தங்கள் பங்களிப்பைச் செய்துவந்த *வத்தை* ஓட்டிகளின் வாழ்க்கையை, அவர்களின் பொருளாதாரத்தை, அவலநிலைகளைக் காட்டும் நாவல்.

681

நச்சுமரமும் நறுமலர்களும். திக்குவல்லை கமால். பண்டாரகம: பேசும்பேனா வெளியீடு, 191 B, அட்டுலுகம. 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (Colombo 13: Quick Graphic Print, Kotahena)

(8),116 பக்கம். விலை: ரூபா 75. அளவு: 17X13 சமீ. ISBN 955-95926-2-9

இந்நாவல் பொதுவான சமூகப்பிரச்சினைகளைத் தான் பேசுகின்றது. ஆனால் நோன்புகாலத்தைச் சுற்றிச் சுழல்கின்றது. இன்றைய இஸ்லாமிய இளம்தலைமுறையிடம் அந்நியமாகி வரும் நோன்புகாலக் கிராமியத் தனித்துவமும் குதூகலமும் பற்றிப் பேசப்படும் ஒரு நாவல்.

682

நடந்தாய் வாழி, வழுக்கியாறு. செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: சிரித்திரன் பிரசுரம், காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).

vi,40 பக்கம், புகைப்படங்கள். விலை: ரூபா 4. அளவு: 18X12 சமீ.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாய்கின்ற ஒரேயொரு நதியான வழுக்கியாற்றைப் பற்றிய சில தகவல்கள் இந்நூலிலிருந்து அறிய முடிகின்றது. தகவல்களை வறட்சியாகக் கூறாமல் அச் சூழலுக்குப் பொருத்தமான கதையினூடாக அவை சொல்லப்பட்டுள்ளன. சிரித்திரன் ஆண்டு மலரில் பிரசுரமான குறுநாவல். வழக்கியாறு தோற்றம் பெறுகின்ற அளவெட்டிப் பினாக்கைக் குளத்திலிருந்து, அது கடலோடு சங்கமமாகும் நவாலிக்கடல் வரை நடக்கும் கதை அமைப்பு. மாட்டுச்சவாரி முகத்தாரின் சவாரி மாடொன்று காணாமல் போகிறது. அது வழுக்கியாற்றுப் படுக்கையினூடாக சென்றதாகக் கிடைத்த தகவலையடுத்து தரகர் மயிலர், சண்டியன் செல்லத்துரை, ஊர் அப்புக்காத்து அப்பையர் ஆகியோர் புறப்படுகின்றனர். அவர்களினூடே கதை சுவையாக விரிகிறது.

683

நம்பிக்கைகள். நந்தி (இயற்பெயர்: எஸ்.சிவஞானசுந்தரம்).யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: சுவரீணா அச்சகம்)

(8),349 பக்கம். விலை: ரூபா 60. அளவு: 18X12 சமீ.

எழுபதுகளில் பேராதனை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த யாழ்ப்பாணத்துக் கிராமப்புற மாணவனின் அனுபவங்களையும் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் கதை. மருத்துவ சமூகத்தைப் பகைப்புலமாகக் கொண்டு சமூகத்தின் சிந்தனையோட்டத்தையும் கால ஓட்டத்தின் போக்கையும் சித்திரிக்கும் நாவல். நூலாசிரியரின் மருத்துவத்துறை அனுபவமும், மருத்துவபீட மாணவரின் வாழ்க்கை முறையினைக் கதையில் நுணுக்கமாகப் பிரதிபலிக்கப் பெரிதும் உதவியுள்ளது.

684

நாளை. இ.தியாகலிங்கம். சென்னை: மித்ரவெளியீடு, 1வதுபதிப்பு, ஏப்ரல் 1999. (சென்னை 600024: Mitra Book Makers)

200 பக்கம். விலை: இந்திய ரூபா 60. அளவு: 18X12 சமீ.

நோர்வே, இலங்கை, இந்தியா ஆகிய மூன்று நாடுகளிலே உள்ள அரசியல் யதார்த்தங்கள் புகலிடத்தமிழ்க் குடும்பம் ஒன்றின் எதிர்காலம் பற்றிய இனிய கனவுகளை எவ்வாறு அலைக்கழிக்கின்றன என்று காட்டும் கதை.

685

நான்காவது உலகம். மாத்தளை சோமு. திருச்சி 620003: தமிழ்க்குரல் பதிப்பகம், P-15, 5வது மெயின் ரோடு, ஞானம் காலனி, இராமலிங்க நகர், உறையூர், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1998. (சென்னை 600014: Parker Computers and Publications, 293, Royapettah High Road, Royapettah)

128 பக்கம். விலை: இந்திய ரூபா 50. அளவு: 21X14 சமீ.

ஒரு தோட்டத்து நாதஸ்வரம், ஆயுதங்கள், நான்காவது உலகம் ஆகிய குறுநாவல்களின் தொகுப்பு. வீரகேசரியில் தொடராக வெளிவந்த *ஒரு தோட்டத்து நாதஸ்வரம்*, யாழ் மலையக மக்களின் உறவை, பண்பாட்டை, சூழலைச் சொல்கின்றது. தமிழகத்தில், சுபமங்களாவில் வெளிவந்த *ஆயுதங்கள்*, இலங்கையில் புரை

யோடிப்போன இனப்பிரச்சினையின் மற்றொரு பக்கத்தைச் சொல் கின்றது. ஆயுதக்கலாச்சாரத்தின் விளைவுகள் இரு தலைமுறைப் பாத்திரங்களினூடாக விளக்கப்படுகின்றது. கணையாளியில் வெளி வந்த *நான்காவது உலகம்*, மூன்றாவது உலக நாடுகளின் பேரினவாத சக்திகளினால் ஜனநாயகம் என்ற பெயரில் நசுக்கப் படுகின்ற நான்காவது உலகத்தைப் பற்றிய கதை.

686

நிதானபுரி: நான்கு குறுநாவல்கள். கசின். கொழும்பு 4: சி. சபாநாதன், அசோகா கார்டின், 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (கொழும்பு: சிட்டிசன் பிரின்டர்ஸ்)

(6),149 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

நிதானபுரி (1961), கற்பகம் (1959), சொந்தக்கால் (தினகரன்,1961), தேடி வந்த செல்வம் (ஈழநாடு,1959) ஆகிய நான்கு குறுநாவல்கள் அடங்கியுள்ளன.

687

நிலவே நீ மயங்காதே. இந்திரா பிரியதர்ஷனி. (இயற்பெயர்: யாமினி சிவராமலிங்கம்). யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1990. (மல்லாகம்: A.S.J.பிரின்டர்ஸ், காங் கேசன்துறை வீதி)

(12),124 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 17.5X12.5 சமீ.

படித்த பெண்ணொருத்தி தனக்காகவல்லாது சமுதாயத்துக்காக வாழ்ந்து பெருமைப்படுவதும் மற்றொரு பெண் காதலனால் ஏமாற் றப்பட்டு மற்றொருவனால் வாழ்வளிக்கப்படுவதுமான இரு வேறு பாத்திரப்படைப்புக்கள் பின்னப்பட்ட சமூகநாவல்.

688

நிழல். சோ.ராமேஸ்வரன். கொழும்பு5: திருமதி எஸ்.ராமேஸ்வரன், 4 1/2 சித்ரா ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்ச்1998. (Maharagama: Tharanjee Prints, 506 High Level Road, Navinna)

66 பக்கம். விலை: ரூபா 60. அளவு: 21.5X14 சமீ. ISBN 95960 39-3-0

எமது தமிழ்ச்சமூகத்தில் புரையோடிக்கிடந்த ஆணாதிக்கத்துக்குச் சார்பான பாரம்பரியக் கோட்பாடுகள் இந்நூலில் சாடப்பட்டுள்ளன.

689

நீண்ட பயணம். செ.கணேசலிங்கன். சென்னை 26: குமரன் பப் ளிஷர்ஸ், 1வது பதிப்பு, நவம்பர் 1994. (சென்னை 14: சித்ரா

பிரின்ரோகிராப்பி)

232 பக்கம். விலை: இந்திய ரூபா 32. அளவு: 18X12 சமீ.

1960களில் ஈழத்தில் எழுதப்பட்ட நாவல்களில் முக்கியமானதாகக் கருதப்படுகின்ற நாவல். சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் ஜனநாயக உரிமைக்காகப் போராடுவதைச் சித்திரிக்கின்றது.

690

நோயில் இருத்தல். மு.பொன்னம்பலம். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3 மெய்கை விநாயகர் தெரு, வடபழநி, 1வது பதிப்பு, 1999. (Chenai: 600014: Monark Graphics)

290 பக்கம். விலை: இந்திய ரூபா 85. அளவு: 22X14 சமீ.

1984 ஒக்டோபரில் நான் மயிலிட்டி TB சனடோரியத்தில் நோயாளி யாக இருந்த வேளையும் (இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி சுடப்பட் டதும், போராளிக்குழுக்கள் அதன் சோகத்தை வெளிப்படுத் தியதுமான காலகட்டம்) 1987 இல் யாழ்.பெரியாஸ்பத்திரியில் பொலிநியுரைரிஸ் நோயாளியாகக் கிடந்தபோதும் (தமிழ் ஈழப் போராளிகளையும் பொதுமக்களையும் இந்திய இராணுவம் வேட்டை யாடிக்கொண்டிருந்த காலம்) இந்த இரு காலகட்டங்களில் எனக்கு நேர்ந்த அனுபவங்களின் வெளிப்பாடு இந்த நாவலாகும்.

-ஆசிரியர் (என்னுரையில்)

691

பஞ்சமர். கே.டானியல். தஞ்சாவூர் 613009: பிரகாஷ் வெளியீடு, 2395, எல்லையம்மன் வீதி, 1வது பதிப்பு, 1982. (தஞ்சை 613009: G.M.L.Screen Processing, கீழ ராஜவீதி)

(8),424 பக்கம். விலை: இந்திய ரூபா 31. அளவு: 21X14 சமீ.

நெடுங்காலமாக பல்வேறு அடக்குமுறைகளுக்கு உட்பட்டு இன்ன லுற்று வாழும் பஞ்சமர் என்று வழங்கப்படும் மக்களின் பிரச்சினை களை உள்ளடக்கி எழுதப்பட்ட நாவல். (சாதிப்பிரிவு முறையில் அமைந்த நளவர், பள்ளர். வண்ணார், அம்பட்டர், பறையர் ஆகிய ஐந்து பிரிவினரையும் பஞ்சமர் என்ற பதம் சுட்டி நிற்கின்றது.)

692

பட்டங்கள் சுமக்கின்றான். முல்லை அமுதன். (இயற்பெயர்: ஆர்.மகேந்திரன்) சென்னை 600078: ரிஷபம் பதிப்பகம், பிளாக். 31/45 இராணி அண்ணாநகர், 2வது தளம், கலைஞர் கருணாநிதி நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (சென்னை 05: Nadaraj Offset Press, 28, முத்துகாளத்தி தெரு, திருவல்லிக்கேணி)

134 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 21X14 சமீ.

மதியழகன்-சுமணா கலப்புத் திருமணமும் அதன் விளைவுகளாக எழும் குடும்ப உறவுகளின் பாதிப்பும் கதையின் பகைப்புலமா கின்றது. 1977இல் எழுதத்தொடங்கி 1988இல் முடிக்கப்பட்டு 1998 இல் பிரசுரமான கதை என்பது ஆசிரியரின் குறிப்பு.

693

படிக்காத மேதை. க.தங்கம். யாழ்ப்பாணம்: 33, கைலாசப் பிள்ளையார் கோவிலடி, நல்லூர், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப் பாணம்: ஆனந்தா அச்சகம்).

92 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 20X14 சமீ.

சமூக நாவல்.

694

பதினைந்து வயதினிலே. க.தங்கம். யாழ்ப்பாணம்: 33, கைலாசப்பிள்ளையார் கோவிலடி, நல்லூர், 1வது பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).

88 பக்கம். விலை: ரூபா 7. அளவு: 21X14 சமீ.

அறியாப்பருவமான 15 வயதில் முன்பின்அறியாத ஒரு முரடனுக்கு வாழ்க்கைப்பட்டு முதலிரவு முடிந்த மறுநாளே தாய்வீட்டுக்கு ஓடி வந்துவிட்ட சாவித்திரியின் சோக வாழ்வு.

695

பனிமலர். அ.ஸ.அப்துஸ் ஸமது. கொழும்பு: வீரகேசரி வெளியீடு, த.பெ.160, 1வது பதிப்பு, டிசம்பர் 1982. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ். 185 கிராண்ட்பாஸ் வீதி)

(6),215 பக்கம். விலை: ரூபா 10.50. அளவு: 17.5X12 சமீ.

மட்டக்களப்புப் பிரதேசத்தைப் பகைப்புலமாகக் கொண்டதும், நிலப்பிரபுத்துவ மனப்பாங்கிற்கும் கல்விஅறிவு வளர்ச்சியினால் ஏற் பட்ட மனப்பாங்கிற்கும் இடையில் நிகழும் போராட்டத்தைச் சித் திரிப்பதுமான கதையம்சம் கொண்டது. மட்டக்களப்புப் பண் பாடுகளையும் முஸ்லிம் மக்களின் தனித்தவமான ஆசாரங்களை யும் நம்பிக்கைகளையும் கதையில் நிறையக்காண முடிகின்றது.

696

பாலாயி. தெளிவத்தை ஜோசப். சென்னை 17: துரைவி பதிப் பகம், 20A/9, கோபாலகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், 1வது

பதிப்பு, ஜூலை 1997. (சென்னை 06: சுமதி லேசர்ஸ்)

160 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 18X12 சமீ.

மலையக முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவரான தெளிவத்தை ஜோசப்பின் தேர்ந்த மூன்று குறுநாவல்களின் தொகுப்பு. இலங்கை யின் பெருந்தோட்டத்துறை மக்களின் அன்றாட வாழ்வைச் சித்திரிக் கும் கதைகள். *ஞாயிறு வந்தது* - தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார அவலங்களைச் சித்திரிக்கின்றது. *மனம் வெளுக்க* - தோட்டங்களில் நிலவும் குரூரமான அதிகாரத்துவ மலையில் அறியாமையுடன் முட்டித் துன்புறும் அப்பாவிகளின் குடும்பச் சிதைவை சித்திரிக்கின்றது. *பாலாயி*- தோட்டத்துரைமாரின் அதிகார தர்பாரையும், மரணப்படுக்கையில் இருக்கும் தாயை தமிழகத்தில் பார்த்துவர மனைவியைப் பிரிந்து செல்லும் கண வனின் சோகக் கதையையும் கூறுகின்றது.

697

பாலைவனப் பயணிகள். கே.ஆர்.டேவிட். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, டேவிட் லிகோரி பதிப்பாலயம், 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: மேர்க்குரி அச்சகம், 40/1 நாவலர் வீதி.)

(8),48 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 17X12 சமீ.

இக்குறுநாவலின் நாயகன் உக்குள் என்ற வாலிபன். சமுதாயக் கரங்களினால் செதுக்கப்பட்டவன். மிகவும் கெட்டவன். சமுதா யமோ இவனிடம் நீதியைத் தேடுகின்றது. முடிவில் சமுதாயக் கால் களால் உதைக்கப்பட்டு தண்டனைக்குள்ளாகின்றான். மேடு பள்ளம் மிக்க சமுதாயம், நபுஞ்சகத்தன்மை மிக்க சட்டம், இரண்டுக்கும் நடுவே அப்பாவி மனிதர். இந்த மேடு-பள்ளங்களைச் சமப்படுத்தாத வரை, உக்குளைப் போன்றவர்கள் பாலைவனப் பயணிகள் தான் என்பதை கதை சித்திரிக்கின்றது.

698

பிரளயம். செங்கைஆழியான். (இயற்பெயர்: க.குணராசா) யாழ்ப் பாணம்: கமலம் பதிப்பகம், 2ம் பதிப்பு, 1989. 1ம் பதிப்பு; 1975. (யாழ்ப்பாணம்: கே.ரி.அச்சகம்)

122 பக்கம், விலை: ரூபா 30. அளவு: 18X13 சமீ.

1971ஆம் ஆண்டு சிரித்திரன் சஞ்சிகையில் *மயான பூமி* என்ற தலைப்பில் தொடராக வெளிவந்தது. வீரகேசரி பிரசுரமாக 1975இல் வெளிவந்தது. 1976 இல் அவ்வாண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசையும் சுவீகரித்துக் கொண்ட நாவல். தமிழர் சமுதாயத்தின் சாதிப்பிரச்சினை தொடர்பான இந்த நாவலில், ஒரு பிரதேசத்தின்

சலவைத்தொழிலாளர் சமூகம் தனது அடிமை-குடிமை நிலையிலிருந்து விடுபடத்துடித்த உணர்வுநிலையே கதையின் கருவாகும். சமூகமாற்றமானது கல்வி, தொழில்மாற்றம், செல்வம் தேடல் என்பவற்றின் மூலம் ஏற்படலாம் எனச் சித்திரிக்கின்றது.

699

பிராயச்சித்தம். ந.பாலேஸ்வரி. யாழ்ப்பாணம்: ரஜனி பப்ளிக்கேஷன்ஸ், 248-5, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு,1984. (யாழ்ப்பாணம்: அன்பு பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி)

68 பக்கம். விலை: ரூபா 4.90. அளவு: 19X12.5 சமீ.

சமூக நாவல்.

700

புதியதோர் உலகம்: நாவல். கோவிந்தன். சென்னை: வெளியீட்டாளர் விபரம் குறிப்பிடப்படவில்லை, 1வது பதிப்பு, மே 1985. (அச்சகவிபரம் குறிப்பிடப்படவில்லை)

365 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 17.5X12.5 சமீ.

புதியதோர் உலகம்: நாவல். கோவிந்தன். கோவை: 641015: விடியல் பதிப்பகம், 3 மாரியம்மன் கோவில் வீதி, உப்பிலிப்பாளையம், 2வது பதிப்பு, ஏப்ரல் 1997. (சென்னை 600017: மாணவர் மறுதோன்றி அச்சகம்)

244 பக்கம். விலை: இந்திய ரூபா 70. அளவு: 21X13.5 சமீ.

பெப்ரவரி 15, 1985 இல் நான் அங்கம் வகித்த தமிழீழ விடுதலை அமைப்பில் இருந்து வெளியேறிய தோழர்களுடன் நானும் சேர்ந்து கொண்டேன். நாம் வெளியேறிய பின்பு எம்மை அழிப்பதற்காகத் தேடிய அவர்களிடமிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொண்டு இரு மாதங்கள் தலைமறைவாக இருந்தோம். அக்காலத்திலேயே இந்நாவல் படைக்கப்பட்டது. இந்நாவல் தனியொரு மனிதனின் படைப்பல்ல. பல தோழர்களின் ஆலோசனைகள், ஒத்துழைப்புடன் உருவான கூட்டுப்படைப்பு. தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் ஒரு வருடகாலமாக நடைபெற்ற உண்மைச் சம்பவங்களிலிருந்தே இந்நாவல் உருப்பெற்றுள்ளது.

-கோவிந்தன் (2வது பதிப்பின் முன்னுரையில்)

701

பூம்பனி மலர்கள். து.வைத்திலிங்கம். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 1வது பதிப்பு, ஆவணி 1988. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம்)

115 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 17.5X12.5 சமீ.

1985இல் ஈழநாடு வாரமலரில் தொடராக வெளிவந்த சமூக நாவல்.

702

பூஜைக்காக வாழும் பூவை. கே.எஸ்.ஆனந்தன். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1990. (யாழ்ப்பாணம்: புதிய சித்ரா பதிப்பகம்)

(10),147 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 18.5X12.5 சமீ.

அழிவுநிலைக்குப் போகவிருந்த தன் குடும்பத்தைக் காப்பாற்றத் தன் வாழ்க்கையையே ஆகுதி ஆக்கிக் கொள்ளும் ஒரு பெண்ணின் கதை.

703

பொய்மையின் நிழலில். செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 70 முதலாவது தெரு, குமரன் காலனி, வடபழநி, 2வது பதிப்பு, பெப்ரவரி 1997, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1987. (Madras 600014: Chitra Printographic)

182 பக்கம். விலை: இந்திய ரூபா 32. அளவு: 18X12.5 சமீ.

இராணுவமுகாம் வதைகள், வெலிக்கடைச் சிறைக்கொலைகள் உள்ளிட்ட ஈழத்தமிழர்களின் சமகாலவரலாற்றின் கொடுரங்களை மட்டுமல்லாது அவற்றினடிப்படையானதும் அண்மையில் பிரபல்யமடைந்து வரும் சித்தாந்தங்களையும் இந்நாவல் விளக்கமுனைகின்றது.

704

மஞ்சு நீ மழைமுகில் அல்ல. திமிலைத்துமிலன். மட்டக்களப்பு: உதயம் வெளியீடு, 1வது பதிப்பு, வைகாசி-புரட்டாதி 1988. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்)

(11),165 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18.5X12 சமீ.

ஈழத்தமிழினத்தின் இன்னல் வரலாற்றில், மீன் பாடும் தேனாட்டின் விதியின் விளையாட்டில் ஒரு தனிக்கட்டத்தை உள்ளம் உணர்ந்துருக வைக்கும் காலக்கண்ணாடி இந்தக்கதை என்று ஓர் உணர்வு பிறக்குமேயானால் அதுவே பெரிதெனக்கு.

- திமிலைத்துமிலன் (முன்னுரையில்)

705

மண்ணிற் சமைந்த மனிதர்கள். வ.அ.இராசரத்தினம். அண்ணாநகர் 600101: ஸ்ரீ மகராஜி பதிப்பகம், 809, 12வது [illegible] கேட் பாங்க் கொலனி, அண்ணாநகர் [illegible] பதிப்பு, செப்டெம்பர் 1996. (சென்னை 600014: Chitra Printographic)

112 பக்கம். விலை: இந்திய ரூபா 22. அளவு: 17.5X12 சமீ.

திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் சார்ந்த மக்களின் வாழ்க்கையையும் மண்வளத்தையும் மொழித்தன்மையையும் பிரதிபலிக்கும் ஒரு நாவல். 1930களின் இறுதிப்பகுதியில் ஆசிரியர் சிறுவனாக, மாணவனாக, வறுமையுடன் வாழ்ந்த காலத்தை யதார்த்தமாக நாவலின் கதையுடன் சித்திரித்துள்ளார். அக்காலகட்டத்தில் கிறிஸ்தவ, முஸ்லிம், சிங்கள மக்கள் இன-மத முரண்பாடுகளின்றி மூதூர் பகுதிகளில் ஐக்கியமாக வாழ்ந்த முறைமை நாவலில் இழையோடியுள்ளது.

706

மண்ணின் தாகம். செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்).

X,103 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18X12.5 சமீ.

தம் வயல்களில் உழைக்கவும் வருவாய் பெறவும் மனித உரிமைகளுடன் வாழவும் முடியாது, அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு கிராம மக்களில் சிலர் தமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இடையறாது முயற்சிப்பதும் அந்த முயற்சியில் வெற்றியடையாவிடினும் மாற்றுத் திட்டமொன்றின் மூலம் தம் வாழ்வைச் சீர்செய்வதும் இந்த நாவலின் பிரதான பொருளாகவுள்ளது. 1977ம் ஆண்டுப் பகைப்புலத்தைக்கொண்ட இது 1983இல் எழுதப்பட்டது. இந்நாவல் ***தீராச்சுமைகள்*** என்ற பெயரில் வீரகேசரி வாரமலரில் வெளிவந்தது. நாவலின் மூலப்பெயர் ***இந்த நாடு உருப்படாது*** என்பதாகும்.

707

மண்ணும் மக்களும். செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ்,79 1வது தெரு, குமரன் காலனி, வடபழநி, 2வது பதிப்பு, ஏப்ரல்,1996. 1வது பதிப்பு, நவம்பர்1969. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிரபி)

176 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12.5 சமீ.

நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்குமிடையே உள்ள முரண்பாடுகள் உடைத்தெறியப்படுவதன் மூலமே புதிய ஜனநாயகப் புரட்சியை ஏற்படுத்தமுடியும் என்ற கருத்தை வலியுறுத்தும் நாவல்.

708

மண்ணும் மல்லிகையும். விமல் குழந்தைவேல். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் வீதி, வடபழநி,

1வது பதிப்பு, 1999. (Chennai 600014: Monark Graphics)
168 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 17.5X12 சமீ.

ஈழப்போராட்டத்தின் ஆரம்பகால கட்டத்தில் கிழக்கிலங்கையில் வாழ்ந்திருந்த ஒரு குடும்பம் எதிர்கொண்ட சமூக, பொருளாதார அரசியல் சிக்கல்களை மையமாக வைத்துப் பின்னப்பெற்ற கதை.

709

மரக்கொக்கு. தெணியான். கொழும்பு: நான்காவது பரிமாணம் வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 1994. (கொழும்பு: யுனி ஆர்ட்ஸ்)

182 பக்கம். விலை: 75 ரூபா. அளவு: 18X12 சமீ.

யாழ்ப்பாண நிலப்பிரபுத்துவத்தின் சிதைவு எவ்வாறு மனிதாயத நிலைப்பட்ட பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது என்பதை இந்த நாவலில் காணமுடிகின்றது.

710

மழைக்காலம். செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம்)

(10),90 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18.5X12.5 சமீ.

1984இல் ஈழமுரசு வாரமலரில் தொடராக வெளிவந்த கதை. யாழ்ப்பாணத்து இளைஞர்களின் மனப்பாங்கினையும் மேலைத்தேயக் கலாச்சாரத்தில் ஊறிவிட்ட தமிழ் இளைஞர்களின் மனப்பாங்கினையும் ஒப்பிட்டு நோக்கும் கதையம்சம். யாழ்ப்பாணத்துச் சீதனக் கொடுமையால் வாழ்வின் ஆரம்பத்திலேயே பாதிக்கப்பட்ட ஒருத்தி தன் சகோதரிகளுக்காக, கடல் கடந்து சென்று ***ஒப்பந்த மனைவி*** யாக வாழ்வதற்குத் தயாராகி ஜேர்மன் செல்கின்றாள். வெளிநாட்டுப் பயணத்தின் நோக்கத்துக்கு புதிய விளக்கம் தருவதாக அமையும் கதையம்சம்.

711

மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து. செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226 காங்கேசன்துறை வீதி)

104 பக்கம். விலை: ரூபா 35. அளவு: 17.5X13 சமீ.

ஒரு குடியேற்றத்திட்டத்தின் கதை. மனித முயற்சிகள் இயற்கையின் கர்ப்பத்தில் ஏற்படுத்தும் தாக்க விளைவுகளின் பெறுபேறாக சமூக நிலையில் நிகழும் தார்ப்பரியத்தை நாவல் விபரிக்கின்றது. காடு மூடி, காட்டு விலங்குகள் நிறைந்து, பருவத்துக்குப் பருவம் வெள்

ளப்பெருக்குக்குட்பட்டு மக்கள் வாழாப் பிரதேசமாக விளங்கிய கிளிநொச்சிப்பிரதேசம் இரணைமடுக் குளத்தின் நிர்மாணத்துடன் எவ்வாறு புத்துயிர் பெற்றது என்பதை இந்நாவல் சித்திரிக்கின்றது.

712

மனநதியின் சிறு அலைகள். கே.விஜயன். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, ஒக்டோபர் 2000. (கொழும்பு13: பேஜ் செற்றர்ஸ், 113 ஜிந்துப்பிட்டி வீதி)

vi,211 பக்கம். விலை: ரூபா 200. அளவு: 18X12 சமீ.

பழமையானதொரு நெசவாலையும் அதன் புறச்சூழலும் கதையின் களமாகின்றது. நெசவாளர்களின் தொழிற்சங்கப் போராட்டங்கள், காதல், விரக்தி, பாசம்மிக்க உறவுகள், சில்லறைத்தனமான சச்சரவுகள், மத சம்பிரதாயங்கள் அனைத்தையும் சுமந்து ஒரு நதியைப்போலப் பயணிக்கும் கதை. பல்லினப்பண்பாட்டுடன் வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டத்தின் வாழ்க்கைப் போராட்டம் இதுவாகும்.

713

முடிவல்ல ஆரம்பம். இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, டேவிட் லிகோரி பதிப்பாலயம், 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம்).

(8),122 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18X12 சமீ.

ஒரு பாடசாலை ஆசிரியரின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட சமூக நாவல்.

714

முத்துப்பந்தலில் முல்லைக்கொடிகள். குமாரதாசன் (இயற் பெயர்: க.சிவசுப்பிரமணியம்). லண்டன்: கலைவாணி பதிப்பகம், 1வது பதிப்பு, ஆண்டு குறிப்பிடப்படவில்லை. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

43 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 22X16 சமீ.

முத்துப்பந்தலில் முல்லைக்கொடிகள் என்ற குறுநாவலும், சீதனம் பற்றிய ஆசிரியரின் கட்டுரையும், 1994 ஆடி, பாரிஸில் இடம்பெற்ற 3வது உலகத்தமிழ் சைவ மகாநாட்டில் தங்கப்பதக்கம் பரிசாகப் பெற்ற ***மதமாற்றமா மனமாற்றமா மனஅமைதிக்கு உகந்தது*** என்ற கட்டுரையும் உள்ளடங்கியுள்ளது.

715

முற்றத்து ஒற்றைப்பனை. செங்கை ஆழியான். யாழ்ப்

பாணம்: மீரா வெளியீடு, 2வது பதிப்பு, செப்டெம்பர் 1989. 1வது பதிப்பு, 1972. (யாழ்ப்பாணம்: சுவர்ணா அச்சகம், காங்கேசன்துறை வீதி)

(8),52 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 18.5X13 சமீ.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிராமத்தைக் களமாகக்கொண்டு அங்கு பாரம்பரியமாக நிலவிவரும் காற்றாடிக்கலையின் பெருமையைப் பலப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட நகைச்சுவைக் கிராமியச் சித்திரம். எழுபது வயதாகியும் முற்றத்துப்பனையில் விட்டம் போட்டுக் காற்றாடி விடுகின்ற பழக்கமும், வெறியும் தீராத வண்ணார்பண்ணைக் கொக்கர் மாரிமுத்தரையும், அந்த நெடுந்துயர்ந்த பனைமரம் காற்றுக்கு எங்கே தனது வீட்டின்மேல் பாறி விடுமோ என்று பயப்படுகின்ற அவரின் மைத்துணர் அலம்பல் காசிநாதரையும் அவர்களிடையே வளர்ந்துவரும் பகைமை உணர்வையும் வைத்துப் புனையப்பெற்ற நகைச்சுவை நவீனம்.

716

மூட்டத்தினுள்ளே. புலோலியூர் க.சதாசிவம். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி இலக்கம் 160, 1வது பதிப்பு, ஜூலை 1983. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ், 185 கிராண்ட்பாஸ் வீதி)

254 பக்கம். விலை: ரூபா 14.50. அளவு: 18X12.5 சமீ.

மலையகத்தைப் பகைப்புலமாகக் கொண்ட நாவல். உழைப்பையே மூலதனமாக நம்பி வாழும் மக்கள் சமூகம் பலவகை அவலங்களுக்குள்ளும் அபிலாஷைகளுடனும் வாழத்துடிக்கும் மனிதப் பண்பினை இந்நாவல் அழுத்திக்காட்டுகின்றது.

717

மூலஸ்தானம். மாத்தளை சோமு. திருச்சி 620003: தமிழ்க்குரல் பதிப்பகம்,P-15, 5வது மெயின் ரோடு, ஞானம் காலனி, இராமலிங்க நகர், உறையூர். 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1998. (Chennai 600014: Parker Computers and Publications, 293 Royapettah High Road, Royapettah)

228 பக்கம். விலை: இந்திய ரூபா 75. அளவு: 21.5X14 சமீ.

தமிழ்நாட்டின் கிராம சமுதாயம், மக்களின் வாழ்க்கை, கோயில் திருவிழாக்காலச் சிறப்புகள் முதலியவற்றை உரிய முறையில் படம் பிடித்துக் காட்டும் இந்நாவல், அமெரிக்க வாழ்க்கைப் போக்கையும் இங்கு வசிக்க நேர்ந்த பிராமணீய சமூகத்தைச் சேர்ந்த ராமின் அனுபவங்களையும் புதுமைச் சிந்தனைகளையும் சுவார

சியமாக விவரிக்கின்றது. தமிழகத்தில் புரையோடிக்கிடக்கும் சாதிப்பிரச்சினையின் சில பக்கங்களைத் தன் புலம்பெயர் வாழ்வியல் அனுபவங்களோடு புதியகோணத்தில் மானுடத்தைத் தேடுகின்ற வேட்கையோடு மாத்தளை சோமு சொல்ல முனைகின்றார்.

718

யாக குண்டம். செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82 பிரவுண் வீதி, 1வது பதிப்பு, தை 1991. (யாழ்ப்பாணம்: தயா அச்சகம், நாவலர் வீதி)

x,128 பக்கம். விலை: ரூபா 35. அளவு: 16x10 சமீ.

வெளிநாடுகளுக்குத் தொழில் நிமித்தம் கடல் தாண்டிச்சென்று விட்ட இளைஞர்கள், அவர்களைப் பின்தொடர்ந்து வாழ்க்கைத் துணை தேடி வெளியேறும் இளம்பெண்கள், புதியசூழலில் வம்ச விருட்சத்தை வளர்க்கும் இவர்களின் பிரிவுத்துயரால் இந்த மண்ணில் ஏங்கும் முதிய உறவுகள், இந்த மண்ணின் உறவுத்துயர்களை நாவல் பேசுகிறது. யாழ்ப்பாணத்து மண்ணோடியைந்த வாழ்க்கைமுறை பற்றி நிறைய விபரிக்கப்பட்டுள்ளது.

719

யாகம். முல்லை அமுதன். சென்னை 78: ரிஷபம் பதிப்பகம், 31/45 இராணிஅண்ணா நகர், பி.டி.இராஜன் சாலை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. (சென்னை 5: மணி ஆப்செட்)

128 பக்கம். விலை: இந்திய ரூபா 50. அளவு: 21.5x14 சமீ.

இனப்பிரச்சினையைச் சுற்றிப் பின்னப்பட்ட கதை.

720

யேசுவின் மேல் ஆணை. க. தங்கம். நல்லூர்: 33, கைலாசப் பிள்ளையார் கோவிலடி, 1வது பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி)

184 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18x12.5 சமீ.

ஒரு பெண், சத்தியத்துக்காகத் தன்வாழ்க்கையையே அர்ப்பணித்துத் தன் கணவரையும், உயிருக்குயிராய் மதித்த குழந்தைகளையும் விட்டு வீட்டைத்துறந்து வெளியேறுகின்றாள். அவள் படும் கஸ்டங்களும் துயரங்களும் கதையை நகர்த்துகின்றன.

721

ராதையின் நெஞ்சம். கே.எஸ்.ஆனந்தன். யாழ்ப்பாணம்: மீரா வெளியீட்டகம், 38 வேம்படி வீதி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: K.T. அச்சகம்)

(10),198 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 17.5x12.5 சமீ.

கல்லூரி வாழ்வில் ஏற்படும் காதலைப் பின்னணியாகக் கொண்டு புனையப்பட்ட கதை.

722

லங்காராணி. அருளர். சென்னை 600018: கனல் வெளியீடு, 75 ஆழ்வார்பேட்டைத் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர், 1978. (சென்னை 14: நொவல் ஆர்ட் பிரின்டர்ஸ்)

256 பக்கம். விலை: இந்திய ரூபா 10. அளவு: 18x12.5 சமீ.

லங்காராணி. அருளர். யாழ்ப்பாணம்: ஈழப்புரட்சி அமைப்பு, 39, கோவில் வீதி, நல்லூர், 2வது பதிப்பு, 1988. (அச்சகம் குறிப்பிடப்படவில்லை.)

(12),220 பக்கம். வரைபடம். விலை: ரூபா 20. அளவு: 21x13.5 சமீ.

1977 ஆகஸ்ட் இலங்கை இனக்கலவரத்தின் போது கொழும்பிலிருந்து ஈழத்தமிழர்களை அகதிகளாக ஏற்றி, வடபுலத்திற்குக் கொண்டு வந்த கப்பலின் பெயர் *லங்காராணி*. லங்காராணியின் கடற்பிரயாணத்தின் பின்னணியில் அதன் பிரயாணிகளின் உணர் வலைகளின் ஊடாக ஈழத்து இனப்பிரச்சினையின் பூதாகாரத்தன்மையையும் விடுதலைப் போராட்டத்தின் தேவையையும் அழகாகச் சித்திரிக்கும் நூல்.

723

லயத்துச் சிறைகள். தி.ஞானசேகரன். கண்டி: மலையக வெளியீட்டகம், த.பெ.எண். 32. 2வது பதிப்பு, பெப்ரவரி 1998. 1வது பதிப்பு, நவம்பர் 1994. (கண்டி: Latha Impress, 302, D.S.Senanayake Road)

128 பக்கம். விலை: ரூபா 80. அளவு: 20.5x14.5 சமீ.

மத்திய மாகாண கலாசார அமைச்சின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நாவல். வெளியுலகத் தொடர்புகள் அதிகமற்ற ஒரு மூடிய கட்டமைப்புக்குள் வாழ்ந்த மலையக மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த அரசும், அரசசார்பற்ற அமைப்புகளும் மேற்கொண்ட முயற்சிகளின் பின்பும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடையாமைக்கான காரண காரியத் தொடர்புகள் இந்நாவலில் ஆராயப்படுகின்றன.

724

லாவண்யம். தேவதாசன் ஜெயசிங். கொழும்பு 6: மலையக

வெளியீட்டகம், 57 மஹிந்த பிளேஸ், 1வது பதிப்பு, 1988. (கண்டி: ரோயல் அச்சகம். 190, கொழும்பு வீதி)
(8),76 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 21.5X14 சமீ.

விவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் வரும் சாம்சனின் (Hero Samson) வீரகாவியம்.

725

வசந்தம் வந்து போய்விட்டது. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 79, 1வது தெரு, குமரன் காலனி, வடபழநி. 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (சென்னை 14: மொனார்க் கிரப்பிக்ஸ்)
215 பக்கம். விலை: இந்திய ரூபா 55. அளவு: 18X12.5 சமீ.

இலண்டன் நகரின் வாழ்க்கையின் ஒரு அம்சத்தைக் காட்டும் கதை. இங்கு வாழும் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்தின் சில குழப் பமான கோணங்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. அரை குறையாக வேதாந்தம் பேசவும், மற்றவர்களுக்குப் புத்தி சொல் லவும் முனையும் டாக்டர் பிரமிளா போன்றவர்கள் எப்படி உண்மை யை இறுதியில் உணர்கின்றார்கள் என்பதே நாவலின் கருவாகும்.

726

விடிவெள்ளி பூத்தது. என். சோமகாந்தன். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).
viii,146 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 18X12 சமீ.

ஒரு காலத்தில் கொடூரமாக விளங்கிய சாதியாசாரம் எவ்விதம் மெல்ல மெல்ல அழிந்து ஒரு புதிய யுகத்தை எட்டிப் பார்க்கின் றது என்ற உண்மையை இந்த நாவல் படம் பிடித்துக் காட்டுகின் றது. யாழ்ப்பாணத்துப் பிராமணக்குடும்பமொன்றின் கதை ***உள் வீட் டுப் பிள்ளை*** யொன்றினால் கூறப்படுவதால் அச்சமூகத்தின் ஏக்க தாபங்கள் விரக்தி வைராக்கியங்கள் சிறப்பாகச் சித்திரிக்கப் படுகின்றன.

727

விமானங்கள் மீண்டும் வரும். நெல்லை க.பேரன். கரவெட்டி: ஷர்மிளா பதிப்பகம், நெல்லியடி. 1வது பதிப்பு, டிசம்பர் 1985. (நெல்லியடி: கலாலயா)
x,36 பக்கம். விலை: ரூபா 9.50. அளவு: 18X12.5 சமீ.

யாழ். இலக்கிய வட்டம், ஈழநாடு நிறுவனத்துடன் இணைந்து

நடாத்திய இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் முதற்பரிசு பெற்று ஈழநாட்டில் வெளிவந்தது. எமது தமிழ் இளைஞர்களின் மத்திய கிழக்கு வாழ்க்கையைப் படம்பிடித் துக் காட்டும் ரீதியில் அமைந்த நாவல்.

728

விமோசனம் நாளை. முல்லை அமுதன். சென்னை 17: மணி மேகலைப் பிரசுரம், த.பெ.1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 600005: எம்.கே. என்டர்பிரைஸ்)
128 பக்கம். விலை: இந்திய ரூபா 25. அளவு: 18.5X12.5 சமீ.

இலங்கையில் சமகாலத்து இனப்பிரச்சினைகளின் பகைப்புலத் தில் இணைந்து செல்லும் ஒரு சாமானியனின் கதை.

729

விலங்கில்லா அடிமைகள். செ.கணேசலிங்கன். சென்னை 5: குமரன் பதிப்பகம், 13/2 கஜபதி தெரு, 1வது பதிப்பு, ஜூலை 1991 (சென்னை 600024: ஜென்னிராம் அச்சகம், 28 தெற்கு சிவன் கோவில் தெரு)
132 பக்கம். விலை: இந்திய ரூபா 14. அளவு: 17.5X12 சமீ.

ஆசிரியர் இந்நாவல் மூலம் இலங்கையின் தேசிய இனப்பிரச் சினையில் இலங்கைத் தமிழரின் குடும்ப அமைப்பில் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு, நாகரிக நவீன உலகில் வாழ்கிறோம் என நம்பிக் கொண் டிருப்பவரும் அறிந்துணராத அளவில் உலகெங்கிலும் பல்வேறு வடிவில் வியாபித்திருக்கும் அடிமைநிலை ஆகிய இரு உண்மை களை உணர்த்த முற்பட்டுள்ளார்.

730

விடந்நவன். சி.வி.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: வைகறை, 330, நாவலர் வீதி, நல்லூர். 1வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம்)
vi,114 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

மலையகத் தோட்டங்களுக்குள் தொழிற்சங்கங்கள் வேரூன்றி விடாமல் தோட்ட நிர்வாகம் கையாண்ட அடக்குமுறைகளின் பின் னணியில் நகர்த்தப்படும் நாவல்.

731

வெள்ளோட்டம். கோப்பாய்சிவம் (இயற்பெயர்:ப.சிவானந்தசர்மா). யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, 1986. (கிளிநொச்சி: சர்வசக்தி குருகுலம்).

(4),72 பக்கம். விலை: ரூபா 6. அளவு: 21X14 சமீ.

வெள்ளோட்டம், கரை சேரும் கட்டுமரங்கள் ஆகிய இரு குறு நாவல்களின் தொகுப்பு. *வெள்ளோட்டம்*- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வாலிபர்வட்டம் நிகழ்ச்சியில் தொடர்நாடகமாக ஒலித்தது. *கரைசேரும் கட்டுமரங்கள்*- 1985 ஆம் ஆண்டின் யாழ் இலக்கியவட்டம் ஈழநாடு நிர்வாகத்துடன் இணைந்து நடத்திய இரசிகமணி கனக செந்திநாதன் குறுநாவல் போட்டியில் பாராட்டுப்பெற்றது. இது ஈழநாடு வாரமலரிலும் தொடராக வெளியாகியது.

732

ஸ்னேகம். முல்லை அமுதன். (இயற்பெயர்: இ.மகேந்திரன்) லண்டன்: E12 6LN: 7 Shakespeare Crescent, Manor Park, 1வது பதிப்பு, ஏப்ரல் 1999. (சென்னை 600002: காந்தளகம்)

111 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 17.5X12 சமீ.

யாழ்ப்பாணத்துப் பாடசாலை ஒன்றில் இளம்ஆசிரியை ஒருவருக்கும் அவரது மாணவனுக்கும் இடையில் ஏற்படும் காதல் கதை.

733

ஷாமிலாவின் இதயராகம். ஜெக்கியா ஜ்னைதீன். பேராதனை: ஸீனத் முற்போக்கு தமிழ் மன்றம், 7ஏ ஹேந்தெனிய, 1வது பதிப்பு, 1989. (கொழும்பு 9: எஸ்.எச்.நிலாப்தீன், டெவலோ பிரின்ட், 33, அல்பியன் ஒழுங்கை).

264 பக்கம். விலை: ரூபா 50. அளவு: 18X12 சமீ.

இஸ்லாமிய சமூகப் பின்னணியில் எழுதப்பட்ட நாவல். சமூகத்தில் புரையோடிப்போயுள்ள பல்வேறு வகைப்பட்ட உணர்வுகளையும் அதனால் விளையும் விபரீதங்களையும் விளக்குகின்றது. இலங்கையில் தினபதி நாளிதழின் வாரவெளியீடான சிந்தாமணி வார இதழில் தொடர்கதையாக வெளியிடப்பட்டது.

894.8(6) இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள்

734

அழகும் முழுமையும்: இலக்கியத்திற் கருத்துக்கள். க.கைலாசபதி. சென்னை 26: குமரன் பப்ளிஷர்ஸ், 79, 1வது தெரு, குமரன் காலனி, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (சென்னை 600014: சித்ரா பிரின்டோகிரபி)

350 பக்கம். விலை: இந்திய ரூபா 65. அளவு: 17.5x12 சமீ.

அவ்வப்போது பத்திரிகைக் கட்டுரைகளாகவும், கருத்தரங்கக் கட்டுரைகளாகவும் வானொலி உரைகளாகவும் எழுதியனவே திருத்தமும் விரிவும் பெற்று இந்நூலில் அத்தியாயங்களாக அமைகின்றன. வெளியீட்டாளர் முதலாவது பதிப்பு என்று குறிப்பிட்டிருப்பினும் இந்நூல் ஏற்கெனவே 1970இல் ஆசிரியரால் தமிழகத்தில் தமிழ்ப்புத்தகாலயத்தினால் முதற்பதிப்பு வெளியிடப்பட்டதாக முன்னுரையிலிருந்து அறிய முடிகின்றது.

735

அதிதீரன். க.உமாமகேஸ்வரன். லண்டன்: அம்பனை கலைப் பெருமன்றம், ஐக்கிய இராச்சியம், 13, Arcus Road, Bromley, BR1 4NN, 1வது பதிப்பு, அக்டோபர் 1998. (லண்டன்: அச்சக விபரம் அறியமுடியவில்லை)

vi,56 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X15 சமீ.

தமிழறிஞர் க.உமாமகேஸ்வரன் அவர்களின் பதின்மூன்று இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு. பல்வேறு இலக்கியத்தொகுப்புகளில் பிரசுரமானவை.

736

அரசகேசரியின் இரகுவம்மிசமும் அது எழுந்த இந்துப் பண்பாட்டுச் சூழலும். ஆ.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, நவம்பர் 1988. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை.)

24 பக்கம், வரைபடம் 1. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 24.5X18.5 சமீ.

அரசகேசரியின் *இரகுவம்மிசம்*, யாழ்ப்பாணத்து அரசர்களின் காலத்திலேயே தோன்றிய முக்கியமானதொரு பெருநூலாகும். ஆறுமுகநாவலர் இரகுவம்மிசத்துக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டுமென விரும்பியதை அவர் வழிவந்த குமாரசுவாமிப்புலவர், சி. கணேசையர் போன்றோர் அந்நூலைப்பதிப்பித்தல், விளக்கம் தருதல், புத்துரை எழுதுதல் ஆகிய பணிகளின் வாயிலாக நிறைவேற்ற முற்பட்டனர். நம்மவர்களின் பண்பாட்டு விழிப்பின் ஒரு பிரதான அம்சமாக இரகுவம்மிசம் விளங்குகின்றது. இரகுவம்மிசம் எழுந்த இந்துப் பண்பாட்டுச்சூழல் பற்றி பேராசிரியர் வேலுப்பிள்ளை இந்நூலில் ஆராய்ந்துள்ளார். இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தப்பட்ட சேர். பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரையாகும்.

737

அழியா அழகு. ஜெயராஜ். சென்னை 17: வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, 1வது பதிப்பு, மே 1997. (சென்னை 41: Novena Offset Printing Co)

xxxii,170 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x12சமீ

கவியரசன் கம்பனைப் பற்றிய இருபத்தியொரு திறனாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு.

738

இத்தாலியன் தந்த இலக்கியத்தேன். நாவண்ணன்.காங்கேசன் துறை: ஸ்டினா வெளியீடு, கலைவாணி வீதி, தையிட்டி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம்)

(8),62 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 17x12 சமீ.

மேலைநாட்டினர் தமிழ்நாட்டுடன் கொண்ட உறவுகளின் ஒரு படி நிலை சமய இலக்கியச் சிந்தனைகளின் தொடர்பாகும். இந் நிலையின் ஒரு கூறாகத் தோற்றம் பெற்ற கிறிஸ்தவ தமிழிலக் கியத்தில் முக்கியமானது தேம்பாவணியாகும். இது இத்தாலிய நாட்டு கிறிஸ்தவத் தொண்டரான ஜோசப் பெஸ்கி அவர்கள், வீரமாமுனிவராகத் திகழ்ந்து ஆற்றிய பன்முகப்பணிகளின் ஒரு வெளிப்பாடாகும். இயேசு பிரானின் வளர்ப்புத் தந்தை சூசையப்பர், அன்னை மரியாள் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றினை விரித்து ரைக்கும் சமயக் கதையம்சம். பல்வேறு கிளைக்கதைகளுடன் புனையப்பட்டுள்ளது. இக்காவியத்தின் மையக்கதையம்சத்தின் முக் கிய பகுதிகள் சிலவற்றை சுவைதேர்ந்து வெளிப்படுத்தும் நோக் கில் அமைந்த ஆக்க முயற்சியே இந்த நூலாகும்.

739

இராசநாயக பிரபந்தம். வல்லிபுரம் இராசநாயகம். வயா விளான்-பலாலி: ஸ்ரீ தம்பையா தருமப்பணியினர், கூத்தபிரான் அறங்காவல் மன்றம் (கூட்டு வெளியீடு), 1வது பதிப்பு, 1982. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

xii,192 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14 சமீ.

ஆசிரியரினால் ஆக்கப்பெற்ற, செய்யுட்களும் கட்டுரைகளும் அறிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. வரலாறு, அரசியல், சமூகம், சமயம், சட்டம், இலக்கணம் பற்றிய பல்துறைசார்ந்த விடயங் கள் இதில் அடங்குகின்றன.

740

இலக்கிய நினைவுகள். வ.அ.இராசரத்தினம். திருக்கோண

மலை: அன்பர் நிதியம், 1வது பதிப்பு, தை 1995. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்)

203 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 18.5x12 சமீ.

தனது இலக்கிய வாழ்வுடன் கூடிய நிகழ்வுகளை இந்நூலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். ஈழத்து இலக்கியம் பற்றிய அறிவுக்கு இந்நூல் உதவுகின்றது.

741

இலக்கிய வழி. சி.கணபதிப்பிள்ளை (மூலம்) அ.பஞ்சாட்சரம் (பதிப்பு). உரும்பிராய்: பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை, 4வது பதிப்பு, 1985. 1வது பதிப்பு, 1964. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

xvi,xxx,viii,122 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18x13 சமீ.

பண்டிதமணி அவர்களின் சமயச் சொற்பொழிவுகளும் கட்டுரை களும் தொகுக்கப்பெற்று *சமயக்கட்டுரைகள்* என்ற பெயரில் வெளிவந்திருந்தது. அதன் திருத்தப்பதிப்பாக, இலக்கியக்கட் டுரைகளும் சேர்க்கப்பட்டு இருபது கட்டுரைகளுடனும் இரசனைக் குறிப்புகளுடனும் இலக்கியவழி என்ற பெயரில் 1964 இல் வெளிவந் தது. அந்நூலின் 4வது பதிப்பு இதுவாகும்.

742

இலக்கியச் சிந்தனைகள். க.கைலாசபதி. யாழ்ப்பாணம்: திருமதி.சர்வமங்களம் கைலாசபதி, திருநெல்வேலி. 1வது பதிப்பு, 1983. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

(8),144 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18x13 சமீ.

இலக்கியச் சிந்தனைகள். க.கைலாசபதி. சென்னை: குமரன் புத்தக இல்லம், 3 மெய்கைவிநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழநி, 2வது பதிப்பு, 2001. (சென்னை 600014: சித்ரா பிரின் டோகிரபி).

107 பக்கம். விலை: இந்திய ரூபா 175. அளவு: 21x14 சமீ. ISBN 955-9429-10-8

பழந்தமிழ் இலக்கியத்தையும் நவீன எழுத்துக்களையும் விஞ்ஞான பூர்வமாக அணுகும் போக்கின் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கிய பேராசிரியர் க.கைலாசபதி எழுதிய 19 இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள்.

743

இலக்கியத் தேறல். அகளங்கள் (இயற்பெயர்:நா.தர்மராஜா)

வவுனியா: முத்தமிழ்க் கலாமன்றம், 1வது பதிப்பு, 1988. (யாழ்ப் பாணம்: உமா அச்சகம்)

xxiv,132 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 17.5x12 சமீ.

சங்க இலக்கியங்கள் தொடங்கித் திரைப்படப்பாடல்கள் வரை அலசி வடித்த பன்னிரு இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு.

744

இலக்கியமும் திறனாய்வும். க.கைலாசபதி. சென்னை 60002: சக்கரம் புக்ஸ், 21 ஜான் முகமத் தெரு, 3வது (மீள்)பதிப்பு, டிசம் பர் 1990. 1வது பதிப்பு, ஏப்ரல் 1972, 2வது பதிப்பு, பெப்ரவரி 1976, 3வது பதிப்பு, மார்ச் 1981. (சென்னை 4: பார்வதி அச்சகம். மயிலாப்பூர்)

190 பக்கம். விலை: இந்திய ரூபா 25. அளவு: 18x12.5 சமீ.

இலக்கியமும் திறனாய்வும். க.கைலாசபதி. சென்னை 26: குமரன் பப்ளிஷர்ஸ், 3. மெய்கைவிநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 4வது (மீள்)பதிப்பு, டிசம்பர்1999. (சென்னை 18: NAM Process)

174 பக்கம். விலை: இந்திய ரூபா 45. அளவு: 17.5x12 சமீ.
(குமரன் வெளியீட்டின் 1வது பதிப்பாகவும், நூலின் 4வது மீள் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது)

திறனாய்வு என்பது வெறும் விவரணமோ, கூற்றுத்திறனோ அன்று. அது அழகியல் சார்ந்த முயற்சியாக இருக்கும் அதே வேளை ஆய்வறிவு சார்ந்த ஓர் ஆயுதமாகவும் அது விளங்குகின்றது. மொழியும் இலக்கியமும், இலக்கியக் கோட்பாடுகள், திறனாய்வுக் கொள்கைகளுடன் தற்கால தமிழிலக்கியத் திறனாய்வுப் போக்கு கள் பற்றியும் இந்நூல் விபரிக்கின்றது.

745

இலங்கைத் தமிழ் இலக்கியம். எஸ்.தில்லைநாதன். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, 44, 3வது மாடி, கொழும்பு மத்திய கூட்டுச்சந்தைத் தொகுதி, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (தெகிவளை: டெக்னோ பிரின்ட்)

(10),184 பக்கம். விலை: ரூபா 150. அளவு: 22x14 சமீ.

பேராசிரியர் தில்லைநாதன் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளிவரும் இந்நூலில் இலங்கைத் தமிழ்இலக்கியம் பற்றிக் கடந் த 25 ஆண்டுக் காலப்பகுதியில் அவர் எழுதிய ஆய்வுக்கட் டுரைகளுள் சிலவற்றை உள்ளடக்கியதாக இந்நூல் வெளி வந் துள்ளது. இந்நூலில் 27 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

746

இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி. துரை மனோகரன். கண்டி: கலைவாணி புத்தக நிலையம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1997. (கண்டி: எஸ்.மகேந்திரன், மெமோ-டெக் கம்பியுட்டர்ஸ்)

vii,225 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 21x14 சமீ.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடக்க காலம் முதல் இற்றை வரையிலான வளர்ச்சிப்போக்கினைத் தொடர்ச்சி யாக உணர்த்தும் முறையில் அமைந்துள்ளது.

747

இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள். க.அருணாசலம். கொழும்பு 12: குமரன் புத்தகஇல்லம், 201 டாம் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (கொழும்பு 12: குமரன் அச்சகம்)

x,475 பக்கம். விலை: ரூபா 150. அளவு: 21.5x14 சமீ. ISBN 955-9194-06-2.

தமிழியல் பற்றிய ஆய்வுகளை வரலாற்று விவரண ஆய்வுமுறை யியலூடாகத் துறைகளின் அடிப்படையிலும், கால அடிப்படை யிலும், ஒழுங்கமைத்துத் தருவதுடன் ஆங்காங்கே அவை தொடர் பான விமர்சனங்களையும் முன்வைத்திருக்கின்றது.

748

இலங்கையின் மலையகத் தமிழ் நாவல்கள்: ஓர் அறிமுகம். க.அருணாசலம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201 டாம் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (தெகிவளை: டெக்னோ பிரின்ட்)

(6),537 பக்கம். விலை: 150 ரூபா, அளவு 21.5x14 சமீ.

மலையகத் தொழிலாளர்களின் பரிதாபத்திற்குரிய வாழ்க்கைப் போராட்டங்களை. அவலங்களை, வேதனைகளை, அவர்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பெறப்போராடும் நிலைமையை விழிப் புணர்வினை சித்திரிக்கும் வரலாற்று ஆவணங்களான மலையக நாவல்கள் பற்றிய ஆய்வு.

749

இன்றைய உலகில் இலக்கியம். இ.முருகையன். சென்னை 2: சென்னை புக்ஸ், 6, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, பெப்ரவரி 1988. (சென்னை 4: மிதிலா அச்சகம்)

165 பக்கம். விலை: இந்திய ரூபா 14. அளவு: 17x12 சமீ.

மக்கள்-மொழி-பண்பாடு-கலை-இலக்கியம் விஞ்ஞானம் இலக்கியநயப்பு-

இலக்கிய விமர்சனம்-இலக்கியப்பரவல்-இலக்கிய நூல்வெளியீடு ஆகியவற்றுக்கிடையேயான உறவுகள் தொடர்பாக ஓர் இலக்கிய வாசகனுக்கு எழும் ஐயங்களை தெளிவாக்கும்வகையில் அமைந்த நூல்.

750

இனி ஒரு விதி செய்வோம். எஸ்.பொன்னுத்துரை. அவுஸ்திரேலியா: மித்ர வெளியீடு, 1/23 Munro Street, Eastwood, Sidney, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. (சென்னை 600024: Mitra Arts and Creations, 375/8- 10 Arcot Road)

432 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

ஈழத்தின் முன்னணி எழுத்தாளரான எஸ்.பொ.வின் இக்கட்டுரைத் தொகுதி ஈழ இலக்கிய வரலாற்றின் ஆவணமாகக் கருதலாம். வரலாற்று ரீதியாகத் தொகுக்கப் பட்டிருக்கும் இக்கட்டுரைகளில் விவாதத்தக்குரிய பல இலக்கியக் கொள்கைகள் அந்தந்தக் கால கட்டத்தில் எப்படி அர்த்தம் கொண்டதாக இருந்தனவோ, அவ் வகையிலேயே பதியப்பெற்றுள்ளன.

751

ஈழத்தில் தமிழிலக்கியம். கா.சிவத்தம்பி. சென்னை 98: NCBH, 2வது பதிப்பு, செப்டெம்பர் 1987. 1வது பதிப்பு, ஏப்ரல் 1978. (சென்னை 14: பாவை பிரின்டர்ஸ் பிரைவேட் லிமிட்டெட்)

215 பக்கம். விலை: இந்திய ரூபா 17. அளவு: 18X12 சமீ.

இலங்கையின் தனித்துவத்தையும் தமிழ் இலக்கியத்தின் பொதுமையையும் இணைத்து நிற்கும் ஓர் இலக்கிய மரபு இலங்கையில் தோன்றி வளர்ந்த முறையினை இந்நூல் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது.

752

ஈழத்து இலக்கிய முன்னோடிகள்.க.கைலாசபதி. சென்னை 02: மக்கள் வெளியீடு, 1வது பதிப்பு, அக்டோபர் 1986. (சென்னை: மக்கள் அச்சகம்)

143 பக்கம். விலை: இந்திய ரூபா 16 அளவு: 21.5X14 சமீ.

இந்நூலிலுள்ள ஆறு கட்டுரைகள் 19ம்நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் சில அம்சங்களை விபரிக்கின்றன. பொதுவான வளர்ச்சியையும் அவ்வளர்ச்சிக்குச் சிலர் ஆற்றிய காத்திரமான பங்களிப்பையும் ஆங்காங்கு ஆசிரியர் மதிப்பிட்டுள்ளார்.

753

ஈழத்து இலக்கியத்தின் சமகால ஆளுமைகளும் பதிவுகளும்: மூன்றாவது மனிதன் நேர்காணல்கள். எம்.பௌசர். கொழும்பு 02:மூன்றாவது மனிதன் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜூன் 2001. (கொழும்பு 13: யு.கே. பிரின்டர்ஸ்)

152 பக்கம். விலை: ரூபா 220. அளவு: 22X14 சமீ.

ஈழத்து இலக்கியத்தின் சமகால ஆற்றலாளர்களுடனான நேர்காணல்கள் பதினொன்று. கொழும்பு - *மூன்றாவது மனிதன்* சஞ்சிகையில் தொடராக வெளிவந்த செவ்விகளின் தொகுப்பு.

754

ஈழத்து வாழ்வும் வளமும். க.கணபதிப்பிள்ளை. சென்னை 26: குமரன் பதிப்பகம், 79, 1வது தெரு, குமரன் காலனி, வடபழநி, 2வது பதிப்பு, பெப்ரவரி 1996. 1வது பதிப்பு, 1962. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிராபி)

158 பக்கம். விலை: இந்திய ரூபா 28. அளவு: 18X12.5 சமீ.

ஈழத்து வாழ்வும் வளமும். க.கணபதிப்பிள்ளை. சென்னை: குமரன் புத்தக இல்லம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழநி. 3வது பதிப்பு, 2001. 1வது பதிப்பு 1962, 2வது பதிப்பு, பெப்ரவரி 1996. (அச்சக விபரம் அறிய முடியவில்லை)

104 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: இந்திய ரூபா 175. விஷேட பதிப்பு: இந்திய ரூபா 350. அளவு: 21X14 சமீ. ISBN (சாதாரண பதிப்பு)955-9429-15-9. (விஷேட பதிப்பு) 955-9429-09-4

ஈழத்து வாழ்வையும் வளத்தையும் எடுத்துக் காட்டும் சிறந்த நூல். இக்கட்டுரைத் தொகுதியில் வரலாறு, இலக்கிய வரலாறு, இலக்கிய வளர்ச்சி, அதில் முக்கிய இடம்பெறுவோர், ஈழத்துத் தமிழர் நாட்டார் வழக்காறுகள் ஆகியன பற்றிய கட்டுரைகள் அடங்கியுள்ளன.

755

ஈழத்துக் குழந்தைப்பாடல்கள். கனக செந்திநாதன். குரும்பசிட்டி: சன்மார்க்கசபை, 1வது பதிப்பு, 1988. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

vi,14 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

ஈழத்துக் குழந்தைப்பாடல்கள், பிரதம வகுப்புகளுக்கான ஈழத்துத் தமிழ்க்கவிதைகள் ஆகிய இரு கட்டுரைகளிலும் குழந்தைப்பாடல்களின் அவசியம் பற்றிய கருத்துக்களும் இரசிகமணி சிந்தனைத் துளிகள் என்ற தொகுப்பில் சிறுவர் பாடநூல்களுக்கு ஆசிரியர்

வழங்கிய உரைகளிலிருந்து தேர்ந்த கருத்துக்களும் எடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

756

ஈழத்துத் தமிழ்இலக்கிய வளர்ச்சி.க.செ.நடராசா. கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 7, 5வது ஒழுங்கை, 1வது பதிப்பு, 1982. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

xvi,144 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 21x14 சமீ.

ஈழத்துத் தமிழ்இலக்கிய வளர்ச்சி.க.செ.நடராசா. சென்னை 2: காந்தளகம். 834 அண்ணாசாலை, 1வது பதிப்பு, ஜூன் 1987. (சென்னை 600086: சாலை அச்சகம்)

xvi,192 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 18x12.5 சமீ. (காந்தளகத்தின் 1வது பதிப்பாக வெளிவந்துள்ள மறுபதிப்பு.)

14ம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டிறுதி வரையிலான ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றிக்கூறும் வரலாற்று நூல். அக்காலகட்டத்தில் எழுந்த தமிழிலக்கியங்கள் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயப்பட்டுள்ளன. சரசோதிமாலை எனும் சோதிட நூலின் ஆசிரியர் தேனுவரைப்பெருமாளின் காலத்திலிருந்து புலியூரந்தாதியின் ஆசிரியராகிய மயில்வாகனப்புலவரின் காலத்தோடு நிறைவு பெறும் ஆய்வு.

757

ஈழத்துத் தமிழிலக்கியத்தடம்: 1980-2000: பார்வையும் விமர்சனங்களும். கார்த்திகேசு சிவத்தம்பி. கொழும்பு 2: மூன்றாவது மனிதன் பதிப்பகம், 37/14 வக்ஸ்சோல் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (Chennai 4: Multi Craft)

xiii,172 பக்கம். விலை: ரூபா 210. அளவு: 21x14 சமீ.

இத்தொகுதியிலுள்ள 15 கட்டுரைகளும் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானவை. 1980, ஈழத்துத் தமிழிலக்கியத்தின் முக்கிய காலகட்டமாகக் கருதப்படுகின்றது. அரசியல் இலக்கிய பண்பாட்டு சமூகத் தளங்களில் இக்காலம் மிகப்பெரும் அதிர்வுகளையும் மாற்றங்களையும் சந்தித்தது. அந்த மாற்றங்கள் தொடர்பான பதிவுகள் இவையாகும்.1980களிலிருந்து 2000 வரை ஈழத்துத் தமிழ்ச் சூழலில் என்ன நடந்திருக்கின்றது என்ற ஒரு சுயமதிப்பீட்டிற்கும், 21ஆம் நூற்றாண்டின் சவால்களை நாம் சந்திப்பதற்கு நம்மைத் தயார் படுத்துவதற்கும் நமக்கான ஒரு ஜன்னல் இத்தொகுதியின் மூலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

758

ஈழத்துப் புனைகதைகளிற் பேச்சுவழக்கு. சி.வன்னியகுலம். யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக்கழகம், 1வது பதிப்பு, ஜூன் 1986. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி)

xviii,172 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 30. நூலகப்பதிப்பு: ரூபா 40. அளவு: 19x13 சமீ.

இலக்கியத்திற்கும் மொழிக்குமிடையிலான தொடர்பு, ஈழத்துப் புனைகதைகளிற் பேச்சுவழக்கு கையாளப்பட்ட வரலாறு, பிரதேசக் கிளை மொழிகள் எவ்வாறு அவ்வப்பிரதேசங்களில் எழுந்த புனைகதைகளிலே கையாளப்பட்டுள்ளன, எத்தகைய புனைகதைகளுக்கு எத்தகைய கிளைமொழிகள் உபயோகிக்கப்பட வேண்டும், பேச்சுவழக்கினை இலக்கியத்தில் கையாளும்போது எதிர்நோக்கும் பிரச்சினை போன்ற விடயங்களை விரிவாக இந்நூலில் ஆராய்ந்துள்ளார்.

759

உள்ளத்தனையது உயர்வு. ஆ.கந்தையா. யாழ்ப்பாணம்: காந்தளகம், 213 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு,1984. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்,213 காங்கேசன்துறைவீதி)

(10),110 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 18x13 சமீ.

நூலாசிரியர், தான் மாணவனாகவும் ஆசிரியனாகவும் ஆராய்ச்சியாளனாகவும் இருந்த காலங்களில் நிகழ்ந்தவற்றைக் கட்டுரை வடிவில் தந்துள்ளார். பேராசிரியர் மு.வரதராசனார், சேர்.கந்தையா வைத்தியநாதன், பேராசிரியர் யோன். மார், பேராசிரியர் ஆ.ச. ஞானசம்பந்தன் ஆகியோருடனான தொடர்புகளின் இனிய நினைவுகளை 11 கட்டுரைகளில் தந்திருக்கிறார்.

760

எண்பதுகளில் மல்லிகை விமர்சனங்கள். ம.தேவகௌரி. யாழ்ப்பாணம்: மல்லிகைப்பந்தல், 234-B, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (சென்னை 600014: சித்ரா பிரின்டோகிரபி, 24 பொன்னுச்சாமி தெரு)

132 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 18x12.5 சமீ.

ஈழத்தில் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் மல்லிகை சஞ்சிகையில் 80களில் வெளிவந்த விமர்சனங்களைப்பற்றிய குறிப்பிடத்தக்கதொரு ஆய்வு நூல். இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சிறப்புக் கலைமாணிப்பட்டப்படிப்பின் இறுதித்தேர்வுக்காக 1992இல் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வாகும்.

761

ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி: 1956-1963. மு.தளையசிங்கம். சென்னை 14: க்ரியா பதிப்பகம், 268 இராயப்பேட்டை பிரதான வீதி, 1வது பதிப்பு, 1984. (சென்னை14: ரசனா ஓப்செட் பிரின்ட், 275 இராயப்பேட்டை பிரதான வீதி.)

177 பக்கம். விலை: இந்திய ரூபா 18. அளவு: 18X12 சமீ.

1956 முதல் 1963 வரையான ஏழாண்டுக்கால இலக்கியவளர்ச்சியைக் கணிப்பதை இலக்காகக் கொண்டு, இலங்கையில் சமூக, பொருளாதார, அரசியல் வரலாற்றின் மீது ஆசிரியர் செலுத்தும் பார்வை, இந்நூலின் தனித்தன்மை. நபர்களின் மீதான பார்வையிலிருந்த போக்குகளையும், போக்குகளின் மீதான பார்வையிலிருந்து நபர்களையும் அணுகும் இவரது நிலைகள் ஒன்றுடனொன்று பின்னியும் பிரிந்தும் ஆக்கபூர்வமான இலக்கிய விமர்சனமாகவும் வரலாறாகவும் தோற்றம் கொள்ள வைக்கின்றது.

762

கட்டுரைக் கோவை. நா.மாணிக்கஇடைக்காடர். யாழ்ப்பாணம்: ஆசிரியர், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

113 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 21.5X14 சமீ.

தமிழ் மக்களின் சங்ககால மரபு-குறிப்பாக, புறநானூறு, திருவள்ளுவரின் பொய்யாமொழி, பாரதம், இராமாயணம் போன்ற இலங்கு நூல்களில் வடித்தெடுக்கப்பட்ட அடிப்படை உண்மைகளை அத்திவாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட கட்டுரைகள். ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தவை.

763

கம்பராமாயணக் காட்சிகள். சி.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், 1வது பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி).

xxvii,199 பக்கம், தகடுகள். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 15. நூலகப்பதிப்பு: ரூபா 20. அளவு: 18X12 சமீ.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய முப்பத்திஎட்டு தமிழ் இலக்கியக் கட்டுரைகளைக் கொண்டது.

764

கலை இலக்கியக் கட்டுரைகள். சி.மௌனகுரு. சென்னை 26: குமரன் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜூலை 1997. (சென்னை 06: சுமதி லேசர்ஸ்)

128 பக்கம். விலை: இந்திய ரூபா 36. அளவு: 18X12 சமீ.

கலை சம்பந்தமான ஆறு கட்டுரைகளும் இலக்கியம் சம்பந்தமான நான்கு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

765

கலை இலக்கியத் திறனாய்வு. கே.எஸ்.சிவகுமாரன். கண்டி: தமிழ் மன்றம், 1வது பதிப்பு, 1989. (சென்னை: எம்.ஏ.பிரின்டர்ஸ், அங்கப்ப நாயக்கர் தெரு)

84 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18X12 சமீ

கல்வித் தராதரத்தில் உயர்வகுப்பு மாணவர்களுக்கும் பல்கலைக் கழகங்களில் பயில்வோருக்கும் கலைஇலக்கியத் திறனாய்வு பற்றிய அடிப்படை விளக்கத்தைத் தரக்கூடிய நூல்.

766

கலைக்குரல்கள். வி.என்.எஸ்.உதயச்சந்திரன். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 1வது பதிப்பு, மே 1999. (கொழும்பு 13: Laxsu Graphic (Pvt) Limited)

207 பக்கம். விலை: ரூபா 250. அளவு: 21.5X14 சமீ.

இலங்கை வானொலியில் கலைப்பூங்கா நிகழ்ச்சியில் ஒலிபரப்பான 21 கட்டுரைகளின் தொகுப்பு.

767

கலைஞனின் தாகம். மு.தளையசிங்கம். கோவை 15: சமுதாயம் பிரசுராலயம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1985. (கோயமுத்தூர் 641015: பாரிஜாதம் அச்சகம்)

142 பக்கம். விலை: இந்திய ரூபா 10. அளவு: 17.5X12.5 சமீ.

உடல், உயிர், மனத்தளங்களையும் கடந்து கலைப்பரவச நிலைக்கு மனிதனை உயர்த்துவதே உண்மையான கலை இலக்கியம் என்றும் மனிதனின் பரிணாம வளர்ச்சியில் அப்பணி நடக்கவேண்டிய கால கட்டத்தை நாம் அடைந்துவிட்டோம் என்றும் தனது நம்பிக்கையை அறிவுரீதியாக, அழகுற ஆணித்தரமாக ஆசிரியர் முன்வைக்கின்றார்.

768

கற்பகமலர்: திருக்குறள் கட்டுரைகள். கா.பொ.இரத்தினம். சென்னை 600002: காந்தளகம், 4, முதல் மாடி, ராகிசா கட்டிடம், 834, அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஆவணி 1986. (சென்னை 600005: ஸ்ரீகோமதி அச்சகம், 41 சூரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி)

iv,180 பக்கம். விலை: இந்திய ரூபா 12.50. அளவு: 18X12.5 சமீ.

தமிழ்மறைக் கழகத்தின் 4வது வெளியீடு. திருக்குறள் தொடர்பான ஒரு பாடலையும் 5 உரைகளையும் 9 கட்டுரைகளையும் கொண்டுள்ளது. இவை 1943-84 காலப்பகுதிகளில் எழுதப்பட்டவையாகும். திருக்குறள் பற்றிக் காலம்காலமாகத் தவறாக மக்கள் மனதில் படிந்து விட்ட மாசுகளைப் போக்கும் முயற்சி இதுவாகும்.

769

செங்காவலர் தலைவர் யேசுநாதர். ஏ.ஜே.கனகரட்னா. சென்னை: மித்ரவெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (சென்னை: மித்ரா)

164 பக்கம். விலை: இந்திய ரூபா 50.00. அளவு: 18X12 சமீ.

இந்நூலில் உலகளாவிய இலக்கியப் போக்கினையும் நடப்பினையும் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும்வகையில் அமைந்த 28 கட்டுரைகள் உள்ளன.

770

செந்தமிழ்க் களஞ்சியம். சி.கணபதிப்பிள்ளை. உரும்பிராய்: பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, உரும்பிராய் மேற்கு, 1வது பதிப்பு, 1987. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

xxii,176 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12.5 சமீ.

பண்டிதமணி சி.க. அவர்கள் பத்திரிகைகளுக்கும் பேச்சுக்களுக்குமென எழுதிய 27 இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு. இது பண்டிதமணியின் மறைவுக்குப்பின் வெளிவந்த முதலாவது நூலும் அவரின் 23வது நூலுமாகும்.

771

தமிழ் இலக்கியம்: நூறு சொல் வினாவிடை. செ.கதிர்காமத்தம்பி, யே.அமலசீலன். யாழ்ப்பாணம்: ஆசிரியர்கள், பரி.யோவான் கல்லூரி, 1வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)

24 பக்கம். விலை: ரூபா 12.50. அளவு: 19X13 சமீ.

10ம் 11ம் ஆண்டு வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பெற்ற கைநூல்.

772

தமிழ் இலக்கிய வரலாறு. வி.செல்வநாயகம். கொழும்பு 12: குமரன் புத்தகஇல்லம், 201 டாம்வீதி, திருத்திய 4ம் பதிப்பு, 1998.

1வது பதிப்பு, 1951. 2வது பதிப்பு 1956. 3வது பதிப்பு, 1960. 4வது பதிப்பு, 1965, (மறுபிரசுரம்)1996. (கொழும்பு 12: குமரன் அச்சகம்)

x,224 பக்கம். விலை: ரூபா 125. அளவு: 21X14 சமீ.

தமிழ் இலக்கிய வரலாறு என்னும் இந்நூல் இத்துறையில் தமிழில் வெளிவந்த நூல்களில் மிகமுக்கியமான ஒன்றாகும். தமிழிலக்கிய வரலாற்றைத் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து நோக்கும் பண்பினை முதன்முதலில் தொடக்கிவைத்தவர் பேராசிரியர் வி.செல்வநாயகம். தமிழிலக்கிய வரலாற்றில் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள காலவகுப்பினை முதன்முதலில் தொடக்கி வைத்தது இந்நூலாகும். தமிழிலக்கிய வரலாறு பற்றிய சிறந்த ஆய்வாளர்களான வையாபுரிப்பிள்ளை, ஜேசுதாசன், அருணாசலம் ஆகியோரினாற் பெரிதும் புகழப்பட்ட இந்நூல் தமிழிலக்கிய வரலாறு பற்றிய ஒரு முழுமையான கண்ணோட்டத்தைத் தருவதில் இன்றும் நிகரற்று விளங்குகின்றது.

-பேராசிரியர் கா.சிவத்தம்பி

773

தமிழ் சிங்கள இலக்கிய உறவு: ஓர் ஒப்பீட்டு ஆய்வு. த.கனகரத்தினம். கொழும்பு: தமிழ்ச்சங்கம், சாந்தி நிகேதன், 1வது பதிப்பு, 1996. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ்)

(10),163 பக்கம். விலை: ரூபா 130. அளவு: 22X15 சமீ.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில், இலக்கியங்களில் காணப்படும் ஒருமைப்பாடுகளை விளக்கும் சங்கமம் நிகழ்ச்சியில் 1987-1988 காலப்பகுதியில் இடம்பெற்ற தொடர் கட்டுரைகளின் நூல்வடிவம். தமிழ்-சிங்கள இலக்கிய நூல்களுக்கு இடையே உள்ள ஒருமைப்பாடுகள் ஒரு ஒப்பீட்டு இலக்கிய ஆய்வாக இக்கட்டுரைகளின் வாயிலாக சான்றாதாரங்களுடன் ஆராயப்பட்டுள்ளன.

774

தமிழ்த்தூது: கட்டுரைக்கொத்து. தனிநாயகம் அடிகள். சென்னை 600113: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி.வளாகம், தரமணி, 5வது பதிப்பு, 1998. 1வது பதிப்பு, 1952. (சென்னை 33: ஸ்ரீவிக்னேஷ் பிரின்ட்ஸ்)

vi,82 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு: 21.5X14 சமீ.

தனிநாயகம் அடிகளின் தமிழியல் கட்டுரைகளின் தொகுப்பு. தமிழ்த் தூது, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு, மலரும் மாலையும், காப்பியக்கவிஞர் வீரமாமுனிவர், தமிழ்நாட்டின் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை, செந்தமிழ் வளர்ச்சி, தமிழரும் அவர்தம் கவின்கலை

களும், தமிழ்கூறும் நல்லுலகம் ஆகிய எட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு. முதற்பதிப்பு 1952இலும் 2ம் பதிப்பு 1959இலும் 6 கட்டுரைகளுடன் வெளிவந்தன. 3வது பதிப்பு இரு கட்டுரைகளுடன் பின்னர் வெளிவந்தது. (வெளியீட்டுக்குறிப்பு இல்லை). 1962இல் 4வது பதிப்பு வெளிவந்தது. அதில் முதலிரு பதிப்புகளில் இடம் பெற்ற கட்டுரை ஒன்று நீக்கப்பட்டு புதிய இரு கட்டுரைகள் சேர்க்கப்பட்டன. 5வது இப்பதிப்பில் முன்னர் நீக்கப்பட்ட கட்டுரையும் சேர்க்கப்பெற்று மொத்தம் 8 கட்டுரைகள் அடங்கியுள்ளன.

775

தமிழியற் கட்டுரைகள். எஸ்.சிவலிங்கராஜா, மயிலங்கூடலூர் நடராசன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, 1வது பதிப்பு, ஜூலை 1982. (யாழ்ப்பாணம்: ஸ்ரீசுப்பிரமணிய அச்சகம்)

xxi,183 பக்கம். விலை: ரூபா 19. அளவு: 22X14 சமீ.

தமிழியல் துறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 21 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இக்கட்டுரைகளில் முதற்பகுதியில் தமிழிலக்கிய வளர்ச்சி தொடர்பான கட்டுரைகளும் இரண்டாம் பகுதியில் ஈழத்துத் தமிழறிஞர்களின் தொண்டுகள் பற்றிய கட்டுரைகளும் அடங்கியுள்ளன.

776

தமிழில் இலக்கிய வரலாறு. கார்த்திகேசு சிவத்தம்பி. சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 1வது பதிப்பு, மார்ச் 1988. (சென்னை 600014: பாவை பிரின்டர்ஸ்)

xx,292 பக்கம். விலை: இந்திய ரூபா 30. அளவு: 19X12.5 சமீ.

தமிழில் இலக்கிய வரலாறு. கார்த்திகேசு சிவத்தம்பி. சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 2வது பதிப்பு, மார்ச் 1998. (சென்னை 600005: கண்ணப்பா ஆர்ட் பிரின்டர்ஸ்)

(8),283 பக்கம். விலை: இந்திய ரூபா 60. அளவு: 17.5X12 சமீ.
ISBN 81-234-0522-7.

தமிழில் இலக்கிய வரலாறு, நான்கு இயல்களில் ஆராயப்பட்டுள்ளது. இலக்கிய வரலாறு என்னும் பயில்துறை, அதன் புலமைப் பரப்பமைவு பற்றிய சுருக்க அறிமுகம், தமிழில் இலக்கிய வரலாற்றின் வளர்ச்சி, பிரச்சினை மையங்கள் வளர்ச்சியைப் பார்க்கும் முறை ஆகியன இவ்வியல்களின் பரப்புகளாக அமைகின்றன. பின்னிணைப்பாக இலக்கிய வரலாற்று நூல்களிற் சில பற்றிய நூல் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

777

தமிழில் சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும். பெ.கோ.சுந்தர ராஜன்(சிட்டி), சோ.சிவபாதசுந்தரம். சென்னை 600014: க்ரியா, 268 இராயப்பேட்டை நெடுஞ்சாலை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1989. (சென்னை 600020: St.Louis Institute of Printing for the Deaf)

(10),368 பக்கம். விலை: இந்திய ரூபா 75. அளவு: 21X13.5 சமீ.

தமிழில் சிறுகதை பெற்றிருக்கும் முக்கியத்துவத்தையும் அது வளர்ந்துள்ள வரலாற்றையும் ஆராயும் நூல். சென்ற நூற்றாண்டில் உதயதாரகை, விவேக சிந்தாமணி, போன்ற சஞ்சிகைகளில் எழுதப்பட்ட சிறுகதைகளில் தொடங்கி, சுப்பிரமணிய பாரதி, மாதவய்யர், வ.வே.சு.ஐயர் முதலியவர்களின் படைப்புக்கள், பின்னர் மணிக்கொடி மூலம் புகழ்பெற்ற பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.ரா, மௌனி முதலியோர் வழியாக அடுத்த இரு தலைமுறைகளில் சிறுகதை வளர்ந்த வரலாற்றை இந்நூல் ஆராய்கின்றது.

778

தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும். கா.சிவத்தம்பி. சென்னை 5: தமிழ்ப் புத்தகாலயம், 58, டி.பி.கோவில் தெரு, திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, மார்ச் 1983. (சென்னை14: அன்னை அஞ்சுகம் அச்சகம், இராயப்பேட்டை)

144 பக்கம். விலை: இந்திய ரூபா 7. அளவு: 18X12.5 சமீ.

இலக்கிய விமர்சனக்கட்டுரைகள் ஐந்தின் தொகுப்பு. தமிழிலக்கியத்தில் மதங்களின் பங்களிப்பு, சைவசித்தாந்தம் பற்றிய ஓர் சமூக வரலாற்று நோக்கு, தமிழிலக்கியத்தில் மானுடம் என்பன கட்டுரைகளின் அடிப்படை அம்சங்களாக உள்ளன.

779

தமிழும் அயலும். சி.சிவசேகரம். சென்னை 02: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 1வது பதிப்பு, ஜூன் 1993. (சென்னை: சூர்யா அச்சகம்)

172 பக்கம். விலை: இந்திய ரூபா 22. அளவு: 18X12.5 சமீ.

சமூக வளர்ச்சி எப்படி பல்வேறு காலகட்டங்களிலும் பரிணாமம் பெற்று மாற்றமடைந்து வளர்ந்து வந்திருக்கின்றதோ அவ்வாறே மொழியும் நீண்ட வரலாற்றுக் காலகட்டங்களில் சமூக மாற்றம், சமூகத் தேவைகளுக்கேற்ப பல்வேறு மாற்றங்களைப் பெற்று வளர்ந்திருக்கின்றது. மொழி அதன் தேவைக்கேற்ப மாற்றங்களை ஏற்பது மொழியின் வளர்ச்சிக்கும் அந்த மொழியைப் பேசும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் அவசியமானது. தமிழர்களின் புலம்பெயர் வாழ்வுடன் தொடர்பான சமூகமாற்றங்களைக் கிரகித்து வெளிப்படுத்த வேண்டிய

தேவையும் தமிழ்மொழிக்கு உண்டு என்பதை இக் கட்டுரைகள் வலியுறுத்துகின்றன.

780

தலைப் பூக்கள். டொமினிக் ஜீவா. யாழ்ப்பாணம்: மல்லிகைப் பந்தல், 1வது பதிப்பு, மே 1996. (சென்னை 14: சித்ரா பிரின்டோ கிரப்பி)

208 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 17.5X12.5 சமீ.

இலக்கிய வாழ்வில் காலத்துக்குக் காலம் தன் உணர்வுகளைப் பாதித்த சம்பவங்களை, நெஞ்சத்தைத் தொட்ட நிகழ்ச்சிகளை 55 தலைப்புக்களில் ஆசிரியர் தொகுத்துத் தந்துள்ளார்.

781

திருக்குறள் புதிய உரை: அறத்துப்பால். நா.சி.கமலநாதன். ஜேர்மனி: உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கம், ஐரோப்பிய ஒன்றியம் Regel Str 26, 48431 Rheine, 1வது பதிப்பு, 2000. (சென்னை 600094: Script Offset)

192 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 12.5X18.5 சமீ.

திருக்குறளின் அறத்துப்பாலுக்கான புதிய கருத்துரை.

782

திறனாய்வு சார்ந்த சில பார்வைகள். மு.பொன்னம்பலம். தெகிவளை: வெளியீட்டாளர் விபரம் குறிப்பிடப்படவில்லை, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (கொழும்பு 13: பேஜ்செட்டர்ஸ், 113 ஜிந்துப் பிட்டி வீதி)

viii,73 பக்கம். விலை: ரூபா 75. அளவு: 18X12.5 சமீ. ISBN 955-97257-0 X

இந்நூலில் இடம்பெறும் ஐந்து கட்டுரைகளும் ஈழத்து இலக்கியம் பற்றியதான வரலாறும், விமர்சனமும் உள்ளடங்கியனவாகக் காணப்படுகின்றன. முக்கியமாக இளம் படைப்பாளிகளை இனம் காட்டும் நோக்கம் கொண்டதாகவும் அவை அமைகின்றன.

783

திறனாய்வுக் கட்டுரைகள். எம்.ஏ.நு.ஃமான். சிவகங்கை: அன்னம் பிரைவேட் லிமிட்டெட். 1வது பதிப்பு, 1985. (மதுரை: பரணி அச்சகம்).

186 பக்கம். விலை: இந்திய ரூபா 20. அளவு 21X14 சமீ.

1969 முதல் 1985 வரையுள்ள காலப்பகுதியில் ஆசிரியரால் எழுதப் பட்ட கட்டுரைகளில் கலை, இலக்கியம் தொடர்பான 18 கட்டுரை கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கவிதை, நாவல், நாடகம், சினிமா விமர்சனம், ஆகியன பற்றிய பல கருத்துக்கள் இக்கட்டுரை களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

784

தூண்டில். டொமினிக் ஜீவா. யாழ்ப்பாணம்: மல்லிகைப் பந்தல், 234B, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்)

120 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 18X13 சமீ.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மல்லிகை சஞ்சிகையில் தூண் டில் என்ற தலைப்பில் பிரசுரமான *கேள்வி-பதில்* பகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவற்றின் தொகுப்பு.

785

தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும். சுபைர் இளங்கீரன், (தொகுப்பாளர்). சென்னை 02: தேசிய இலக்கியப் பேரவை யுடன் இணைந்து சவுத் ஏஷியன் புக்ஸ், 61 தாயார் சாகிபு 2வது சந்து, 1வது பதிப்பு, மே 1993. (சென்னை: சூரியா அச்சகம்)

152 பக்கம். விலை: இந்திய ரூபா 18. அளவு: 18X12.5 சமீ.

ஈழத்துத் தமிழ் இலக்கியப்பரப்பில் தேசிய இலக்கியம் பிரசித்தமான சொல். 1950க்கு முன் இந்தியாவைத் தாய்நாடாகவும் இலங்கையைச் சேய்நாடாகவும் ஈழத்தமிழர் கருதி இந்திய நூல்களை விரும்பிப் படித்தனர். இவை ஈழத்தமிழரின் வாழ்க்கையை அவர்களின் உணர்வு களை அபிலாஷைகளை சிந்தனைகளைச் சித்திரிப்பதாக இருக்க வில்லை. இத்தொகுப்பில் *தேசிய இலக்கியம்* பற்றிப் பேராசிரியர் க.கைலாசபதி, ஏ.ஜேகனகரத்தினா, அ.ந.கந்தசாமி, சுபைர் இளங் கீரன் ஆகியோரின் கட்டுரைகள் உள்ளன. இவை அனைத்தும் 30 வருடங்களுக்கு முன்னர் ஈழத்துத் தமிழ் இலக்கிய அரங்கில் சர்ச்சைக்குள்ளான விடயங்களையும் படைப்பிலக்கியம் பற்றிப் புதிய சிந்தனைகளையும் அணுகுமுறைகளையும் எடுத்துக்காட்டுவன.

786

நவீன இலக்கியத்தின் அடிப்படைகள். க.கைலாசபதி. சென்னை 2: மக்கள் வெளியீடு, 24 உனிசு அலி சாஹிப் தெரு, எல்லிசு சாலை, 1வது பதிப்பு, நவம்பர் 1980. (சென்னை 2: மக்கள் அச்சகம்)

132 பக்கம். விலை: இந்திய ரூபா 7. அளவு: 18X12 சமீ.

தற்கால இலக்கியப்போக்குகளைப் பற்றிய ஆறு கட்டுரைகளின் தொகுப்பு.

787

நானும் எனது நாவல்களும்.செங்கை ஆழியான். கொழும்பு 13: மல்லிகைப்பந்தல், 201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. (கொழும்பு 13: யு.கே. பிரின்டர்ஸ், 9ஏ, விவேகானந்தா மேடு)

107 பக்கம். விலை: ரூபா 80. அளவு: 21.5X14 சமீ.

தன்னால் சிருஷ்டிக்கப்பெற்ற நாவல்கள் பிறந்து வளர்ந்து எழுத்தில் வடிக்கப்பட்ட வரலாற்றை நூலுருவில் தந்துள்ளார். சமகால ஈழத்து இலக்கிய முயற்சிகள் பற்றிய ஒரு வரலாற்று நூலாக மலர்ந்துள்ளது.

788

பட்டுக்கோட்டையின் பாட்டுத்திறம். சி.பற்குணம். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப்பேரவையுடன் இணைந்து சவுத் விஷன், 6 தாயார் சாகிபு 2வது சந்து, 1வது பதிப்பு, ஜூன் 2000. (சென்னை 600005: மணி ஆப்செட் பிரின்டர்ஸ்)

64 பக்கம். விலை: இந்திய ரூபா 25. அளவு: 21X13.5 சமீ.

கவிஞர் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரத்தை பாரதியின் பின் புலத்தில் வைத்துப்பார்க்கும் ஓர் ஒப்பியல்ஆய்வு. தமிழ்க்கவிதை ஜனநாயகமயப்பட்டு வந்துள்ள பாதையைக் காட்டுகின்றது.

789

பாரதி ஆய்வுகள். க.கைலாசபதி. சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 1வது பதிப்பு, மார்ச் 1984. (சென்னை 05: பி.ஆர்.வி. பிரஸ், 143, பெரிய தெரு)

xii,280 பக்கம். விலை: இந்திய ரூபா 16. அளவு: 18X12.5 சமீ.

பேராசிரியர் கைலாசபதியினால் 1955 முதல் எழுதப்பட்ட சுப்பிரமணிய பாரதியார் பற்றிய 22 கட்டுரைகளின் தொகுப்பு.

790

பாரதியார் சிந்தனைகள். க.அருணாசலம். சென்னை 600004: சோழ புத்தக நிலையம், 42 அப்பர்சாமி கோவில் தெரு, மயிலாப்பூர், 1வது பதிப்பு, 1984. (சென்னை 600014: அன்னை அஞ்சுகம் அச்சகம்)

394 பக்கம். விலை: இந்திய ரூபா 37. அளவு: 17.5X12.5 சமீ.

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் உரைநடை ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு, அவரது இலக்கியப்பணி பற்றிய ஆய்வு.

791

பாரதியின் குயில்பாட்டின் தத்துவ மர்மம்.எஸ்.கருணானந்த ராஜா. சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.எண்.1447, 4 தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 1999. (சென்னை 4: முருகன் ஆப்செட்)

112 பக்கம். விலை: இந்திய ரூபா 21. அளவு: 18.5x12.5 சமீ.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் குயில்பாட்டு அவரது வாழ்க்கையின் சாரத்தை வேதாந்தத்தினூடாக நோக்கும் ஒரு முயற்சியாகக் கருதப்படுகின்றது. அவரது சித்தத்தின் அந்தத்தில் தோன்றும் கடந்த கால நினைவுகள் வேதாந்தத்தினூடே வெளிப்படுத்த முயன்றுள்ளார் பாரதி. அந்தக் குயில்பாட்டின் தத்தவ மர்மத்தை நூலாசிரியர் ஆய்வுக்குட்படுத்தியுள்ளார்.

792

பாரதியின் மெய்ஞ்ஞானம். ந.இரவீந்திரன். சென்னை 600002: சென்னை புக்ஸ், 6 தாயார் சாஹிப் தெரு, 2வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 1986. (Madras 600005: BLS Art Printers)

(12),170 பக்கம். விலை: இந்திய ரூபா 13. அளவு: 18X12.5 சமீ.

மஹாகவி பாரதியின் ஆன்மிகப்பார்வை பற்றிய ஆய்வு நூல். இரு பகுதிகளைக் கொண்ட இந்நூலில் பாரதியின் அரசியற்களம் பற்றி முதற்பகுதியிலும் பாரதியின் உலகக்கண்ணோட்டம் பற்றி இரண்டாம் பகுதியிலும் ஆராயப்பட்டுள்ளது. ஆன்மீகவாதிகள் அனைவரும் மனிதகுல விடுதலைப் போராட்டங்களின் விரோதிகள், பிற்போக்குவாதிகள் என்று ஒரு சாராரும், ஆன்மீகம் வேருன்றிவிட்ட இந்த மண்ணில் ஆன்மீகம் கலந்த ஒருவகை மார்க்சியத்தின் மூலமே ஒரு சமுதாயமாற்றம் சாத்தியமாகும் என்று இன்னொரு சாராரும் கருதுகின்ற நிலையில், ஆன்மீகத்தின் முற்போக்கான பாத்திரத்தை எப்படித் தேசநலனுக்கும், முன்னேற்றத்துக்கும் அடிப்படைச் சமுதாய மாற்றத்துக்கும் துணையாகக் கொள்ளலாம் என்ற ஆய்வினை விரிவாக்க இந்நூல் துணைசெய்யும்.

793

பாவலரும் பாரதியும். நா.சுப்பிரமணியம். தெல்லிப்பழை: மஹாஜனக்கல்லூரி, 1வது பதிப்பு, ஜூன் 1982. (குரும்பசிட்டி: அம்பிகா அச்சகம்)

10 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரைத் தொடர் நான்கு. ஈழத்தின் நவீன இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களை சுப்பிரமணிய பாரதி யாருடன் தொடர்புபடுத்தி நோக்கும் முயற்சி இது.

794

புதுமை இலக்கியம்: இலக்கிய ஆய்வரங்கு 1997. கொழும்பு 11: இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ்)

64 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 24.5X17.5 சமீ.

1997 டிசம்பர் 6,7ம் திகதிகளில் வெள்ளவத்தை (கொழும்பு 6) ராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள். *புதுமை இலக்கியம்* டிசம்பர் 1997 சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இதழ் பொறுப்பாசிரியர் என்.சோமகாந்தன்.

795

புதுமுறைக் கட்டுரைக்கோவை. வெளியீட்டுக்குழு. காரை நகர்: தமிழ் வளர்ச்சிக் கழகம், 1வது பதிப்பு, ஜூன் 1984. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், 336 காங்கேசன்துறை வீதி)

(10),66 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 21X14 சமீ.

கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்க்க உதவும் வகையில் உருவான நூல். க.பொ.த.ப. சாதாரணதர வகுப்புக்களுக்கென்று தயாரிக்கப்பட்டது.

796

புறநானூறு முதல் புதுக்கவிதை வரை. விதுரன், சேயோன், கலாலட்சுமி, மதுசூதனன் (தொகுப்பாளர்கள்) கொழும்பு 11: தமிழ் நூல் வெளியீட்டு விநியோக மையம், வசந்தம் புத்தக நிலையம், 44, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தை, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (சென்னை 600017: மாணவர் மறுதோன்றி அச்சகம்)

186 பக்கம். விலை: ரூபா 150. அளவு: 21.5X14 சமீ.

க.பொ.த. உயர்தரத்தில் தமிழ்ப்பாடம் கற்கும் மாணவர்களை கருத்திற் கொண்டு தொகுக்கப்பெற்ற நூல். பேராசிரியர் சின்னத் தம்பியின் *தமிழ்க்கவிதைப் பாரம்பரியம் பற்றிய ஓர் அறிமுகம்*, *ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபு-ஒரு சுருக்கம்* ஆகிய இரு கட்டுரைகள் உட்பட 26 தலைப்புகளில் தமிழ் இலக்கியக்கட்டுரைகள் அமைந்துள்ளன. இது விநியோக மையத்தின் முதல் வெளியீடாகும்.

797

பொன்னாலைக் கிருஷ்ணபிள்ளையின் கவிதைகள்- ஓர் ஆய்வு. மாதவி சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 1வது பதிப்பு, நவம்பர் 1998. (யாழ்ப்பாணம் பாரதி பதிப்பகம்)

X,111 பக்கம். விலை: ரூபா 150. அளவு: 22X14.5 சமீ.

வரகவி பொன்னாலைக் கிருஷ்ணபிள்ளை இலங்கையின் இசை நாடகக் கலைஞர். அவரின் பாடல்கள் அக்காலத்துச் சூழ்நிலைகள் முழுவதையும், அதாவது அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம் போன்ற அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ளன. இரண்டாம் உலக யுத்த காலத்திலும் அதையடுத்த காலப்பகுதியிலும் புனையப் பெற்ற இப்பாடல்களின் கருத்து இன்றைய காலகட்டத்துக்கும் பொருத்தமாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

798

மத்து. ஏ.ஜே.கனகரத்தினா. சென்னை: மித்ர வெளியீடு, 2வது பதிப்பு, டிசம்பர் 2000. 1வது பதிப்பு, 1970. (சென்னை: மித்ர அச்சகம்)

152 பக்கம். விலை: இந்திய ரூபா 45. அளவு: 18X12 சமீ.

இதில் இடம்பெறும் கட்டுரைகள் 1970இல் இலங்கையில் அரசு வெளியீடாக வெளிவந்தது. பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் ஒவ்வொரு நூலினை தமிழ் வாசகர்களுக்குக் கடைந்தெடுத்து அறிமுகம் செய்யும் வகையில் இந்நூலின் கட்டுரைகள் அமைந்துள்ளன.

799

மலையக இலக்கியம்: தோற்றமும் வளர்ச்சியும். சாரல் நாடன். கொட்டகல: சாரல் வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஜூலை 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்)

106 பக்கம். விலை: ரூபா 120. அளவு: 18.5X12 சமீ.

மலையக இலக்கியம் உருவான வரலாறு, அதன் ஆரம்ப நிலைப் பாடுகள் ஆகியவற்றை விளக்கும் நூல்.

800

மலையகச் சிறுகதை வரலாறு. தெளிவத்தை ஜோசப். கொழும்பு 13: சென்னை 17: துரைவி பதிப்பகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2000. (சென்னை 34: எக்ஸலன்ட் ஜெராக்ஸ் அன் பிரின்டர்ஸ்)

328 பக்கம். விலை: ரூபா 270. அளவு: 20.5X14.5 சமீ.

மலையகச் சிறுகதை முன்னோடிகள் பற்றியும் 1960களின் பின்ன ரான மலையகச் சிறுகதை வரலாறு பற்றியும் இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

801

மலையகத் தமிழ் இலக்கியம். க.அருணாசலம். இராஜகிரிய: தமிழ் மன்றம், 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (கோடம்பாக்கம்: இள வழகன் பதிப்பகம்)

187 பக்கம். விலை: ரூபா 125. அளவு: 17.5X12.5 சமீ.

மலையக இலக்கியம் பற்றியதான ஒரு வரலாற்று ஆய்வு. தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்த தமிழ்மக்களின் இலக் கிய முயற்சிகள் பற்றியும் அவர்களது வரலாறு பற்றியும் இந்நூல் பேசுகின்றது.

802

மலையகம் வளர்த்த தமிழ். சாரல்நாடன். சென்னை 17: துரைவி பதிப்பகம், 20A/9, கோபாலகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், 1வது பதிப்பு, நவம்பர் 1997. (சென்னை 14: பார்க்கர் கம்பி யுட்டர்ஸ், 293, அகமது வணிக வளாகம், இராயப்பேட்டை நெடுஞ் சாலை.)

156 பக்கம். விலை: இந்திய ரூபா 40. அளவு: 21X13.5 சமீ.

1990-1995 காலகட்டத்தில் ஆசிரியரால் எழுதப்பட்ட 13 கட்டுரை களின் தொகுப்பு. மலையகம் தொடர்பான கலை இலக்கியம், மொழி, பண்பாடு, நூலகம், நூலியலும் வெளியீட்டுத்துறையும், நாட்டார் வழக்கியல், சிறுசஞ்சிகைகள் எனப் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக எழுதப்பட்டவை.

803

மார்க்சியமும் இலக்கியத்திறனாய்வும். எம்.ஏ.நு.ஃமான். சிவகங்கை: அன்னம் (பி) லிமிட்., 1வது பதிப்பு, டிசம்பர் 1987. (சிவகங்கை: அகரம்)

224 பக்கம். விலை: இந்திய ரூபா 18. அளவு: 17.5X12.5 சமீ.

மார்க்சியமும் இலக்கியத்திறனாய்வும் பற்றிய சில குறிப்புகள், ரகு நாதனின் சிலப்பதிகாரஆராய்ச்சி, மார்க்சியமும் தமிழ்நாவல் இலக் கியமும், ஆகிய தலைப்புகளில் அமைந்த கட்டுரைகள்.

804

மார்க்சியமும் இலக்கியமும்: சில நோக்குகள். ஏ.ஜே.கனகரட்னா (தொகுப்பும் தமிழாக்கமும்). யாழ்ப்பாணம்: அலை வெளியீடு, 48.

சுய உதவி வீடமைப்புத் திட்டம், குருநகர். 1வது பதிப்பு, 1981. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம்).

(8),98 பக்கம். விலை: சாதாரணபதிப்பு: ரூபா 10, நூலகப்பதிப்பு: ரூபா 12. அளவு: 18X12 சமீ.

அலன் ஸ்விஞ்வுட் எழுதிய *நாவலும் புரட்சியும்* என்ற நூலினதும், கேரி சோல் மொர்சன் எழுதிய *சோஷலிச யதார்த்தவாதமும் இலக் கியக்கோட்பாடும்* என்ற நூலினதும் உருவம், உள்ளடக்கம் ஆகியன பற்றிய நூல். ரெஜி சிறிவர்த்தனா எழுதிய *மார்க்சிய விமர்சனம்* என்ற கட்டுரையினது தமிழாக்கமும் இடம்பெற்றுள்ளது.

805

முற்போக்கு இலக்கியம். மு.தளையசிங்கம். சென்னை14: க்ரியா, 268, இராயப்பேட்டை பிரதான வீதி, 1வது பதிப்பு, 1984. (சென்னை 14: Rasana Offset Prints, 275, இராயப்பேட்டை பிரதான வீதி.)

48 பக்கம். விலை: இந்திய ரூபா 5. அளவு: 18X12 சமீ.

கலைச்செல்வி சஞ்சிகை நடாத்திய கருத்தரங்கத் தொடருக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.

806

யதார்த்தமும் ஆத்மார்த்தமும். மு.பொன்னம்பலம். சென்னை: தமிழியல், 1வது பதிப்பு, ஏப்ரல் 1991. (சென்னை 04: மிதிலா அச்சகம்)

154 பக்கம். விலை: இந்திய ரூபா 22. அளவு: 21.5X14 சமீ.

ஏற்கெனவே ஊடகங்களில் வெளிவந்த சில கட்டுரைகள் உள்ளடங் கலாக பத்து இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு.

807

யௌவனம். தேவதாசன் ஜெயசிங். கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், 57 மகிந்த பிளேஸ். 2வது பதிப்பு, 1988. (கண்டி: யூனியன் அச்சகம்)

94 பக்கம். விலை: ரூபா 25. அளவு: 21X14 சமீ.

கல்விப் பொதுத் தராதர உயர்வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற தமிழ் இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு.

808

வரலாற்றுக்கு ஓர் கடிதம். கி.செ.துரை. டென்மார்க்

அலைகள் இணையப் பத்திரிகை, 1வது பதிப்பு, ஜூலை 2001. (டென்மார்க்: Tamil Teknik)
48 பக்கம். விலை: kr 25. அளவு: 18.5X14 சமீ.

காகம் என்ற சஞ்சிகையில் ஆசிரியரால் தொடராக எழுதப்பட்ட ஏழு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தனது வாழ்வில் தான் சந்தித்த-மனதில் நீங்கா இடம்பெற்ற சாதாரண மனிதர்கள் சிலரின் மகத்துவங்களை இங்கே ஆசிரியர் நினைவுகூர்ந்துள்ளார்.

809

வாலி. அகளங்கள் (இயற்பெயர்: நா.தர்மராஜா). யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234ஏ, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, 1989. 1வது பதிப்பு 1987. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்)
x,86 பக்கம். விலை: ரூபா 23. அளவு: 18X13 சமீ.

கம்பராமாயணத்தில் வாலி வதை என்ற பகுதி புதிய கோணத்தில் வாலியின் பார்வையில் பார்க்கப்படுகின்றது. ஈழநாடு பத்திரிகையில் தொடர்கட்டுரையாக இது வாலி-கொலைக்கரமும் கேள்விச்சரமும் என்ற தலைப்பில் 1979 இல் வெளி வந்தது.

810

விமர்சனக் கட்டுரைகள். முகமது சமீம். கொழும்பு 10: றிசானா பப்ளிஷர்ஸ், 20/14 சிமென்ட்ஸ் ரோட், 1வது பதிப்பு, 1999. (சென்னை 600014: மொனார்க் கிரப்பிக்ஸ்)
xiv,290 பக்கம். விலை: ரூபா 70. அளவு: 18X12 சமீ.

சிறுகதை நூல்கள், வரலாற்று நூல்கள், அரசியல் நூல்கள் போன்றவற்றிற்கு ஆசிரியர் எழுதிய விமர்சனங்களின் தொகுப்பு. ஆசிரியரின் பல்துறைக்கண்ணோட்டத்தையும் பரந்த ஆய்வறிவையும் அறிமுகப்படுத்துகின்றன.

894.8(7) பலவினத் தொகுப்பு

811

அர்ச்சனை மலர்கள். அமரர் தம்பாபிள்ளை சிவசம்பு ஞாபகார்த்த மலர். லண்டன், 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (London: Transnews International, P.O.Box 895, Harrow, Middx, HA2 OYU)
64 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 17.5X12 சமீ.

யாழ்ப்பாணம்- சுதுமலை, அமரர் தம்பாபிள்ளையின் ஞாபகார்த்த

மாக வெளியான நினைவுமலர். பலவினக்கட்டுரைகளின் தொகுப்பாக இது வெளிவந்துள்ளது. புலம்பெயர் தமிழ்ச் சிறார்களின் வாழ்விலே தமிழின் பங்கு (க.இராஜமனோகரன்), மேல்நாடுகளில் தமிழ் வளர்ச்சி (க.சுவாமிநாதன்), அயல் புலங்களில் தமிழ்மொழி வளர்ச்சி (அரங்க முருகையன்), உலகளாவிய தமிழ் சமய வளர்ச்சிக்காக நிறுவனங்கள் ஆற்றும் பங்கு (க.ஜெகதீஸ்வரம்பிள்ளை), வானொலியும் தமிழ்வளர்ச்சியும் (விமல் சொக்கநாதன்), இங்கிலாந்தில் இன்பக்கலைகளில் இசை (சரஸ்வதி பாக்கியராஜா), ஆகிய புலம்பெயர் தமிழரை நோக்கிய கலை இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு.

812

இருபதாம் நூற்றாண்டுத் தமிழன்: கிழக்கும் மேற்கும். இ.பத்மநாப ஐயர் (பதிப்பாசிரியர்). லண்டன்: தமிழர் நலன்புரிச் சங்கம், 33A, Station Road, Manor Park, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (Harrow: Ability Printing UK)
vi,146 பக்கம், புகைப்படம், ஓவியம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20X27.5 சமீ.

அனைத்துலகத் தமிழ்ப் படைப்பாளிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்கங்களின் தொகுப்பு.

813

இன்னுமொரு காலடி. இ.பத்மநாப ஐயர் (பதிப்பாசிரியர்). லண்டன்: தமிழர் நலன்புரிச் சங்கம், 33A Station Road, Manor Park, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (Colombo 13: Unie Arts)
224 பக்கம், புகைப்படம், ஓவியம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20X27.5 சமீ.

அனைத்துலகத் தமிழ்ப்படைப்பாளிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்கங்களின் தொகுப்பு.

814

இனியும் சூல்கொள். 23வது இலக்கியச் சந்திப்பு. எஸ்.புஷ்பராஜா, லட்சுமி, அசோக், கலைச்செல்வன் (தொகுப்பாசிரியர்கள்). பிரான்ஸ்: S.Pushparajah, 7 Rue Rocine, 95140, Garges Les Gonesse, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (லண்டன்: செட் லைன் பிரின்டர்ஸ்)
(10),159 பக்கம், சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 28X21 சமீ.

புலம்பெயர்ந்த நாடுகளில் இலக்கியச் சந்திப்புகளை மேற்கொண்டு வரும் ஈழத்து இலக்கியவாதிகளின் முதலாவது சந்திப்பு 24.9.1988 இல் ஜேர்மனியில் இடம்பெற்றது. பின்னர் பல்வேறு நாடுகளிலும் இச்சந்திப்புத் தொடர்ந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக 13-14 செப்டம்பர் 1997 இல் பிரான்சில் இடம் பெற்ற 23வது இலக்கியச்சந்திப்பின் போது வெளியிடப்பெற்ற சிறப்புமலர். புகலிட இலக்கியத்தினதும் தமிழ்ச்சூழல் எதிர்கொள்ளும் எல்லா விதமான அரசியல் ஆய்வுகளினதும் இலக்கியப் போக்குகளைப் பிரதிபலிக்கும் கலை இலக்கியப் படைப்புக்களின் தொகுப்பு.

815

எழுத்தாளன். வி.கந்தவனம். ஜேர்மனி: வெற்றிமணி வெளியீடு, 1வது பதிப்பு, ஜூலை 1995. (ஜேர்மனி: விடி பிரின்டர்ஸ்)
68 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14.5 சமீ.

இலண்டனில் வெளிவந்து கொண்டிருந்த *சமுகேசரி* பத்திரிகையில் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு ஏற்ற வகையில் 30 தலைப்புக்களில் ஆசிரியர் எழுதிய தொடர்கட்டுரைகளின் தொகுப்பு.

816

? (கேள்விக்குறி). எஸ்.பொன்னுத்துரை. சென்னை 600002: காந்தளகம், 834 அண்ணாசாலை, 2வது பதிப்பு, நவம்பர் 1994. 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972. (சென்னை 2: காந்தளகம்)
84 பக்கம். விலை: இந்திய ரூபா 25. அளவு: 17.5X12 சமீ.

பொன்னுத்துரை தன்னுடைய படைப்பாற்றலில் ஒரு பரிமாணத்தை மற்றதைக் காட்டிலும் கூடுதலாகவே சாதித்திருந்தார். அது அங்கதச்சுவை. அவருடைய ஒரு நூலின் அட்டை மீது வெறும் கேள்விக்குறி மட்டுமே இருக்கும். அட்டையைப் பிரித்தால் 80 பக்கங்களுக்கு உங்கள் சிந்தனையை ஒரு சூறாவளியில் பறக்க விட்டது போன்ற இலக்கிய அனுபவம். உண்மையில் அந்த 80 பக்கங்களை mind boggling என்று தான் கூறமுடியும். அங்கதச்சுவை என்பதை விட அங்கதனின் மகா சூரத் தந்தையான வாலிச்சுவை என்று தான் எனக்குத் தோன்றியது.

-அசோகமித்திரன் (முன்னுரையில்)

817

தமிழ் முழங்கும் வேளையிலே: தமிழ் முழக்கம். ஆ.சி. கந்தராஜா. அவுஸ்திரேலியா: Mitra Publications, 1/23 Munro Street, East Wood, 2122 Australia, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (Chennai 24: Mithra Book Makers, 375/8 - 10 Arcot Road)

192 பக்கம். விலை: இந்திய ரூபா 60. அளவு: 18X12.5 சமீ.

நாற்பதாவது மித்ர வெளியீடு. அவுஸ்திரேலியாவிலிருந்து (சிட்னி) ஒலிபரப்பப்படும் தமிழ் முழக்கம் வானொலியில் இடம்பெற்ற சுவையான நேர்காணல்களின் தொகுப்பு. மாலன், பீர் முகம்மது, ஞானி, சுஜாதா, ஆதி குமணன், நவநீதகிருஷ்ணன், கலைஞர் கருணாநிதி, வை.கோ., கமல்ஹாசன், பிரபஞ்சன், நாகேஷ், மனோரமா, காரைக்குடி மணி, இரா.ஜனார்த்தனன், துக்ளக் சோ, அம்பை, அம்பி ஆகியோரது செவ்விகள் இடம்பெற்றுள்ளன. பெரும் பான்மையான உரையாடல்கள் ஈழத்தமிழர் பிரச்சினை, புலம்பெயர் வாழ்வியல் ஆகியவற்றையொட்டியே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

818

தூவானம். அ.யேசுராசா. கொழும்பு 2: மூன்றாவது மனிதன் பதிப்பகம், 37/14 வக்சோல் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜூன் 2001. (கொழும்பு 13: யு.கே. பிரின்டர்ஸ்)
X.88 பக்கம். விலை: ரூபா 120. அளவு: 21X13 சமீ.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த *திசை* வாரவெளியீட்டில் 1989-90 காலப்பகுதியில் துணை ஆசிரியராகக் கடமையாற்றிய வேளையில் நீலாம்பரன் என்ற புனைபெயரில் ஆசிரியர் எழுதிய பத்திகளின் (Columns) தொகுப்பு. திரைப்படம், ஓவியம், கவிதை, சிற்றிதழ், கலாச்சாரத்துறைசார் நடவடிக்கைகள், எதிர்வினைகள், எனப் பலவற்றைத் தொடுவதாக இங்கே தொகுக்கப்பெற்றுள்ள பத்திகள் அமைகின்றன.

819

தோற்றுத்தான் போவோமா? எஸ்.புஷ்பராஜா. பிரான்ஸ்: சபாலிங்கம் நண்பர்கள் வட்டம், 7 Rue Racine, 95140 GargesLes Gonesse. 1வது பதிப்பு, மே 1999. (அச்சக விபரம் அறியமுடியவில்லை)
123 பக்கம். சித்திரங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 27X20 சமீ.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆயுத அராஜகத்துக்குப் பலியான சபாலிங்கத்துக்குச் சமர்ப்பணமாக அவரின் நண்பர்கள் வட்டம் 1999 இல் வெளியிட்ட இலக்கியத்தொகுப்பு. புலம்பெயர் எழுத்தாளர் பலரின் படைப்பிலக்கியங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

820

புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு ஓர் அறைகூவல். க.இந்திர

குமார். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், த.பெ.1447, தணிகாசலம் சாலை, தி.நகர். 1வது பதிப்பு, 2001. சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்)
201 பக்கம். விலை: இந்திய ரூபா 45. அளவு: 18X12.5 சமீ.

இலண்டனிலிருந்து மாதமிருமுறை இதழாக வெளிவந்த *மேகம்* பல்சுவைச் சஞ்சிகையில் 1999-2000இல் வெளிவந்த ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பு.

821

மலரும் நினைவுகள். வரதர் (இயற்பெயர்: தி.சு.வரதராஜன்) சென்னை 26: குமரன் பப்ளிஷர்ஸ், 1வது பதிப்பு, ஜூன் 1996. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிராபி)
168 பக்கம். விலை: இந்திய ரூபா 70. அளவு: 17.5X12 சமீ.

1930-40 ஆண்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணமக்களின் வாழ்வியல் நிகழ்வுகள் 18 தலைப்புக்களில் எழுதப்பட்டுள்ளன. அக்கால மக்களின் வாழ்வனுபவங்களைப் பின்னோக்கிப் பார்க்கத் தூண்டுவதாக இக்கட்டுரைகள் அமைகின்றன.

822

முன்னுரைகள் - சில பதிப்புரைகள். டொமினிக் ஜீவா. கொழும்பு 13: மல்லிகைப்பந்தல், 201, 1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (Chennai 600026: Nira Designs, 217, Arcot Road)
152 பக்கம். விலை: ரூபா 40. அளவு: 17.5x12.5 சமீ.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் நூல்களின் முன்னுரைகளும், மல்லிகைப்பந்தல் மூலம் அவர் பதிப்பித்து வெளியிட்ட நூல்களின் பதிப்புரைகளுமாக 30 ஆக்கங்களின் தொகுப்பு.

823

யுகம் மாறும். இ.பத்மநாப ஐயர் (பதிப்பாசிரியர்). லண்டன்: தமிழர் நலன்புரிச் சங்கம், 33A Station Road, Manor Park, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (London: Mearg Print Ltd.,12 Walmgate Road, Perivale,Middlesex)
220 பக்கம், புகைப்படம், ஓவியம், தகடுகள். விலை: குறிப்பிடப் படவில்லை. அளவு: 20X27.5 சமீ.

அனைத்துலகத் தமிழ்ப்படைப்பாளிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்கங்களின் தொகுப்பு.

824

வானொலிப் பேச்சுக்கள். என்.எஸ்.இரத்தினசிங்கம். சென்னை 600108: பாரி நிலையம், 184 பிராட்வே, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1992.(சென்னை 24: அலைகள் அச்சகம்)
104 பக்கம். விலை: இந்திய ரூபா 12.50. அளவு: 18X12.5 சமீ.

மேற்கு அவுஸ்திரேலியா சாகிய வானொலியில் மேற்கு அவுஸ்திரேலியா தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ்ஒலி நிகழ்ச்சியில் இலக்கியம், விஷேட தினங்கள், சமயம், போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆற்றிய 20 வானொலி உரைகளின் தொகுப்பு.

மேலும் பார்க்க: 021, 023, 739

899 பிறமொழி இலக்கியங்கள்

899.(1) பிறமொழிக் கவிதைகள்

825

ஒரு சோவியத் கவிஞரின் புதுக்கவிதைகள். கே.கணேஷ் (தமிழாக்கம்). கொழும்பு 5: எழுத்தாளர் பதிப்பகம், 215,G,1/1 பார்க் வீதி, 1வது பதிப்பு, 1988. (கொழும்பு 13: பேர்ள் பிரிண்டர்ஸ், 48B, கே.சிரில் சீ. பெரேரா மாவத்தை.)
32 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 19X14 சமீ.

சோவியத் கவிஞர் வியச்சீஸ்லாவ் குப்ரியானோவ் (Vyacheslav Kuprianov) அவர்களின் இருபத்தியொரு புதுக்கவிதைகளின் தமிழாக்கம்.

826

பலஸ்தீனக் கவிதைகள். எம்.ஏ.நு.ஃமான் (தொகுப்பாளர்). கல்முனை 6: வாச வெளியீடு, வாசகர் சங்கம், 1வது பதிப்பு, நவம்பர் 1981. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம்)
viii,56 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 10. நூலகப் பதிப்பு: ரூபா 15. அளவு: 20X13.5 சமீ.

இந்நூல் ஒன்பது பலஸ்தீனக் கவிஞர்களின் முப்பது கவிதைகளைக் கொண்டுள்ளது. மஹ்மூட் தர்விடி, பௌசி அல் அஸ்மார், றஷீட் ஹுசைன், சலும் ஜுப்ரான், தௌபிக் சையத், அன்தோய்னே கபாறா, பத்வாது கான், சமீஹ் அல் காசிம், டூயின் பசைசோ ஆகிய புகழ்பெற்ற கவிஞர்களின் கவிதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. பாலஸ்தீனக் கவிதைகள் பற்றி *கடாகர்மி* எழுதிய கட்

டுரை ஒன்றும் இடம்பெற்றுள்ளது. இத்தொகுப்பிலுள்ள சமீஹ் அல் காசிமின் ஏழு கவிதைகளை மொழிபெயர்த்தவர் கவிஞர் முருகையன். ஏனையவற்றை எம்.ஏ.நு:மான் மொழிபெயர்த்துள்ளார்.

பாலஸ்தீனக்கவிதைகள். எம்.ஏ.நு:மான். கொழும்பு 2: மூன்றாவது மனிதன் வெளியீடு, 2வது பதிப்பு, நவம்பர் 2000. 1வது பதிப்பு, நவம்பர் 1981. (Chennai 4: Multi Crafts.)
162 பக்கம். விலை: இந்திய ரூபா 200. அளவு: 21X14 சமீ.

1981 இல் வெளிவந்த 1வது பதிப்பில் 9 கவிஞர்களின் 30 கவிதைகள் இடம்பெற்றிருந்தன. இப்பதிப்பில் 15 கவிஞர்களின் 71 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. நிசார் கப்பானியும் :பத்வா துக்கான் தவிர்ந்த ஏனைய ஐந்து பெண் கவிஞர்களும் இத் தொகுதியில் புதிதாக இடம்பெற்றுள்ளனர். பலஸ்தீனக் கவிதைகள் வெளிப்படையான அரசியல் சார்வுடையவை. இது பலஸ்தீனப் படைப்பாளிகளின் வாழ்நிலை அனுபவத்தின் அடிப்படையில் அமைவது.

827

பாரதி பக்தன் பார்பரா கவிதைகள். அனதோலி பார்பரா (மூலம்), கே.கணேஷ் (தமிழாக்கம்). கொழும்பு: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், 215, G 1/1, பார்க் வீதி, 1வது பதிப்பு. 1989. (கொழும்பு 6: சாமரா அச்சகம், 22 ஏ, மல்லிகா ஒழுங்கை)
26 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X12 சமீ.

சோவியத் கவிஞரான அனதோலி பார்பராவின் 12 கவிதைகளின் தமிழாக்கம்.

828

பாலை: அடோனிஸ் கவிதைகள் சில. சி.சிவசேகரம், (தமிழாக்கம்). கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, சவுத் ஏசியன் புக்ஸ், 44, 3வது மாடி, கொழும்பு மத்திய கூட்டுச் சந்தைத் தொகுதி, 1வது பதிப்பு, மார்ச் 1999. (தெகிவளை: டெக்னோ பிரின்ட்)
(8),63 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

பாலஸ்தீனக் கவிஞன் அடோனிஸ் (அலி அஹ்மத் ஸாய்த்) கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு. *பாலை முற்றுகையிடப்பட்ட பெய்ரூத்தின் நாட்குறிப்பு 1982* லெபனானுள் இஸ்ரவேலியப்படைகள் புகுந்த காலம் தொடர்பானது. அந்த முற்றுகைக்காலத்தின் அவலங்களை மட்டுமன்றி ஒடுக்குமுறைக்குள்ளான அராபியனது எதிர்ப்புணர்வையும் வெளிப்படுத்துகின்றது.

899.(3) பிறமொழிக் கவிதை நாடகங்கள், காவியங்கள்

829

உரைநடையில் கலேவலா: பின்லாந்தின் தேசிய காவியம். ஆர்.சிவலிங்கம். சென்னை 600018: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டி.டி.கே.சாலை, 1வது பதிப்பு, 1999. (சென்னை: அச்சக விபரம் அறிய முடியவில்லை)
352 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14.5 சமீ.

பின்லாந்தின் சிறந்த நாட்டாரிலக்கியங்களில் ஒன்றான கலேவலா எலியாஸ் லொண்ரோத் (1802-1884) என்பவரால் தொகுக்கப்பெற்று முதற்பதிப்பு 1835இல் வெளிவந்தது. அதன்பின் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகளாவியரீதியில் சிறந்த இலக்கியங்கள் வரிசையில் வைக்கப்பட்டது. இந்நூல் ஹெல்சிங்கி பல்கலைக்கழக ஆய்வு உதவியாளராகவிருந்த ஆசிரியரால் (உதயணன்) 1994 இல் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. அக்காவியத்தின் உரைநடையாக்கமே இந்நூலாகும்.

830

கலேவலா: பின்லாந்தின் தேசிய காவியம். எலியாஸ் லொண்ரோத் (மூலம்) ஆர். சிவலிங்கம் (தமிழாக்கம்). ஹொங்கொங்: ஆல்ட்டனேட்டிவ் பிரஸ், த.பெ.இலக்கம் 47141, 1வது பதிப்பு, 1994. (அச்சக விபரம் அறியமுடியவில்லை)
xxxviii,426 பக்கம், வண்ண ஓவியத்தகடுகள். விலை: இந்திய ரூபா 200. அளவு: 26X18.5 சமீ.

பின்லாந்தின் தேசிய காவியமான கலேவலா, எலியாஸ் லொண்ரொத்தினால் 1835இல் நாட்டுப்பாடல் சேகரிப்பிலிருந்து தொகுக்கப்பெற்றது. பின்னர் 46 உலக மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. இவ்விலக்கியத்தின் தமிழாக்கமே இந்நூலாகும்.ஸ்கன்டினேவியக் கடல்வீரர்களின் தாக்குதல்களினால் ஏற்பட்ட வரலாற்றுப் பின்னணியில் அமைந்த கலேவலாவின் போர் நடவடிக்கைகள் இப் பாடல்களின் முதுகெலும்பாக உள்ளன. போர்க்கருப்பொருளை மட்டுமல்லாது, அக்காலத்தைய சமூக பொருளாதார பண்பாட்டு அம்சங்களையும் அவை வெளிப்படுத்துகின்றன. சில காட்சிகள் எமக்கு மஹாபாரதம், இராமாயண நிகழ்வுகளை நினைவுறுத்துகின்றன.

831

லைலா-மஜ்னு. எஸ்.தியாகராஜா. சென்னை: 600017: மணிமேகலை பிரசுரம், த.பெட்டி எண் 1447, தணிகாசலம் தெரு, தியாகராஜ நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: ஸ்கிரிப்ட்ஸ் ஆப்செட்)
124 பக்கம், படங்கள். விலை: இந்திய ரூபா26. அளவு: 18.5X12.5சமீ.

உலக இலக்கிய வரலாற்றில் அழியாப் புகழ்பெற்ற 12ம் நூற்றாண்டின் பாரசீகக்கவிஞன் நிசாமியின் காவியக் கவிதையான லைலா மஜ்னுவின் தமிழ்வடிவம். ஆசிரியரின் முன்னுரையில் இக்காவியம் பற்றிய வரலாற்றுப் பின்னணி பற்றிய ஆய்வுத்தகவல் தெளிவாகத் தரப்பட்டுள்ளது.

899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள்

832

சத்தியஜித் ரேயின் பத்திக் சந்த். சொக்கன் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், கண்டி வீதி).
iv,112 பக்கம். விலை: ரூபா 18. அளவு: 18x12 சமீ.

சத்தியஜித் ரேயின் வங்கமொழி மூலநூலின் ஆங்கில மொழி பெயர்ப்பிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. சிறுவர் மனதைக் கவரத்தக்க விறுவிறுப்பான சம்பவங்கள், விநோத அனுபவங்கள், வேடிக்கைக் காட்சிகள் ஆகியன இந்த நாவலில் அர்த்தமுள்ளவையாக அமைந்துள்ளன. திருவும் திமிரும் மிக்க குடும்பத்தில் பிறந்த பாப்லு, தன் 12வது வயதில் ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்வுகளால் ஏழ்மை மிகுந்த சூழலில் பத்திக் சந்த் என்ற மாற்றுப் பெயரில் வாழ்ந்து பெற்ற அனுபவமும் கண்கட்டு வித்தைக்காரனின் கலையார்வத்திலும் அன்பிலும் தன் மனதைப் பறிகொடுத்ததும், அதனால் அவனது உள்ளம் நேர்மை நீதி என்ற பாதையில் பண்படைந்ததும் எந்தக் கருத்துத்திணிப்பும் இல்லாத முறையில் சொல்லப்பட்டுள்ளது.

833

சிறைகளின் குரல். நகுயன் ஹியு ட்ருஆங் (மூலம்), சித்த புத்திரன் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: சுகந்தம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, கார்த்திகை 1985. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை.)
(6),26 பக்கம். விலை: ரூபா 4. அளவு: 17.5x11.5 சமீ.

இது ஒரு வியட்நாமியக் கதையின் தமிழாக்கம். ஒடுக்குமுறை அரசினால் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுப் பின் கொலை செய்யப்பட்ட ஒரு அறிவுஜீவியின் கதை. ஒரு புத்தி ஜீவி எப்படிப் புரட்சியாளனாக மாறுகின்றான் என்பதைச் சுவையாக விளக்குகின்றது.

834

பெட்டிசம். வீல் குணசேகரா (மூலம்). ஜனைதா ஷெரிப் (தமிழாக்கம்). கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1வது பதிப்பு, 1988. (மட்டக்களப்பு: சென் ஜேசப் கத்தோலிக்க அச்சகம்)
80 பக்கம். விலை: ரூபா 21. அளவு: 18x12.5 சமீ.

வீல் குணசேகராவின் *பெத்சம* என்ற சிங்கள நூலின் தமிழாக்கம். ராஜரட்டைச் சிங்களக்கிராம மக்களின் வாழ்க்கையைப் பகைப்புலமாகக்கொண்டு எழுதப்பட்டது. கடமை உணர்வற்ற அரச ஊழியர்களாலும் சந்தர்ப்பவாதக் கிராமத்தலைவர்களாலும் கல்வியறிவற்ற சிங்களக் கிராம மக்கள் ஏமாற்றப்படுவதைச் சித்திரிக்கும் கதை.

900 புவியியல், வரலாறுகள்

910 பொதுப் புவியியல்

835

அபிவிருத்திப் புவியியல்: ஐக்கிய இராச்சியம். க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 5வது பதிப்பு, ஏப்ரல் 1989. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்)
56 பக்கம், வரைபடங்கள். விலை: ரூபா 15. அளவு: 21x14 சமீ.

க.பொ.த.பத்திர உயர்தரவகுப்பு மாணவர்களின் அபிவிருத்திப் புவியியல் பாடநெறியின் ஒரு பகுதி தனி ஆய்வாகும். அதில் ஆராயப்படவேண்டிய நாடுகளில் ஐக்கிய இராச்சியமும் ஒன்று. ஐ. இராச்சியத்தின் அபிவிருத்திப்புவியியலை இந்நூல் விளக்குகின்றது.

911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள்

836

இந்தோனேஷியாவில் இரண்டு வருட அனுபவம். நா.முத்தையா. சாவகச்சேரி: குருபவனம், கண்டி வீதி, 1வது பதிப்பு, 1986. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்)
xv,129 பக்கம். விலை: ரூபா 16. அளவு: 18x12.5 சமீ.

பிரயாணக்கட்டுரையாக அமைந்தாலும், இந்நூல் சமய, சமுதாய வரலாற்று உணர்வுடைய சிந்தனை நூலாகவுள்ளது. இந்தோனேஷியாவில் வாழும் இந்துக்கள், குறிப்பாகத் தமிழ்மக்கள், பூர்வகுடிகள், சமூக நிகழ்ச்சிகளில் சமயமுறைகள், கோயில்கள், சாதி வேற்றுமை, சீதனக்கொடுமைகள் இல்லாத சமூக அமைப்பு, பொழுதுபோக்கு ஆகிய பல சுவையான தகவல்கள் கொண்ட நூல்.

837

இலண்டனில் ஏழுவாரம். தங்கம்மா அப்பாக்குட்டி. தெல்லிப் பளை: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், 1வது பதிப்பு, 1988. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்)

viii,68 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18.5X13 சமீ.

சமயச்சொற்பொழிவுகளை மேற்கொள்ளும் பொருட்டு 1987 மே மாதப் பகுதியில் மேற்கொண்ட ஏழு வார லண்டன் பயணத்தின் போது பெற்ற அனுபவங்கள்.

838

ஒளி சிறந்த நாட்டிலே. ஐ.சாந்தன். யாழ்ப்பாணம்: ஈழமுரசு அறிவூட்டகம், 1வது பதிப்பு, 1985. (யாழ்ப்பாணம்: சாய்பாபா அட் வர்டைசிங் அசோசியேற்ஸ், 37, கண்டி வீதி)

(4),78பக்கம், புகைப்படங்கள். விலை: ரூபா 10. அளவு: 21X14சமீ.

நூலாசிரியரின் சோவியத் நாட்டுப்பயணம் பற்றிய மனப்பதிவுகள்.

839

சாம்பல் மேட்டில் பூத்த சாதனை அலைகள். கண. சுபாஷ் சந்திரபோஸ். அறந்தாங்கி (தென்னிந்தியா) 614633: கற்பகம் பிரசுரம், கற்பக பவனம், சிதம்பர விடுதி அஞ்சல், 1வது பதிப்பு, 1988. (சென்னை 600017: திருமகள் நிலையம், 55 வெங்கட நாராயணா ரோடு)

(10),96 பக்கம், தகடுகள். விலை: இந்திய ரூபா 25. அளவு: 18X12.5சமீ.

ஜப்பானிய பயணக்கட்டுரை.

840

சிந்திக்கத் தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம். சு.பாக்கிய நாதன், திருமதி வி.பாக்கியநாதன். யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, அமலமரி தியாகிகள் சபை, 1வது பதிப்பு, ஜனவரி 1984. (யாழ்ப் பாணம்: சித்திரா அச்சகம்)

236 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 17.5X12.5 சமீ.

ஜேர்மனியில் வாழும் இலங்கையரின் புகலிட வாழ்க்கை முறையையும் ஜேர்மனிய கலாச்சாரத்தையும் பற்றியதோர் ஒப்பீட்டு அடிப்படையிலமைந்த ஆய்வுக் கண்ணோட்டம்.

841

சேக்கிழார் அடிச்சுவட்டில்: அறுபத்து மூவர் வரலாறும் யாத்திரையும். சோ.சிவபாதசுந்தரனார். சென்னை 600017: வானதி பதிப்பகம், 13 தீனதயாளு தெரு, தி.நகர், 2வது பதிப்பு, ஆகஸ்ட் 1989, 1வது பதிப்பு, ஜனவரி 1978. (சென்னை 600005: ஸ்ரீ கோமதி அச்சகம், திருச்சிராப்பள்ளி)

xvi,400 பக்கம், 105 புகைப்படங்கள். விலை: இந்திய ரூபா 52. அளவு: 22X14.5 சமீ.

பிரயாண அனுபவங்களைப் பின்னணியாகக்கொண்டு இந்து சமயத் தின் முக்கிய அடியார்களின் வரலாற்றையும் இந்துப் பண்பாட்டின் அடிப்படையையும் ஆதாரங்களையும் எடுத்துச் சொல்லும் நூல். சேக்கிழாரின் பெரிய புராணம் ஒரு சமய இலக்கியப் பொக்கிஷ மாகக் கருதப்படுகின்றது. அதை உணர்ந்து இரசிக்க இந்நூல் உதவும்.

842

பொய்கை மலர். சோமகாந்தன். சென்னை 600002: காந்தளகம், 834, அண்ணா சாலை, 1வது பதிப்பு, கார்த்திகை 1995. (சென்னை: உதயம் ஆப்செட்)

176 பக்கம். விலை: இந்திய ரூபா 80. அளவு: 17.5X12.5 சமீ.

வட இலங்கையிலிருந்து கதிர்காமத்துக்குக் கால்நடையாக யாத் திரை செல்லும் வழியிலுள்ள தலங்களின் சிறப்பும் முருகன் பற்றிய வானொலி உரைகளும் கொண்ட தொகுப்பு நூல்.

843

மூன்று நாடுகள் அறுபது நாட்கள்: பயணக்கட்டுரை. இரா.ந. வீரப்பன். யாழ்ப்பாணம்: உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம், இலங் கைக்கிளை, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: ஸ்வர்ணம் பப்ளி ஷர்ஸ், பெருமாள் கோவிலடி)

44 பக்கம், விலை: ரூபா 6. அளவு: 21X14 சமீ.

மலேஷியாவிலிருந்து ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய மூன்று நாடுகளுக்கும் விஜயம் செய்து தாம் பெற்ற பயண அனுப வங்களை உலகததமிழ் பண்பாட்டு இயக்கத் தலைவரான ஆசிரியர் இந்நூலில் சுவைபடக் கூறியிருக்கின்றார். இதிலுள்ள கட் டுரைகள் மலேஷியப் பத்திரிகையான 'ஞாயிறு ஓசை'யில் தொடராக வெளிவந்தது.

844

யாழ்ப்பயணம்: இன்றைய யாழ்ப்பாண நிலைமைகள் 1994.

ப.ஸ்ரீஸ்கந்தன். கனடா: மஞ்சரி வெளியீடு.1221 Markham Road, Box21,Scarborough,1வது பதிப்பு, ஜூன் 1994. (Canada:Quality Printing Services)

72 பக்கம். விலை: கனேடியன் டொலர் 2. அளவு: 21.5X14 சமீ.

1994 காலப்பகுதியில் இயங்கிய யாழ்ப்பாணத்துக்கு, புகலிடத் தமிழர் ஒருவர் பிரயாணத்தை மேற்கொண்டு அங்குள்ள நிலைமை களைக் கண்டறிந்து வந்து எழுதிய நூல். கனடாவில் வெளிவரும் *மஞ்சரி* இதழில் தொடராக வெளியிடப்பெற்றது.

845

லண்டன் முதல் கனடா வரை. மாத்தளை சோமு. திருச்சி 620003: தமிழ்க்குரல் பதிப்பகம், P.15, 5வது பிரதான சாலை, ராமலிங்கநகர், உறையூர், 1வது பதிப்பு, நவம்பர் 2000. (சென்னை 14: பார்க்கர், 293, அகமது வணிக வளாகம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை)

176 பக்கம். விலை: இந்திய ரூபா 75. அளவு: 22X14 சமீ.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் முயற்சிகள், போராட்டங்கள், ஏக்கங்கள் யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பயணத்தின் கதை. வீரகேசரி ஞாயிறு இதழில் தொடராக வெளிவந்தது.

846

வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள். ஈ.கே.ராஜகோபால். London SW17 7EZ: தமிழன் பப்ளிஷர்ஸ், 38 Moffat Road, 1வது பதிப்பு, நவம்பர் 1991. (சென்னை 2: காந்தளகம்)

(14),87 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. 24X18 சமீ.

1930ம் ஆண்டளவில் இலங்கை வடபுலத்தின் கரையோரப்பகுதி யான வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவின் குளொசெஸ்டர் துறைமுகத்துக்குச் சென்றடைந்த அன்னபூரணி கப்பலின் பிரயாண வரலாறு.

915 பிரதேசப் புவியியல்

847

இலங்கையில் தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தின் குடித் தொகைப் பண்புகளும் பொருளாதார வளங்களும். இரா. சிவச்சந்திரன். யாழ்ப்பாணம்: அகிலம் சமூக அறிவியலாய்வு வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 1981. (யாழ்ப்பாணம்: சித்திரா

அச்சகம், 310, மணிக்கூட்டுக் கோபுர வீதி)

32 பக்கம், வரைபடம். விலை: ரூபா 5. அளவு: 20.5X14 சமீ.

இலங்கையில் தமிழர் குடித்தொகை பற்றிய அறிமுகத்துடன் பிரதேச குடித்தொகைப்பண்புகளும், கிராம நகரப்பண்புகளும் விளக்கப் பெற் றுள்ளன. விவசாய, கனிப்பொருள், கடல் வளங்களினதும் இருப்பு பற்றிய பௌதிக தகவல்களையும் உள்ளடக்கியுள்ள நூல்.

848

வன்னிப்பிரதேசத் தமிழாராய்ச்சி மகாநாட்டு மலர். சு.வித் தியானந்தன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக்கிளை, 1வது பதிப்பு, வைகாசி 1983. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

(20),98 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 24.5X18.5 சமீ.

வன்னிப்பிரதேசம் தொடர்பான வரலாறு, இலக்கிய முயற்சிகள், நாட் டார் பாடல்கள், மொழி வழக்குகள், கலை கலாச்சாரப்பணிகள், பண் பாட்டுக் கோலங்கள், பொருளாதார வாய்ப்புக்கள் போன்ற பயனுள்ள தகவல்கள் அடங்கிய கட்டுரைகளின் தொகுப்பு. வன்னி தொடர்பான நூல்கள், கட்டுரைகள் ஆய்வேடுகளின் நூற்பட்டியல் ஒன்றும் காணப் படுகின்றது.

920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள்

849

என் அப்பாவின் கதை. என்.சண்முகலிங்கன். தெல்லிப்பழை: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: கத்தோலிக்க அச்சகம்)

40 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X13 சமீ.

தன் அப்பாவின் (அமரர் க.நாகலிங்கம்) கதையை இலக்கியமாக்கும் மகன் சண்முகலிங்கனின் இந்த நூல் அவர் தந்தையாரின் 31ம் நாள் நினைவுடன் வெளியாகின்றது. கல்வெட்டு மரபினின்றும் விலகி ஆக்க இலக்கியங்களையும் பயனான பிரசுரங்களையும் தரத் தொடங்கியுள்ள புதிய மரபினிடை சண்முகலிங்கனின் ***என் அப் பாவின் கதை***யும் ஒரு புதிய தொடக்கம்.

-பேராசிரியர் சு.வித்தியானந்தன் (முன்னுரையில்)

850

சந்திப்பு. முருகபூபதி. அவுஸ்திரேலியா: முகுந்தன் பதிப்பகம், 170, Hothlyn Drive, Craigieburn, Victoria 3064 (சென்னை 600026: குமரன்

பதிப்பகம், 79, 1வது வீதி, குமரன் காலனி, வடபழனி)
144 பக்கம். விலை: இந்திய ரூபா 32. அளவு: 15X12.5 சமீ.

நேர்காணல் தொகுப்பு. கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம், நாடகம், நாட்டுக்கூத்து, ஓவியம் முதலான துறைகளில் தமது காத்திரமான பங்களிப்பை நல்கியவர்களுடனான நேர்காணல் தொகுப்பு. கவிஞர் அம்பி, எஸ் பொ., ஓவியர் செல்லத்துரை, எஸ்.அகஸ்தியர், இந்திரா பார்த்தசாரதி, 'பரிஷா' ஞாநி, எஸ்.வைத் தீஸ்வரன் சார்வாகன், அண்ணாவியார் இளைய பத்மநாதன், என். கே.ரகுநாதன், மா.வை.நித்தியானந்தன் ஆகியோரின் செவ்விகள் உள்ளடங்கியுள்ளன.

மேலும் பார்க்க: 817

851

நினைவின் அலைகள். எஸ்.வீ.தம்பையா. கொழும்பு 13: மல்லிகைப்பந்தல், 201, 1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி. 1வது பதிப்பு, ஒக்டோபர் 1977 (சென்னை 600014: சித்ரா பிரின்டோகிரபி)
120 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12 சமீ.

யாழ்ப்பாணத்தில், வளமிகுந்த மண்ணுள்ள கிராமமொன்றில், சாதாரண குடும்பமொன்றில் பிறந்த எஸ்.வி.தம்பையா தனது சரிதையினை ஓரிரு இடங்களில் கற்பனைத்துளிகள் சேர்த்த இலக்கியமாக்கியுள்ளார். வளமிகு நாடுகள் பலவற்றில் சிதறிப்போயுள்ள யாழ்ப்பாணத் தமிழரின் வாழ்க்கை ஐந்தாறு சகாப்தங்களின் முன்னர் எவ்வாறிருந்ததென்பதை சமூகவியல் ஆய்வாளர்களும் இன்றைய மற்றும் எதிர்கால இளந்தலைமுறையினரும் தெளிவாக அறிந்து கொள்ள உதவும் நூல்.

852

நினைவுகளில் அகிலன். எஸ்.திருச்செல்வம் (தொகுப்பாளர்). கனடா: அகிலன் அசோஷியேட்ஸ், 1வது பதிப்பு, மே 1999. (கனடா: அகிலன் அசோஷியேற்ஸ்)
44 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு 28X21 சமீ.

ஈழத்துப் பத்திரிகையாளர் எஸ்.திருச்செல்வத்தின் புதல்வன் அகிலன் இந்திய அமைதி காக்கும்படை யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த வேளை ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட துன்பியல் சம்பவம் நிகழ்ந்து பத்து ஆண்டு நினைவாக 10.5.1999 அன்று அகிலன் பற்றி அவ்வப்போது கிடைத்த விடயதானங்களைச் சேர்த்துத் தொகுத்து வெளியிடப் பட்ட நினைவுமலர். ஈழப்போரின் துர்ப்பாக்கியமானதொரு காலகட்

டத்தின் வரலாற்றுப் பதிவாக இந்நூல் அமைகின்றது.

920.1 ஊடகவியலாளர், தகவல் ஒலிபரப்புத் துறையினர்

853

மன ஓசை: தமிழ் ஒலிபரப்பாளர் ஒருவரின் நினைவு மீட்பு. வீ.சுந்தரலிங்கம்.(புனைபெயர்: சுந்தா). சென்னை 600090: No.6, Eswari Apartments, 23, Beach home avenue, 2nd street, Besant nagar, 1வது பதிப்பு, மார்ச் 1999. (சென்னை 600014: பார்க்கர் 293, அஹமட் காம்ப்ளெக்ஸ், 2வதுதளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை)
176 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

இலங்கையின் ஒலிபரப்புத் துறையில் அனுபவ வளமும் ஆற்றலும் வாய்ந்த கலைஞர் சுந்தாவின் மனஓசை இந்நூலில் பதிவாகிறது. தமிழ் ஒலிபரப்புத் துறையிலும் ஈழத்து நாடகத் துறையிலும் கலைத் துறையிலும் ஈடுபாடுள்ளவர்களுக்கு அரிய பல தகவல்களையும் கருத்துக்களையும் இந்நூல் தருகின்றது.

922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

854

ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமிகள். முருக வே. பரமநாதன். கனடா: இந்து சமயப் பேரவை, ஒன்ராறியோ, 1வது பதிப்பு, செப் டெம்பர் 2000. (கனடா: விவேகா அச்சகம்)
xviii,85 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X14 சமீ.

ஒன்ராறியோ இந்துசமயப் பேரவையின் 10வது வெளியீடு. கோண்டா விலைச் சேர்ந்த குடைச்சுவாமி (கந்தையா) அவர்களின் வாழ்வும் பணியும் இந்நூலில் விரிவாக ஆய்வுக்குட்பட்டுள்ளது.

855

ஈழத்துச் சித்தர்கள். நா.முத்தையா. சென்னை 26: குமரன் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜூன் 1994. (சென்னை 24: அலைகள் அச்சகம்)
192 பக்கம். விலை: இந்திய ரூபா 28. அளவு: 18X12.5 சமீ.

கடந்த காலங்களில் ஈழத்தில் வாழ்ந்த பதினாறு ஈழத்துச் சித்தர் களை இந்நூல் அறிமுகப்படுத்துகின்றது.

856

உயிர்க்குயிர்க் கடவுளாகிய சிவயோக சுவாமிகள். சிவன் அடியான். யாழ்ப்பாணம்: வெளியீட்டகம் குறிப்பிடப்பட வில்லை. 1வது பதிப்பு,1987 (யாழ்ப்பாணம்: செட்டியார் பதிப்பகம், காங்கேசன்துறை வீதி)

xxiv,168 பக்கம், தகடு. விலை: ரூபா 17.50. அளவு: 19.5X13 சமீ

சிவயோக சுவாமிகளின் தொடர்பும் அவரது திருவிளையாடல்களும் பத்திரிகைகளும் சீடர்களும் சுவாமிகள் பற்றிப்பெருமையுடன் கூறியவற்றையும் தொகுத்து வழங்கியுள்ளார்.

857

காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் வாக்கும். க.ந. வேலன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், த. பெ. 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 5: எம்.கே. என்டர்பிரைசஸ்)

128 பக்கம். விலை: இந்திய ரூபா 24. அளவு: 18X12.5 சமீ.

முதலில் அம்மையாரின் வாழ்க்கை வரலாறு, தெய்வீகம் கமழ வரையப்பெற்றுள்ளது. அடுத்து திருவாலவுடையார் பாசுரத்துக்கும் அம்மையார் பாடல்களுக்கும் முன்னுரையோடு கூடிய தெளிவான பொழிப்புரை எழுதப்பெற்றுள்ளது. நிறைவாக, அம்மையாரின் வாழ்வும் வாக்கும் என்னும் ஆய்வுப்பகுதியில் அவர் அடைந்துள்ள மெய்யுணர்வுச் சிகரமும் அவருக்காக அப்பன் ஆடிய ஊர்த்துவ தாண்டவத்தின் உட்பொருள் முதலியனவும் விளக்கப்பட்டுள்ளன.

858

சாது அப்பாத்துரையின் தியானதாரா. பிரமிள் (இயற் பெயர்-சிவராமலிங்கம், வேலணை) அந்தியூர் 638501 (தமிழ்நாடு): லயம் வெளியீடு, நகலூர், 1வது பதிப்பு, 1989. (சென்னை: 41 கவின் கலை அச்சகம்)

64பக்கம், புகைப்படம். விலை: இந்திய ரூபா 6. அளவு: 18X12சமீ.

திருக்கோணமலையின் ஞானபுருஷரான சாது அப்பாத்துரையின் வரலாறும் வாக்கும் அவர் மறைந்து இருபத்தைந்து ஆண்டுகள் சென்ற பின்பு இந்நூலின் வாயிலாக வெளிப்படுகின்றது.

சிவயோக சுவாமிகள் மேலும் பார்க்க 49, 50, 55

859

தீபங்கள் எரிகின்றன: அருட்திரு மேரி பஸ்தியான் வரலாறு. நாவண்ணன். மல்வம் (உடுவில்): சுவாமி ஞானப்பிர

காசர் சனசமூக நிலைய வெளியீடு, 1வது பதிப்பு, மாசி 1988. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)

(14),226 பக்கம், தகடுகள். விலை: ரூபா 20. அளவு: 17.5X12.5 சமீ.

1985ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி இலங்கை ஆயுதப்படையினால் படுகொலை செய்யப்பட்ட வங்காலை (மன்னார் மாவட்ட) பங்குத் தந்தை அருள்திரு மேரி பஸ்தியான் அவர்களது வாழ்க்கைவரலாறு.

860

முத்தான தொண்டர்: ஞானசுரபி ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் வாழ்வும் பணியும். வி.கந்தவனம். கனடா: இந்து சமயப் பேரவை, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஆவணி 1995. (கனடா: சங்கர் அச்சகம்)

87 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

இலங்கையில், நாவலப்பிட்டியில் இருந்து வெளிவந்து, இந்து சமய உலகையே ஆட்கொண்ட *ஆத்மஜோதி* என்ற சஞ்சிகையின் தாபகரும், சிவநெறியில் நின்று பல அருங்காரியங்களைப் புரிந்தவருமான அருட்திரு நா. முத்தையா அவர்களது வாழ்வும் பணியும்.

மேலும் பார்க்க: 069

923 சமூகவியல்துறை சார்ந்தோர்

861

ஐ.நாவில் தமிழன்: என் முதல் முழுக்கம். கிருஷ்ணா வைகுந்த வாசன். லண்டன் SW19 2HY: செங்கொட்டில் பதிப்பகம், 55,Warren Road, 2வது திருத்திய பதிப்பு, ஜூலை 1993. 1வது பதிப்பு, ஜூலை 1990. (London: Setline data Ltd.)

204 பக்கம், புகைப்படம். விலை: ஸ்டேர்லிங் பவுண் 4.95. அளவு: 21X14 சமீ.

திரு கிருஷ்ணா வைகுந்தவாசனின் 73வது பிறந்த தினத்தையொட்டி வெளியிடப்பட்ட நூல். அவரது ஐம்பது வருடகால பொதுவாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள், அவர்பற்றிய செய்திகளின் ஆவணத்தொகுப்பு.

862

துணைவேந்தர் வித்தி. அ.சண்முகதாஸ். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, 1984. (கொழும்பு6: சாமர அச்சகம், 22ஏ மல்லிகா ஒழுங்கை.)

134பக்கம், புகைப்படம், தகடுகள். விலை:ரூபா15. அளவு:18X13சமீ.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் 60வது பிறந்ததினத்தையொட்டி 8.5.84 அன்று வெளியிடப்பெற்ற நூல். எட்டு அத்தியாயங்களில் அவரது சமூகப்பணிகள் பல்கலைக்கழக வாழ்வு என்பன பற்றிய விரிவான ஆய்வு. அவர் எழுதிய நூல்கள், கட்டுரைகள் பற்றிய நூற்பட்டியல் ஒன்றும் (79-103ம் பக்கங்களில்) காணப்படுகின்றது.

863

தேசபக்தன் கோ. நடேசையர் - ஒரு வரலாற்று ஆய்வு. சாரல் நாடன். கண்டி: மலையக வெளியீட்டகம், 1வது பதிப்பு, 1988. (கண்டி: ரோயல் அச்சகம், 190, கொழும்பு வீதி.)

210 பக்கம், விளக்கப்படம். விலை: ரூபா 75. அளவு: 21X14 சமீ.

இலங்கை வாழ் பெருந்தோட்டத் தமிழரின் கடந்த 170 வருடகால வரலாற்றிலே யுகப்புயல் ஒன்றை ஏற்படுத்திய மாமனிதர் கோதண்டராம நடேசையரின் வாழ்க்கை வரலாறு.

864

மணிமங்கலம்: மணிவிழா மலர். வசந்தா வைத்தியநாதன், இ. ஜெயராஜா(மலர்க்குழு). லண்டன்: பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம், 1வதுபதிப்பு, 1999. (Colombo13:UnieArts,Bloemendhal Road)

136 பக்கம், தகடுகள், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப் படவில்லை. அளவு: 21.5x14 சமீ.

கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தா சபைச் செயலாளரும் பல்வேறு சிவப் பணிகளின் முன்னோடியுமான திரு.க.பாலசுப்பிரமணியம் தம்பதி களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவையொட்டி வெளியிடப்பட்ட மலர். வாழ்த்துரைகளும் சைவசித்தாந்தக்கட்டுரைகளும் உள்ளடங்கியது.

865

மலையக மாணிக்கங்கள். அந்தனி ஜீவா. கொழும்பு 13: துரைவி, 85, ஸ்ரீ இரட்ணஜோதி சரவணமுத்து மாவத்தை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ்)

82பக்கம், விலை: ரூபா 65. அளவு: 17X12சமீ. ISBN955-9084-05-4

மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த முன்னோடி களில் பன்னிருவரைப் பற்றிய நூல். திருமதி மீனாட்சி அம்மை யார், கோ. நடேசையர், பெரி சுந்தரம், இராமானுஜம், ஜ.எஸ். பெரேரா, ஜோர்ஜ் ஆர். மோத்தா, மலையக காந்தி ராஜலிங்கம்,

வி.கே.வெள்ளையன், சி.வி.வேலுப்பிள்ளை, ஏ.அஸீஸ், சோமசுந் தரம் அசோகா, பி.டி.ராஜன் ஆகியோர் பற்றிய மனப்பதிவுகள்.

866

வைகுந்தவாசன் முத்துவிழா மலர் 2000. பொன் பாலசுந் தரம், ஐ.தி.சம்பந்தர் (தொகுப்பாசிரியர்கள்). லண்டன்: முத்துவிழா மலர் வெளியீட்டுக் குழு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000.

52 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 29.5X21 சமீ.

29.4.2000 அன்று லண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவில் சிவயோகம்சபை அரங்கில் இடம்பெற்ற பெரியார் கிருஷ்ணா வைகுந் தவாசன் முத்துவிழாவில் வெளியிடப்பட்ட மலர். அன்னாரின் பொது வாழ்வில் அவரை வாழ்த்தி வழங்கப்பட்ட உரைகளின் தொகுப்பு.

867

சேர். ராஸிக் பரீத்: வழியும் நடையும். முஹம்மது எம். சபர். கொழும்பு 3: அல்ஹாஜ் ஸுஃத் முஹம்மத் இர்ஷாத் அல்பரகாத் முகாமை நிறுவனம், 17 கிளென் ஆர்பர் பிளேஸ், 1வது பதிப்பு, 1982. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185, கிரான்ட்பாஸ் வீதி)

(8),174 பக்கம், தகடு. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

சேர் ராசிக் பரீத் அவர்களின் 90வது பிறந்ததினக் கொண்டாட்டத்தை யொட்டி (29.12.1982) வெளியிடப்பட்ட சிறப்பு மலர். மூன்று அத்தி யாயங்களில் அவரது சமூக, அரசியல் வாழ்க்கை வரலாறு எடுத்துக் காட்டப்படுகின்றது.

923.2 அரசியல் துறையினர்

868

அன்னை இந்திரா. அந்தனி ஜீவா. கண்டி: தமிழ் மன்றம், கல் ஹின்ன, 1வது பதிப்பு, 1985. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி)

62 பக்கம், புகைப்படங்கள். விலை: ரூபா 10. அளவு: 18X12.5 சமீ.

முன்னாள் இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியின் வாழ்க்கை வரலாறு எளிய நடையில் நூலுருவாகியுள்ளது.

869

சா.ஜே.வே.செல்வநாயகம்: நெருக்கடி காலத் தலைமைத் துவம் பற்றி நினைவு அலைகளின் உருவம் ஒன்றின்

அடிப்படையினதோர் ஆய்வு . அ.ஜெயரட்ணம் வில்சன். யாழ்ப்பாணம்: தந்தை செல்வா அறங்காவல் குழு, 1வது பதிப்பு. 1981. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)
25 பக்கம். விலை: ரூபா 5. அளவு: 21X14 சமீ.

தந்தை செல்வா தமிழ் இனத்தை வழிநடத்திய கால் நூற்றாண்டுக் காலத்தில் அவர் கைக்கொண்ட போராட்ட நடைமுறைகள் மாத்திர மன்றி அக்காலத்தில் வளர்ச்சியடைந்து பூரணத்துவம் பெற்ற அவரது அரசியல் கருத்துக்கள் எல்லாம் இந்நினைவுரையில் தொட்டுச் செல்லப்பட்டுள்ளன.

870

தோழர் மணியம் நினைவு மலர். கே.ஏ.சுப்பிரமணியம் ஞாபகார்த்த குழு. யாழ்ப்பாணம்: இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி (இடது), 15/1 மின்சார நிலைய வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1989. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ பார்வதி அச்சகம், 536, ஆஸ்பதிதிரி வீதி)
118 பக்கம், தகடுகள். விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச்செயலாளர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களின் நினைவு அஞ்சலி 17.12.1989 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது வெளியிடப்பட்ட மலர். தோழர் மணியம் பற்றி ஏனையோர் பதிவு செய்து வைத்திருந்த எண்ணங்களே இந்நூலில் ஆவணமாக்கப்பட்டுள்ளது.

871

நினைவுத் திரைகள். கா.பொ.இரத்தினம். சென்னை 18: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (சென்னை 108: அப்பர் அச்சகம்)
ix,354 பக்கம். விலை: இந்திய ரூபா 60. அளவு: 18X12 சமீ.

பேராசிரியர் முனைவர் கா.பொ.இரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நூலாக வெளியிட்டால் 20ம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இன மொழி இலக்கிய வரலாற்றைத் தமிழுலகம் தெரிந்து கொள்ளுமே என்ற நோக்கத்துடன் அவரிடம் தன் வரலாற்றை எழுதித் தருமாறு தூண்டினோம். அகவை முதிர்ந்த நிலையிலும் கையில் குறிப்பேதுமின்றித் தம் நினைவுகளை எண்ணத்திரைகளாக வடித்துத் தந்துள்ளார்.

-சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

872

பொன்மலர்: தோழர் வி.பி.நினைவு வெளியீடு. பொன்மலர் வெளியீட்டுக் குழு. கனடா: பொன்மலர் வெளியீட்டுக் குழு,

செப்டெம்பர் 1994. (கனடா: ஈழநாடு வெளியீட்டு நிறுவனம்)
128 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X28 சமீ.

அமரர் வி.பொன்னம்பலம் அவர்களின் மறைவையொட்டி பிரசுரிக்கப்பட்ட அனுதாபச் செய்திகள், மாண்புரைகள், கட்டுரைகள். கவிதைகள் ஆகியவற்றின் தொகுப்பு. தோழர் வி.பி. அவர்களது குடும்பப் புகைப்படங்களும் அவர்தம் வாழ்வின் வெவ்வேறு ஆண்டுகளில் சம்பவித்த பல்வேறு நிகழ்வுகளின் தொகுப்பும் இடம் பெற்றுள்ளது. வி.பி. அமரராவதற்குச் சற்று முன்னதாக தமிழில் ஆற்றிய உரையும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

873

விடுதலை நெருப்புக்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி. சென்னை 600017: தமிழர் விடுதலைக் கூட்டணி, 2 தணிகாசலம் வீதி, தியாகராஜ நகர், 1வது பதிப்பு, அக்டோபர் 1985. (சென்னை 600005: ஜீவன் அச்சகம், திருநெல்வேலி).
80 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14.5 சமீ.

இலங்கையின் அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர்கள் வி. தர்மலிங்கம், மு.ஆலாலசுந்தரம் ஆகிய தலைவர்கள் 2.9.1985 அன்று ஈழ மண்ணில் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் விமர்சித்தும் அவர்களின் நினைவாக வெளிவந்த நினைவு மலர். இரங்கல் செய்திகளும், இரு தலைவர்களினதும் வாழ்க்கைக் குறிப்புக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

923.6 சமூக சேவகர்கள்

874

அன்பின் கங்கை அன்னை திரேசா. இளவாலை அமுது (இயற்பெயர்-அமுதசாகரன் அடைக்கலமுத்து) லண்டன்: தமிழரங்கம், மே 1997. (லண்டன்: வாசன் அச்சகம்)
(16),230 பக்கம், புகைப்படங்கள். விலை: ஸ்டேர்லிங் பவுண் 5.00. அளவு: 20X14.5 சமீ.

அன்னை திரேசா என்ற பெயர் பலருக்குத் தெரிந்த ஒன்று. ஆனால் அந்தப் பெயருக்குள் இருக்கும் அன்னையின் பணிகளைத் தெரிந்தவர்கள் ஒரு சிலரே. அவர் வாழ்க்கை இனிய தமிழில் நூலுருவாகியுள்ளது. கத்தோலிக்கத் துறவியாக அழைப்புப்பெற்று ஆசிரிய

ராக இந்து முஸ்லீம் மக்களிடையே கடமையாற்றிய வேளை வாழ்வின் விளிம்பில் நின்று தவிப்போருடன் தொடர்பு கொண்ட அன்னை திரேசாவின் கதையை இளவாலை அழுது நூலாகப் படைத்துள்ளார். இக்கதை ஒரு தனிநபரின் வாழ்க்கை வரலாறாக மட்டுமின்றி ஒரு தொண்டர் நிறுவனத்தின் வரலாறாகவும் அமைகின்றது.

875

கர்மயோகி ஸ்ரீ வே.க. சி.விசாலாட்சி. கிளிநொச்சி: கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கம், குருகுலம், 1வது பதிப்பு, நவம்பர் 1988. (கிளிநொச்சி: சர்வசக்தி அச்சகம், குருகுலம்)

xxiv,72 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x13 சமீ.

கிளிநொச்சியில் இயங்கிய குருகுலம் என்ற சமூகசேவை அமைப்பினை 1964 இல் ஸ்தாபித்த ஸ்ரீ வே.கதிர்வேல் சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு.

923.61 விடுதலைப் போராளிகள்

876

கிட்டு எங்கள் வரலாற்று நாயகன்: நினைவுத்துளிகள். தமிழீழ விடுதலைப்புலிகள். லண்டன்: தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசத் தலைமைச் செயலகம், 54,TavistockPlace, WC1 9RG,1வது பதிப்பு (ஆண்டு, அச்சகவிபரம்குறிப்பிடப்படவில்லை)

64 பக்கம், புகைப்படங்கள், ஓவியங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5x15.5 சமீ.

16.01.1993 இல் வங்கக் கடலில் மரணித்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் கேணல் கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்) அவர்களின் நினைவுக் கட்டுரைகள், கவிதைகள், அவரது ஓவியங்கள் ஆகியவற்றின் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

877

தளபதி கிட்டு: ஒரு காலத்தின் பதிவு. நோர்வே: தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு, 1வது பதிப்பு, மாசி 1994. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

100 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x15 சமீ.

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர் கேணல் கிட்டு அவர்

களின் நினைவாக மாவீரர் (1994) நாளில் வெளியிடப்பட்ட தொகுப்பு நூல். தளபதி கிட்டுவைப் பற்றி அவருடன் பழகிய தோழர்களிடம் இருந்து பெறப்பட்ட ஆக்கங்களும் இயக்கத்தின் அதிகாரபூர்வ குரல்களாக வெளியிடப்பட்ட அறிக்கைகளும் சிறப்புக்கட்டுரைகளும் இந்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன.

878

தாய்நிலத்து வீரர். மாவீரர் நினைவுகள் 2. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (தொகுப்பாளர்கள்) நோர்வே: தாய்நிலம் பதிப்பகம், P.O.Box 1699, Vika, 0110, Oslo. 1வது பதிப்பு, நவம்பர் 1993. (அச்சக விபரம் அறிய முடியவில்லை)

118 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14.5 சமீ.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து மாவீரர்களான போராளிகள் 20 பேர் பற்றி வெளியான கட்டுரைகளின் தொகுப்பு.

879

மேஜர் கிண்ணி. கஸ்ரோ (இயற்பெயர்: வி.மணிவண்ணன்). பிரான்ஸ்: தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலகம், 2வது பதிப்பு, பெப்ரவரி 1997. 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை.)

72 பக்கம், புகைப்படம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x12.5 சமீ.

10.7.92 இல் இயக்கச்சி மோதலில் பலியான விடுதலைப்புலிகளின் போராளி மேஜர் கிண்ணியின் போராட்டகாலச் சரிதை. நெடுங்கேணி இந்திய இராணுவ மினி முகாம் புலிகளால் தாக்கப்பட்ட வரலாறும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

923.7 கல்வியியலாளர்கள்

880

உத்தமர் உவைஸ். எஸ்.எம்.ஹனிபா. கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1வது பதிப்பு, 1981. (கொழும்பு 9: ஜ.பி.சி. பிரிண்டிங் பிரஸ், 320, என்.எம்.எம். இஷாக் மாவத்தை)

172 பக்கம், 8 தகடுகள், புகைப்படங்கள். விலை: ரூபா 20. அளவு: 18x12.5 சமீ.

அல்ஹாஜ் கலாநிதி ம.மு.உவைஸ் அவர்களின் வாழ்க்கை வரலாறு பதினைந்து அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன.

881
வித்துவசிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும். எஸ்.சிவலிங்கராஜா. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: கொமர்ஷியல் அச்சகம்)
(12),112 பக்கம், தகடுகள். விலை: ரூபா 30. அளவு: 21X14சமீ.

மகா வித்துவான் சின்னையர் கணேசையர் (1878-1958) இலங்கைத் தமிழ் அறிஞர்களில் மிகவும் முக்கியமானவர்களுள் ஒருவர். அவரது வாழ்க்கையும், பணிகளும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. அவரின் ஆக்கங்களுக்கான நூற்பட்டியல் ஒன்றும் தரப்பட்டுள்ளது.

மேலும் பார்க்க: 759

923.9 நாட்டாரியல் அறிஞர்கள்

882
1999 இல் வாழ்ந்து கொண்டிருக்கும் இசை நாடக-கூத்து மூத்த கலைஞர் வரலாறு. செல்லையா மெற்றாஸ்மயில். யாழ்ப்பாணம்: ஸ்ரீ மீனாட்சி அச்சகம், 315, கச்சேரி நல்லூர் வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1999. (யாழ்ப்பாணம்: மீனாட்சி அச்சகம், கச்சேரி நல்லூர் வீதி)
152 பக்கம், புகைப்படங்கள். விலை: ரூபா 200. அளவு: 21X14சமீ.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1999இல் வாழ்ந்து கொண்டிருந்த இசை நாடக கூத்துக் கலைஞர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்கள் தேடிப் பெறப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. நாடகக் காட்சிப்படங்களும், புகைப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, வடமராட்சி (கரவெட்டி), பருத்தித்துறை, மருதங்கேணி, சாவகச்சேரி, வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் அடிப்படையில் இத்தொகுப்பு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

883
நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான் யோசேப்பு: கலையுலக வாழ்க்கை வரலாறு. எஸ்.அகஸ்தியர். யாழ்ப்பாணம்: நவரச நாட்டுக்கூத்துக் கலா மன்றம், 1வது பதிப்பு, மே. 1981. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)

102 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

அண்ணாவியார் பூந்தான் யோசேப்பு அவர்களின் வாழ்க்கை வரலாற்றினூடாக சமகால ஈழத்து நாட்டுக்கூத்துப் பற்றிய அரிய தகவல்களைத் தரும் நூல்.

924 மொழியியலாளர்கள்

884
அருட்திரு தனிநாயகம் அடிகளார் நினைவு மலர். மு.கனகராசன், எஸ்.புனிதலிங்கம் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: மக்கள் குரல் வெளியீடு, 37, புங்கன்குளம் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1981. (சென்னை: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)
126 பக்கம், புகைப்படங்கள். விலை: ரூபா 10. அளவு: 24X18 சமீ.

வண.பிதா தனிநாயகம் அடிகளின் பணிகள் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகளின் தொகுப்பு. க.அன்பழகன், அ.அமிர்தலிங்கம், கரந்தை கணேஷன், எச்.டபிள்யு.தம்பையா, சு.வித்தியானந்தன், அ.சண்முகதாஸ், அந்தனி ஜான், அருட்திரு பி.சின்னராசா, ஆகியோரின் குறிப்புரைகளும் பிதா தனிநாயகம் அவர்களின் வாழ்வின் முக்கிய கட்டங்களைக் காட்டும் புகைப்படத் தொகுதியும், எம்.ஏ.நு:மான், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, நா.சுப்பிரமணியன் ஆகியோரின் தமிழியல் கட்டுரைகளும் தொகுக்கப்பெற்றுள்ளன.

885
சுடரொளி: தனிநாயகம் அடிகளார் சிறப்பு மலர், 1999. ஐ.தி.சம்பந்தன் (பதிப்பாசிரியர்) லண்டன் E7 9QN: சுடரொளி வெளியீட்டுக்கழகம், 198, Neville Road, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1999.
44 பக்கம். விலை: ஸ்டேர்லிங் பவுண் 2.00. அளவு: 26X18.5 சமீ.

தவத்திரு தனிநாயகம் அடிகளார் நினைவாக அவரது தமிழ்ப்பணிகளையும் தமிழ்த் தேசியப்பணிகளையும் நினைவுகூரும் வகையிலும், ஆறுமுகநாவலர், தந்தை செல்வா, மறைமலை அடிகள் போன்றோரை நினைவுகூரும் வகையிலும் தொகுக்கப்பெற்ற சுடரொளி சஞ்சிகையின் சிறப்பு மலர்.

886
சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும். கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஞானப்பிரகாசர் நினைவு விழா அமைப்புக்குழு, ஆயர் இல்லம், 1வது பதிப்பு, மே 1981. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்)

44 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 24.5X18 சமீ.

சுவாமி ஞானப்பிரகாசரின் பன்முகப்பட்ட பங்களிப்புக்கள் ஆய்வுக் குட்படுத்தப்பட்டுள்ளன. வரலாற்றாராய்ச்சித்துறை, மரபுவழித்தமிழ்க் கல்வி, கத்தோலிக்க தமிழிலக்கியம், மொழியாய்வு, சமயப்பணி ஆகியவற்றில் சுவாமி ஞானப்பிரகாசரின் பங்களிப்பை க.அருமை நாயகம், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், வே. அந்தனி ஜான் அழகரசன் அடிகள் ஆகியோர் ஆராய்ந்துள்ளனர்.

887

தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளார். ஆ.தேவராசன். கொழும்பு 5: கிறிஸ்தவ தமிழ்ப்பண்பாட்டுப் பேரவை, 97 டொரிங்டன் தொடர்மாடி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1980. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)

X,20 பக்கம், தகடு. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

தினகரன் நாளிதழில் தொடர்ச்சியாக வெளிவந்த தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றுத் தொடர்.

888

தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க.வேந்தனார். சொக்கன். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கியவட்டம், 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்)

xiii,88 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 22X14 சமீ.

வேந்தனாரின் காலப்பின்னணியில் அவர் பெற்ற கல்வி, அவரின் கவித்துவம், சொற்பொழிவாற்றல், கட்டுரைத்திறன், சமய அறிவு, மனப்பாங்கு என்பன சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்பட்டுள்ளன.

889

தனிநாயக அடிகளின் தமிழ்ப்பணி: கட்டுரைத் தொகுப்பு-1994. சூ.யோ.பற்றிமாகரன். லண்டன்: பிரித்தானிய தமிழ்க்கலா மன்றம், 51, Ruskin Road, Southall, Middx UB1 1PP.1வது பதிப்பு, மார்ச் 1994. (London: Golden Printers)

26 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X15 சமீ.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் தனிநாயக அடிகளும் என்னும் தலைப்பில் லண்டனில் 19.3.1994 இல் நடைபெற்ற ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளான தனிநாயக அடிகளாரும் தமிழாய்

வும் (பொற்கோ), அடிகளாரும் நானும் (மறவன்புலவு சச்சிதானந்தன்), தனிநாயக அடிகள் தமிழ்த்துறையை நவீனப்படுத்திய பாங்கு (ம.மதியழகன்), இறைவனைத் தமிழ் செய்த தனிநாயக அடிகள் (பற்றிமாகரன்) ஆகியன அடங்கியுள்ளன.

926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள்

890

பிரபு பெரியபரிகாரியார் சரித்திர ஆராய்ச்சி. செ.சர்வேஸ்வரன், மு.சிவசம்பு (தொகுப்பாசிரியர்கள்) யாழ்ப்பாணம்: பெரியபரிகாரியார் ஞாபகார்த்த சித்த வைத்திய சங்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1987. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்)

36 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

பெரியபரிகாரியார் என்ற அழைக்கப்படும் பிரபு ஆறுமுகம் பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு.

927 கலைஞர்கள்

891

கலை மகிழ்நன். த. சண்முகசுந்தரம். தெல்லிப்பழை: மணி விழாக்கழகம், 1வது பதிப்பு, மே 1984. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்)

iv,50 பக்கம், தகடுகள். விலை: ரூபா 10. அளவு: 18.5X12.5 சமீ.

கலைமகிழ்நன்- பேராசிரியர் சு.வித்தியானந்தனின் புனைபெயர். அப் பெயரைத் தலைப்பாக வைத்து அவரது கலையுலகப் பங்களிப்பும் பணிகளும் தொகுக்கப்பெற்றுள்ளது.

மேலும் பார்க்க: 893, 926,

927.5 ஓவியக்கலைஞர்கள்

892

கார்ட்டூன் ஓவிய உலகில் நான். சி.சிவஞானசுந்தரம். (சிரித்திரன் சுந்தர்) கொழும்பு 13: மல்லிகைப்பந்தல், 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2001. (கொழும்பு 13: மப்கோ, 59 சங்கமித்தை மாவத்தை)

xvii,135பக்கம், சித்திரங்கள். விலை: ரூபா 160. அளவு: 21X14.5சமீ.

1963இல் தொடங்கி 28 ஆண்டுகள் வெளியான சிரித்திரன் சஞ்சிகையின் ஆசிரியர், ஸ்தாபகர் சுந்தர் ஈழத்துக் கார்ட்டூன் உலகில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவர். 318 இதழ்கள் வரை வெளிவந்த சிரித்திரன் சஞ்சிகையின் வரலாற்றினூடாக ஆசிரியரின் கார்ட்டூன் ஓவியஉலக அனுபவங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

927.92 நாடகக் கலைஞர்கள்

893

அரங்கு கண்ட துணைவேந்தர். ஏ.ரி.பொன்னுத்துரை. மாவிட்டபுரம்: முத்தமிழ்க்கலை மன்ற வெளியீடு, 1வது பதிப்பு, மே 1984. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

26 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் நாடகக் கலைப்பணி பற்றிய நூல்.

மேலும் பார்க்க: 891

894

அறுபது வயது இளைஞர் கலைப்பேரரசு. கோகிலா மகேந்திரன் (தொகுப்பாசிரியர்). தெல்லிப்பழை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (தெல்லிப்பழை: குகன்அச்சகம்)

18 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14 சமீ.

நாடகமணி ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களின் மணிவிழா நினைவுச் சிற்றேடு. நாடகமணி பற்றிய பேராசிரியர் சு.வித்தியானந்தனின் (*இனிய நண்பர் ஏ.ரி.பொ.)* கவிதையும், சி.மௌனகுரு (*அறுபது வயது இளைஞன்*), நா.சுப்பிரமணியன் (*மணிவிழாக்காணும் கலைஞர்*), அநு.வை.நாகராஜன் (*ஆயிரம் பிறை கண்ட கலைஞர் ஏ.ரி.பொன்னுத்துரை*) ஆகியோரின் கட்டுரைகளும் அடங்கியது.

895

நடிகமணி வி.வி.வைரமுத்து: வாழ்வும் அரங்கும். காரை.செ.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1996. (கொழும்பு: யுனி ஆர்ட்ஸ்)

xii,160 பக்கம். விலை: ரூபா 250. அளவு: 21.5X14 சமீ.

நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் வாழ்வும் பணியும் அவர் வாழ்ந்த காலப்பகுதியில் வாழ்ந்த தமிழர் சமதாயத்தை-குறிப்பாக

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் வாழ்வைத் தெட்டத்தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்ற இசை நாடகம் வளர்ந்து வந்த வரலாற்று நெறியையும் விளக்கிக் காட்டுகின்றது. சாதி அமைப்பின் கொடிய மரபுகளின் விளைவான மனித ஏற்றத்தாழ்வுக் கெடுபிடிகளுக்கு நடிகமணி எவ்வாறு துணிச்சலாக முகம்கொடுத்து கலையுலகை வசப்படுத்தினார் என்பது யதார்த்தநிலையில் நின்று விளக்கப் பட்டுள்ளது.

896

நாடக தீபம்: நடிகமணி வி.வி.வைரமுத்து நினைவு வெளியீடு. மலர்க்குழு. யாழ்ப்பாணம்: வி.வி.வைரமுத்து நினைவுதின வெளியீடு, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

52 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5X 14 சமீ.

நடிகமணி வைரமுத்துவின் மறைவையொட்டி வெளியிடப்பட்ட இந் நூலில் அவர் பற்றி மட்டுமல்லாது, சமகால நாடக அரங்கு பற்றிய பல தகவல்களையும் உள்ளடக்கியதான பல்வேறு தமிழ் அறிஞர் களின் இரங்கலுரைகள் இடம்பெற்றுள்ளன.

928 இலக்கிய அறிஞர்கள்

897

அட்டைப்பட ஓவியங்கள். டொமினிக் ஜீவா (தொகுப்பாளர்). யாழ்ப்பாணம்: மல்லிகைப்பந்தல், 234B, கே.கே.எஸ். வீதி. 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், கே.கே.எஸ். வீதி)

136 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 17X12 சமீ.

மல்லிகை மாத இதழில் காலத்திற்குக் காலம் வெளியிடப்பெற்று வந்த கட்டுரைகளின் தொகுப்பு. ஒரு படைப்பாளி இன்னொரு படைப் பாளியையோ அறிவு ஜீவியையோ எப்படி முதன்முதலில் சந்தித்தார் என்பது பற்றியும், அவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்ட நிலை பற்றியும் பரஸ்பரம் இருவரும் ஒருவருக்கு ஒருவர் பாதிப்புக்குள் ளாவது எப்படி என்பது பற்றியும் எழுதிய தகவல் குறிப்புரைத் தொகுப்பு இதுவாகும்.

898

அனுபவ முத்திரைகள். டொமினிக் ஜீவா. சென்னை 98: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 1வது பதிப்பு, ஜூன் 1980. (சென்னை 98: நியு செஞ்சுரி பிரின்டர்ஸ்)

viii,128 பக்கம். விலை: இந்திய ரூபா 5. அளவு: 18X12.5 சமீ

அனுபவ முத்திரைகள். டொமினிக் ஜீவா. யாழ்ப்பாணம்: மல்லிகைப்பந்தல், 234B காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, செப்டெம்பர் 1996. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிரப்பி, 24 பொன்னுசாமி தெரு, இராயப்பேட்டை)

136 பக்கம். விலை: ரூபா 26. அளவு: 17.5X12 சமீ

எனது வாழ்வில் ஏற்பட்ட பல்வேறு அனுபவங்கள் விசித்திர மானவை. அந்த விசித்திரக்கலப்புள்ள அனுபவங்களின் தொகுப் பே இது. அவை விசித்திரமானவையாக விளங்கியபடியால் தான் சுவை நிரம்பியவைகளாக இருக்கின்றன. எனது வாழ்வுப் பாதை யில் குறுக்கிட்டு என்னை நெறிப்படுத்திய பலசம்பவங்களை இதில் சேர்த்துள்ளேன்.

-ஆசிரியர் (முன்னுரையில்)

899

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை. சிலோன் விஜயேந்திரன். சென்னை 2: காந்தளகம், 834 அண்ணா சாலை, 1வது பதிப்பு, மார்கழி 1990. (சென்னை 2: காந்தளகம்)

68 பக்கம். விலை: இந்திய ரூபா 10. அளவு: 17.5X12 சமீ.

யாழ்ப்பாணத்துச் சரித்திரத்தையும் யாழ்ப்பாணக் குடிகளையும் பற்றி அறிய உதவிய *யாழ்ப்பாண வைபவ கௌமுதி* என்ற நூலை ஆக்கிய கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் வாழ்வும் பணியும், கவிஞராக மட்டுமன்றி அவரை உரையாசிரியராகவும் பத்திரிகையாளராகவும் (*சுதேச நாட்டியம்* என்ற பத்திரிகையை நடாத்தியவர்), விமர்சகராக, வரலாற்றாய்வாளராக, சைவத்தொண்ட ராகக் காட்டும் ஒரு வாழ்க்கை வரலாற்றுச்சுருக்க நூல்.

900

இணுவையூர் சின்னத்தம்பிப் புலவர். கார்த்தியாயினி நடராசா. யாழ்ப்பாணம்: தமிழ்த்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1988. (யாழ்ப்பாணம் நியு உதயன் பப்ளிக்கேஷன்ஸ்)

(14),80 பக்கம், தகடுகள். விலை: ரூபா 25. அளவு: 21.5X14 சமீ.

சின்னத்தம்பிப் புலவரின் வாழ்க்கை வரலாறும் அவரது ஆக்கங் களும்.

901

இலக்கியப் பூந்துணர்: தமிழ் ஒளி-கலாபூஷணம் வ.அ.இராசரத்தினம் அவர்களின் பவளவிழா நினைவு மலர். சித்தி அமரசிங்கம் (தொகுப்பாசிரியர்). திருக்கோணமலை:

முத்தமிழ் வளர்கலை மன்றம், 21, ஒளவையார் வீதி, திருக் கோணமலை, 1வது பதிப்பு, ஜூன் 2000. (திருக்கோணமலை: கலர் டொட்ஸ்)

200 பக்கம், புகைப்படங்கள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 25X16.5 சமீ.

ஈழத்தமிழ் எழுத்தாளர் வஸ்தியாம்பிள்ளை அந்தோனி இராசரத் தினம் அவர்களின் பவளவிழாவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர். வ.அ.இ. அவர்களின் இலக்கியப்பணிக்கு வழங்கப்பட்ட வாழ்த்துரைகள், அவர் பற்றியதும் அவரது படைப்பக்கள் பற்றியது மான பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களின் தொகுப்பு.

902

இன்றும் கேட்கும் குரல்: விபுலானந்தர். செ.யோகநாதன். சென்னை 2: காந்தளகம், 834, அண்ணா சாலை, 1வது பதிப்பு, மார்ச் 1992. (சென்னை 20: இராசகிளி பிரின்டர்ஸ்)

176 பக்கம். விலை: இந்திய ரூபா 36. அளவு: 18X12 சமீ.

சுவாமி விபுலானந்தர் வாழ்வும் காலமும் பற்றிய நூல் அவரது நூற் றாண்டு நிறைவின் நினைவாக வெளியிடப்பட்டுள்ளது. அவரது நூல் களைப் பற்றிய விபரக்குறிப்பும் பின்னிணைப்பில் காணப்படுகின்றது.

903

ஈழத்துத்திறனாய்வு முன்னோடி பேராசிரியர் வி.செல்வ நாயகம் அவர்கள். அ.சண்முகதாஸ். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்கம், 7, 57வது ஒழுங்கை, வெள்ளவத்தை. 1வது பதிப்பு. ஏப்ரல்,1990. (Colombo 12: The Kumaran Press, 201 Dam Street)

vi,20 பக்கம், விலை: ரூபா 15 அளவு: 21.5X14 சமீ.

பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் தகைமைகள் பலவற்றுள் ஒரு சிலவற்றைத் தொகுத்து அவரை எம் கண்முன்பு கொண்டு வந்து நிறுத்தும் உரை. அன்னாரின் பாரிய பங்களிப்பான திறனாய்வின் முன்னோடியாக அவரைக்கண்டு இனம்காட்டித் தமிழ் உலகினுக்கு அவரது சேவைகளை நினைவு கூர வைத்துள்ளார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் 16வது வெளியீடாக மலர்ந்துள்ள நினைவுச் சொற்பொழிவு.

904

ஈழநாட்டுப் புலவர். சி.கணபதிப்பிள்ளை. சுன்னாகம்: கந்த ரோடை, திருவாட்டி ரேவதி சிவசுப்பிரமணிய சர்மா நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, ஜூன் 1983 (யாழ்ப்பாணம்: செட்டியார் அச் சகம்)

30 பக்கம், தகடு. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21X14சமீ.

ஈழநாட்டுப் புலவர் வரிசையில் சின்னத்தம்பிப்புலவர், நாவலர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, சோமசுந்தரப்புலவர், கவிஞர் மஹாலிங்கசிவம் ஆகியவர்களின் வாழ்வில் நிகழ்ந்த சுவையான சம்பவங்கள் இலக்கியநயம் கமழ வழங்கப்பட்டுள்ளது.

905

உள்ளதும் நல்லதும். ஏ.பெரியதம்பிப்பிள்ளை. மட்டக்களப்பு: புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், 1வது பதிப்பு, 1982. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்)

viii,(14),258 பக்கம், தகடு. விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

சிந்தாமணி வாரஇதழில் வெளிவந்த 50 கட்டுரைகளின் தொகுப்பு. இது புலவர்மணியின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளவும், மட்டக்களப்பின் சமூக வரலாற்றை அறிந்து கொள்ளவும் இந்நாட்டிலுள்ள பல்வேறு சாதி சமயங்களைச் சேர்ந்த பெருமக்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பினை அறிந்து கொள்ளவும் உதவும் நூல்.

906

எங்கள் நினைவுகளில் கைலாசபதி. டொமினிக் ஜீவா (தொகுப்பாசிரியர்). சென்னை 98: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 1வது பதிப்பு, நவம்பர் 1985. (சென்னை 14: பகவதி பிரஸ், 129 ஜானி ஜான்கான் ரோடு)

96 பக்கம். விலை: இந்திய ரூபா 7. அளவு: 18X12.5 சமீ.

தமிழறிஞர் கைலாசபதி அவர்களின் பன்முகப் பங்களிப்பு பற்றிய கருத்துக்களின் தொகுப்பு. சு.வித்தியானந்தன், முருகையன், பட்டுக்கோட்டை வே.சிதம்பரம், சபா.ஜெயராசா, என்.கே.இரகுநாதன், வல்லிக்கண்ணன், பிரேம்ஜி, டொமினிக் ஜீவா, அசோகமித்திரன், க.அருணாசலம், தி.க.சிவசங்கரன், ஆகியோரின் கட்டுரைகளும், புதுவை இரத்தினதுரையின் கவிதையும் அடங்கியுள்ளன.

907

என் கதை. கே.டானியல். புங்குடுதீவு: வி.ரி.இளங்கோவன், மூலிகை வெளியீடு, 3ம் வட்டாரம், 1வது பதிப்பு, நவம்பர் 1986. (யாழ்ப்பாணம்: சுவர்ணா பிரிண்டிங் வேர்க்ஸ், காங்கேசன்துறை வீதி)

31 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X12 சமீ.

எழுத்தாளர் கே.டானியலின் இலக்கியவாழ்வு பற்றிய நூல்

908

கைலாசபதியும் நானும். கே.எஸ்.சிவகுமாரன். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1வது பதிப்பு, 1990. (கொழும்பு 6: சாமர பிரிண்டர்ஸ், 22 ஏ, மல்லிகா லேன்.)

36 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 19X13 சமீ.

பேராசிரியர் கைலாசபதி பற்றிய ஓர் விமர்சனம். கைலாசபதியும் நூலாசிரியரும், கைலாசபதியின் அணுகுமுறை, கைலாசபதியின் திறனாய்வும் குறையும், அழகியலும் சமூகப் பண்பும் முதலிய தலைப்புக்களில் நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

909

கைலாஸ்: கைலாசபதி நினைவேடு. மௌ.சித்திரலேகா, க. சண்முகலிங்கம், சி.மௌனகுரு (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பேராசிரியர் க.கைலாசபதி நினைவுக்குழு, 62 பல்கலைக்கழக ஒழுங்கை, திருநெல்வேலி. 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

X,236 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 28X12 சமீ.

இலக்கியத் திறனாய்வு, சமூகவியல் கட்டுரைகள் அடங்கியது. தமிழ்க்கட்டுரைகள் எட்டும், ஆங்கிலக்கட்டுரைகள் பதினாறும் கொண்டது. பேராசிரியர் கைலாசபதியின் வாழ்க்கைக்குறிப்பு, நாவல் இலக்கியம், மொழியியல், மெய்யியல், நாடகக் கலை, மெல்லிசை ஆகிய அம்சங்கள் கட்டுரைகளின் கருப்பொருளாகும். பேராசிரியர் கைலாசபதியின் ஆக்கங்களுக்கான நூற்பட்டியலும் (தொகுப்பு-என்.செல்வராஜா) இடம் பெற்றுள்ளது.

910

சி.வி.சில சிந்தனைகள். சாரல்நாடன். கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், 57 மஹிந்த பிளேஸ். 1ம் பதிப்பு, 1986. (கண்டி: யூனியன் அச்சகம், கொழும்பு வீதி.)

viii,72 பக்கம். விலை: ரூபா 17.50. அளவு: 18X12.5 சமீ.

இலக்கியப் படைப்பாளியான அமரர் சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் வாழ்வும் சிந்தனையும் பற்றிய நூல்.

911

சி.வை.தாமோதரம்பிள்ளை-ஓர் ஆய்வு நோக்கு. மனோன்மணி சண்முகதாஸ். யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக்கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1983. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், கண்டி வீதி)

XX,208 பக்கம். விலை: சாதாரண பதிப்பு: ரூபா 25. நூலகப் பதிப்பு:

ரூபா 30. அளவு: 18X12.5 சமீ.

சிறந்த தமிழறிஞர், கவிஞர், ஆய்வாளர் சி.வை.தா.அவர்களின் வாழ்வும் பணிகளும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு ஏட்டு ருவிலான இலக்கண நூல்களைப் பதிப்பித்தமை, நூலாசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, பாடசாலை நிறுவுநராக அவரது பங்க ளிப்பு, அவரது தமிழாய்வு முயற்சிகள், போன்றவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது முதுகலைமாணிப் பட்டத் தேர்வுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் ஆய் வேடாகும்.

912

செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்.(பாகம் 1). க.சி.குலரத் தினம். யாழ்ப்பாணம்: சுடரொளி வெளியீட்டுக்கழகம், 121/4 மானிப் பாய் வீதி, 1வது பதிப்பு, அக்டோபர் 1989. (யாழ்ப்பாணம்: சுடரொளி அச்சகம்)

(14),203 பக்கம், விலை: ரூபா 45. அளவு: 20.5X14 சமீ.

ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர்களின் தமிழ் வளர்ச்சிப்பணிகள் பற்றிய கட்டுரைகள்.

913

சொக்கன் அறுபது: வித்துவான் க. சொக்கலிங்கம் மணிவிழா மலர். சொக்கன் மணிவிழா நூல்வெளியீட்டுக்குழு. யாழ்ப்பாணம்: சொக்கன் மணிவிழாச்சபை, 32/3 அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு, 1வது பதிப்பு, ஜூன் 1990. (யாழ்ப்பாணம்: உதயன் அச்சகம், 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி)

viii,162 பக்கம், விளக்கப்படம், தகடு. விலை: நூலகப்பதிப்பு: ரூபா 75, சாதாரண பதிப்பு: ரூபா 60. அளவு: 25X18.5 சமீ.

வித்துவான் க.சொக்கலிங்கம் அவர்களின் சமூக இலக்கியப் பணிகள் பல்வேறு அறிஞர்களாலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சொக்கனின் சிறுகதைகள், நாவல்கள், கவிதை, நாடகம், சமயப் பணி, பாடநூல், கல்விப்பணி, புத்திலக்கணம், வாழ்க்கை வரலாறு, பேச்சு, பொதுப்பணி, அகநோக்கு, நடையியல், ஆகிய அம்சங்களும், அவரது ஆக்கங்களின் தொகுப்பான 356 பதிவுகளுடன் கூடிய நூல்விபரப்பட்டியலும் இடம்பெறுகின்றது.

914

டொமினிக் ஜீவா- கருத்துக் கோவை. மேமன்கவி (தொகுப் பாளர்). கொழும்பு 11: மணிவிழாக் குழு (கொழும்புக்கிளை),

188/Q கெய்சர் வீதி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம்.)

76 பக்கம், புகைப்படங்கள். விலை: ரூபா 15. அளவு: 18X13 சமீ.

மல்லிகை சஞ்சிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களின் மணி விழாவையொட்டி பல்வேறு கலை இலக்கிய அறிஞர்களினால் எழுதப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள், வானொலி யில் இடம் பெற்ற சிறப்பு நிகழ்ச்சிகள், வானொலி, தொலைக் காட் சிப் பேட்டிகள் மற்றும் கூட்டங்களின் விபரம் என்பவற்றின் தொகுப்பு.

915

தமிழ் தந்த தாதாக்கள். க.சி.குலரத்தினம். யாழ்ப்பாணம்: சுடரொளி வெளியீட்டுக்கழகம்,121/4 மானிப்பாய் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1987. (யாழ்ப்பாணம்: சுடரொளி அச்சகம்)

(12),110 பக்கம். விலை: ரூபா 15. அளவு: 21X14 சமீ.

ஈழநாடு வாரமலரில் வெளிவந்த கட்டுரைகள். எவ்வெப் புலவர்கள் எந்தெந்தத் துறைகளில் எத்தகைய காலங்களில் எவ்வாறெல்லாம் தமிழ்த்தாயை அணி செய்தார்கள் என்பதை இலகு நடையில் இலக் கியச் சுவையுடன் தந்துள்ளார்.

916

திரும்பிப் பார்க்கிறேன். செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 79 முதல் தெரு, குமரன் காலனி, வடபழநி. 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (சென்னை 600026: குமரன் அச்சகம்)

160 பக்கம். விலை: இந்திய ரூபா 36. அளவு: 18X12 சமீ.

1942,48,56 ஆகிய காலகட்டங்களின் அடித்தளமாக அமைந்த பொருளாதார அரசியல் சமூகப் பின்னணியுடன் இயைந்ததாக அமையும் நூலாசிரியரின் இளமைக்கால வாழ்க்கையின் சுவையான பக்கங்கள்.

917

நந்தி நோக்குகள் இருபத்தைந்து. என்.சோமகாந்தன் (பதிப் பாசிரியர்). கொழும்பு5: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், 215ஜீ. 1-1 பார்க் வீதி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்)

xviii,144 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X13 சமீ.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களது மணிவிழா நாள் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டது. இம்மலரில் நந்தியைப் பற்றிய மனப்பதிவுகளையும் கலை இலக்கியப் பங்களிப்பு பற்றிய கணிப்

பீடுகளையும் ஈழத்து எழுத்தாளர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

918

நிஜங்களின் தரிசனம். ஏ.ரி.பொன்னுத்துரை. குரும்பசிட்டி: சன் மார்க்க சபை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

46பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12சமீ.

அமரர் குரும்பசிட்டி த.இராசரத்தினம் அவர்களது வாழ்க்கை வரலாறு. பல்வேறு தமிழ்அறிஞர்களின் இரங்கல் செய்திகளுடனும் புகைப்படங்களுடனும் கூடிய நினைவஞ்சலி.

919

நீலாவணன்: எஸ்.பொ.நினைவுகள். எஸ்.பொன்னுத்துரை. கனடா: காலம் வெளியீடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (Madras 94: Kohila Sri Printers)

132 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 17.5X12 சமீ.

காலம் வெளியீட்டின் நான்காவது நூலாக வெளிவந்துள்ளது. கவிஞர் நீலாவணன் அவர்களைப் பற்றிய தன் நினைவுகளை இந்நூலில் எஸ்.பொ. அவர்கள் தொகுத்துள்ளார். தம் இலக்கிய வாழ்வில் கவிஞரின் பங்களிப்பைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

920

பஞ்சாவரம். கோப்பாய் சிவம்.(இயற்பெயர்: ப.சிவானந்த சர்மா) ஆவரங்கால்: புத்தூர் யாழ் இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, 1987. (மட்டுவில்: திருக்கணித நிலையம்)

xvi,188 பக்கம், அட்டவணை. விலை: ரூபா 25. அளவு: 23X20சமீ.

மறுமலர்ச்சி எழுத்தாளர் பண்டிதர் ச.பஞ்சாட்சர சர்மாவின் எழுபதாவது பிறந்ததினத்தையொட்டி அவரது வாழ்க்கைச்சிறப்புகள், அவரது ஆக்கங்கள் சில, அவரைப் பற்றிப் பிற அறிஞர்கள் எழுதியவை என்பனவற்றின் தொகுப்பு.

921

பண்டிதமணி நினைவாரம். சி.சதாசிவம் (தொகுப்பாளர்). திருநெல்வேலி: பண்டிதமணி இல்லம், கலாசாலை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1986. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

xi,52 பக்கம், தகடு. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களது அமரத்துவம் கருதி வெளியிடப்பட்ட நினைவஞ்சலிமலர். பண்டிதமணி பற்றிய நினைவுக் குறிப்புகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் தம் ஆக்கங்களின் சிறு பட்டியலும் தொகுக்கப்பட்டுள்ளன.

922

பண்டிதமணி நினைவுமலர். நூல் வெளியீட்டுக்குழு. யாழ்ப்பாணம்: பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நூல் வெளியீட்டுச்சபை, 1வது பதிப்பு, ஜனவரி 1989. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

xxxvi,302 பக்கம், தகடுகள். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 23.5X18 சமீ.

இலக்கியக்கலாநிதி பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது இலக்கியப்பணிகள் பற்றிய பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளையும் கொண்டது.

923

பன்முக ஆய்வில் கைலாசபதி: பதின்மூன்று ஆய்வுக் கட்டுரைகள். தேசிய கலை இலக்கியப் பேரவை. சென்னை 02: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 1992.(சென்னை 17: சூர்யா அச்சகம்)

244 பக்கம், விலை: இந்திய ரூபா 30. அளவு: 18.5X12.5 சமீ.

தேசிய கலை இலக்கியப் பேரவை நடாத்தி வந்த பேராசிரியர் க. கைலாசபதி நினைவு ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், தாயகம் இதழ்களில் வெளியிடப்பட்டு வந்தன. இவற்றின் தொகுப்பு இந்நூலாகும். கைலாசபதியின் நண்பர்கள், பன்முகச் செயற்பாட்டில் அவருடன் சேர்ந்து உழைத்தவர்கள்.அவரது மாணவர்கள், அவர்மீது ஈடுபாடு கொண்டவர்கள் எனப் பலதரப்பட்டவர்களின் ஆய்வுகள் இவை.

924

புலவர் சிவங் கருணாலய பாண்டியனார் வாழ்வும் பணிகளும். சு.வித்தியானந்தன். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 1989. (கொழும்பு 12: குமரன் அச்சகம்)

(6),28 பக்கம், 2 தகடுகள். விலை: ரூபா 18. அளவு: 21X14 சமீ.

புலவர் சிவங்கருணாலயப்பாண்டியனார் தமிழகத்தில் பிறந்து கொழும்பில் தம் ஆசிரியர் தொழிலையும் தமிழ்ப் பணிகளையும் மேற்கொண்டவர். கொழும்புத் தமிழ்ச்சங்கத்தோடு நீண்டகாலத் தொடர்பு கொண்டவர். அவரது தமிழ்ப்பணிகள் பற்றி பேராசிரியர்

வித்தியானந்தன் ஆற்றிய நினைவுப்பேருரை. 25.9.1988 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நிகழ்த்தப்பட்டது. பேராசிரியரின் மறைவுக்குப் பின்னர் வெளிவந்துள்ளது.

925

பேராசிரியர் கணபதிப்பிள்ளை: அவரது புலமைப்பாரம் பரியம் பற்றிய ஓர் அறிமுக ஆய்வு. கா.சிவத்தம்பி. கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 7, 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு, தை 1997. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை)

72 பக்கம். விலை: ரூபா 100. அளவு: 21X14.5 சமீ.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஆற்றிய நினைவுப் பேருரை. பேராசிரியர் கணபதிப்பிள்ளை பற்றிய எழுத்துக்கள், கல்விப் பின் புலம், சேவைக்காலமும் பிரசுரங்களும், ஆய்வுப் பங்களிப்பு, துறைத்தலைமை, இலக்கியப் படைப்புக்கள், நாடகம், ஆளுமையும் கருத்து நிலையும் ஆகிய அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

926

பேராசிரியர் வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக் கோலம். ஆ.வேலுப்பிள்ளை. கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்கம், 7, 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 1989. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி)

(4),26 பக்கம், தகடு. விலை: ரூபா 25. அளவு: 24.5X18.5 சமீ.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களைப் பற்றி ஆற்றிய சொற் பொழிவின் நூல் வடிவம்.

927

மட்டுவில் தந்த பண்டிதமணி சீ.க. இ.சிதம்பரப்பிள்ளை. சாவகச்சேரி: கா.சிவபாலன், மட்டுவில் வடக்கு, 1வது பதிப்பு, ஆனி 1988. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்)

xxiv,64 பக்கம், தகடு. விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12.5 சமீ.

பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு.

928

மல்லிகை முகங்கள். டொமினிக் ஜீவா. யாழ்ப்பாணம்: மல்லிகைப் பந்தல், 1வது பதிப்பு, ஜனவரி 1996. (சென்னை 14: சித்ரா பிரிண்டோகிராபி)

238 பக்கம். விலை: ரூபா 60. அளவு: 21X14 சமீ.

ஈழத்துப் படைப்பாளிகள், கலைஞர்கள், விற்பன்னர்கள், எனப் பலரும் மல்லிகை சஞ்சிகையின் அட்டையை அலங்கரித்துள்ளனர். அவர்களில் தேர்ந்த 60 பேரைப்பற்றிய குறிப்புகளின் தொகுப்பு இந் நூலாகும்.

929

மல்லிகை ஜீவா. நந்தி, தெணியான்(தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப் பாணம்: மணிவிழாக்குழு, 15/2 மின்சார நிலைய வீதி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி)

176 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12.5 சமீ.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களின் மணிவிழாவை யொட்டி வெளியிடப்பட்ட நூல். இதில் மூன்று கவிதைகளும் 29 கட்டுரைகளும் உள்ளடங்கியுள்ளன.

930

மஹாகவி பாரதி. எஸ்.எம்.ஹனிபா. கண்டி: தமிழ் மன்றம், கல் ஹின்ன. 1வது பதிப்பு, 1988. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி)

40 பக்கம். விலை: ரூபா 10. அளவு: 18X12 சமீ.

மஹாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு.

931

வண்ணைச் சிலேடை வெண்பா. குரு சி.மாணிக்கத்தியாக ராஜ பண்டிதர். வண்ணார் பண்ணை: மா.குமாரசுவாமி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: மேர்க்குரி அச்சகம்)

42 பக்கம், தகடு. விலை: ரூபா 20. அளவு: 21X14 சமீ.

